www.padippakam.com

மே
2004
ரூ.15

# புதிய கோடாங்கி



## இந்துத்துவா

## முகம் வேறு உடல் ஒன்று

படிப்பகம்

www.padippakam.com

# புத்தகங்கள்...

ப்ரதிபா ஜெயச்சந்திரன்

**XIII**

இந்தக் கவிதைகளை எழுதுமுன்
என்னிடமுள்ள
புத்தகங்கள் எல்லாம்
என்னுடையவைதானா
என்று
சரிபார்த்துக் கொண்டேன்
புத்தகம் சரணம் கச்சாமி!

**XIV**

இலவச வேட்டி
இலவச சேலை
இலவச அரிசி
இலவச செருப்பு
இலவச சர்க்கரை - அப்படியே
ஓய்வின்றிப் படிக்க
இலவசப் புத்தகங்கள்
புத்தம் சரணம் கச்சாமி!

**XV**

புத்தகப் பிரியராக இருப்பது
நல்லது
புத்தக வெறியராக இருப்பதும்
நல்லதுதான்.
வெறி -
தன் புத்தகத்தின் மேல் மட்டும்
இருக்கும்வரை
புத்தகம் சரணம் கச்சாமி!

**XVI**

தமிழ் கற்றுக் கொடுத்தல்
பண்டிதர்க்கு மட்டுமே அழகு!
கவிஞன் எனக் கேள்வியுற்று தமிழ் கற்க
பெங்காலி ஒருவர் என்னிடம் வந்தார்.
எனக்கு சிரமத்துடன் நாட்கள் நகர்ந்தன.
ஒருநாள் அவரிடம் கேட்டேன்:
விபூதி பூஷன் வந்த்யோபாத்யாய
எழுதிய
வனவாசி படித்ததுண்டா என்று
(இது ஒரு பெங்காலி நாவல்)
அது முதல் அவர்
தமிழ் கற்றுக் கொள்ள
என்னிடம் வரவே இல்லை.
நல்ல புத்தகத்தை அறிமுகம் செய்த
ப்பி. மதியழகனுக்கு நன்றி சொல்லனும்.
புத்தகம் சரணம் கச்சாமி!

**XVII**

நண்பர் ஒருவர் வெளிநாடு செல்லுமுன்
என்னிடம் சில புத்தகங்களை
பத்திரமாக வைத்திருக்கச் சொல்லிக்
கொடுத்துச் சென்றார்.
உள்ளூர் நண்பர் அவற்றில் சிலவற்றை
படிப்பதற்காக எடுத்துச் சென்றார்.
அவற்றுள் இரண்டை மட்டும்
படிப்பதற்காகத் திருப்பிக் கேட்டேன்.
அவரோ -
திரு. ஆர். என்னிடமிருந்து
படிக்க வாங்கிச் சென்றார்...
நீங்களே அவரிடமே வாங்கிக் கொள்ளுங்கள்
என்றார்.
மூலவரின் புத்தகமோ
திறந்த காசோலையாகிவிட்டது.
நண்பர்களில்
அதிக தடித்தனமானவர்கள்
யார் என்பதை
சில புத்தகங்களை இழந்து
புரிந்து கொண்டேன்.
புத்தகம் சரணம் கச்சாமி!

**XVIII**

எனக்கு நிறைய புத்தகங்கள்
அன்பளிப்பாக வந்துள்ளன.
அவற்றுள் ஓர் இசைக் கலைஞன் கொடுத்த புத்தகமும்
ஒன்று.
அது -
அவரை விட்டுப் பிரிந்து சென்ற
காதலி சுகன்யாவின்
ஞாபகமாக வைத்திருந்தது.
பின்னர் அதைக் கேள்விப் பட்டபோது
என் புத்தகங்களெல்லாம்
கண்ணாடியைப் போல்
விழுந்து நொறுங்கி விட்டதாக பிரம்னம்.
என் புத்தகங்கள்
என்னைவிட்டுப்
பிரிந்து விடாதபடிக்கு
அந்தப் புத்தகத்தைப்
பெட்டியில் வைத்துப் பூட்டினேன்.

**XIX**

தங்கள் புத்தகங்கள்
வெளியானவுடன்
மறக்காமல் எனக்கு அனுப்பி
விமர்சனம் கேட்கும்
எழுத்தாள நண்பர்களுக்குக்
கொடுப்பதற்காகவாவது
என் புத்தகத்தை
நான்
விரைவில் வெளியிட வேண்டும்.

**XX**

ஒரு
'சின்னத்திரை'ப் படத்திற்கு
திரைக்கதை எழுதினேன்
சொற்பமான வருவாய் கிடைத்தது
அந்தப் பணம் முழுவதையும்
புத்தகம் வாங்கிச்
சேமித்தேன்.
வீட்டிலோ -
நான் புத்தகம் வாங்கிச்
செலவழித்தேன் என்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com


பு
தி
ய
கோ
டா
ங்
கி

மலர் 3 - இதழ் 11
மே - 2004

மாத இதழ்

*ஆசிரியர்*
ஆட்ரி ஜேனட் ஜோசப்

*முகப்பு - உள் ஓவியம்*
சந்ரு

*இதழ் வடிவமைப்பு*
யாக்கன்

*சந்தா*
ஆண்டுக் கட்டணம்
ரூ. 150/-
வாழ்நாள் கட்டணம்
ரூ. 1,000/-

அயல் நாட்டினருக்கு
தனி இதழ் US $ 2
ஆண்டுக் கட்டணம்
US $ 20

*விளம்பரம்*
அரைப்பக்கம் ரூ. 5,000/-
முழுப்பக்கம் ரூ. 10,000/-
பின் அட்டை ரூ. 20,000/-

*தொடர்பு முகவரி*
705, 101-ஆவது தெரு
15-ஆவது செக்டர்
கே. கே. நகர்
சென்னை - 600 078.
Mobile : 98404 - 49204

Kodangi@hotmail.com
kodangi@hotmailgroups.com


## தலையங்கம்

அம்பேத்கர் பிறந்தநாள் 2004 வேலைத்திட்டங்களை ஒட்டி, முதற் கட்டமாக தலித் பன்னாட்டுக் கல்வி மய்யம் மூலம் சென்னையில் +1, +2 மாணவர்களுக்கும், 9, 10 மாணவர்களுக்கும் கணக்கு, பௌதிகம், ரசாயனப் பாடங்கள் மற்றும் ஆங்கிலப் பயிற்சிக்காக ஜுலை மாதத் திலிருந்து சென்னையில் வகுப்புகள் நடத்த முன்னேற்பாடுகள் நடந்து வருகின்றன.

வருகின்ற மே 29, 30 தேதிகளில் விழுப்புரத்தில், தலித்–பழங்குடி–அரவாணிகளின் முதல் மாநில மாநாடு நிகழவிருக்கிறது.

ஜுன் மாதத்தில் ஜவ்வாது மலையிலுள்ள மலையாளிகள் என்னும் பழங்குடியினரின் வாய்மொழி இலக்கியப் பதிவு மேற்கொள்ளப்பட விருக்கிறது.

தலித் பன்னாட்டு கல்வி மய்யம் நடத்தும் அம்பேத்கர் சிந்தனை என்ற பட்டயப்படிப்பின் தொடர்பு வகுப்புகள் ஜுலையில் சென்னையில் நடத்தப்பெறும்.

பிரிப்பேர் நிறுவனத்துடன் இணைந்து தலித் மற்றும் தலித்தல்லாதா ருக்கு தலைமைத்துவப் பண்புகள் பற்றிய பயிற்சிப் பட்டறை தேர்தல் முடிந்தவுடன் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோல் சிவகாமியின் ‘அப்னா பஞ்சாயத்’ மற்றும் அவுட்லுக் ஆனந்தின் **Media and Caste** (பத்திரிக்கைகளும்–சாதியும்) என்ற ஆங்கிலக்கட்டுரையின் மீதான விவாதம் ஒன்றுக்கும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 21 லிருந்து 28 தேதி வரை புதிய கோடாங்கி மற்றும் தென்னிந்திய தலித் எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் பேரவை சார்பாக, கோத்தகிரியில் டான் பாஸ்கோ நிறுவனத்துடன் இணைந்து, முனைவர் அமைதி அரசு பழங்குடி நாடக அரங்க பயிற்சிப் பட்டறை நடத்தவுள்ளார் (அதைப் பற்றிய பதிவுகளை அடுத்த இதழில் எதிர்பார்க்கலாம்.) இம்முயற்சி தொடரப்படும்.

அரவாணிகளின் ஓவியப் பயிற்சி முகாம் போதுமான நிதிவசதியின்றி கிடப்பில் உள்ளது. நிதிஉதவி கிடைக்கும் பட்சத்தில் இவ்வருடத் திற்குமுன் நிறைவேற்றப்படும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

தலித் எழுத்தாளர்களின் புத்தகங்களை வெளியிட புதிய கோடாங்கி உத்தேசித்துள்ளது. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு விபரங்களைப் பெறலாம்.

வழக்கம்போல் இளைஞர் எழுச்சி முகாம்கள் கிராமப் பகுதிகளில் தொடர்கின்றன. இடையில் தேர்தல் தடபுடல்களினால் ஒரு மாதகாலம் இவற்றை நடத்த முடியாமல் போனது துரதிர்ஷ்டவசமானதே.

1995– ல் தொடங்கி, 2001–லிருந்து மாத இதழாக வரத்தொடங்கிய புதிய கோடாங்கி மூன்றாண்டுகள் நிறைவெய்தியுள்ளது.

புதிய கோடாங்கியின் செயல்பாடுகளில் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் கலந்துகொள்ள அழைப்பு விடுக்கிறோம். இப்படிச் செய் வதன் மூலம் உங்களை நீங்களே வலுப்படுத்துவதுடன் தலித் இயக்கத் தையும் வலுப்படுத்துகிறீர்கள்.

படிப்பகம்

www.padippakam.com

மு

விடு

கவிதை

மரபின் வே

காட்டாளன் ட

என் மாமிசத்தை

அமைதிக் கிராமம்

கடவுளும் (கந்தசாமி)

நாய்க் கடன்

தேநீரும் உரையாடலும் - ௬

அப்பாவின் கையெழுத்து - கசு.

முடிவுறா சாத்யம்

ஒரு விடுதலையின் விண்ணப்பம் -

கவிதைகள்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இந்த உத்திமுறையை தேசியக் கட்சிகள் வெகு நேர்த்தியாக கையாண்டு வருகின்றன. உதாரணத்திற்கு காங்கிரஸ் கட்சியின் கொடி என்பது தூரத்திலிருப்பவர்களுக்கு (அருகிலிருப்பவர்க்கே கூட) நமது தேசியக்கொடி பற்றிய மதிப்பைத்தான் ஏற்படுத்துகிறது. உற்று நோக்கும்போதுதான் அதன் வேறுபாட்டை அறிய முடிகிறது. தேசத்தின் மீது உணர்ச்சிப் பூர்வமான பற்று வைத்திருக்கும் சாதாரண மக்களைக் கவரும் உத்தி முறைகளில் ஒன்றாக இதனைக் கொள்ளலாம். தேசியக்கொடியின் சாயல் அல்லது அதே மாதிரியான கொடி என்பது அடிக்கடி அக்கட்சியின் எண்ணத்தை மக்கள் மனதில் எழுப்பிக் கொண்டேயிருக்கும் தந்திர வியூகமே அக்கொடிக்கான காரணமாக இருக்கலாம்.

அதே போன்றுதான், காவி நிறத்தையும், தேசிய மலரான தாமரையையும் கொண்டு விளங்கும் பாஜகவும், தேசத்தின் சின்னங்களை பயன்படுத்தும்போது அவை மறைமுகமாக பாஜகவை நினைவூட்டும் கணிப்பாகக்கூட அக்கட்சியினர் வெகுநுட்பமாக இத்தகைய கட்சி கொடியினை வடிவமைத்திருக்கலாம். இவை தேர்தல் பிரச்சார காலகட்டத்தில் தேசப்பற்றோடு ஒப்பிட்டு வாக்கு பெறும் முயற்சியாகக் கருதலாம்.

அதே போன்றுதான் ஜனதா தளத்தின் கொடியும். தேசிய கொடியின் பச்சை நிறத்தையும் சக்கரத்தையும் (அசோக சக்கரத்தை நினைவூட்டும் வகையில்) தன் கட்சியின் அடையாளக் குறியீட்டாக்கி தன் கொடியை பயன்படுத்தி வருகின்றது.

தேசத்தின் கொடியை, சின்னங்களை பயன்படுத்துவதே நாட்டு மக்களின் தேசப்பற்றினை வாக்கு வங்கியாக மாற்றுகிற உள்நோக்கம் கொண்டதுதான்.

எதையும் பரந்துபட்ட விசாலமானப்பார்வையோடு அணுகி, நுணுகிப் பார்க்கும் தேர்தல் கமிஷன் இத்தகைய வழிகளில் வாக்குபெறும் முயற்சியைத் தடுப்பது குறித்தும் பரிசீலிக்கலாம்.

ஆனால் மாநில கட்சிகளின் நிலைப்பாடுகள் வேறாக இருக்கிறது. உள்ளூர் பிரச்சினைகள், சாதி, சமய பலம் பொறுத்து மாநில கட்சிகள் இயங்க வேண்டியிருப்பதால் அவை வேறுவிதமான உத்திமுறைகளை மேற்கொண்டுள்ளன. மாநிலக் கட்சிகள் அரசியல் மேடைப் பேச்சுகளையும் வேறுசில வாய் ஜாலங்களையும் கொண்டே அரசியல் நடத்தி வருகின்றன. அவர்களின் உத்தியும் கூர்ந்து நோக்கத்தக்கதாகும்.

கோடிக்கணக்கான உறுப்பினர்களைக் கொண்டிருப்பதாகவும் அனைத்து தரப்பினரின் ஆதரவைப் பெற்றிருப்பதாகவும் பறைசாற்றி தங்கள் முதுகில் தாங்களே தட்டிக் கொள்ளும் அரசியல் கட்சிகள் உண்மையாகவே தங்களை சுயபரிசோதனை செய்து கொள்ளவேண்டும். ஆனால் அத்தகைய கட்சிகள் நரித்தந்திர வேலைகள் செய்து தங்களின் பிழைப்பை நடத்திக் கொண்டு இருக்கின்றன.

சின்னங்கள் மக்களின் எண்ணங்களில் ஏற்படுத்திய தாக்கங்கள் தங்கள் மீதான விமர்சன அரசியலை வளர்த்தெடுக்காமல் போய்விட்டதையும், தன் வாக்கு வங்கியின் மீது கொண்ட அசைக்கமுடியாத அழுத்தமான நம்பிக்கையையும் கொண்டே தேர்தலை சந்திக்கின்றன. 'வாக்குவங்கி' என்பதே மரபுவழிப்பட்ட சொத்துரிமையாகவும் ஒரே சின்னத்தில் தொடர்ந்து வாக்களிக்கும் சமூக நிர்பந்தமாகவும் மாறிவிடுகிறது. எனவேதான் தேர்ந்து தெளிந்து வாக்களிக்க வேண்டிய மக்கள் சின்னத்தைத் தேடி வாக்களிக்கும் நிகழ்வுகள் அறியாமை உணர்ச்சிக்கும், கல்லாமைக்கும் கட்டியம் கூறுவதாய் இருக்கிறது.

எனவே, புத்தம்புது கோணங்களிலும் ஜனநாயகத்தை புடம்போட்டு பார்க்க வேண்டியது சமூக விஞ்ஞான கண்ணோட்டத்தில் வரலாற்றுத் தேவையாக இருக்கிறது. தொகுதி உடன்பாடு, கூட்டணி, ஓட்டுவங்கி, விளம்பர அரசியல் என்று சட்டங்களை பட்டங்களாய் பறக்க விட்டுவிட்டு ஜனநாயகத்தை பாதுகாக்க அறைகூவல் விடுப்பது வேடிக்கையிலும் வேடிக்கையாய் இருக்கிறது.

அரசியல் கட்சிகளின் சுயபலம் அறியவும், மக்கள் செல்வாக்கினை உண்மையாக உள்ளபடி தெரிந்துகொள்ளவும் படிக்காத மக்களின் அரசியல் விழிப்புணர்வை அறியும் பொருட்டும் குறைந்தபட்சம் ஒவ்வொரு தேர்தலிலும் ஒவ்வொரு கட்சியும் பழைய சின்னத்தை விட்டு புத்தம்புது சின்னங்களில் நின்று வெல்லவேண்டும் என்பதை நிபந்தனையாக்கலாம். அரசியல் விழிப்புணர்வைப் பறைசாற்றும் அத்தகைய தேர்தல் முடிவுகளை உண்மையான ஜனநாயகத்தின் வெற்றியாக எடுத்துக் கொள்ளலாம். தனித்த வாக்கு வங்கிகள் பொதுவாக்கு வங்கிகளாக உருமாறும்போது அரசியல் பரிணாம வளர்ச்சியின் உருவமும் வடிவமும் மாறும்.

படிப்பறிவற்ற ஏழை எளிய மக்களின் ஆழ் மனதில் பதிந்துவிட்ட தங்கள் கட்சியின் சின்னம்தான் தங்களை வாழவைக்கும் தெய்வங்களாகக் கருதி கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளின் எதேச்சதிகாரத்திற்கும் முடிவு வரும். கூர்ந்து கவனித்தால் ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளலாம். அதாவது, கட்சிகள் பிளவுறும்போது ஆட்களை விட அதிகாரம் பெறவைக்கும் சின்னங்களை தக்கவைக்க ஆளாய் பறக்கும் அரசியல் கட்சிகளின் அந்தரங்க இரகசியங்களை. சிந்தனையில் வேரூன்றியிருக்கும் சின்னங்களின் தேவை அரசியல் கட்சியின் இருத்தலை உறுதி செய்கிறது.

எனவே, இனி தேர்தல் வரவு-செலவு பற்றியும் ஆடம்பர செலவு பற்றியும், வேட்பாளர் தகுதி நிர்ணயம் பற்றியும் கேள்வி எழுப்பும் நடுநிலையாளர்கள், சிந்தனையாளர்கள் இந்திய மக்களின் தன்மானத்திற்கு விடப்படுகிற சவாலைப் பற்றியும் அதன் இன்னொரு அரசியல் சித்து வேலையான ஒரே சின்னங்களின் தேவை பற்றியும் கேள்வி எழுப்பவேண்டும்.

கட்சியின் சின்னங்களை கண்கண்ட தெய்வங்களாக்கிவிட்ட அரசியல் கட்சிகளின் அடாவடிப்போக்கு, அரசியல் தளத்தில் சர்வாதிகாரத் தன்மையை வளர்த்தெடுத்திருப்பதை அண்மைக்கால அரசியல் நிகழ்வுகளின் மூலம் உணரமுடியும்.

எனவே, சீர்திருத்தப்பாதையில் செம்மாந்து நடைபோடும் தேர்தல் கமிஷனும் ஒரே தேர்தல் சின்னத்தை ஒரு கட்சிக்கு அளிப்பதனால் ஏற்படும் சமூக பலாபலன்களை கருத்தில் கொண்டு அத்தகைய விதிமுறைகளை மறுபரிசீலனை செய்வதுடன் ஏற்கனவே பயன்படுத்திய சின்னத்தை மறுபடியும் எந்த விதத்திலும் பயன்படுத்தாதபடிக்கு தடை விதிப்பது பற்றியும் சிந்திக்கலாம். அது புற்றுநோயாளர்(அரசியல்வாதி)களுக்கு தரும் புது மருந்தாகக்கூட இருக்கலாம்.

நேர்மையான, சுதந்திரமான தேர்தல் என்பது வெறும் வன்முறையற்ற தேர்தலை குறிப்பதாக அதன் வரையறையை சுருக்கிவிடக்கூடாது. அறிவுப்பூர்வமான சுதந்திரத்திற்கும், விமர்சன அரசியல் தன்மைக்கும் அவை பொருந்தும். இத்தகைய முயற்சி கட்சிகளுக்குப் போடும் கடிவாளம்.

இத்தகு புது முயற்சிகளால் பொலிவிழந்த ஜனநாயகத்திற்கு புத்துயிர் ஊட்டுவதோடு பணநாயகம் தீர்மானித்த தேர்தலை ஜனநாயகம் தீர்மானிக்கும் வாய்ப்பேற்படும்.



படிப்பகம்

www.padippakam.com

ஏனென்றால் படிக்காத மக்களின் கபடமற்ற உளவியலை உள்வாங்கி இருக்கும் அரசியல் அமைப்புகள் மிக நேர்த்தியான சூழ்ச்சி வலைக்குள் மக்களை விழ வைத்திருக்கின்றன. அவை தேர்தல் விதிகளையே செல்லாக் காசாக்கி விட்டன.

என்னவெனில், வாக்களிக்கும் இடத்தினைச் சுற்றி 100 மீட்டர் தூரத்திற்கு எவ்வித அரசியல் கட்சிகளின் சின்னங்களையும் பயன்படுத்தக்கூடாது என்பது தேர்தல் விதி.

ஆனால், சின்னங்களையே பச்சை குத்திக் கொள்ளும் மூடத்தனத்திற்கு ஆளாகி, கட்சி சின்னத்தை பச்சை குத்திக்கொண்டவர்கள் வாக்களிக்க வரும்போது தடுக்க முடியவில்லையே!

சுயமரியாதையே சுருண்டுபோன தருவாயில் சட்டம் எல்லாம் சரிப்பட்டு வருவதில்லை என்றுதான் சலித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அடிமை மனோபாவத்தையும், வசீகரிப்பையும் உள்வாங்கிக் கொண்ட படிக்காத மக்களின் அரசியல் செயல்பாடுகளே சின்னங்களின் தேவையை கேள்விக் குறியாக்கியுள்ளன. அவை கடந்த கால அனுபவங்கள் கற்று தந்த பாடங்கள்.

ஒரு முறை திருச்சி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி வாக்குச்சாவடியில் நடந்த சம்பவமே நல்ல உதாரணமாகும். வாக்குச்சாவடிக்கு வாக்களிக்கச் சென்ற வயதான மூதாட்டி (படிப்பறிவில்லாதவர்) வாக்களிப்பதற்கான வாக்குச் சீட்டை வாங்கிப்பார்த்து விட்டு தான் வாக்களிக்க விரும்பிய பிரபல அரசியல் கட்சியின் சின்னம் அச்சீட்டில் இல்லாததைக் கண்டு தேர்தல் அதிகாரி ஏதோ சதிசெய்து அச்சின்னத்தை மறைத்து விட்டதாக ஏகவசனத்தில் பேசினார். திகைப்படைந்த வாக்குச்சாவடியின் தலைமை தேர்தல் அதிகாரி அப்படி எதுவும் நடக்கவில்லையென்றும், அந்த மூதாட்டி கூறும் கட்சி அதன் கூட்டணி கட்சிக்கு அத்தொகுதியை ஒதுக்கி இருப்பதையும் எடுத்துச் சொல்லி, வேண்டுமானால் அந்த கட்சியின் சின்னத்தில் வாக்களிக்கலாம் என்றார். ஆனால் அம்மூதாட்டியோ மறுபடியும் மறுபடியும் ஏகவசனத்தில் பேசிவிட்டு தனக்கு அளிக்கப்பட்ட வாக்குச்சீட்டை முத்திரையிடாமலே திருப்பியளித்துவிட்டதாக பத்திரிக்கைகளில் செய்தி வெளி யானது.

மேற்கண்ட சம்பவம் உணர்த்திடும் செய்தியின் உண்மை யைப் புரிந்து கொண்டால் அரசியல் விமர்சனப் பார்வையோ, தான் விரும்பும் கட்சியின் அரசியல் நிலைப்பாட்டையோக் கூட அறிந்து வைத்திராத மக்கள்தான் அதிகாரத்தைப் பெறுபவர்களை தீர்மானிக்கும் சக்திகளாக இருக்கிற ஆபத்தைப் புரிந்துகொள்ள முடியும். இத்தகைய தன்மைதான் இந்திய அரசியலில் சாதி மத வெறியர்களும் கிரிமினல்களும் உள்ளே புகும் வழியை ஏற்படுத்திவிட்டது. இது மட்டுமின்றி அடிக்கடி தேர்தல் நாட்டுக்கு நல்லதல்ல என்று உபதேசம் புரிவோரும் பதவி மற்றும் சுய இலாபங்களுக்காக அரசியல் நாகரிகம் இல்லாமல் அணி மாறுவதும் நடக்கிறது. இதுவும் ஜனநாயகத்தைப் படுகுழிக்கு அனுப்பும் பச்சை துரோகம்தான்.

எனவே சின்னங்களற்ற அல்லது மாற்று சின்னங்கள் கொண்ட தேர்தல் அவசியம். இத்தகைய தேவைக்கு இன்னொரு உதாரணத்தையும் எடுத்துக்கொள்ளலாம். 1995–ல் காங்கிரஸ் அமைச்சரவையின் பதவிக்காலம் முடிந்தவுடன் மத்திய ஒளிபரப்புத் துறையின் சார்பில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அப்போதைய பிரதமர் நரசிம்மராவின் உத்தரவின் பேரிலேயே இதனைச் செய்தனர்.

அக்கருத்துக் கணிப்பு, வடகிழக்கு மாநில மலைவாழ் மக்களிடம் முதற்கட்டமாக நடத்தப்பட்டபோது அதிர்ச்சியான உண்மைகள் வெளிச்சத்திற்கு வந்தன. என்னவெனில் நீங்கள் எந்த சின்னத்தில் வாக்களிப்பீர்கள் என்ற கேள்விக்கு 'கை' சின்னமென்றும், ஏன் என்ற கேள்விக்கு இந்திராகாந்தி அம்மா ஆட்சிக்குவர...... (பிரதமராக) என்றும் பதிலளித்தனர். கருத்துக் கணிப்பு குழுவினர் இந்திராவின் மறைவிற்கு பிந்தைய அரசியல் மாற்றங்களை எடுத்துச் சொல்லியபோது சிலர் அதனை நம்ப மறுத்து விட்டதுடன் இந்திராகாந்தி உயிரோடு இருப்பதாக அம்மக்கள் கூறியதாகக் கருத்துக் கணிப்புக் குழுவினர் வெளியிட்ட செய்தியறிக்கையில் தெரிவித்திருந்தனர்.

இச்சம்பவத்தை இந்திரா என்ற பெண்மணியின் தனித்த அரசியல் செல்வாக்காக நோக்காமல் சின்னம் எத்தகைய தாக்கத்தை உண்டாக்கி இருக்கிறது என்பதையும் மக்களின் வெளியுலக அனுபவமற்ற தன்மையையும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பாகக் கருதலாம். இத்தகையவர்களின் 'வாக்குச் சீட்டு' ஜனநாயகத்தை வாழ வைக்கும் என்பதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

அத்துடன் இன்னொரு வாதத்தையும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. படிக்காதவர்களுக்கு சின்னங்கள் சரி. படித்தவர்களும் அதே முறையைப் பின்பற்ற வேண்டும் என்னும் நிர்பந்தம் கல்வியறிவு பெற்றதையே கேள்விக்குள்ளாக்குகிறது.

அப்படியானால் தன்மானம், சுயமரியாதை என்பதெல்லாம் வறட்டுவாதமா? அது சரி! அறியாமை இருட்டிற்குள் அடைபட்ட மக்களை மீட்க எதுவும் செய்யாமல் படித்தவனையும் அந்த பள்ளத்தாக்கின் இருள் வெளியில் பிடித்துத்தள்ளுவது குற்றமன்றோ? எண்ணங்களை வெளிக்காட்டும் சின்னங்களை மரபுரிமைச் சொத்தாக்குவது சமூக ஜனநாயகத்திற்கு ஏற்படும் ஆபத்தாகும்.

ஒரே அலுவலகத்தில் தலைமைக்கும் கடைநிலை ஊழியனுக்கும் ஒரே சம்பளம் என்றால், முகம் சுளித்து படித்ததற்கு என்ன மரியாதை என்று கேள்விகேட்கும் அறிவு ஜீவிகள் வாக்குச் சீட்டில் படமும், பெயரும் தந்து வாக்களிக்க சொல்லும் போது மௌனம் கலைக்காத பொம்மைகளாய் மாறுவது ஏன்? கண்ட இடங்களிலும் படித்தவனுக்கான சமூக மரியாதையை, நிலை நாட்ட நினைப்பவர்கள், ஓட்டளிக்கும்போது நேரும் அவமானத் திற்கு எதிராய் திரளாமல் அமைதியாய் இருந்து விடுகிறார்கள்.

நம் நாட்டில் காலியாய் கிடக்கும் ஆசிரியர் நாற்காலிகளும், கரும்பலகையே இல்லாத பள்ளிகளும் தான் அடுத்த தலைமுறையை உருவாக்கிக் கொண்டிருக்கும் உலைக்கூடமாய் உருக்குலைந்து கிடப்பது எத்தகைய கவலையுணர்ச்சியை உருவாக்கி இருக்கிறதோ அதேமாதிரி அதிர்வலைகளைத்தான் மரபுரிமையாக மாறிப்போன கட்சி சின்னங்களும் சமூக அக்கறையுள்ளவர்களிடத்தே ஏற்படுத்தி இருக்கிறது.சிலவற்றை மட்டுமே மாற்றுவது என்பதே சீர்திருத்தம் அல்ல! மரபை உடைப்பதும் வரம்பை மீறுவதும் மறுகட்டுமானம் செய்வதும் தான்.

ஆபத்தானவர்களின் கையில் அதிகாரம் சிக்காமல் தடுக்க, ஆரோக்கியமான அரசியல் தூய்மை ஏற்பட தேர்தல் அணுகு முறையில் இன்னும் கூடுதல் மாற்றமும் திடமான நடவடிக்கை களும் தேவை. (தேர்தல் காலங்களில் அரசின் உடைமைகளை (கட்டிடம், வாகனம், அலுவலகம்) பயன்படுத்த விதிக்கப் பட்டிருக்கும் தடையை தேசசின்னங்களை பயன்படுத்துவதற்கும் பொருந்தும் என்ற கோணத்தில் பார்க்கலாம்.)



படிப்பகம்

www.padippakam.com

■ முனைவர் அ. அந்தோனி குருசு

# தமிழ்ச் சமூகத்தில் தலித் சிந்தனை மரபு

## எது தமிழ்ச் சமூகம்?

இன்றைய தமிழ்ச் சமூகம் ஆதித்தமிழர்கள் - சாதித்தமிழர்கள் என்று இரண்டு வேறு தமிழர் உலகங்களாக இயங்கி வருகிறது. வேறு சொற்களில் இதனை விளிம்புநிலைத் தமிழ்ச் சமூகம் - ஆதிக்க சாதித் தமிழ்ச் சமூகம் என்று குறிப்பிடலாம். ஆதிக்க சாதித் தமிழ்ச் சமூகத்தை கலாச்சாரக் கலப்பு காரணமாக வைதிகப் பார்ப்பனிய சனாதன சாதிச் சமூகம் - ஆதிக்க இடைநிலைச் சாதிச் சமூகம் என்று மேலும் இரண்டாகப் பிரிக்கலாம். முன்னது வேதபுராண-கீதை சாத்திர மேலாண்மைச் சமூகம்; பின்னது அனைத்தையும் கட்டிக்காக்கும் சூத்திர ஆதிக்கப் படிநிலைகளைக் காக்கும் சமூகம். 2004-ஆம் ஆண்டு பாராளு மன்றத் தேர்தலிலும் வைதிகப் பார்ப்பனக் கட்சிகள் - ஆதிக்கசாதிச் சூத்திர திராவிடக் கட்சிகள் - தீண்டப்படாத தாழ்த்தப்பட்ட சேரி மக்கள் கட்சிகள் என்று மூன்று வேறு அணிகளாகத் தெளிவான இயங்கியலின் முரண்சக்திகளாகப் பிரிந்து இயங்குவதைக் கண்டு கொள்ளமுடியும். மொழியால் தமிழ் பேசினாலும் பண்பாட்டால் வருண சாதி - உட்சாதிப் பிரிவினையில் இயங்குதல், மண உறவுமுறைகளில் கறாராக மூடுண்ட உறவு முறைகளைக் கடைப்பிடித்தல், பொருளாதார உறவு, அரசியல் உறவு ஆகிய அதிகார உறவுகளில் சாதிக்குழு நலன்களைப் பேணிக் கொள்ளுதல், உப சாதிப் பிளவு முறைகளைச் சாதியக் கட்டுமானங்களாகக் கடைப் பிடித்தல் ஆகிய நடைமுறைகளைக் காணலாம்.

'தமிழர் உண்மை வரலாறு' எழுதிய கேப்டன் எஸ். கலியபெருமாள், 'கபிலர் குறிஞ்சிப் பாட்டு எழுதிய காலத்திலேயே பார்ப்பன பழக்கவழக்கங்களும் சாதி முறைகளும் தமிழர் சாதியில் புகத்துவங்கி விட்டன' என்கிறார். இதே (தமிழர் உண்மை வரலாறு, பாலம், சென்னை-102, 2002, ப.59) கருத்துக்கு மேலும் அரண்செய்கிற முனைவர் ஜே. மோஹன், தலித் குடிகளின் மறுக்கப்பட்ட வரலாறு நூலின் முடிவில் எழுதுகிறார்: 'அடிப்படையிலேயே தமிழ்ச் சமூகத்தில் ஜாதியப் பிரிவினைகள் இல்லையென்று வைத்துக் கொண்டாலும், சமஸ்கிருதத்தில் பதுங்கி இருந்த சனாதனத்தையும், சதுர்வர்ணத்தையும் தமிழ்ப் படுத்தி தானே தமிழகத்தில் ஜாதியம், தீண்டாமை, பெண்ணடிமை போன்ற இழிவுக் கழிவுகளை, முறையாகவும் தெளிவாகவும் கற்றுத் தேர்ந்தவர்கள் இச்சைவர்களும் வைஷ்ணவர்களும். இவர்கள் வளர்த்தெடுத்ததே மொழிவழி (தமிழ்வழி) ஜாதியத் திற்கு மீட்டுருவாக்கம் கொடுக்கவே அன்றி, ஜாதியத்தையும் தீண்டாமையையும் ஒழிக்க அல்ல' என்று மறுக்கின்றார். (தமிழக தலித் வரலாறு - அறிமுகம், தம்மா பப்ளிகேஷன்ஸ், பாண்டிச்சேரி-8, ப.139) 'சாதிவேற்றுமையும் போலிச் சைவரும்' என மறைமலை அடிகளார் பலநூறு பக்கங்களில் விரிவாக எழுதிய தகவல்கள் மேலும் ஏராளமான ஆதாரங்களை முன்வைக்கின்றன.

4000 உப சாதிவழி சிதறுண்டவர்கள்; மணவழி சிதறுண்டவர்கள்; மதவழி சிதறுண்டவர்கள்; புவியியல் வழி சிதறுண்டவர்கள்; வர்க்கவழி சிதறுண்டவர்கள்; பிழைப்புத்தேடி உலகநாடுகளில் எல்லாம் சிதறுண்டவர்கள் - இவ்வாறான எதார்த்தங்களது வேர்களை ஆராய்ந்து பார்த்தால் எந்தத் தமிழ்ச் சமூகச் சிந்தனை மரபு பற்றி எழுதுவது? தமிழ்நாட்டில் மொழிவழிப் பெரும்பான்மைத் தமிழ்ச் சமூகம் 103 கோடி இந்தியர்களின் பன்மைக் கலாச்சாரச் சூழலில், மொழிவழிச் சிறுபான்மையினராகவும் இருக்கின்றனர். சாதியை மூலதனமாக்கியே அரசியல் நடத்துகிற வைதிக சாத்திரப் பார்ப்பன இந்துத்துவக் கட்சிகளும், ஆதிக்கசாதிச் சூத்திரத் திராவிடக் கட்சிகளும் ஆதித்தமிழர்களைப் பார்த்துச் "சாதிக் கட்சிகள்" என்று முத்திரை குத்துவதிலுள்ள அரசியலின் கயமைத் தனத்தைச் சாடுவதற்கு மொழி ஏது? தமிழ்-தமிழர்-தமிழ்ப் பண்பாடு என்று வாய்கிழிய அரசியல் பேசுகிறவர்கள், எழுதுகிறவர்கள் எத்தனை பேர் சாதிகடந்த மணம்புரிந்துள்ளார்கள் என்று ஆராய்ந்தால் உண்மை நிலை தெளிவாகி விடும்.

தலித் சிந்தனை மரபு என்றால் என்ன? என்ற கேள்விக்கு வருவோம். இது விளிம்புநிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் சிந்தனை. போபால் ஆவணத்தில் எலியனார் ஸெலியாட் குறிப்பிடுகிறார்: "தலித் என்பது நொறுக்கப்பட்டவர்களாகத் தமக்கு மேலே



படிப்பகம்

www.padippakam.com

உள்ளவர்களால் வேண்டுமென்றே தீவிரமான முறையிலும் நசுக்கப்பட்டவர்களைக் குறிக்கிறது." (தலித் காலம் (மொ.பெ.) சிங்கராயந், ப.31) இந்தத் தலித் சிந்தனை மரபின் மூல ஊற்றைப் புத்தரது போதனைகளுள் சமத்துவத்தை முன்னிறுத்திய பூர்வ பௌத்தத்தில் காணவேண்டும். ஏனென்றால் 'இந்தியத்துவம்' என்கிற நூலில் "சாதிக்கு எதிராக இந்தியாவில் முதன் முதல் குரல் கொடுத்தவர் கௌதம புத்தர்" என்று தத்துவ மேதை இராதாகிருட்டிணனே எழுதிச் சென்றார். அடுத்து "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற திருவள்ளுவராகிய தாழ்த்தப்பட்ட மேதையிடம் காணவேண்டும். "சாதி இரண்டொழிய வேறில்லை!" என்று பாடிய ஔவையிடம் இந்தக் கலகக் குரலைக் கேட்கவேண்டும். சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம். சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்; வேண்டாத மனைகளிலே உறவு செய்வோம்! என்று புரட்சி முழங்கிய சித்தர்களது சிந்தனை மரபுகளில் இதன் தொடர்ச்சியை அறியவேண்டும்.

இந்தியச் சிந்தனை மரபு என்னும் நூலுக்குச் சிறப்புரை வழங்கிய டாக்டர் பொற்கோ, தலித் சிந்தனை மரபினது இழையை அடையாளம் காட்டியுள்ளார். "இந்திய வரலாற்றில் வேதநெறியாளர்களுக்கும், வேத மறுப்பு நெறியாளர்களுக்குமான போராட்டம் தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது. வேத நெறியாளர்கள் குறிப்பிடும் தர்மங்கள் எல்லாம் வர்ணாசிரம தருமத்தை மையமிட்டனவாக இருக்கின்றன. வேத மறுப்பு நெறியாளர்கள் குறிப்பிடும் அறமும், ஒழுக்கமும் பொது நிலையில் மனித நல் வாழ்வை மையமிட்டனவாகவே இருந்திருக் கின்றன."

பிளவுபட்ட பார்வைகள் (கலாநிதி சுப்பிரமணியன், கௌசல்யா சுப்பிரமணியன் இந்தியச் சிந்தனை மரபு - சிறப்புரை): மேல் x கீழ், பரமாத்மா x ஜீவாத்மா, மோட்சம் x நரகம், நல்வினை x தீவினை (ஊழ்வினை), அபரஞானம் x பரஞானம், உயிர் x உடல், கடவுள் x படைப்பு என்பன போன்ற எதிரிணை முரண்களாகப் பிரித்துப் பார்க்கும் பிளவுபட்ட பார்வையைத் தலித் சிந்தனை மரபு முற்றிலுமாக மறுத்துள்ளது; எதிர்த்துள்ளது. ஏனென்றால் தலித்தியச் சிந்தனை மண்ணில் வேர்கொண்டது; மனிதரை மையமாகக் கொண்டது. வாழ்க்கை அறத்தைப் போற்றியது. சமத்துவ நெறியை மதித்தது. பிளவுபட்ட பார்ப்பனீயச் சிந்தனை மரபைப் பக்குடுக்கை நன்கணியார் காலத்து மெய்யியலார் மறுத்தும் எதிர்த்தும் எழுதிவந்த விளக்கங்களைக் குணாவின் 'வள்ளுவத்தின் வீழ்ச்சி' என்னும் நூலில் விரிவாகக் காணலாம்.

மேலே குறிப்பிட்டவாறு - பிளவுபட்ட பார்வை பிழையுடையது எனத் தலித் சிந்தனை மரபு மறுத்தது. படிநிலைத் தொழில் - சாதியப் பாகுபாட்டை எதிர்த்தது. சாதிப் படிநிலை ஏற்றத்தாழ்வுகளை அழிக்காமலும், சாதித் தொழில்பிரிவினை அமைப்பை மாற்றாமலும், 36 சாதிகளில் இருந்துகொண்டே சிவனடியாராக வழிபடலாம். ஆனால் தீண்டத்தகாத நந்தன் மட்டும் நெருப்பில் தீக்குளித்துத் தூய்மை அருள் பெற்று கொண்டான் என்கிற சேக்கிழாரது நிலப் பிரபுத்துவப் பண்ணை அடிமைப் பார்வைக் கோளாறைத் தலித் சிந்தனை மரபு எதிர்த்து வினா எழுப்புகிறது. கங்கையைச் சடைமுடியில் கொண்ட சிவனுக்கு மெய்யடியாராக மாறினாலும் கடையனுக்குச் சாதிமாற்றிக் கொள்ளுகிற உரிமையில்லை! கடைத்தேற்றமும் இல்லை! சாதித்தொழிலை மாற்றிக் கொள்ளாமல் சிவத்தொண்டு செய்து உய்யலாம் என்பது வருணசாதிய சனாதனத்தைப் பக்தி மூலமாகப் பாதுகாக்கும் பண்பாட்டுப் போலித்தனப் போர்வை அல்லவா? இந்தப் பக்திப் பண்பாட்டின் பின்னால் மறைந்து கிடக்கும் "சாதிகாக்கும் அரசியலை" அம்பலப்படுத்துவதுதான் தலித் சிந்தனை மரபு.

"சாஸ்திரங்கள் எல்லாம் புனிதமானவை என்ற நம்பிக்கை ஒழிந்தால்தான் சாதியை ஒழிக்க முடியும். சாஸ்திர ஆதாரங்களைக் கண்டிக்காமல் சமூகச் சீர்திருத்தம் வெற்றி பெறாது" என்று தெளிவுபடுத்திய அம்பேத்கரிடம் இந்தச் சிந்தனை மரபின் முத்திரையைக் காணலாம். கோ. சாமிதுரை "டாக்டர் அம்பேத்கர் பேசுகிறார்" நூலிலிருந்து புலவர்ஜே. ஆனந்தராசன் மேற்கோள் காட்டியுள்ளார். (பவுத்தமும், பழந்தமிழக் குடிமக்களும் ஓர் ஆய்வு, அன்றில் பதிப்பகம், சென்னை-5, ப. 184).

இந்துமதத்தை ஏற்கமறுத்தல், பார்ப்பனீயத்தை ஏற்க உடன்படாமை, பார்ப்பனீயம் உள்ளிழுத்த தலித்திய உண்மைகளைக் கட்டுடைத்தல், வெளிப்படுத்தல், மீட்டெடுத்தல், மதம், வேதம், புராணம், இலக்கியம், வரலாறு, மொழி, சடங்கு, நம்பிக்கை ஆகியவற்றில் திட்டமிட்டுத் திரித்த, மறைத்த, புனைந்த, கற்பிதம் செய்த பொய்கள் அனைத்தையும் அழித்தல், சரியான புதிய அர்த்தங்களைப் புகட்டல் ஆகியன தலித்தியச் சிந்தனை மரபு விடுக்கும் செயல்பாடுகளுக்கான அறைகூவல்களாகும். தலித் சிந்தனை மரபு "நாங்கள் இந்துக்கள் அல்ல பௌத்தர்கள்" என்றே குரல் கொடுக்கிறது. கர்னாடகத் தலித் மக்களிடையே பணியாற்றும் திரு. எம். சிராஜ், 'பூசக்தி சமயம்' என்னும் புதிய தலித் சமயத்தை நிறுவியுள்ளார். அவரது முடிவுப்படி தலித்தாகப் பிறந்தவர் வேறு மதம் சார்ந்தவராக முடியாது என்கிறார். அவரும் அவர் துணைவியார் ஜோதிராஜும் கிறித்துவத்தை விட்டு வெளியேறியவர்கள் - சாதிக் கிறித்துவத்தைவிட்டு.

### சிந்தனை மரபின் மூல ஊற்றுகள்:

மகாத்மா புலே, அண்ணல் அம்பேத்கர், அயோத்திதாச பண்டிதர், தந்தை பெரியார் போன்றவர்களிடமிருந்து தலித்தியச் சிந்தனை மரபைத் தொகுக்க வேண்டும். இந்திய தலித் சிறுத்தைகளான மராட்டியப் படைப்பாளிகளிலிருந்தும் தலித் சிந்தனை மரபைத் தொடர வேண்டும். குஜராத், கர்நாடகம், ஆந்திரம், கேரளம் என பல மாநிலங்களிலும் விழுது பாய்ச்சி வளர்ந்துள்ள தலித்தியச் சிந்தனையாளர்களிடம் இருந்து அவற்றைத் தொகுக்க வேண்டும். ஆந்திர மாநிலத் தலித் இசைப் பாடகர் கத்தார் முதல் சேரிப்புறவியல் எழுதிய கே.ஏ. குணசேகரன்



படிப்பகம்

www.padippakam.com

வரையிலான கலைஞர்களிடமும் அதைக் கண்டறிய வேண்டும். தலித் பெண் பொயிலாம் பூச்சியின் கொலையை வில்லுப்பாட்டாகப் பாடுகிற "பூச்சியம் மன் கதைப்பாடல்" போன்ற முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் கதை, இம்மானுவேல் சேகரன் கதை போன்ற கதைப்பாடல்கள் வாய்மொழி வழக்காயிற்று. மரபுகளிலிருந்தும் அதனைக் கண்டறிய வேண்டும். அபிமானி, ராஜமுருகு பாண்டியன், கி. காந்தி, சிவ காமி, ப்ரதிபா, இரவிக்குமார், அன்பாதவன், வள்ளி நாயகம் போன்ற பல தலித் படைப்பாளிகளிடம் காணும் புதிது புதிதானவற்றைப் புத்துருவாக்கம் செய்ய வேண்டும். தலித் அல்லாத முற்போக்குச் சிந்தனையாளர்கள் அமரர் கோ. கேசவன், அ. மார்க்சு போன்றோரிடமும் கொள்ளத் தக்கனவற்றை ஏற்க வேண்டும்.

### பலநோக்குச் சிந்தனை

தலித் அரசியல், சித்தாந்தம், கலை, இசை, ஓவியம், நாடகம், நாட்டுப்புறவியல் இலக்கியம், இதழ்கள் போன்றவை தலித்துகளைத் தலைமைநோக்கி நகர்த்தவேண்டும். நிலவுரிமை, மூலதன உருவாக்க உரிமை, வாணிபம் செய்கிற உரிமை, மூலவளப் பகிர்வு உரிமை, உயர் தொழில்நுட்ப உரிமை, மருத்துவம், பொறியியல், உயர் ஆராய்ச்சி உரிமை, தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீட்டு உரிமை போன்ற பொருளாதார சமத்துவ உரிமைகளை அடைவதற் கான செயல்திட்டங்களைப் பயனாக்கிக் கொள்கிற பலநோக்குச் சிந்தனை மரபாக அது அமைய வேண்டும். வெறும் இலக்கியச் சிந்தனை மரபு தலித் சிந்தனை மரபல்ல!

### வரலாற்று மீட்டுருவாக்கத் தேவை

பறையர் வரலாறு தமிழர் உண்மை வரலாறு, தலித் குடிகளின் மறுக்கப்பட்ட வரலாறு, அடித்தட்டு மக்கள் வரலாறு என்றெல்லாம் அண்ணல் அம்பேத்கர் எழுதிய மண்ணின் மைந்தரது மறைக்கப்பட்ட வரலாற் றைத் தொடர்ந்து இன்று வந்து கொண்டிருக்கும் அடித்தட்டு மக்கள் வரலாறுகள் வெள்ளம்போல் பெருகி உருவாகி வரலாற்றுச் சிந்தனை மரபுக்குப் புதுப்பாதை போடவேண்டும்.

### மரபின் சாரம்

சுருங்கச் சொன்னால் - தலித்தியச் சிந்தனை மரபு பார்ப்பனிய இந்து மத வருணசாதிய சனாதன ஆதிக்கங்களுடன் முரண்படுகிற இயங்கியலிலே தொடங்கும். தீண்டாமை - சாதிய வன்முறைகளை எதிர்க்கும்; படிநிலை அமைப்புகளையும், பிளவுபட்ட கண்ணோட்டங்களையும் மறுக்கும்; வேத-புராண-கீதை ரீதி அடிமைக் கருத்தியல்களில் உடைப்பு ஏற்படுத்தும். பாசிசப் பார்ப்பனிய பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தும், சட்டரீதியாக எதிர்கொள்ளும்; அகமண உறவுமுறையைத் தகர்க்கும்; உபசாதிய மேட்டிமை, உயர்வு பாராட்டி மற்றச் சமூகத்தைத் தாழ்த்தும் மேலாண்மையைக் கண்டனம் செய்யும், இரக்கத்தையோ, கருணையையோ வேண்டாமல் நீதி-

தலித்தியச் சிந்தனை மரபு
பார்ப்பனிய இந்து மத
வருணசாதிய சனாதன
ஆதிக்கங்களுடன் முரண்படுகிற
இயங்கியலிலே தொடங்கும்.
தீண்டாமை - சாதிய
வன்முறைகளை எதிர்க்கும்;
படிநிலை அமைப்புகளையும்,
பிளவுபட்ட கண்ணோட்டங்களையும்
மறுக்கும்; வேத-புராண-கீதை
ரீதி அடிமைக் கருத்தியல்களில்
உடைப்பு ஏற்படுத்தும்.
பாசிசப் பார்ப்பனிய
பயங்கரவாதத்தை
அம்பலப்படுத்தும்,

அறம்-நெறிமுறை கோரும்.

பறிக்கப்பட்ட நிலவுரிமை நிலத்தில் பாடுபடும் எல்லாத் தலித்துகளுக்கும் பகிர்ந்துதரப் போராடத் தூண்டும்; தலித்துகள் உபசாதி கடந்த கூட்டு ஒருமைப் பாட்டுடன் அணிதிரண்டு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முனைப்பாகச் செயல்படச் செயலூக்கப் படுத்தும். எல்லாவிதமான அடக்கு முறைகளையும் எதிர்த்துக் கலகம் செய்யும். வன்கொடுமைத் தடுப்புச் சட்டங்களையும் கோலப்பன் அறிக்கை போன்ற பரிந்துரைகளையும் முழு வீச்சில் அமலாக்கக் கோரும்.

தலித்துகளை இழிவாகச் சுட்டும் அனைத்துச் சொல்லாடல்களையும் அறவே புறக்கணிக்கும்; அவற்றுக்கு மாற்றாக உள்ள விடுதலையை அடை யாளப்படுத்தும் சொல்லாடல்களையே எடுத்தாளக் கோரும். தலித்துகளுக்கும், தலித் முன்னோடிகளுக் கும், தலித் தலைவர்களுக்கும், தலித் பெண்களுக்கும், தலித் இளையோருக்கும், தலித் வாழ்க்கை முறைக்கும் எதிராக உற்பத்தி செய்யப்படுகிற கற்பிதங்கள், புனைவுகள், கதைகள், கதையாடல்கள் ஆகியவற்றை மிகவும் விழிப்பாகக் கண்காணிக்கும்; விமர்சனம் செய்யும்; இவற்றிலுள்ள அருவருக்கத்தக்க அடிமைத் தனங்களையும், ஆதிக்கப் போர்க்குணங்களையும், அதிகார மேட்டிமைகளையும் தனக்கான புரட்சிகர நோக்குடன் அம்பலப்படுத்தும்; கட்டுடைக்கும்; பத்திரிக்கை, நாடகம், கலை, சின்னத்திரை, திரைப்படம் போன்ற ஊடகங்களில் தலித்துகளை இழிவு செய்தால் அறச்சினம் கொண்டு கொதிப் புயர்ந்து தாக்கும்; கேள்வி கேட்கும்.

தலித்துகளது சுய இழிவுகளை இலக்கியமாக்கி வியாபாரம் செய்யும் ஆதிக்க சாதி வணிகர்களது



படிப்பகம்

www.padippakam.com

இலாப நோக்கை எச்சரிக்கும். தலித்துகளது வலிமைகளையே இனி எழுதுமாறு படைப்பாளிகளை வலியுறுத்தும். மாற்றங்கள் வேரோட்டமாக நிகழ வழி தேடும். காலவிதி எதிர்ப்புகளை வெடிப்புற மொழியும், ஒடுக்கு முறைகளுக்கு அடிபணிய மறுக்கும் அநீதியை எதிர்த்து அத்து மீறுமாறு தூண்டும்.

### அறைகூவல்கள்

தலித்தியச் சிந்தனை மரபு முறியடிக்க வேண்டிய நிகழ்கால எதிர்காலப் பகை எதார்த்தங்களைச் சுட்டி வரலாற்றுக் கடன் முடிக்குமாறு ஒவ்வொரு தலித்துக்கும் அறைகூவல் விடுக்கும். பார்ப்பனீய - ஆதிக்க சாதிகள் தலித்துகளது முழு அடையாளங்களை உபசாதி அமைப்புகளாக ஆக்க முனைகின்றன. தலித்துகளிடையே நிலவிவரும் தொழில், உணவு, வாழ்க்கை வட்டச் சடங்குகள், சமயநம்பிக்கை போன்ற வற்றில் காணும் "மாறுபாடுகளை" "வேறுபாடுகளாக" கற்பித்து, ஏற்றத் தாழ்வுகளை ஏற்றியுரைத்து "பாகுபாடுகள்" நிலைபெறச் செய்கின்றன. உறவாடிக் கெடுத்தல், உள்வாங்கி அழித்தல் உத்தி முறைகளைக் கடைப்பிடிக்கின்றன. தலித்துகளது நம்பிக்கை ஆதாரங்களை அழிக்கின்றன; அவநம்பிக்கையைப் புகுத்துகின்றன; அடிமைப்படிநிலைகளை நியாயப் படுத்துகின்றன. புனைவுகளையும் கற்பிதங்களையும் புகுத்துகின்றன.

உலகமயம், தாராளமயம், தனியார் மயச் சுரண்டல் கும்பல்கள் தலித்துகளை அந்நியப்படுத்த 'இவை நன்மை செய்வனவே!' என்கிற பிரச்சாரத்தைத் தொடர்ந்து செய்துவருகின்றன. கறுப்பு அழகற்றது; கறுப்பு அமங்கலமானது; கறுப்பு வெறுப்புக்குரியது என்கிற ஆதிக்கக் கருத்தைத் தொடர்ந்து பலவிதங்களில் பரப்பி வருகின்றன. தலித் மக்களுக்கான எல்லாவித வாய்ப்புகளையும் தடை செய்து கொண்டே தகுதி-திறமை கொள்கையை உயர்த்திப் பிடித்து வருகின்றன.

தலித்துகளும் இந்துக்களே என்கின்றன; மதமாற்றத் தடைக் கறுப்புச் சட்டங்கள் மூலமாக ஒருவர் மனச் சான்றுபடி தாம் விரும்புகிற மதத்தைத் தழுவிக் கொள்ளும் மனித உரிமையை அழிக்கின்றன. வேலை வாய்ப்பு இல்லாத தலித் இளையோரை வசப்படுத்தி இந்துத்துவ மத அடிப்படைவாதப் பயிற்சியளித்து, மூளைச் சலவை செய்து எதிர்காலத்தில் நாம் எதிர் கொண்டுவருகின்ற அபாயங்களைப் பற்றி எச்சரிக்கை விடுக்கிறது.

தலித்தர்கப் பிறக்க நேர்ந்தும் தங்கள் அடையாளத்தை மறைத்துக் கொண்டும், இடஒதுக்கீட்டு நலன்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டு தம்மை மட்டும் கல்வி, வேலை வாய்ப்புகள், பொருளாதாரம், அரசியல் பதவி வாய்ப்புகளில் உயர்த்திக் கொண்டும், இந்தச் சமூக மக்களுக்குத் துளியும் பயன்படாத தலித் பார்ப்பனர்களது ஒட்டுறவை அறவே துண்டிக்குமாறு தலித் சிந்தனை மரபு வலியுறுத்துகிறது.!

## ஒப்பிலக்கணம்

■ அன்பாதவன்

மரணத்தின் முகம் கொடூரமானது
பாத அடிகளோ கோரமானது
ஒவ்வொரு முறை பதிக்கும்போதும்

தலைப்புச் செய்திகளில் மிதக்கின்றன
திருவரங்கத்து பிணங்கள்
44 மத்வர்களின் குரல் கேட்கும்
விழிக்கவில்லை ரெங்கன்

நாச் சுழற்றி பல உயிர்களை
விபத்தின் பெயரால் விழுங்கிவிட்டது
தீச்சூறாவளி

கரிந்தவைகளை எடுத்து எரித்த
இராகவேந்திர பிரசாத் சொன்னபோது
கனத்துப் போன மவுனம்

கண்ணீராலோ கவிதையினாலோ
ஆற்றமுடியாத அழியாக் காயம் அது.
ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

இன்றைக்கு இரங்கற்பா எழுதும் கோல்கள்
68 டிசம்பர் 25-இல் போனதெங்கு!

வதைபட்ட மனிதர்கள் குரல்களின் வழியாக
உயிர்களை கரைத்த அவலம்
காண்கிலையோ பெருமக்காள்!
உயிரின் தவிப்பு கேட்கிலையோ உயர் மக்காள்!

மரணத்தின் முகம் கொடூரமானது!
உறங்குவது போல பாசாங்கு பண்ணும்
ஊடகப் புத்திரர்கள்
தூங்கும் ரெங்கனையும் மரணத்தையும் விடவும்
கொடூரமானவர்கள்!



படிப்பகம்

www.padippakam.com

# தலித் கலைவிழாவினை முன்வைத்து பார்வைகளும் பதிவுகளும்

■ மகாராசன் - செல்வம்

மனித மூளைக்குள் அழுக்குகளை அப்பித் தெளிக்கும் திரைப்படங்களும், தொலைக்காட்சித் தொடர்களுமே கலை வடிவங்கள் எனப் பெரும்பாலானோர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நுகர்வு வெறியைத் தூண்டுகின்ற - பாதுகாக்கிற இத்தகைய ஊடகங்கள், மண்ணில் சுயமாக எழுந்த கலைகளைப் பற்றிக் கண்டுகொள்வதில்லை. மாறாக உழைக்கும் மக்களின் கலைகளைத் 'தீட்டுக்' கண்கொண்டே பார்த்து வருகின்ற போக்கு தொடர்ந்து நீடித்துக் கொண்டே வருகின்றது. தமிழ்நாட்டில் இருந்து கொண்டு தமிழில் பாடுவதை அபச்சாரமாக கருதுகிற நிலையில் மொழியின் உக்கிரத்தோடு தமிழிசை நிகழ்த்துவதற்கான முயற்சிகள் காலந்தோறும் நடைபெற்று வந்திருக்கின்றது. இருப்பினும் அத்தகைய தமிழிசைப் போக்கும் செவ்வியல் தன்மை கொண்ட மேட்டிமையின் விளைச்சலாகவே அமைந்துபோனது. இது ஒருபுறம் இருந்தாலும் உழைப்போடும் உழைப்பின் வலியோடும் வாழ்க்கையோடும் வாழ்க்கையின் ரணங்களோடும் பின்னிப் பிணைந்த கொண்டாட்டங்களையும் சோகங்களையும் அனுபவங்களையும் எதார்த்தமாய் வெளிப்படுத்தும் கலை வடிவங்கள் வியர்வையின் விளைச்சல்களாக இருந்து வருவதையும் நாம் காண்கிறோம்.

உழைக்கும் மக்களிடம் வழங்கி வருகின்ற இத்தகையக் கலைவடிவங்களை நாட்டுப்புறக் கலைவடிவங்கள் எனப் பதிவு செய்யும் போக்கு அண்மைக் காலங்களில்தான் நடைமுறைக்கு வந்திருக்கிறது. எனினும் இத்தகையக் கலைவடிவங்கள் சாதிய - பொருளாதார சுரண்டல் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகச் செயல்படும் விதங்களைப் பார்க்க மறந்ததும் வரலாற்றில் நிகழ்ந்திருக்கிறது. இத்தகைய சூழ்நிலையில் உழைக்கும் மக்களின் கலை வடிவங்கள் இருவேறு இயக்கங்களில் அரங்கேறி வருகின்றது. மக்கள் கலை இலக்கியக் கழகம் தஞ்சையில் நிகழ்த்தும் தமிழ் மக்கள் இசைவிழாவும், தலித் ஆதார மய்யம் மதுரையில் நிகழ்த்தும் தலித் கலைவிழாவும் அண்மையில் இத்தகைய நிகழ்வுகளைப் பதிவு செய்திருக்கிறது. உழைக்கும் மக்களின் கலை வடிவங்கள் அரங்கேறும் அதே வேளையில் அதற்கான அரசியல் ரீதியான பின்புலமும் நோக்கங்களும் வேறுவேறாகத்தான் இருக்கிறது என்பதாகிவிட்டது.

வர்க்க ரீதியான அணிசேர்க்கையினை முன்னிலைப்படுத்தி அதற்கான கருத்தியலை அடிப்படையாகக் கொண்ட கலைவெளிப்பாடுகளை தஞ்சையிலும், ஒடுக்கப்பட்ட மக்களான தாழ்த்தப் பட்டவர்களை அணி சேர்க்கும் வகையில் தலித் கருத்தியல் கொண்ட கலை வெளிப்பாடுகளை மதுரையிலும் பார்க்க முடிகிறது.

திராவிட இயக்கங்கள், கம்யூனிச இயக்கங்கள் யாவும் தலித் மக்கள் மீதான சாதிய ஒடுக்குமுறையைக் களைவதற்கான முயற்சிகள் பெரும்பான்மையாக நடைபெறாத நிலையில் தலித்துகள் தங்கள் மீது ஏவப்படும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பல்வேறு தன்னார்வ குழுக்கள் சாதகமாகவோ/பாதகமாகவோ பயன்படுத்தத் தொடங்கியிருக்கின்றன. அரசியல் இயக்கங்கள் முன்னின்று நடத்தும் நிகழ்வுகளுக்கும், நிறுவனங்கள் முன்னின்று நடத்தும் நிகழ்வுகளுக்குமான பக்கவிளைவுகள் வேறுவேறாகத்தான் இருக்கும். தலித் கலைவிழாவை நிகழ்த்திய தலித் ஆதார மய்யம் குறித்து விமர்சனங்கள் பல்வேறு மக்கள் இயக்கங்கள் வாயிலாக வெளிப்பட்டிருக்கின்றன. பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகள் பெற்று இதுபோன்ற கலைவிழாக்கள் நடத்தப்படுகின்றன என்ற குற்றச்சாட்டும் முன் வைக்கப்படுகிறது. தேசிய இனங்களின் உரிமைகள் பறிபோயிருக்கிற நிலையில் - ஏகாதிபத்தியங்களின் கோரப்பிடி இறுகி வருகின்ற சூழலில் - உலகமய தாராளமய தனியார்மயக் கொள்கைகளினால் மக்களின் வாழ்வு புதைகுழிக்குள் தள்ளப்பட்ட நிலையில் இவற்றுக்கு எதிராகப் போராடும் நிலையினைக் கைவிட்டு தலித் மக்களைத் தனியாகப் பிரிக்கிறார்கள் என்ற கருத்தும் கூறப்படுகிறது.

தலித் கலைவிழா குறித்து இப்படிப் பலவாறாக விமர்சனங்கள் இருந்தாலும் தலித் மக்களின் இயல்பான உக்கிரத் தன்மை கொண்ட கலைவடிவங்களை வெளிப்படுத்துவதற்கு மற்ற அரங்குகளில் இல்லாத வாய்ப்புகள் இந்த அரங்குகளில் வெளிப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்நிலையினைப் போன்றே அவர்களின் கலைகளும் ஒடுங்கிக் கிடந்த நிலையில் அவர்களின் கலை வடிவங்களுக்கு அங்கீகாரமும் அடையாளமும் பெற்றுத் தருகிற வகையில் தலித்



படிப்பகம்

www.padippakam.com

> **“ திராவிட இயக்கங்கள், கம்யூனிச இயக்கங்கள் யாவும் தலித் மக்கள் மீதான சாதிய ஒடுக்குமுறையைக் களைவதற்கான முயற்சிகள் பெரும்பான்மையாக நடைபெறாத நிலையில், தலித்துகள் தங்கள் மீது ஏவப்படும் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழும் நிலை ஏற்பட்டிருக்கிறது. ”**

கலைவிழா உதவக்கூடும். தலித் கலைவிழா கூர்மைப் படுத்துகிற இந்துத்துவ எதிர்ப்பு அரசியலையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. நிறுவனங்கள் நிகழ்த்தும் இதுபோன்ற கலை விழாக்கள் மக்களின் விடுதலைக்கு எந்த வகையில் உதவிடக்கூடும் என்ற கேள்வி முன்வைக்கப்பட்டாலும் அது நிகழவேண்டிய தளம் வேறு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். தலித்துகள் ஒடுக்குமுறைக்கு எதிராக எப்பொழுதுமே போராடிக் கொண்டுதான் இருப்பார்கள் - எந்தத் தளத்தில் இருந்தாலும். தலித் கலைவிழாவினையும் நாம் அப்படித்தான் பார்க்க முடியும். காலங்காலமாக அமுங்கிக் கிடந்த உணர்வுகள் தலித் கலைவிழாவில் வெளிப்பட்டிருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக கனன்ற சமூகக் கோபத்தின் தீ தலித் கலைவிழாவில் எரிந்ததைப் பார்க்க முடிந்தது. தலித் மக்களிடையே இருக்கும் பன்முகப்பட்ட கலைவடிவங்களை தலித் கலைவிழாவில் பார்க்க முடிந்தது.

ஆண்டுதோறும் சித்திரைத் திருவிழாவிற்குப் பெயர்போன மதுரையில் ஆண்டுதோறும் தலித் கலைவிழா நடைபெற்று வருகிறது. 20.3.2004 சனிக்கிழமையன்று மெதுவாக தூறவிட்டு வேகம்பிடித்து அடை மழையாய் பெய்துவிட்டது தலித் கலைவிழா. தலித்துக்குள் ஏற்படவேண்டிய வெளிச்சக் கீற்றினை மாலையில் கிளறி விடியலில் பதம் பார்த்து பார்வையாளர்களை கனப்படுத்தியிருக்கிறது. மண்வாசம் பிடித்த கிராமியக் கலைகளில் தலித்துகளின் வாழ்க்கை ஊடாட்டங்களை இடை இடையே வீச்சுக் குரலோடு பதிவு செய்திருக்கிறது.

பாடல்கள் உள்ளிட்ட கலைவடிவங்கள் எளிமையாலான அதே சமயம் அதிகார மையங்களின் அடித்தளத்தை அதிரச் செய்வதாக இருந்தது. தலித்தும் உயர்பதவி வகித்தால் பதவியில் அவர் உயர்சாதியாகுவது பற்றிய பாடல் நம்மை கேள்விக்குள்ளாக்குகின்றது. விதிவிலக்குகள் இதற்கும் உண்டு. தலித் என்ற சொல்லைச் சுற்றி ஈட்டியாய் துருத்திக் கொண்டிருக்கிற அத்தனை ஆதிக்கச் சக்திகளுக்குமான பதில்களை ஒருவாறாக தர முடிந்ததற்கு தலித் ஆதார மய்யத்தின் தேர்வுகள் ஒரு வகையில் காரணம். சுழல் விசிறிகளும் கொசுவர்த்திச் சுருள்களும் அரங்கின் விநோதமான மௌன அழுத்தங்களுக்கும் சரியான விகிதத்தில் எதிர்திராணியை செலுத்தக்கூடிய பேரா. பெரியார்தாசனின் பேச்சு வரலாற்றுத் தரவுகளை பிட்டுவைக்காமல் வெட்டவெளி அரங்கின் நிதர்சனக் கூற்று பேச்சு வகையறாவை புரிந்து சென்றதின் பலன் கிடைக்காமலிருக்காது. நடந்தோ வாகன வகையறாவிலோ காலையில் வீடு திரும்பினவர்களுக்கும் மீண்டும் மீண்டும் அம்மாவைக் குறித்தும், தாத்தாக்களைக் குறித்தும் நினைவு சுழன்றிருக்கும். அன்னம் தோற்கும் வர்ணாசிரம நீர்பாலினை அறிய இந் நிகழ்ச்சி உதவும்.

தலித் கலைவிழாவை புறக்கணியுங்கள் என்ற மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் துண்டறிக்கை தலித் ஆதார மய்யத்தின் நிறுவனத்துள் பூதக்கண்ணாடி போட்டு மாற்றுச் சிந்தனையைச் சொடுக்குகிறது. இப்போது நமக்கு கைகொடுப்பவர்கள் முக்கியமில்லையா? முதலாளி மூளைக்காக கடன் வாங்கி குடிமக்களை கடனாளியாக்கியிருக்கும் ஆதிக்க அரசியலைவிட இது கேவலமில்லை என்று சரிகட்டிக்கொள்ள முடியும். நமக்குப் புரிகிறது. ஆனால்... ஆனால் என்ற கேள்வி வலைகளில் சிக்கியுள்ளோம். பொருளாதார வசதிப்பெற்ற சமூகத்திற்கான போராட்ட விழிப்புணர்வுக்கு ம.க. இ.க. வின் விளக்கவுரை உதவக்கூடும். இப்படித்தான் விடிந்தும் விடியாமலும் சூடான தினகரனின் சாகசமும். பல பத்திரிகைகளின் பங்கு இப்படித்தான். தலித் அரசியலை புறக்கணிக்கும் எவருக் கும் வெட்கம் மானம் என்றோ தன் மையை அழித்துக் கொண்டு இப்போது மஞ்சள் சிவப்பு பூசுவது புரியாமலிருப்பதில்லை பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு.

மாற்றுச் சிந்தனைகளின் ‘கூடும்’ சிந்தனைக்கட்டமைப்பின் ஆதிக்கக் கணம்தான். தலித்துக்குள்ளும் ஆதிக்கச் சிந்தனை மனோபாவம் உண்டு. இயங்கியலில் இப்போது நாம் பெற்றிருக்கும் இடம் கலகம். கைகோர்த்துதான் ஆகவேண்டும் என்பது பச்சையான வார்த்தை. நரிகளுக்கு மத்தியில் நியாயங்களைக் கற்பித்துக் கொண்டிருந்தால் கூண்டோடு கைலாசத்திற்கு யார் பொறுப்பு? பறை அதிரும் உறுமும். தாரைத் தப்பட்டை நரம்பை முறுக்கும். உண்மையில் மூளையுள்ளவரால்தான் இதனோடு நர்த்தனம் புரிய முடியும். முடியாதவர்களின் கோழைத்தன கூச்சல் (நியாயமிருப்பதாக) முட்டுக்கட்டை. இதுவும் பிற சக்திகளின் கூட்டுத்தொகைதான். தலித் என்ற சொல்லின் சக்தி வேர்விட்டு வளர்வதை புத்தகக் கடைகள் சொல்லக்கூடும். பின் நவீனத்துவம் விரைசலாக்கிய தலித் பெண் நிகழ்வுகள் அசாதாரண பங்கேற்பின் மூலம் வாசகர் அறிந்து கொள்ளலாம். இயக்கப்படணும். சரியான தளத்தில் இயங்கணும் வேறென்ன?



படிப்பகம்

www.padippakam.com

■ நிகழ் அய்க்கண்

உற்பத்தியாளர்களுக்கும், முதலாளிகளுக்கும் தங்களுடைய பொருட்களை சந்தையில் விற்பனை செய்ய விளம்பரங்கள் அவசியமாகின்றன. பொருட்களின் தரம், நிலைத்த தன்மை, நீடித்த உழைப்பு, பயன்பாடு பற்றிய அறிதலின்றி நுகர்வோர் வாங்குவதற்கு விளம்பரங்கள் வழிவகுக்கின்றன. அனைத்து வகையான ஊடகங்களும் நாட்டின் அரசியல் - பொருளாதார தளத்துடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருக்கின்றன. விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களுக்கும் லாப நோக்கைத் தவிர சமூக அக்கறை இருப்பது இல்லை.

சந்தையில் போட்டியை சமாளிக்க உற்பத்தியாளர்களும், முதலாளிகளும் நுகர்வோர்களின் தேவையை திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது. இதன்மூலம் நுகர்வோரின் விருப்பத்திற்கிணங்க செயல்படவும், நுகர்வோர்களை தங்களது பிடிக்குள் தக்க வைக்கவும் முயலுகிறார்கள். தொலைக்காட்சி, பத்திரிக்கைகள் உள்ளிட்ட வெகுஜன ஊடகங்களும் தங்களுக்கிடையேயான போட்டியைச் சமாளிக்கவும், தனக்கானதைக் கட்டமைக்கவும் மக்களை தங்களது பார்வையாளர்களாக இருத்தி வைப்பதில் தீவிர அக்கறையுடையதாக இருக்கின்றன. ஆக, சந்தைப் பொருளாதார முறைகளும், வெகுஜன ஊடகங்களும் மக்களைச் சிறந்த 'குடிமகனாக' உருவாக்குவதற்குப் பதிலாக, சிறந்த 'நுகர்வோராக' ஆக்குவதில் அதிக கவனங்கொள்கின்றன.

இந்து மதத்தில் நால் வருண அடிப்படையில், முதலில் இருப்பவர்களுக்கு 'அதிகாரமும்' கடைசியில் இருப்பவர்களுக்கு 'கடமையும்' கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அடித்தள மக்களை அதிகாரத்துக்குட்படுத்தப்படுபவர்களாக, பார்வையாளராக இருத்தி வைப்பதில் கவனமாக இருக்கிறது.

"ஓர் இந்துவுக்கு சமத்துவத்தில் நம்பிக்கை இருப்பதில்லை. அவனுடைய மனச்சார்பும், மனப்போக்கும் ஒரு மனிதன் - ஒரு மதிப்பு என்னும் ஜனநாயக சித்தாந்தத்திற்கு முரண்பட்டவையாகவே உள்ளன. ஒவ்வொரு இந்துவும் சமூக ரீதியில் பழமைவாதியாகவும், அரசியல் ரீதியில் பழமைவாதக் கருத்துக்களை உள்ளடக்கிய தீவிரவாதியாகவும் இருக்கிறான்" என்பார் டாக்டர் அம்பேத்கர். இந்திய நாட்டில் குடியரசு அமைப்பு முறை இருந்தும் சுதந்திர-சமத்துவ-சகோதரத்துவ சிந்தனை மற்றும் வாழ்க்கை முறைகளுக்கு எதிராகவே இந்து சமூக அமைப்பும், அரசியல்வாதிகளும் இருக்கிறார்கள்.

நான்கு வருண சமூக அமைப்பில் உள்ளவர்கள்தான் சேர்ந்து-பிரிந்து நின்று அரசியல் இயக்கமாக பரிணமித்து இருக்கிறார்கள். இவ்வகை அரசியல் கட்சிகளே அடித்தள மக்களை ஒதுக்கிவைத்து பார்வையாளர்களாக நிறுத்தி வைக்கும் போக்கு குடியரசு அமைப்பிலும் நிலவி வருகிறது.

சுருக்கமாகக் கூறினால், சந்தைகளும் - ஊடகங்களும், இந்து மதமும் - அரசியல் இயக்கங்களும் இணைந்து - பிரிந்து - தனித்தோ நின்று அடித்தள மக்களை தத்தம் வழியில் நுகர்வோராக / பார்வையாளராக / அடிமையாக ஆக்குவதில் முனைப்புடன் இருப்பதை அறியலாம். உற்பத்தியாளர்களும், முதலாளிகளும் மக்களின் விருப்பத்திற்கிணங்க உற்பத்தி செய்து வருவதாகக் கூறிக்கொண்டாலும், தாங்கள் உற்பத்தி செய்தவைகளை பிறர் மேல் திணிக்கவே முயலுகின்றனர். அரசியல் இயக்கங்களும் தங்கள் வகுப்பு நலன் சார்ந்த கொள்கை - கோட்பாடுகளை உருவாக்கி அதை அனைத்து மக்களுக்குமானதாய் மாற்றிட முயலுகின்றன.

"பார்ப்பனியமானது, ஆதிக்க வகுப்பு அந்தஸ்த்தை தனக்கு அளிக்கத் தயாராக இருப்பவர்களும், தனக்கு அடிபணிந்து ஒத்துழைக்கக் கூடியவர்களுமான ஏனைய வகுப்பினரை தன்னுடைய கூட்டாளிகளாக வைத்துக் கொள்ளும்" என்பார் டாக்டர் அம்பேத்கர். இந்துத்துவத்தையும், பார்ப்பனிய - சத்திரிய - வைசிய - சூத்திர வகுப்பினரையும், உள்ளடக்கிய அரசியல் இயக்கமாக, பாரதீய ஜனதா கட்சி உருவெடுத்துள்ளது. இக்கட்சியில் இருக்கும் ஆதிக்க வகுப்பினர்கள் - அதிகார வர்க்கத்தி விருப்பவர்கள்தான் இந்திய அரசியல், சமூக, பொருளாதாரத் தளத்தில் சர்வ வல்லமை படைத்தவர்களாக உருவாகி வருகிறார்கள். மரபுவழி மத அடிப்படைவாத அமைப்புக்கள் இந்திய அரசியல் ஜனநாயகத்தின் மீது ஆதிக்கம் செலுத்தவும் வழி கோலியவர்கள் இந்த பா.ஜ. கட்சியினரே. காஞ்சி சங்கராச்சாரி வட தமிழக பா.ஜ.க. தேர்தல் அலுவலகத்தை திறந்து வைத்திருக்கிறார்.

தேர்தலையொட்டி ஆட்சி அதிகாரத்தினை மீண்டும் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் பா.ஜ. கட்சியினரும், கூட்டணியினரும் நிகழ்த்தும் சாகசங்களை கவனித்தால்:-

- வரியில்லாத பட்ஜெட் - வரி வருவாய் தள்ளுபடி - இலவச சலுகைகள் நீட்டிப்பு - தேர்தலையொட்டி சாலைகள், மின்சாரம், குடிநீர் வசதிகள் சீரமைப்பு - அவசர சட்டங்கள் வாபஸ் - அரசுத் துறைகளின் புள்ளிவிபர சாதனைகள் - தனியார் நிறுவனங்களுக்குச் சலுகைகள்.
- ஏகத்துக்கு தனியார் தொலைக்காட்சிகள்- செய்திப் பத்திரிக்கைகள் - தனியார் வானொலி



படிப்பகம்

www.padippakam.com

அலைவரிசைகள் அதோடு, அரசு சார்ந்த தொலைக் காட்சிகள். இப்படியாக அனைத்து ஊடகங்களிலும் ஆளுங்கட்சி - எதிர்கட்சி; பெரும்பான்மையோர் சிறுபான்மையோர்; எதிரும் புதிருமான கருத்துக்கள் பதிவு செய்யப்படும்போது, பார்வையாளர்களுக்கு குழப்பமே மிஞ்சுகிறது. இதன் மூலம் குடிமக்களால் தீர்மானிக்க முடியாத நிலையை உண்டு பண்ணி விடுகிறது.

● தேர்தல் மற்றும் நெருக்கடி காலங்களில் யாத்திரைகள், யாகங்கள், பூஜைகள்,கும்பாபிஷேகங்கள் ஆகிய அனைத்துமே, இந்துத்துவ அடையாளங்களை முன் மொழிவது - வலியுறுத்துவது - அணி திரட்டுவது மூலம் ஒருமுகப்படுத்தி வென்றெடுப்பதாக இருக்கிறது

● கடந்த பாராளுமன்ற தேர்தலில் 'கார்கில்'இந்த பாராளுமன்ற தேர்தலுக்கு 'கிரிக்கெட்'. (அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு சார்க் நாடுகளுக் கிடையே திறந்த பொருளாதாரச் சந்தை?!).

● பாகிஸ்தானை பயங்கரவாத நாடாக கட்டமைப்பதும் பிறகு நற்சான்று அளிப்பதும். இதே போன்று சிறுபான்மையினர் அரவணைப்பு - கட்சியில் சேர்ப்பு - அணி திரட்டல் ஆகிய அனைத்துமே வாக்கு வங்கியை விரிவாக்கம் செய்யவே.

● சினிமா ஊடகம் மூலம் மக்களை பார்வையாளராக்கி, தன்வயப்படுத்தியவர்களுடைய தன்னிலைகளை அழித்து,அதிகாரம் பெற்று வந்த சினிமாத்துறை - விளையாட்டு நட்சத்திரங்கள் அரசியல் மூலமாகவும் மக்களை அதிகாரம் செலுத்த சாரைசாரையாக அணி வகுப்புகள் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இவர்களுக்கெல்லாம் இழப்பதற்கு ஏதும் இல்லை, காட்சி ஊடகத்தைத் தவிர.

இராமாயணமும், மகாபாரதமும், அயோத்தி ராமர்களும் திரும்பத் திரும்ப காட்சி ஊடகத்தின் மூலம் ஒளிபரப்பப்படுவது, அல்லது மீண்டும் மீண்டும் மறு ஒலிப்பரப்பாகும்போது சலிப்பைத் தரும் என்பதால் இவ்வித 'கவர்ச்சிகள்' இவர்களுக்குத் தேவையாய் இருக்கலாம்.

இவ்வாறாக அனைத்து வகை ஊடகத்துக்குள்ளும் தங்களை பல வகைகளில் - வழிகளில் நிலை நிறுத்திக் கொள்ள பா.ஜ.க. முயல்வது போல, தற்போது தேர்தலையொட்டி, தொலைக்காட்சி, இ-மெயில், இண்டர்நெட், எஃப்.எம் ரேடியோ, செல்போன் ஆகியவைகளின் மூலம் தங்கள் கட்சிக்கு விளம்பரத்தின் மூலம் ஆதரவு திரட்ட முனைந்துள்ளனர்.

சாதி - தீண்டாமை நிறைந்துள்ள, கல்வி பெறாத, சமூக அரசியல் - பொருளாதார - ஏற்றத்தாழ்வுகள் நிறைந்துள்ள நாட்டில், வாக்குரிமை மட்டுமே அடித்தள மக்களுக்கு சமத்துவ உரிமையின் குறியீடாக இருக்கிறது. அந்த வாக்குரிமையும் கூட நவீன காலத்தில் விளம்பரமாக ஊடுருவி அடித்தள மக்களை பார்வையாளராக்கித் தட்டிப் பறிக்க பலம் வாய்ந்த அரசியல் கட்சிகள் முனைந்துள்ளன என்பதைக் காட்டுகிறது.

தொலைக்காட்சிகளின் வாயிலாக ஒளிபரப்பப்படும் இவ்வகை விளம்பரப் பிரச்சாரமானது. 'காட்சி' வித்தைக்குள் மக்களை இழுத்துக் கொண்டு போவதாய் இருக்கும். தனிமனிதனை மேலும் தனிமைப்படுத்தவே செய்யும். ஊர்வலங்களோ, பொதுக்கூட்டங்களோ, கருத்துப் பரிமாற்றங்களோ அன்றி ஒரே நேரத்தில் பல திசை, பல வழி மக்களை சென்றடைவதில் கவனமாய் இருக்கும். பல்வகை சாதிகளால் சிக்குண்டு கிடக்கும் மக்கள் இணைந்து சமூக நடவடிக்கைகளில் செயலாற்று வதற்கு வாய்ப்பளிப்பதில்லை. (ஏற்கனவே 'சேரி'களில் நுழைந்து வாக்கு சேகரிக்க ஆதிக்கச் சாதியினர் யாரும் முயல்வதில்லை). காட்சி ஊடகங்களில் பெரும்பாலானவை கேளிக்கைக்குரியவைகளே ஒளிபரப்பப் படுகிறது. இவ்வாறாக, காட்சி ஊடகங்களில் விளம்பரதாரர் மூலம் ஒளிபரப்பப்படும் பிரச்சார விளம்பரமானது விளம்பரதாரர்களுக்கு வியாபாரமாகவும் ஆகிவிடுகிறது. தேசப்பற்று, தேசநலன், மத ஒற்றுமை, வேலைவாய்ப்பு, சாதி - தீண்டாமை ஒழிப்பு, பெண்கள் - பழங்குடியின - அரவாணிகளின் நலன்கள் காட்சி ஊடகங்களில் ஆழ்ந்த புரிதலை, பற்றினை வெளிப்படுத்துவதாக இருப்பதும் இல்லை.

ஆனால் மக்களை இக்காட்சி ஊடகத்திற்குள் சிக்கவைக்க முயற்சிகள் தொடர்ந்தவண்ணம் இருக்கிறது. உதாரணத்திற்கு பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் ரூ. 450 கோடி செலவில் ஆயிரம் தொலைக்காட்சி டிரான்ஸ்மிட்டர்களும், 2000 ரேடியோ டிரான்ஸ்மிட்டர்களும் நிறுவப்பட இருக்கிறது. தூர்தர்ஷன் நேயர்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 31 சதவீதம் அதிகரித்து வருவதாகவும், தற்போதைய ஆண்டு வருமானம் ரூ. 15,000 கோடி எனவும் மத்திய செய்தி - ஒலிபரப்புத் துறை மந்திரி அறிவித்திருக்கிறார். தனியார் தொலைக்காட்சி, எஃப்.எம். ரேடியோ நேயர்களின் எண்ணிக்கை மற்றும் வருமானத்தைப் பற்றிச் சொல்லவே வேண்டாம். தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும், மக்களைச் சென்றடைவதில் அதன் நோக்கும் சமூக நோக்குடையதாக இருக்கப் போவதில்லை. பாரதீய ஜனதா கட்சியோ - பிற வெகுஜன அரசியல் இயக்கங்களோ காட்சி ஊடகத்தின் மூலம் சமூக மேம்பாட்டுடைய நல திட்டங்களில் கவனங்கொள்தல், அடித்தள மக்களை நேரடியாகச் சந்தித்து சமூக இணக்கத்திற்கான வழி வகைகளைக் காண்பதற்குப் பதில், காட்சி ஊடகத்தின் மூலம் வாக்குகளை மட்டும் பெறுவதற்காக அடித்தள மக்களை பார்வையாளராக இருத்தி வைக்க முயல்வதானது, "இந்த லட்சியமே புதிய பாரதம் படைக்க" என்பதும் நிலையான - பாதுகாப்பான - வளமையான - உலகளாவிய - கவுரவமிக்க - நல்லாட்சியை தருவதாகக் கூறுவதானது பா.ஜ.க-வினரின் நலனை முன்னிருத்தவே யாகும்.

நாடாளுமன்ற ஜனநாயகத்தின் மூலம் அனைத்துவகை மக்களுக்குமான சுதந்திரம் - சொத்துரிமை - வளமான வாழ்வு இவற்றினை உறுதி செய்வதும், சாதி தீண்டாமை யினைப் போக்கி சமத்துவ - சகோதரத்துவத்தினை வளர்த் தெடுக்க முயலுவதும் ஜனநாயகவாதிகளின் கடமையாகும். ●



படிப்பகம்

www.padippakam.com



■ மா. வேலுசாமி

# கடவுளாகும் பெரியார்...!

தமிழகத்தின் திராவிட மறுமலர்ச்சி அரசியலுக்கும், அதன் வளர்ச்சிக்கும், மதம் மற்றும் தமிழக மக்களின் மூடநம்பிக்கைகளை களைந்தெறிவதற்கும் தன்னுடைய அயராத உழைப்பினை அர்ப்பணித்தவர் திரு. ஈ.வெ. ராமசாமி என்பது நாமறிந்ததே. தமிழக அரசியலின் எழுச்சி முன்னோடியாகவும், திராவிட வரலாற்றை உருவாக்கியவராகவும் திகழ்ந்து - தமிழகத்தின் அரசியலை 50-ஆண்டு காலமாக தன்னுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தவரான தந்தை பெரியார் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் மாபெரும் அரசியல் தலைவர் என்பதில் எந்தவொரு சந்தேகமுமில்லை. ஏனெனில் ஜனநாயக நாட்டில் அரசியலையும், அதிகாரத்தையும் தூக்கி நிறுத்துகின்ற இனங்களான நில உடைமையாளர்கள், சமூகத்தில் உயர்ந்த வகுப்பார் ஆகியோர்களின் ஆதரவு பெற்றவர் என்ற வகையில் அவர் இன்றும் ஒரு மிரட்டலான தலைவராகவே இருந்து வருகின்றார். அதோடு இந்த ஆண்டை (உயர்சாதியினர்) வகுப்பார் இன்றளவும் பெரியாரை கடவுளாகவே போற்றி வருகின்றனர். பெரியாரை, ஆண்டைகள் கடவுளாகவே வழிபடுவதில் தலித்துகளுக்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. ஆனால் 'கடவுள்' என்பவர் அனைவருக்கும் சமமானவராக இருக்கவேண்டும் என்ற நம்பிக்கையாவது இருக்க வேண்டுமே. சமூகத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகளை களையவே திராவிடர் கழகம் உருவாக்கப்பட்டதுஎன்றுகூறிய திருச்சி புத்தூர் மாநாட்டில் 29-9-1945 அன்று திராவிட கழகம் உருவாக்கிய இலட்சிய விதிமுறைகள் 3-இன் சாரம்:

"திராவிட நாட்டில் உள்ள மக்கள் யர்வரும் சாதி, வகுப்பு அவை சம்பந்தமான உயர்வு, தாழ்வு இல்லாமல் சமுதாயத்தில் சம உரிமையையும் சம சர்ந்தர்ப்பத்தையும் பெற்று சம வாழ்வு வாழ வேண்டும்" - ஆனால் இத்தீர்மானம் இயற்றி இன்று 59 ஆண்டு காலம் கடந்தும், திராவிட அரசியல் கட்சிகளே தமிழகத்தினை மாறி, மாறி ஆட்சி புரிந்தும் இன்றளவும் இத்தீர்மானம் மெய்ப்பிக்கப்படவில்லை என்கிறபோது, அரசியலையும் - அதிகாரத்தையும் கைப்பற்றிக் கொள்வதற்கான ஆண்டைகளின் போலி வேஷமே கடவுள் மறுப்பும், சமுதாய மாற்றமும், சுயமரியாதை இயக்கமும் என்பது தெளிவாகிறது.

ஈ.வெரா. அவர்களின் அரசியல் வரலாற்றை அவரது அரசியல் வியூகத்தில் விட்டில் பூச்சிகளாய் மாறி மறைந்துபோன தலித்துகளின் பார்வையில் ஆராய்ச்சி செய்யும் போது, சுயமரியாதை இயக்கமும் - திராவிட அரசியலும் தமிழகத்தில் அரசியல், சமூக தளங்களில் சாதி வெறிக் காட்டுமிராண்டிகளையே உருவாக்கியிருக்கிறது. திராவிட அரசியலின் வளர்ச்சிக்கு தலித்துகளை பலியிட்ட திராவிட அரசியலாளர் - சிந்தனையாளர்கள் இன்றும் தலித்துகளை பலியிடத் துணிவதும், அதனை எதிர்த்து போராடுவதும் இன்று தமிழகத்தின் புதிய வரலாறு ஆகிவிட்டது.

இந்தியம், திராவிடம், தமிழ் தேசியம் என்ற பொது அரசியல் முன்னெடுப்பு நாடகங்களை அரங்கேற்றிய ஆண்டைகள் இன்று தலித் அல்லாதார் அரசியல் என்ற போர்வையில் பெரியாரை கேடயமாக பயன்படுத்தி இன்று 'கலகக்கார தோழர்' என்ற நாடகங்களை நடத்துகின்றனர். பெரியார். திராவிடர், தமிழர், கம்யூனிஸ்டு என்று எந்தப் போர்வையில் தலித்துகளை நெருங்கினாலும் உங்களின் நாடகம் அரங்கேற்றம் காண முடியாது. ஏனெனில், "எங்களின் வரலாற்றை நீங்கள் கொடுக்க முடியாது. உங்களின் துரோகங்களை எங்களால் மறக்க முடியாது" என்று தலித்துகள் வாளேந்தத் தயாராகிவிட்ட நிலையில் நாடகம் என்பது ஒரு புதிய நூற்றாண்டின் தலைசிறந்த 'காமெடி.' இதனை உங்களுக்குப் புரியவைக்க முயற்சி செய்ய நாங்கள் முனையும்போது உங்களின் (பெரியாரிஸ்டுகள்) மூக்கு சிவப்பது ஏன்? என்பது பெரியாருக்கே வெளிச்சம்.

"பெரியாரின் நாடகத்தை மக்களே காசு கொடுத்து பார்க்க வந்துள்ளனர் என்றால் மக்கள் பெரியாரின் கருத்தியலின் அவசியத்தை உணர்ந்திருக்கிறார்கள் என்பதே பொருள். இது தெரியாமல் புரிந்து கொள்ளாமல் இருக்கும் 'முனிமா' இப்போதாவது பெரியாரின் அவசியத்தைப் புரிந்து கொள்



படிப்பகம்

www.padippakam.com

ளட்டும்" என்று திரு. தமிழ் ஓவியா பழநியில் இருந்து எழுதியிருக்கி றார்.

இவ்வாறு பெரியாரின் நாடகத் தினையும், அதற்கு வரும் மக்கள் கூட்டத்தினையும் மிகைப்படுத்திய தோடு, முனிமா-வின் கேள்வி பதிலை விமர்ச்சிக்காமல் 'பாசாங்கு' என்ற தோபக்கனலைத் தெறித்திருக் கிறார் பெரியாரின் பக்தை தமிழ் ஓவியா.

பொதுவாக தமிழ்நாட்டில் பழ நிக்கு செல்லும் முருக பக்தர்களுக்கு மட்டுமே மொட்டை போடுவார் கள். ஆனால் பழநியிலிருந்தபடியே தமிழக தலித்துகளுக்கு மொட்டை போட எத்தனிக்கும் இந்த 'தமிழ் ஓவியா' மட்டுமல்ல, இருக்கும் அனைத்து தமிழ் ஓவியாக்களுக்கும் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன். "தலித்துகளின் தலையில் போடவேண்டிய அளவிற்கு நாட கம், அரசியல், சினிமா என்று மாறி-மாறி மொட்டை போட்டாச்சே. இன்னுமா உங்களின் ஆசை தீர வில்லை. இந்த மொட்டை நாடகங் களை புரிந்ததால்தான் 'முனிமா' தினந்தோறும் நடக்கிற விசயத்தை நாடகமாக (மௌனக் கெட்டு) பார்க்க வேண்டுமா" என்று பதிலளித்துள் ளார்.

எனவே 'முனிமா'வின் கேள்வி பதிலை தலித்துகள் வரவேற்கிறார் கள். புதிய கோடாங்கி தலித்து களின் உணர்வை புரிந்து அவர் களுக்கான, அவர்களுக்குரிய, அவர் களுடைய பிரதிபலிப்பாகவே வெளிவருகிறது. பழநி தமிழ் ஓவி யாவின் 'சர்வாதிகாரப் போக்கு' பெரியாரைப் பற்றி பேசக் கூடாது, எழுதக்கூடாது என்றளவிற்கு வந் துள்ளதெனில் - உண்மையான ஈ.வெ. ராமசாமி நாயக்கரின் (தலித் துகளின் பார்வையில்) தலித் விரோ தப் போக்கினை உங்களுக்கு எடுத் துக்கூற கடமைப்பட்டுள்ளோம். இது தொடர்பாக திரு. அ. ராமசாமி புதிய கோடாங்கியில் டிசம்பர் 2002-இல் வெளியிட்ட தகவலை நினை வூட்ட விரும்புகின்றேன்.

இந்து 'அல்லாதார்' தொடர்ந்து தங்களைப் பாதிக்கப்பட்டவர் களாகக் கட்டமைத்துக் கொண்டு எதிராளியின் மீது மூர்க்கத் தாக்கு தல் தொடுக்கும்போது மட்டும் தனியடையாளமாகச் சொல்லும் போதும், பின்னர் தங்களுக்குள், ஒன்றில் ஒன்று உயர்ந்ததாக கருதிக் கொண்டு நடத்தும் யுத்தங்களும், கூட்டணிகளும் வெட்கக்கேடா னவை. சாதகமான எல்லாவற்றை யும் பயன் படுத்திக்கொள்ளும் இந்த அல்லாதார்கள், தங்களின் எதிரி அதைச் செய்யும்போது மட்டும் கூக்குரல் இட்டு அம்பலப்படுத்து வதில் இறங்கிவிடுவார்கள். பொதுத்தள விவாதங்களில் நம்பிக் கையிழந்து, தனிநபர் தாக்குதல் என நுழைந்துவிட்ட இந்த 'அல்லா தார்'களின் சொல்லாடல் புதியது ஒன்றும் இல்லை. இவர்களுக்கு பெரியார் கேடயமாக இருப்பது அவர் உயிரோடு இல்லை என்ப தில்தான். திரு. அ. ராமசாமி அவர் களின் இவ்வரிகள் 'தமிழ் ஓவியா' போன்றவர்களுக்கு சாலப் பொருத் தமாகும்.

இக்கட்டுரையின் தொடர்பாக பெரியார் பற்றியும் அவரது சுயமரி யாதை இயக்கத்தினைப் பற்றியும் - ஈ.வெ. ராமசாமி என்ற சாதாரண மானவரை பெரியார் என்றழைக் கக் காரணமாக இருந்த பழைய 'முனிமா' என்ன சொல்லியிருக்கி றார் என்பதை தமிழ் ஓவியா முத லில் புரிந்துக் கொள்ளட்டும்.

"1938 ஆகஸ்டில் சுயமரியா தைக் கூட்டம் ஒன்றில் தாழ்த்தப் பட்டோர் தலைவி திருமதி. மீனாம் பாள் சிவராஜ் உரையாற்ற சிறிது கால தாமதமாக வரநேர்ந்தது. இதை சகித்துக்கொள்ள முடியாத, மேடையிலிருந்த சுயமரியாதைச் சுடர்கள் பேச வரவிருப்பவர் பற்றி யும் சாதியைப் பற்றியும் இழிவாகப் பேசிக் கொண்டிருந்தனர். இது மேடையேறிய அம்மையாரின் காதுக்கு வந்துசேர, கொதிப் படைந்த தலைவி மீனாம்பாள் சிவராஜ் மேடையிலேயே கோப மாகப் பேசிவிட்டார்.

இதைக் கேள்விப்பட்ட ஈ.வெ. ராமசாமி அவர்கள் "சென்னை எழும்பூர் சேரியில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் அம்மையார் தோழர் மீனாம்பாள் அவர்கள் 'சுயமரியாதைக்காரர்கள் என்றால் சுத்த மடையர்கள்' என்றும் மற்றும் பல வார்த்தைகளை ஜாதி இந்துக் களைப் பற்றி தாறுமாறாக பேசிய தாகவும் கூட்டத்தில் 'விளக்குமாற் றால் அடிப்பேன்' என்று பேசிய தாகவும் - அதோடு மட்டுமல்ல ஜஸ்டீஸ் கட்சியினைப் பற்றியும் தாருமாறாக பேசியதாகவும் சேதி வந்திருக்கிறது என்று பேராசிரியர் சிவராஜ் அவர்களுக்கு கடிதம் எழுதினார். அவருக்குப் பதிலாக பேராசிரியர் சிவராஜ் பெரியாரை பொறுமையாக இருக்கும்படியும் சென்னை வந்தபிறகு இதுபற்றி விசாரிப்பதாகவும் பதிலளித்தார். மேற்கண்ட மேற்கோள் விளக்கத் திலிருந்து 'முனிமாக்கள்' எதையும் எப்பொழுதும் தெளிவாக சட் டென இயம்புவதில் வல்லவர்கள் என்பதினை இந்த தமிழ் ஓவியாக் கள் உணரவேண்டும்.

மேலும் 1944-லிருந்து 1973 வரை சுமார் 30 ஆண்டுகாலம் பெரியார் ஈ.வெ. ராமசாமி பிராமணர்களுக்கு ஈடுகொடுத்து அயராது தொண் டாற்றியதன் மூலம் பிராமணரல் லாத சாதி இந்துக்களின் உரிமை களை வலியுறுத்தி தாழ்த்தப்பட் டோருக்கு மேலாக அவர்களை இரண்டாம் வகுப்பு பிராமணர் களாக உருவாக்க மட்டுமே முடிந் தது. ஆனால் பிராமணரல்லாதார் களால் தாழ்த்தப்பட்டோர் சந்தித்த சமூக ஏற்றத்தாழ்வுகளையும், தீண் டாமைகளாலும் - பிறச் சமூக கொடுமைகளாலும் நலிந்து கொண்டிருக்கும் மக்களுக்காக அவர் ஏதும் செய்யவில்லை என்று திரு. அன்பு பொன்னோவியம் அவர்கள் அவரது கட்டுரையில் எழுதியிருப்பதை புரிந்து கொண்ட நிலையில் பிராமணர்களிடமிருந்த அரசியல், அதிகாரம், கலாச்சாரம் ஆகியவற்றைப் பறித்து அதை இரண்டாம் வகுப்பு பிராமணர் களிடம் (பிராமணரல்லாதார்) கொடுத்ததைத் தவிர தமிழக அரசிய லில் அவர் பெரியதாக சாதித்துவிட வில்லை என்பது புரியவருகிறது.

அடுத்ததாக 1921 ஜனவரி 8-இல் சென்னையில் நடந்த நீதிக்கட்சியின் மாநாட்டில் பின்வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

வகுப்பாரை சமூக அரசியல் நிலைகளில் பிராமணரல்லாத வகுப்பாரின் பிரிக்கமுடியாத ஓர் அங்கமாக்கி அவர்களுடைய சமூக, பொருளாதார அரசியல் நிலை உயர்வதற்காக அனைத்து வாய்ப்புகளையும் வசதிகளையும் அளித்துத் தமக்குச் சரிநிகரானவர்களாக நடத்துவது பிராமணரல்லாதாரின் தலையாய கடமை எனவும் இந்த மாநாடு கருதுகின்றது." இவ்வாறு நீதிக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியது ஏன் என்பதை கீழ்வரும் வரிகளில் காண்போம். ஆனால் இந்த தீர்மானம் ஆடு நனைகிறதே என்ற ஓநாய்களின் பரிதாபத்திற்கு ஒப்பானதாகவே அமைந்தது என்பதை பெரியாரே ஒப்புக்கொண்டுள்ளதை பார்ப்போம்.

பெரியார் நடத்திய மொழிப் போராட்டத்தில் முதல் பலியாக்கப் பட்டவன் ஆதிதிராவிடன் என்பதை எல்லோரும் நன்கு அறிவார்கள். அவருடைய இறுதி போராட்டத்தில் சிறையில் அடிபட்டு இறந்தவர் எண்ணிக்கையில் ஆதி திராவிடர்களே அதிகமானவர்கள் என்பதை பெரியாரே தனக்குத் தந்த வரவேற்பில் கூறியிருக்கிறார். மேலும் பெரியார் இந்த நாட்டு மக்களுக்கு பொதுவாகவே தன்னுடைய கொள்கைகளைத் தந்தார் ஆனால் மற்ற வகுப்பினரைக் காட்டிலும் ஆதி-திராவிட மக்களே பெரும் ஆதரவு அளித்ததுடன் உறுதுணையாக இருந்தார்கள் என்பதை யாரும் மறுக்கவோ - மறைக்கவோ முடியாது. எனவே ஆதி-திராவிடருக்கு பெரியார் வழிகாட்டினார் என்ற பெருமை ஆதி - திராவிடர் பெருங்குடி மக்களையே சாரும் என்பதில் எள்ளளவும் தவறில்லை.

இந்தளவுக்கு பெரியாரின் வெற்றிக்காக, வளர்ச்சிக்காக, அவரது கொள்கைப் போராட்டங்களுக்காக தலித்துகள் உயிரையும், தங்களது வாழ்க்கையையும் அர்ப்பணித்து இன்று வரை சமூக மாற்றம் வருமென காத்திருந்து 'இலவுகாத்த கிளியாய்' இருந்தது போதும் என புரிந்து கொண்டார்கள். "பெரியார் என்ற மாபெரும் தலைவர் யாருக்காக பாடு பட்டார்? யாரை வளரச்செய்தார்? யார் வளர்ந்தார்கள்? சாதி இந்துக்கள் எனும் விஷச் செடிகளுக்கு பெரியார் என்ற தலைவர் தலித்துகளை எருவாக்கியது ஏன்?" என்ற எண்ணற்ற கேள்விகள் தலித் கல்வியாளர்கள், அறிஞர்கள் ஆய்வாளர்களிடையே எழுந்துள்ளது. ஏறக்குறைய 50 ஆண்டுகள் தமிழக அரசியலை தங்களின் கட்டுப்பாட்டினுள் வைத்திருந்த பெரியாரும் அவரது வழித்தோன்றல்களும் என்ன செய்தார்கள் என்பதைக் காணும் போதும் தலித்துகள் திட்டமிட்டு முட்டாள்களாக்கப் பட்டுள்ளதை எண்ணும்போதும் எளிதில் உணர்ச்சிவசப்படாமல் வேறு என்ன செய்வது.

அரசர்கள் தலித்துகளை பிராமணர்களின் சூழ்ச்சியால் கொடுமைப் படுத்தியபோது - தலித்துகள் கல்வியறிவற்ற, உணர்வுகளை வெளிப் படுத்தத் தெரியாத மனித விலங்குகளாக இருந்த நிலை நாமறிந்ததே. "மனித விலங்குகளாய் இருந்த தலித்துகளும் - சாதி இந்துக்களும் இந்த நிலையைப் போக்க வீறுகொண்டு எழுந்தபோது முதலில் போராடத் துவங்கியது தலித்துகளே. இவர்களுக்கு ஏறக் குறைய பல நூற்றாண்டு கால வரலாறு இருக்கிறது. வள்ளுவரின் திருக்குறள் - ஔவையின் ஆத்திச்சூடி ஆகியவற்றின் வயதறிந்தால் தலித்துகளின் மேன்மையின் வரலாற்றை உணர முடியும். ஆனால் இவற்றை உணராமல் ஏதோ பெரியார் வந்த பிறகுதான் தலித்துகள் மனித நிலையினை அடைந்தார்கள் என்று வரலாற்று ஏற்பு செய்வது எவ்வளவு கொடுமையானது. இந்நிலை போக்கவே 'முனிமா' தலித்துகள் 'பெரியாருக்காக' காத்துக்கொண்டிருக்கவில்லை.

உதாரணமாக 1891-இல் இந்து மக்கள் திராவிட மகஜனசபை என்ற சங்கம் ஏற்படுத்தப்பட்டது. (1857-இல் ஆதி-திராட மகாஜன சபா என்ற அமைப்பு ஏற்படுத்தப் பட்டது) அதனுடைய சார்பில் உதகமண்டலத்தில் 1.12.1891-இல் மாபெரும் மாநாடு கூட்டப்பட்டது. அதில் பல்வேறு தீர்மானங்களை இயற்றியுள்ளனர். இவ்வாறு தலித்துகளின் பிராமண எதிர்ப்புகளை பயன்படுத்தி தலித்துகளைப் போலவே மனித விலங்குகளாய் இருந்து வந்த பிராமணரல்லாதார் தங்களுடைய திராவிட அரசியலை வென்றெடுத்ததன் மூலம் தங்களை கணம் பொருந்திய இரண்டாம் வகுப்பு பிராமணர்களாக மாற்றிக் கொண்டார்களே தவிர தங்களுடைய வெற்றிக்கு வேராக இருந்தவர்களை ஏமாற்றியதே அவர்கள் (திராவிடர்கள்) செய்த சாதனை.

"இந்த முதலமைச்சர்கள் யாவரும் சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை நிலைநாட்டுவதில் முனைப்புக் காட்டியுள்ளனர். ஆயினும் சாதியத்தையும், தீண்டாமையையும் ஒழித்து சமநீதி, சகோதரநேயம் ஆகியவற்றின் அடிப்படையிலமைந்த சமூகத்தை உருவாக்குவதில் இவர்கள் காலத்தில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. அரசியல் களத்திலேயே இவர்களுடைய பெரும்பகுதி காலமும் ஆற்றலும் செலவிடப்பட்டது. ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து, திராவிட கட்சிகள், மக்களையும் சமூகத்தையும் மாற்றியமைக்கும் பணியில் இதுவரை வெற்றி பெறவில்லை. சாதிக்கொடுமைகள், தீண்டாமை ஒடுக்கப்படுதல் ஆகியவற்றிலிருந்து விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில் செட்யூல்டு வகுப்பினர் இந்த கட்சி களை ஆதரிக்கின்றனர். ஆயினும் அவர்களின் இந்த எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை. இதற்கு மாறாக, பிற்பட்ட வகுப்பினர் இந்த கட்சிகளாலும், ஆட்சியாலும் நன்மைகளையும் ஆக்கங்களையும் அடைந்துள்ளனர். இதனால் திராவிட கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் பேசியவற்றிற்கும் நடைமுறையில் நிறைவேற்றியிருப்பதற்கும் இடையே பெருத்த இடைவெளியே தற்போது நிலவுகின்றது என்பதோடு கீழ்க்கண்ட கேள்விகளை எழுப்பியுள்ளார்.

1. நீதிக்கட்சியும், பெரியார் ஈ.வெ.ரா. அவர்களும், ஏனைய தலைவர்களும் பிரகடனப்படுத்தியது போல், தீண்டாமை என்பது ஒழிக்கப்பட்டு விட்டதா?

2. சமூகத்தில் தலித்துகள் பிராமணரல்லாத வகுப்பாரின் பிரிக்க முடியாத அங்கமாக நடத்தப் படு கிறார்களா?



படிப்பகம்

www.padippakam.com

3. தலித்துகள்சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளில் உயர்வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளதா?

என்ற இந்தக் கேள்விகளுக்கு அவர் இல்லையென்பதையும் தெரிவித்துள்ளார். இந்த வரிகளுக்கு சொந்தக்காரர் வேறு யாருமல்ல, டாக்டர் பத்மநாபன் ஐ.ஏ.எஸ்.(ஓய்வு)தான். இவர் சுமார் 40 ஆண்டுகாலம் மத்திய மற்றும் மாநில அரசுகளின் உயர்பதவிகளிலும், தமிழகத்தின் தலைமைச் செயலராகவும், பின்பு மிசோராம் மாநிலத்தின் கவர்னராகவும் இருந்திருக்கிறார் என்றபோது அவரது விளக்கமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இன்றைய நிலையில் தலித்துகளின் சமூக அவலநிலைக்கும், பொருளாதார சீர்கேட்டிற்கும், அரசியல் புறக்கணிப்பிற்கும், மற்ற தளங்களில் பின்னடைவிற்குக்காரணமான பெரியார் மற்றும் அவரது வழிதோன்றல்களின் சமூக துரோகம் விமர்சனத்திற்குள்ளாக்கப்பட வேண்டும். ஏனெனில் தலித்துகளால் தான் இயக்கமும் கொள்கையும் வளர்ந்தது என்பது உண்மையெனில் விமர்சனங்களை சுமந்து கொள்ளவும் தமிழ் ஓவியாக்கள் தயாராக வேண்டும். அரசியல் அறுவடைக்கு மட்டும் தயாராக இருக்கும் நீங்கள் விமர்சன அறுவடைக்கும் தயாராக வேண்டும். ஏனெனில்;

- கூலி உயர்வு கோரியதாக 42 தலித் விவசாயிகளை கொன்று எரிக்கும்போது எங்கே போயிருந்தது - பெரியாரியம்.
- கண்டதேவி கோவில் வடம்பிடிக்கும் உரிமை மறுத்து தேர்வடம் பிடிக்கும் உரிமை எங்களுக்கே உள்ளதுஎன்று தலித்துகளை புறக்கணித்த போதும்.
- தேர்தல் ஜனநாயக முறையினை அவமதித்து - தலித் பஞ்சாயத்துத் தலைவரை கழுத்தறுத்தபோதும்
- சிதம்பரம் - முதுகுளத்தோர் கலவரத்தின்போதும்
- தினந்தோறும் நிஜமான காட்சிகளை காணும் போதும்
- தி.மு.க.வன்னியர் x அ.தி.மு.க. தேவர்களை நம்பி தேர்தலை சந்திக்கும் போதும்

மௌனமாக வாயடைத்து நிற்கும் ‘தமிழ் ஓவியா’ - முனிமா ஒரு நாடகத்தை விமர்சனம் செய்தபோது மட்டுமே வாய் திறக்கின்றபோது உண்மையாகவே நம்புகிறோம் நீங்கள் கைதேர்ந்த நாடகக் கும்பல்.

இறுதியாக அண்ணல் அம்பேத்கரின் தலைமை வழிபாடு மற்றும் தனி நபர் வழிபாடு பற்றிய கருத்துகளை மேற்கோள் காட்டுவதில் கடமைப் பட்டுள்ளேன்.

“தங்களுடைய சுதந்திரத்தை பெரிய மனிதரின் கால்களில் அர்ப்பணித்துவிடக்கூடாது அல்லது ஜனநாயக அமைப்புகளை குலைப்பதற்கு அவருக்கு அதிகாரம் அளிக்கும் அளவுக்கு அவரிடம் நம்பிக்கை வைக்கக் கூடாது என்ற போதிலும் நாட்டுக்காக வாழ்க்கை முழுவதையும் அர்ப்பணித்த பெரிய மனிதர்களிடம் நன்றியுடன் இருப்பது எந்த விதத்திலும் தவறாகாது. ஆனால் இதற்கு ஒரு வரம்புள்ளது என்றும் எச்சரித்து மேலும் அவர் இதுபற்றி கூறுகையில் தன்னுடைய சுயமரியாதையை இழக்கும் அளவுக்கு எந்த மனிதனும் நன்றியுடையவனாக இருக்க முடியாது. தன் கற்பை இழக்கும் அளவுக்கு எந்த பெண்ணும் நன்றியுடையவளாக இருக்க முடியாது. ஏனெனில் மற்ற நாடுகளைவிட இந்தியா போன்ற நாட்டிற்குத்தான் இந்த எச்சரிக்கை அவசியமாகின்றது. இந்தியாவில் தான் இறைவழிபாடு என்றழைக்கப் படும் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு உலகின் வேறு எந்த நாட்டின் அரசியலிலுமுள்ளதை விட இந்தியாவில் அரசியலில் பெரும்பங்கு வகிக்கின்றது. மத சம்பிரதாயங்களில் ஆத்மாவின் விடுதலைக்கு பக்தி ஒரு மார்க்கமாக இருக்கலாம். ஆனால் அரசியலில், சமூக இயக்கத்தில் பக்தி அல்லது தனிநபர் வழிபாடு, சீரழிவுக்கு ஒரு நிச்சயமான பாதையாகும். அத்துடன் அது இறுதியில் சர்வாதிகாரத்துக்காக இட்டுச்செல்லும்.”

பெரியாரின் வழித்தோன்றல்களும், பெரியாரிஸ்டுகளும், பெரியார் கருத்துகளை நம்புகிறவர்களைப் போல் - தமிழ் ஓவியாக்கள் அண்ணலின் வரிகளை உணர்ந்து புரிந்து கொள்ளுங்கள். ‘முனிமா’-வை விமர்சிப்பதை தவிர்த்து அவரது உண்மையான உணர்வுகளை புரிந்து கொள்ள ‘புதிய கோடாங்கியின்’ கிராம பங்கேற்புக் கூட்டங்களுக்கு வந்து தலித்துகளின் உணர்வை படித்து உணர்ந்து பேச முயற்சி செய்யுங்கள். அப்போதாவது தலித்துகளுக்கு நீங்கள் செய்த துரோகத்திற்கு விமோசனம் கிட்டும். அதைத் தவிர்த்து ‘பெரியாருக்கு’ கோவில் கட்டி வழிபடுவது மட்டுமே உங்களது நோக்கமெனில் அந்த கோவிலின் கருவறை செல்ல உங்களது பெரியார் கடவுள் அனுமதிப்பாரா என்றாவது சொல்லுங்கள். ‘கடவுளை மற மனிதனை நினை’ என்ற மனித கடவுளருக்கு கற்பூரம் ஏற்ற தலித்துகள் தயார்? ஏனெனில் கற்பாறைகளும் கடவுள்களும் எங்களுக்கு ஏதும் செய்யவில்லை - ஆனால் பலபேர் பிழைக்க அவையே கடவுளாக! •

**ROYAL AGENCIES**

SHIPPING CLEARING & FORWARDING AGENT

Old # 85, New # 171, Thambu Chetty Street,
Second Floor, Chennai - 600001.
E-mail royalrm@vsnl.net

Phone : 2522 9038, 2521 1210, 2521 2530
Fax : 2524 3492

advt



படிப்பகம்

www.padippakam.com

# கோடைமலை அடித்தட்டு மக்கள் இயக்கங்களின் பேரணியும் எழுச்சி 3-ஆம் மாநாடும்

■ பிரேம்குமார் சே.ச.

பாராளுமன்றத் தேர்தல் சூடும், சுற்றுலா குளிர்ச்சியும் நிறையப் பெற்ற கொடைக்கானலில் கோடைமலை அடித்தட்டு மக்கள் இயக்கங்களின் 3-ஆம் மாநாடு 21.03.2004 அன்று நடைபெற்றது.

மூஞ்சிக்கல்லில் அன்று காலை லாரி லாரியாக 3000-க்கும் அதிகமான மக்கள் குவியத் தொடங்கினர். பூம்பாறை அம்பேத்கர் மக்கள் இயக்க இசைக் குழுவினர் தப்பாட்டம் முழங்க பேரணியை தமிழ்நாடு அருந்ததிய ஜனநாயக முன்னணி நிறுவனர் எஸ்.டி. கல்யாணசுந்தரம் தொடங்கி வைத்தார். ஆதிக்க சாதி, உலகமயம், பார்ப்பனியம், ஆணாதிக்கம் முதலிய வற்றிற்குப் பாடை கட்டி ஊர்வலத்தின் முன் கோடை மலை அம்பேத்கர் மக்கள் இயக்க இளைஞர்கள் தூக்கிச் சென்றனர். பெண்கள், சிறுபான்மையினர். தலித் மற்றும் ஆதிவாசிகளை மிரட்டி ஒடுக்கும் ஆளும் வர்க்கத்தின் கோர முகம், காட்சியாக ஊர்வலத்தில் இடம் பெற்று அனைவரையும் ஈர்த்தது. "தலித் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா" "சாது மிரண் டால் காடு கொள்ளாது. சக்கிலியன் திரண்டால் நாடு கொள்ளாது" "செய்திடு செய்திடு வனப் பொருட்களை அரசே கொள்முதல் செய்திடு" "மாற்றிடு மாற்றிடு புலையர் இனத்தை ஆதிவாசி என மாற்றிடு" "வழங்கிடு வழங்கிடு தலித் மற்றும் ஆதிவாசி மக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கிடு," "நிவாரணம் கொடு நிவாரணம் கொடு புதுப்புத்தூர் தீண்டாமை கொடுமையால் பாதிக்கப்பட்ட அருந்ததியர் மக்க ளுக்கு நிவாரணம் கொடு" போன்ற முழக்கங்கள் விண்ணை எட்டின.

பேரணியில் மக்கள் பலத்தைக் கண்டவர்கள் மிகுந்த ஆச்சரியமடைந்தனர். கிராமங்களில் அஞ்சி, அடங்கி ஒடுங்கி கிடந்த தலித் மக்களா இன்று சாலையின் நடுவில் முழக்கமிடுவது! யாரைப் பார்த் தாலும் விலகி, உலகோடு ஒட்டாது வாழ்ந்து வரும் ஆதிவாசி மக்களா இன்று வீரத்துடன் நெஞ்சை நிமிர்த்தி, இலட்சிய வேட்கையுடன் தங்கள் கோரிக் கைகளை எடுத்து இயம்புவது? பெரிய பெரிய போராட்டங்களை நடத்தி, போராடியே அரசிட மிருந்து உரிமைகள் பெற்ற தாயகம் திரும்பிய தமிழர்கள் இந்த பேரணியில் அணி வகுத்தது பேரணிக்கு மிகப் பெரிய பலமாக இருந்தது. கொடைக்கானலைச் சுற்றியுள்ள கிராமங்களின் அடித்தட்டு மக்களும், கொடைக்கானல் நகரத்துப் பெண்கள் இணைப்புக் குழுவினரும், முன்னாள் பாதரச பணியாளர் மற்றும் கீஸ் அமைப்பினரும் இணைந்த காட்சி ஓர் ஆண் பெண் சமத்துவ காட்சி, கிராம நகர ஒன்றிப்புக் காட்சி, பலமிழந்தவர்கள் பலமான அரக்கனுக்கு எதிராக அணிவகுத்த காட்சி.

பேரணி காலை 11 மணிக்கு கொடைக்கானலில் உள்ள மூஞ்சிக்கல்லில் தொடங்கி, கொடைக்கானல் நகரின் முக்கிய சாலைகள் வழியாக கே.ஆர். கலையரங்கத்தை அடைந்தபோது மணி பிற்பகல் ஒன்று. பேரணி முடிந்த பின்பு நடந்த மாநாட்டில் உயர்நீதி மன்ற வழக்குரைஞர் ரத்தினம் ஐயா, மக்கள் சிவில் உரிமை கழகத் தோழர் திரு. பாலமுருகன், பெண்கள் இணைப்புக் குழு பெரியகுளம் ஒருங்கிணைப்பாளர் திருமதி. சித்ரா போன்றோர் கலந்துகொண்டு சிறப்புரை வழங்கினர்.

இயற்கையை நேசிப்பவர்கள் ஆதிவாசிகள். இயற்கையோடு வாழ்பவர்கள் ஆதிவாசிகள். இயற்கை யைக் காப்பவர்கள் ஆதிவாசிகள். ஆனால் இன்று, ஆதிவாசிகள் காடுகளில் சுதந்திரமாக வாழ முடிவ தில்லை. வனப்பொருட்களை சேகரிக்கும் அவர் களுக்கு பாதுகாப்பு இல்லை. சேகரிக்கும் பொருட் களை இடைத்தரகர் இன்றி சந்தைக்குக் கொண்டு செல்ல இயலுவதில்லை. இடைத்தரகர்களோ அடிமாட்டு விலையில்தான் பொருட்களை வாங்கு கின்றனர். அடிமாட்டு விலையில் விற்றும் அதற்குரிய பணத்தை ஆதிவாசிகளால் உடனடியாகப் பெற முடிவதில்லை. இப்படி வனத்தில் பிறந்து, வனத்தில் வாழ்ந்து, வனத்திலே உழைத்து, வனத்தையே காக்கும் ஆதிவாசிகளுக்கு வனத்தில் உரிமை இல்லை. வனப்பொருட்களால் வாழ்வு இல்லை. வியாபாரிகள், கந்துவட்டிக்காரர்கள், இடைத்தரகர்கள், வனத்துறை அதிகாரிகள்தான் பலன் பெறுகின்றனர். இத்தனைக் கும் வனத்தில் தீப் பற்றிக்கொண்டு எரியும்போது, ஆதிவாசிகள்தான் முள்ளையும், பதரையும், பாறை களையும் கடந்து தீயை அணைத்து வனத்தைக் காக்கின்றனர். மாநாட்டில் இந்நிலைகள் குறித்து மக்கள் சிவில் உரிமைக் கழகத் தோழர் திரு. பால முருகன் மிகவும் அக்கறையோடு உரையாற்றினார்கள். ஆதிவாசிகள் சார்பாக, பெண்கள் திருமதி. லீலாவதி, செல்வி, வீரமணி ஆகிய இருவர் உரையாற்றியது ஆதிவாசிகளின் ஆண் பெண் சமத்துவத்திற்குச் சான்றாக அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com

தலித் மக்களின் உரிமைகள் பற்றிப் பேசிய உயர்நீதி மன்ற வழக்குரைஞர் திரு. ரத்தினம் அவர்கள், மக்கள் போராட்டங்களின் அவசியத்தை வலியுறுத்தினார். அம்பேத்கரின் வாழ்வை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று அறைகூவல் விடுத்தார். ஆனால் தலித் தலை வர்கள் சிலர் மக்களை தங்களின் சுய ஆதாயத்திற்காக அடகு வைக்கும் போக்கை மிகவும் வன்மையாகக் கண்டித்தார். இந்த மாநாட்டில் கோடை கொத்தடிமை விடுதலை முன்னணி தலைவர் திரு. சரவணன் தலைமை தாங்கினார். கோடை மலை அம்பேத்கர் மக்கள் இயக்க செயலாளர் திரு. நடராஜன் வரவேற்றார். பொருளா ளர் செல்வி. வள்ளி நன்றி கூறினார். தலைவர் திரு. ஆறு முகம் மாநாட்டு கோரிக்கைகளை வாசித்து மக்களின் ஒப்புதலைப் பெற்றார். இடையிடையே தலித் கிராமங் களின் பேச்சாளர்கள் தங்கள் ஊரில் தாங்கள் அனு பவித்து வரும் சாதிக் கொடுமைகளையும், அடிப்படை வசதிகள் இன்றி அல்லல்படும் நிலையினையும் மிகவும் வேதனையோடு வெளிப்படுத்தினர். புதுப்புத்தூர் மக்கள் பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்கப் போராடி ஓராண்டு ஆகியும் இன்னும் குற்றவாளிகள் தண்டிக்கப் படவில்லை, பொதுக்கிணற்றில் தண்ணீர் எடுக்க முடியவில்லை, பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவா ரணம் வழங்கப்படவில்லை என்பதை வலியுறுத்தியும் மாநாட்டில் பேசப்பட்டது.

இம்மாநாட்டில் அடித்தட்டு மக்களும், பெண்க ளும் மட்டுமே கலந்து கொண்டாலும் கொடைக் கானல் மலைவாழ் ஒட்டுமொத்த மக்களின் பிரச்சினை களே அதிகமாகப் பேசப்பட்டன. கொடைக்கானல் கிராமங்களில் அணைகள் கட்டி விவசாயம் செழிக்க வகை செய்தல், விளையும் காய்கறிகளை உரிய விலை பெறும் வண்ணம் குளிர் சாதனக் கிடங்குகள் அமைத்துத் தருதல், கொடைக்கானலிலேயே கொள் முதல் நிலையங்கள் அமைத்தல், கொடைக்கானலில் ஆண்கள் கல்லூரி ஏற்படுத்துதல், கொடைக்கானல் மாஸ்டர் பிளான் அமலப்படுத்துதல் போன்ற கோரிக்கைகளை உதாரணமாகச் சொல்லலாம்.

இம்மாட்டில் கிராம மக்களின் பிரதிநிதிகள் அதிக மாகப் பேசியது ஒரு முக்கியமான அம்சமாகும். தங்கள் கிராமத்துப் பிரச்சினைகளைத் தாங்களே பேசியது போன்ற உணர்வு மக்களிடத்தில் ஏற்பட்டது. சில இளம் நல்ல பேச்சசாளர்களை கோடைமலை அம்பேத்கர் இயக்கம் அடையாளம் காண இம்மாநாடு உதவியுள்ளது.

கோடைமலை அம்பேத்கர் மக்கள் இயக்கம் என்பது கோடைமலையில் உள்ள தலித் மக்களின் இயக்கம் என்பதை பிறரும் அறிவதற்கு இம்மாநாடு பேருதவியாக இருந்தது. மேலும் இம்மாநாட்டில் இந்த இயக்கத்தினரே அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தாயகம் திரும்பிய தமிழர்கள் பெரும்பாலும் விசாயப் பிரச்சினைகள் குறித்தே அதிகம் பேசினர். எதையும் போராடியே பெற்றவர்கள் என்பதால் மாநாட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக எண்ணிக்கையில் பங்கு கொண்டனர். ஆனால் தேர்தல் நேரம் என்பதால், அரசியல்வாதிகள் அவர்களின் போராட்ட குணத்தை முடியடிக்க மிகவும் முனைப் போடு செயல்பட்டு வருகிறார்கள் என்பதையும் இந்நேரத்தில் குறிப்பிட்டே ஆக வேண்டும்.

பெண்களும், உலகமயமாதலும் குறித்துப் பேசிய பெரியகுளம் பெண்கள் இணைப்புக் குழு ஒருங் கிணைப்பாளர் திருமதி. சித்ரா அவர்கள் பெண்கள் இன்று வெறும் கவர்ச்சிப் பொருளாக ஆக்கப் பட்டுள்ள நிலையையும், ஏழைப் பெண்கள் எல்லா உரிமைகளையும் இழந்து வரும் நிலையையும் எடுத்து உரைத்தார்கள். சமகூலி, பெண்ணடிமைத்தனம், வரதட்சணை, சிசுக்கொலை, பெண் குழந்தைகள் மீது நடத்தப்படும் பாலியல் பலாத்காரம் போன்ற பிரச் சினைகளை கொடைக்கானல் பெண்கள் இணைப்புக் குழுவின் திருமதி. ஜெஸிந்தா எடுத்துரைத் தார்.

இந்த மாநாட்டில் கோடைமலை அம்பேத்கர் மக்கள் இயக்கத்தினருடன், கொடைக்கானல் நகரத்தின் பெண்கள் இணைப்புக் குழுவினர், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தினர், கீஸ் அமைப்பினர், முன்னாள் பாதரச பணியாளர்கள் சங்கத்தினர் ஆகியோர் இணைந்து இம்மாநாட்டை நடத்தியது மிகவும் சிறப்பிற்குரியதாகும். இப்படி பல்வேறு அமைப்பினர் இணைந்து நடத்தியதால், தனி மனிதர்களை முன்னிலைப்படுத்தாமல், பிரச்சினைகள் முன்னிலைப்படுத்தப்பட்ட மாநாடாக இது விளங் கிற்று. இந்த மாநாட்டின் மையக்குழு தலைவராக பெண்கள் இணைப்புக் குழுத் தலைவியான மரிய ஜெயா என்ற பெண்மணி செயல்பட்டார் என்பது இம்மாநாடு விடுதலைக்கான மாநாடு என்பதையும் சொல்லாமல் சொல்லிற்று.

இந்த மாநாட்டால் என்ன பலன்? என்ற கேள்விக்கு இம்மாநாட்டில் கலந்து கொண்ட அடித்தட்டு மக்களின் பலம் என்ன என்ற கேள்வியே பதிலாக அமையும். மக்களுக்கு அரசியல் பலம் இல்லை, பணபலம் இல்லை, சாதி பலம் இல்லை. எந்த பலமும் இல்லாத மக்களுக்கு ஒற்றுமை என்ற ஆயுதம் ஒன்றே பலம். அந்த பலத்தை உணர்ந்து கொள்ளவே இந்த மாநாடு. மக்கள் தங்கள் பலத்தை அறிந்து கொண்டார்கள் என்பதை மாநாட்டிற்குப் பிறகு இடம் பெற்ற ஒரு சில நிகழ்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. இதுவரை வெந்ததைத் தின்று விதி வந்தால் சாவோம் என்று நினைத்த தலித் மக்கள் இன்று தமது கோரிக்கைகளை அரசிடம் போராடிப் பெறவேண்டும் என்ற தெளிவைப் பெற்று தங்கள் பஞ்சாயத்துத் தலைவரை அணுகி தண்ணீர் கேட்டுப் போராடி யுள்ளனர். ஆதிக்க சாதியினரிடத்தில் பொதுக்கிணற் றில் தண்ணீர் கேட்டுத் தனித்துப் போராடிய புதுப் புத்தூர் மக்களுக்கு இம்மாநாடு நாம் தனித்து விடப்படவில்லை; இன்னும் நம்முடன் போராட நம் இனம் மட்டுமல்ல அடித்தட்டு மக்களின் இயக்கங்கள் இருக்கின்றன என்ற பார்வையை இந்த மாநாடு தந்திருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



கொடைக்கானல் நகரில் இந்த மாநாடு நடந்த அதே வாரத்தில் மூன்று மாநாடுகள் நடத்தப்பட்டன. மற்ற மாநாடுகளுக்கும் இந்த மாநாட்டிற்கும் என்ன வித்தியாசம்? மூன்று மாநாடுகளையும் பார்த்தவர்கள் கோடைமலை அடித்தட்டு மக்களின் மாநாட்டுக் கூட்டத்தைக்கண்டு பிரமித்துப் போய்விட்டனர். காசு கொடுத்து அழைத்துவரப்பட்ட அரசியல் கட்சிகளின் கூட்டத்தை விடவும், இம்மாநாட்டில் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

சலுகைகள் தருவோம் என்ற வாக்குறுதிகளை நம்பியும், ஒருசில சலுகைகள் பெற்ற திருப்தியோடும் ஆளுங்கட்சி ஆதரவு அமைப்புகளால் நடத்தப்பட்ட மாநாட்டுக் கூட்டத்தைவிடவும் இந்த மாநாட்டில் பங்கு பெற்றோர் உணர்வுபூர்வமாக ஈடுபட்டனர். மற்ற மாநாடுகளில் எல்லா சாதியினரும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் ஒடுக்கப்பட்ட சாதியினரும், ஆதிவாசிகளும், பெண்கள் மற்றும் தாயகம் திரும்பிய தமிழர்களே அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றிருந்தனர்.

சாதி பலம், எண்ணிக்கை பலம், பணபலம், அரசியல் கட்சிகள் ஆதரவு நிறையப் பெற்ற மாநாடுகளுக்கு எண்ணிக்கையில் குறைவான மக்களும், எந்த பலமும் இல்லாத மக்கள் தங்களது கூலி வேலையை விடுத்து தங்களின் காசை செலவழித்து, தாங்களே மக்களை ஒருங்கிணைத்து எண்ணிக்கையில் அதிகமாக பங்கெடுத்தது கொடைக்கானலில் நடந்த புரட்சி எனலாம்.

இப்புரட்சி ஓரிரு நாட்களில் நடப்பதில்லை. நம்மைக் கண்டால் ஆதிவாசிகள் ஓடி ஒளிந்த காலம் ஒன்று இருந்தது. சாதிக்கார முதலாளிகளின் அனுமதி கேட்டுத்தான் எதையும் செய்யும் நிலையும் தலித் மக்களிடையே இருந்தது. கடந்த 15 ஆண்டுகளாக துறவறக் குழுக்கள் தெளிந்த சிந்தனையோடும், தியாக உள்ளத்தோடும் பணியாற்றி வருவதன் பயன்தான் இந்த மாநாடு. அதே சமயம் மக்கள் சிவில் உரிமை கழகத்தின் திரு. ஜெயக்குமார், திருமதி. ஜெஸிந்தா, அகில இந்திய தொழிற்சங்க மைய கவுன்சில் உறுப்பினர் திரு. பாஸ்கரன், கோடைமலை அம்பேத்கர் மக்கள் இயக்கத்தின் தலைவர்கள் திரு. துரையன், திரு. நடராஜன், முன்னாள் பாதரச பணியாளர் சங்கத் தலைவர் திரு. ராஜாமுகம்மது, கீஸ் அமைப்பின் தலைவர்கள் திரு. சரவணன், பெண்கள் இணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் திருமதி. மரிய ஜெயா போன்றோர் இந்த மாநாட்டிற்காக அதிகமாக உழைத்துள்ளனர்.

**தலித் மக்கள் இன்று தமது கோரிக்கைகளை அரசிடம் போராடிப் பெறவேண்டும் என்ற தெளிவைப் பெற்று தண்ணீர் கேட்டுப் போராடியுள்ளனர்.**

அது மட்டுமன்று. ஆதிவாசிகளைப் பொறுத்த அளவில் கொடைக்கானல் மலை தங்களுக்குரியது என்பதை உணர ஆரம்பித்துவிட்டார்கள். எனவே மலையில் உள்ள அரசு நிலங்களைப் பண்படுத்தி விவசாயம் செய்யும் அளவிற்கு வளர்ந்து விட்டார்கள். ஆனால் அரசு எப்போது தங்களை வெளியேற்றுமோ என்ற நெருக்கடி தங்களை இப்படிப்பட்ட மாநாடுகளில் இணைத்துக்கொள்ளத் தூண்டியிருக்க வேண்டும்.

தலித் மக்களைப் பொறுத்தவரை சாதிய ஒடுக்குமுறை குறித்த விழிப்புணர்வு வளர்ந்துவரும் இந்நிலையில் இது போன்ற மாநாடுகளே தமக்கு விடுதலை தரும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் கலந்துகொண்டிருக்க வேண்டும்.

தாயகம் திரும்பிய தமிழர்களைப் பொறுத்தவரை போராட்டத்தால் சாதித்தவர்கள் அவர்கள். விடுதலை நகர் என்ற கிராமமே போராடிப்பெற்ற கிராமம். வீடு, நிலம், சாலை, பேருந்து என்று அனைத்தையும் போராடிப் பெற்ற அவர்கள் எழுச்சி குறையாமல் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஆக, இதுபோன்ற அடித்தட்டு மக்களின் மாநாடுகள் மக்களை உண்மையான ஜனநாயக வாதிகளாக மாற்றும். பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு பண முதலைகளின் கைக்கூலிகளாக உள்ள இன்றைய அரசியல்வாதிகளின் ஆட்சியை ஒழிக்கும். மக்களின் அறியாமையையும், மத உணர்வுகளையும் பயன்படுத்தி ஆட்சிக்கு வந்துள்ள ஏமாற்று அரசியல்வாதிகளின் எலும்புகளை முறிக்கும்.

எனவே மக்கள் சக்தியே மகத்தான சக்தி, அடித்தட்டு மக்களின் ஒன்று சேர்ந்த போராட்டமே ஒட்டுமொத்த சமூகத்தின் விடுதலைக்கான வழி போன்ற அம்சங்களை உள்ளடக்கிய இத்தகைய மாநாடுகள் பெருக சமூக அக்கறையுள்ள அனைவரும் ஓரணியில் திரள்வோம்.

**வெல்லட்டும் அடித்தட்டு மக்களின் ஒற்றுமை!**
**வீழட்டும் ஆதிக்க வர்க்கத்தின் ஆணவம்!!**



படிப்பகம்

www.padippakam.com

# பாரதியின் பௌத்த வெறுப்பும் இந்துத்துவப் பற்றும்

■ பு. ஜார்ஜ்

3

சமய பேதங்கள் ஒழிய வேண்டும் என்னும் பாரதியின் கருத்தும் அவரது சாதிபேதம் ஒழிய வேண்டும் எனும் கருத்தைப் போல் அர்த்தமற்றதாக இருப்பதாகத் தெரிகிறது. மத பேதங்கள் இருக்கலாம், மதவிரோதங்கள் இருக்கலாகாது என்கிறார். இந்து (ஆர்ய) தர்மத்தை நிலைநாட்டுவதே அவரது முக்கிய நோக்கமாக இருக்கிறது. இந்துக்கள் என்போர் வேதத்தை நம்புவோர் என்கிறார்.

வேதங்களை உலகத்துக்கே பொதுவானவையாக ஆக்க முயலுகிறார். அப்படி முயலும் போது கூட அவை சிறப்பாக பிராமணர்களுக்கேயுரியது என்கிறார். (ப.கீதை முன்னுரை 1994:26) இதைப்போலவே பிராமணர்களின் இந்து மதத்தை உலகுக்கே பொதுவாக்க முயலுகிறார். இதனடிப்படையில் இந்தியாவிலுள்ள அனைவரையும் இந்து மதத்துக்குள் அமைக்கப்பார்க்கிறார்.

*பறையர் எல்லோரும் உண்மையான இந்துக்கள் என்பதை மறந்து விடக்கூடாது (பாரதி நூல்கள் கட்டுரைகள் : 562) என்கிறார். இந்துக்களின் ஆதிக்கத்திலிருந்து தீண்டப்படாதவரை விடுவிக்கும் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகள் ஏதுமற்ற பாரதி, இந்துக்களுடன் அவர்களைப் பிணைத்து கழுத்தை இறுக்குவதிலேயே அக்கறை செலுத்தியுள்ளார்.*

*பறையர்களும் நம்மைப் போலவே வைதீக தேவர்களைப் பூஜிக்கிறார்கள். (பாரதி நூல்கள், கட்டுரைகள் 562) என்றும்,*

பறையரும் புலையரும் பள்ளரும் சக்கிலியரும் நம்மைப் போல் ஹிந்துக்களென்பதையும், விபூதி நாமம் போட்டுக் கொண்டு நமது தெய்வங்களையே வணங்குவோரென்பதையும், மடாதிபதி, புரோஹிதர், குருக்கள் முதலியவர்கள் சற்றே மறந்துபோய் விட்டதாகத் தெரிகிறது.

என்றும் கூறி பிணைக்கப் பார்க்கிறார். அல்லது பிணைப்பது போல் நடிக்கிறார். முன்னோர் வழி பாட்டாளர்களை, வேத நம்பிக்கையில்லாதவர்களை வைதீகப் பண்புடையவர்களாகப் புனைவது என்பது அவர்களை இந்துவாக்கிக் கழுத்தை இறுக்கும் முயற்சியின் வெளிப்பாடு எனலாம்.

இந்துமதம் என்பது பாரதியார் பார்வையில் ஒன்றும் புதியதாக இல்லை.

*நான்கு வேதங்கள், ஆறு தர்சனங்கள், உபநிஷத்துகள், இதிகாசங்கள், பகவத்கீதை, பக்தர் பாடல்கள் சித்தர் நூல்கள் இவற்றை ஆதாரமாகக் கொண்டது இந்துமதம். (பாரதி நூல்கள், கட்டுரைகள் 509)*

எனக் கூறும் பாரதி பகவத்கீதையை தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார். இந்துமதத்தின் ஆதாரக் கல்லில் ஒன்றென இதனை வருணிக்கிறார். அதில்,

*ஈசனைச் சரணாகதி அடைந்து இகலோகத்தில் மோக்ஷ சாம்ராஜ் ஜியத்தை எய்தி நிகரற்ற ஆனந்தக் களியில் மூழ்கி வாழும்படி வழி காட்டுவதே பகவத் கீதையின் முக்கிய நோக்கம் (பகவத் கீதை - முன்னுரை 29)*

என்கிறார். ஆனால் மனிதரை ஒழுக்கத்தில் உயர்த்தும் செய்திகள் எதுவும் மந்திரங்களில் இல்லை என்றும், வேதங்கள் பாலைவனம் போல் பயனற்றவை என்றும் புத்தர் கண்டுணர்ந்ததை நினைவுக்குக் கொண்டுவரும் அம்பேத்கர் பகவத் கீதையை ஆராய்ந்து கூறுவன கவனிக்கத் தக்கனவாயுள்ளன.

*நான்கு வருணக் கோட்பாட்டிற்கும் தத்துவ ரீதியான பாதுகாப்பளிக்க முன்வருகிறது கீதை. நான்கு வருணங்களை இறைவன் படைத்தான் என்று திட்டவட்டமாக கீதை கூறுகிறது. எனவே வருண தருமம் அணுவளவும் ஐயத்துக்கிடமின்றிப் புனிதமானது. கடவுள் படைப்பு என்பதையும் தாண்டி நியாயப்படுத்துகிறது. மனிதர்களிடையே பிறவியிலேயே ஏற்படும் இயல்பான குணவேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட கோட்பாட்டின் வாயிலாகவும் கீதை இக்கோட்பாட்டை நியாயப்படுத்துகிறது. வருணத்தை நிர்ணயிப்பது காரணகாரியத் தொடர்பு இல்லாமல் அன்று. இயல்பான பிறவிக் குணங்கள் அடிப்படையிலேயே வருணம் நிச்சயிக்கப்படுகிறது. (அம். தொகுதி - 7:298, 299)*

பகவத்கீதை முன்னுரையில் பாரதி பௌத்தம் குறித்த தமது கருத்துக்களை வெளிப்படுத்துகிறார். அதில் முக்கிய மூன்று குறைகள் சுட்டப் பட்டுள்ளன.

*பூர்வ ஜன்ம சித்தாந்தத்தைப் பௌத்த மதம் நமது தேசத்திலே ஊர்ஜிதப்படுத்தியது பற்றி நாம் அதற்கு அதிக நன்றி செலுத்த இடமில்லை (48))*

*பௌத்த மதம் அக்கொள்கையை அறிஞர் கண்டு நகைக்கத்தக்கபடியாக, வரம்பு மீறி வற்புறுத்திற்று. பிற்கால ஹிந்து மதத்தில் அக் கொள்கை அளவுக்கு மிஞ்சி நிரார்த்தமாக ஏறிப்போய் இப்போது ஹிந்து நம்பிக்கையிலுள்ள குறைகளிலொன்றாக இயங்குகிறது (47)*

இது முதலாவது குற்றச்சாட்டு, பாரதிகுறிப்பிடும் இந்தக் கோட்பாடு முழுக்க முழுக்க பிராமணியக் கோட்பாடு ஆகும்.

பிராமணீயந்தான் உடலை வேறாகவும் ஆன்மாவை வேறாகவும் கருதுகிறது. அதில், ஆன்மாவின் கூடுவிட்டுக் கூடுபாயும் கோட்பாட்டின் பகுதியாக கர்ம வினைக் கோட்பாடு அமைந்துள்ளது. மனிதர் தமது கடந்த வாழ்க்கையில் புரிந்த செயல்களைப்



படிப்பகம்

www.padippakam.com

(கர்மங்கள்) பொறுத்து ஆன்மா மறுபிறப்பில் தன் புதிய உடலோடு நிலவுகிறது என்றும் கருதுகின்றது. வாழ்வே மாயம் என்றும் அதனால் மரணத்தைப் பற்றிக் கவலைப்பட்டக் கூடாது என்றும் கூறி போரை நியாயப்படுத்தும் பகவத்கீதை, உடல்வேறு உயிர் வேறு என்கிறது. இரண்டையும் ஒன்றாகக் கருது வது தவறு என்கிறது. உடல் அழியத் தக்கது; ஆன்மா அழியா தது, நிரந்தரமானது என்கிறது. உடலைப்போல் அதற்கு மரண மில்லை. அது காற்றால் உலரா தது, தீயினால் பொசுங்காதது, ஆயுதத் தால் வெட்டப்படாதது. ஆடை களை மாற்றுவதைப் போல் ஆன் மா உடலை நீக்குகிறது. புத் தாடை புனைவதைப்போல் புதிய உடலுக் குள் புகுகிறது. ஆன்மா அழியாதது என்பதால், ஒரு மனிதனைக் கொல்வது இரங்கத்தக்கதன்று. போரும் படுகொலையும் துயரத் திற்கோ வெட்கப்படுவதற்கோ உரியன அல்ல என்கிறது.

அடுத்து கர்மயோகத்தைத் தூக்கிப் பிடித்து தத்துவப் பாது காப்பு அளிக்க முயல்கிறது பகவத் கீதை.

பகவத்கீதையின் மொழி பெயர்ப்பாளர்கள் கர்மயோகம் என்பதைச் செயல் ஆற்றுதல் முறை என்றும் ஞானயோகத்தை அறிவு அறிதல் முறை என்றும் தவறாக மொழி பெயர்க்கின்றனர். இத்தவறான கருத் தோட்டத் தின்அடிப்படையில் செயல் தத்து வத்திற்கும் அறிவுத் தத்துவத்திற் குமிடையே முரண்பாடு களையும் உடன்பாடுகளையும் பொதுவான வகையில் கீதை விவாதம் புரிகிறது என நினைக்கின்றனர். இது முற்றிலும் தவறானதாகும். செய லுக்கும் அறிவுக்கும் இடையே நடை பெறும் பொதுவான தத்துவ விசா ரணை பற்றி கீதை அக்கறை கொள்ள வில்லை. பொதுவான தத்துவப் பொருள்களைப் பற்றி கீதை பேசவில்லை. குறிப்பிட்ட தத்துவப் பொருள் பற்றியே அது விசாரிக்கிறது. ஜைமினியின் கர்ம காண்டத்தில் குறித்த கோட் பாடுகளையே கீதை கர்மயோகம் என்கிறது. ஞானயோ கமோ வாதாராயணரின் பிரம சூத்தி ரத்துள் அடங்கியது என அது குறிக்கிறது. கர்மத்தைப் பற்றி கீதை பேசும்பொழுது செயல் அல்லது செயலின்மை பற்றியோ பேச வில்லை. மாறாக சமய வினை களையும் விரதங்களையும் பற்றியே கூறுகிறது என் பதை கீதை படித்த எவராலும் மறுக்க இயலாது. அற்ப விஷயங்களைப் பற்றிக் கூறும் கட்சிப் பிரசார அறிக்கை யின் நிலையிலிருந்து கீதையைத் தூக்கிப் பிடித்து, தத்துவரீதியான உயர்பொதுக் கோட்பாடுகளைப் பற்றிய ஆய்வுநூல் என்ற மதிப் பினை அதற்கு அளிக்க வேண்டும் என்பதற்காக, 'கர்மம்', 'ஞானம்' ஆகிய சொற்களுக்குப் பரந்து விரிந்த பொருள்கூற முயல்கின்ற னர். இந்திய தேசபக்தர்கள் செய்த இத்தந்திரத்திற்கு திலகரையே குறை கூற வேண்டியுள்ளது. இத்தகைய தவறான அர்த்தங்கள் அளிக்கப் பட்டதன் விளைவாக, பகவத்கீதை சுதந்திரமான போக்குடைய தன்னி றைவுபெற்ற நூலென்றும், அதற்கு முந்தைய நூல்களுக்கும் அதற்கும் தொடர்பில்லை என்றும் கருத்து வளர்ந்திருக்கிறது. பகவத் கீதையில் காணப்படும் கர்மயோகத்தின் பொருளை நினைவில் நிறுத்தி னால் ஜைமினிய கர்மகாண்டத்தில் விவரித்துள்ள கோட்பாடுகளையே கீதை பேசுகிறது என்பது புலனா கும். அக்கோட்பாடுகளைப் புதுப் பிக்கவும் வலுவூட்டவும் கீதை முயல்கிறது. (அம். தொகுதி - 7: 3000, 3001)

பகவத்கீதை இவ்வாறு காக்க முயன்றதற்கான காரணம் என்ன வாயிருக்கும் என ஆராய்ந்த அம் பேத்கர், புத்தமதத் தாக்கத்தி லிருந்து இக்கோட்பாடுகளைக் காப்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு என்கிறார்.

புத்தர் அஹிம்சையை போதித் தார். அவர் போதித்ததோடு மட்டு மின்றி, பிராமணர்களைத் தவிர பெரும்பாலான பொதுமக்கள் அஹிம்சை வழியை வாழ்க்கை முறையாக ஏற்றனர். வன்முறைக்கு எதிராக வெறுப்புணர்ச்சி காட்டி னர். நான்கு வருணத்தை எதிர்த்து புத்தர் போதித்தார். வருண தருமத்தை எதிர்த்து புத்தர் அசைக்க முடியாத உவமைகளைக் கையாண்டார். சதுர்வருணக் கோட்பாடு கட்டுக் குலைந்தது. சதுர்வருணமுறை தலைகீழாகப் புரட்டப்பட்டுவிட்டது. சூத்திர னும் பெண்களும் சந்நியாசியாக முடிந்தது. எதிர்ப்புரட்சியாளர் மறுத்துவந்த உரிமை இது. கர்ம காண்டத்தையும் வேள்விகளையும் கண்டித்தார். வன்முறையை அவை அடிப்படையாகக் கொண்டவை என்பதால் புத்தர் அவற்றைக் கண்டித்தார். சுயலாபம் அடைய வேண்டுமென்ற தேட்டமே அவற் றின் உள்நோக்கம் என்பதால் புத்தர் கண்டித்தார். இக்கண்டனத்திற்கு எதிர்ப்புரட்சியாளர் கூறிய மறு மொழியாது இதுதான். இவை யெல்லாம் வேதங்களால் விதிக்கப் பெற்றவை; வேதங்கள் பிழையற் றவை; எனவே இக்கோட்பாடுகள் குறித்து யாரும் தட்டிக்கேட்கக் கூடாது என்று அவர்கள் கூறினர். புத்தர் காலம் அறிவொளி வீசிய காலம், பகுத்தறிவு கோலோச்சிய காலம்; ஆகவே அற்பத்தனமான, பகுத்தறிவுக்குப் புறம்பான கோட் பாடுகளை மக்கள் ஏற்கவில்லை. அஹிம்சை வாழ்க்கையில் ஒரு அம்சமாக மாறிவிட்ட சூழ்நிலை யில், வேதங்களில் சொல்லப்பட் டிருக்கிறது என்பதால் க்ஷத்திரியன் யாரையும் கொல்லலாம், அது அவன் கடமை என்று கூறினால் எவர் ஒப்புவர்? வேதங்களில் சொல்லப்பட்டிருக்கிறது என்பதா லேயே, பிறப்பின் அடிப்படையில் தரம் பிரிக்கப்பட்ட சதுர்வர்ணக் கோட்பாட்டை எவர் ஏற்பர்?

புத்த மதத்தின் கடும் தாக்கு தலுக்குள்ளான ஜைமினியின் எதிர்ப் புரட்சிக் கோட்பாடுகள் பகவத்கீதையின் ஆதரவை மட்டும் பெற்றிருக்காவிடில் அழிந்து போயிருக்கும் என்பதில் ஐய மில்லை. கொல்லப்படுவது ஆன் மாவன்று, உடம்பேயாதலின், கொலை கொலையாகாது என்னும் தத்துவம் யாரும் கேட்டறியாதது. இதுதான் மயிர்க்கூச்செறிய வைக் கும் கீதையின் கோட்பாடுகள் என்று சிலரைக் கூறவைத்தது என



படிப்பகம்

www.padippakam.com

லாம். ஒரு கொலை வழக்கில் கிருஷ்ணன் வழக்குரைஞராக ஆஜராகி கொலை கொலையன்று என விவாதித்தால் அவரை மன நோய் மருத்துவமனைக்குத்தான் அனுப்புவர். இதேபோல் சதுர் வருணக் கோட்பாட்டைக் காப்பதற்குக் கீதை கூறும் தற்காப்பு வாதமும் சிறுபிள்ளைத்தனமானது. சாங்கிய தத்துவத்தின் குணக் கோட்பாட்டின் அடிப்படையில் வருண தருமத்தைக் கீதை நியாயப் படுத்துகிறது. கிருஷ்ணன் தனது பேதமை இதன் வாயிலாக வெளிப் படுவதை அறிந்ததாகத் தெரிய வில்லை. (அம். தொகுதி - 7:301, 302)

கிருஷ்ணனைப் பெருமையாகப் பார்க்கும் பாரதியும் பாரதியைப் பெருமையாகப் பார்க்கும் தாசர்களும் தங்கள் பேதமையை அறிந்ததாகத் தெரியவில்லை.

இந்தப் பேதமைகள் எவற்றிலுமே நம்பிக்கை கொள்ளாதவர் புத்தர். நம்பிக்கை கொள்ளாதவர் மட்டுமல்ல, நிராகரித்தவர்.

புத்தர் மனத்தை அங்கீகரித்தார். ஆனால் அது செயல்திறன்களால் ஆனது என்றார். புத்தரது கொள்கை அநாத்மா. அதாவது ஆத்மா அற்றது என்றே அழைக்கப் படுகிறது. செயல்பாடேதுமற்ற ஆன்மாவைப் பொருளற்றது என்கிறார் புத்தர்.

கடவுள் நம்பிக்கை குறித்த புத்தரது கருத்தும் அறியத்தக்கது.

*கடவுள் இருக்கிறார் என்று நம்புவதை புத்தர் மிகவும் அபாயகரமானதாகக் கருதினார். ஏனென்றால் கடவுள் இருக்கிறார் என்ற நம்பிக்கை, வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் நம்பிக்கை, உண்டு பண்ணுகிறது. இத்தகைய வழிபாடும் பிரார்த்தனையும் புரோகிதர் பதவியைத் தோற்றுவிக்கின்றன; அந்தத் தீய சக்தியான புரோகிதர்தான் அனைத்துவகையான மூடநம்பிக்கைகளையும் ஊட்டி வளர்த்து அதன்மூலம் சம்மதித்தியின் அழிவுக்கு வழிகோலுகிறார். (அம். தொகுதி. 22: 350)*

இப்படிப்பட்ட கேடுகளெல்லாம் பாரதியின் பார்வையில் நன்மைகள்.

இனி பௌத்தத்தின் மீதான பாரதியின் இரண்டாவது குற்றச் சாட்டின் நிலைமையைப் பார்க்கலாம். அது வருமாறு.

*புத்த மதம் இழைத்த பெருந் தீங்கு யாதெனிலே இடைக் காலத்து மாயாவாதத்தை நம் முள்ளே எழுப்பி விட்டது (48)*

இதில், இடைக்காலத்து மாயாவாதம் என்பதை உலகமெலாம் பொய்மயம், துக்கமயம் எனக் கருதும் கொள்கையாக பாரதி பார்க்கிறார்.

இப்படிப்பட்ட ஒன்றை புத்த மதம் எற்படுத்தி விட்டதாகக் குறிப்பிடுகிறார். இதில் முதலாவதாகிய 'பொய்மயம்' எனும் புத்தர் கூறிய நிலையாமைக் கருத்தைக் குறித்துச் சொல்லப்பட்டது. புத்தரது நிலையாமை பின்வரும் மூன்று தன்மைகளைக் கொண்டது. 1. கூட்டுப் பொருள்களின் நிலையாமை, 2. தனி உயிர்களின் நிலையாமை,3. சூழ்நிலைக்குட்பட்ட பொருள்களின் தன்னியல்பு நிலையாமை என்பவையே. எல்லாம் மாற்றத் துக்குட்படுகின்றன.எனவே நிலைத் தன்மை எவற்றுக்கும் இல்லை என்கிறார். புத்தர் தமது கொள்கையைக்கூட நிலைத் தன்மை யுடையதாகக்கருதவில்லை.

*பௌத்த சூன்யவாதத்துவம் முழுக்க முழுக்க அழிவைக் குறிப் பிடுவதில்லை.புற உலகில் தொடர்ச் சியாக நிகழ்ந்துகொண்டிருக்கும் மாற்றங்களையே அது குறிக்கிறது. (அம். தொகுதி - 22:331)*

அதாவது ஆன்மா இல்லாது மாற்றத்துக்குட்படும் நிலையை மறு பிறப்பு என்கிறது. மாமரம் ஆன்மா இல்லாதது. ஆனால் அதற்கு மறு பிறப்பு உண்டு என் கிறது. பிராமணியமோ ஆன்மா அழியாதது என்றும் உடல் அழிவுக்குட்பட்டது என்றும் இக் கொள்கைக்கு மாறாக நம்புகிறது. நிலைமை இப்படியிருக்க பிராமணீயத்தின் எல்லாப் பொய்மைகளையும் புத்தத்துக்கு வீணாக ஏற்கிறார் பாரதி.

ஆன்மா அழியாதது, மாற்றத் திற்குட்படாதது எனும் சனாதனக் கருத்து பாரதியிடம் இருந்ததற்கும் அது அவரது பௌத்த எதிர்ப்புக்கு ஏன் காரணமாயுள்ளது என்பதும் ஆராய்தற்குரியதாகின்றது.

மேலே கண்டவாறு பௌத்தம் மாற்றத்தை அங்கீகரித்தது. ஆனால் பிராமணீயம் அங்கீகரிக்கவில்லை.

உலகமெல்லாம் துக்கமயம் என்று புத்தர் கூறியதாகச் சாடுவதையும் காணுதல் அவசியம். ஆனால் இதற்கு புத்தரின் வாக்கே போதுமான பதிலாக அமையும்.

*"சில முனிவர்களும் பிராமணர்களும் தவறாகவும் பிசகாகவும் பொய்யாகவும் உண்மைக்கு மாறாக என்னை அழிவுத் தத்துவவாதியாகவும் ஒருமைப்பாட்டுக் குலைவையும் உயிரின அழிவையும் போதிப்பவனாகவும் குற்றஞ் சாட்டுகிறார்கள்.*

*நான் எதைச் செய்வதில்லையோ எதை உறுதிப்படுத்துவதில்லையோ அதைக் கூறுவதாகும் இது. நான் தொடர்ச்சியாய், கடந்த காலத்திலும் இன்றும் போதித்து வருவதெல்லாம் துன்பம் இருக்கிறதென்பதும் அதை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்பதுமேயாகும். (அம். தொகுதி 22:707)*

புத்தர்காலத்திலேயே இப் பொய் மூட்டை புத்தருக்கு எதிராக அவிழ்த்துவிடப்பட்டிருக்கிறது. அரிட்டர் என்பவர் புத்தரிடம் இதைப்பற்றிச் சொன்ன போது அவருக்கு புத்தர் சொன்ன பதில் தான் மேலே கண்டது. 2500 ஆண்டுக் காலமாக புத்தருக்கெதிராகக் கட்டப்பட்ட பழங்கதையைத்தான் பாரதியும் பேசுகிறார் என்பது இதனால் தெளிவாகிறது.

*நிச்சயமாக துக்கத்தை நீக்க ஆர்வம்மிக்க ஒரு போதகரை விதித்தத்துவக்காரர் எனக் குற்றஞ் சாட்ட இயலாது. (அம். தொகுதி - 22 : 706)*

என புத்தரின் தம்மத்தை ஆழமாக



படிப்பகம்

www.padippakam.com

ஆராய்ந்த அம்பேத்கர் தெளிவு செய்கிறார். மேலும் புத்தர் துன்பத்திற்குக் காரணமான ஏழ்மையைக் குறிப்பிடுகிறார் என்றும், அந்த ஏழ்மை,பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது என்றும் கூறுவதைக் கவனிக்க வேண்டும்.

பௌத்தத்தின் மீதான பாரதியின் மூன்றாவது குற்றச்சாட்டு வருமாறு. இவர்கள் (பௌத்தர்கள்) கடமைகளைத் துறந்தனரேயன்றி இன்பங்களைத் துறக்கவில்லை.

*சோம்பேறித்தனத்தை ஒரு பெரிய சுகமாகக் கருதியே அனேகர் துறவு பூணுகிறார்கள். (பக. முன்னுரை 50)*

இந்தக் கருத்துக்கள் பௌத்த பிரிவுகளைக் கணக்கில் கொள்ளாமலும் காலப்போக்கில் அதில் ஏற்பட்ட மாற்றங்களைக் கணக்கில் கொள்ளாமலும் பௌத்தம் பொதுவாகச் சொல்வதாகத் தெரிகிறது. (இக்குற்றச்சாட்டுக்கான ஆய்வு பிற்பகுதியில் நிகழ்த்தப்பட உள்ளது)

புத்த மதத்தை வென்று இந்து தர்மத்தை நிலைநாட்ட சங்கராசாரியார் அவதரித்தார் எனப் பெருமிதமாகப் பேசும் பாரதி,

*தம்மாலே வெட்டுண்ட புத்த மதம் என்ற விருக்ஷத்தின் கிளைகள் பலவற்றை விரித்து தர்மமாகிய மரத்துக்கு நல்ல வளர்ச்சியுண்டாகும்படி எருவாகச் செய்து போட்டார். (பக.கீ. முன்னுரை : 45)*

என்கிறார். அப்படி எருவாக்கியவைகளிலே ஒன்று தான் புலாலுண்ணாமை எனக்கருதப்படுகிறது எனும் பாரதி, இதற்கும் பலமான ஆதாரங்கள் இல்லை எனக்கூறி விடுகிறார். துறவறமும் பௌத்தத்திலிருந்து பெறப்பட்டதே எனும் பாரதி இன்று ஹிந்து நம்பிக்கையிலுள்ள குறைகளில் ஒன்றாக அது இருப்பதாகக் கூறுகிறார். அதாவது இந்து மதத்தில் ஏதாவது குறையிருப்பதாக அவருக்குப்பட்டால் அந்தக் குறைக்கு பௌத்தமே பொறுப்பென்கிறார்.

பாரதி கூறும் இவற்றை மதிப்பிட, இந்தியச் சிந்தனை மரபை மிக ஆழமாக ஆராய்ந்த அம்பேத்கர் கூறும் பௌத்தம் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் காணுதல் அவசியம்.

*சாதியை எதிர்க்கும் விஷயத்தில் புத்தர் தாம் போதித்ததைத் தாமே பின்பற்றினார். ஆரிய சமூகம் செய்ய மறுத்ததை அவர் செய்தார். ஆரிய சமூகத்தில் சூத்திரன் அல்லது கீழ் சாதியைச் சேர்ந்தவன் ஒருபோதும் பிராமணன் ஆக முடியாது. ஆனால், புத்தர் சாதியை எதிர்த்துப் போதனை செய்தது மட்டுமின்றி, சூத்திரர்களையும் கீழ்சாதியினரையும் பிக்குகள் ஆக அனுமதித்தார் புத்த மதத்தில் பிக்குகள் பிராமணியத்தில் பிராமணர்களுக்கு இருந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தனர்.*

*புத்தர் சூத்திரர்களையும் தாழ்ந்த சாதியினரையும் பிக்கு சங்கத் தில் சேர்த்து அவர்களின் நிலையை உயர்த்தியது போலவே, பெண்க ளின் நிலையையும் உயர்த்தினார். ஆரிய சமூகத்தில் பெண்களுக்குச் சூத்திரர்களின் அந்தஸ்துதான் தரப்பட்டிருந்தது. ஆரிய இலக்கி யங்களில் பெண்களும் சூத்திரர் களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரே அந்தஸ்து உள்ளவர்களாகப் பேசப் படுகிறார்கள். இருவருக்கும் சந்நியாசம் பெறும் உரிமை கிடையாது.*

*சந்நியாசம்தான் மீட்சிக்கு ஒரே வழியாகயிருந்தது. பெண்களும் சூத்திரர்களும் மீட்சிக்கு வழியில்லாதவர்களாயிருந்தார்கள். புத்தர் இந்த விதியை சூத்திரர்கள் விஷயத்திலும் உடைத்தெறிந்தார்; சூத்திரன் பிக்கு ஆக முடிந்தது போல பெண்களும் பிக்குணிகள் ஆக முடிந்தது.*

*புத்தர் ஆரிய சமூகத்தின் தலைவர்களை எதிர்த்துப் போராடிய மற்றொரு பிரச்சினை ஆசிரியர்கள் கற்பித்தல் பற்றிய கொள்கையாகும். கல்வி கற்பது பிராமணர், க்ஷத்திரியர், வைசிரியர் ஆகியோருக்கு உள்ள சிறப்பு உரிமை என்று ஆரிய சமூகத் தலைவர்கள் கருதினார்கள். சூத்திரர்களுக்குக் கல்வி கற்கும் உரிமை கிடையாது. பெண்களுக்கும் இருபிறப்பாளர் அல்லாத ஆண் களுக்கும் கல்வி கற்பிப்பது சமூக ஒழுங்குக்கு ஆபத்தாகும் என்று அவர்கள் வாதிட்டார்கள். புத்தர் இந்த ஆரியக் கொள்கையை மறுத்தார். இந்தப் பிரச்சினை பற்றி ரைஸ்டேவிஸ் சுட்டிக்காட்டியது போல 'ஒவ்வொருவரும் கல்வி கற்க அனுமதிக்கப்பட வேண்டும்; சில திறமைகள் உள்ளவர்கள் ஒவ்வொருவரும் கல்வி கற்க அனுமதிக்கப்பட வேண்டும். அப்படி கற்பிப்பவர்கள் எல்லோருக்கும் எல்லாவற்றையும் கற்பிக்க வேண்டும். எதையும் மறைக்கக் கூடாது. யாரையும் விலக்கக் கூடாது.' (அர். தொகுதி - 7:93-95)*

இது, புத்தருக்கும் பிராமண லோஹிக்காவுக்கும் இடையில் நடந்த உடையாடலில் கூறப்பட்டுள்ளதாக அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

பாரதியின் சம காலத்திலேயே அயோத்திதாசர் தமது தமிழன் பத்திரிகையில் "பார்ப்பார்களென்று சொல்லிக்கொள்வோர்களுக்கும்பறையர்களென்று அழைக்கப்படுவோர்களுக்குமுள்ள பழைய விரோதத்தைப் பாருங்கள்" எனும் கட்டுரை எழுதியுள்ளார்.

மேலும், இந்துமதம் குறித்து அவர் கூறுவதும் இங்கு கவனிக்கத் தக்கது.

*புத்தரென்று ஒருவர் தோன்றியிருந்தார். அவரது சீர்திருத்தத்தைப் பின்பற்றியவர்கள் பௌத்தர்கள் என்றழைக்கப் பெற்றார்கள். கிறிஸ்தவரென்னும் ஒருவர் தோன்றியிருந்தார் அவரது சீர்திருத்தத்தைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்தவர்களென்றழைக்கப் பெற்றார்கள். மகம்மதுவென்னும் ஒருவர் தோன்றியிருந்தார். அவரது சீர்திருத்தத்தைப் பின்பற்றியவர்கள் மகம்மதியரென்று அழைக்கப் பெற்றார்கள்.ஆனால் இந்து வென்னும் ஒருவருமில்லை, பெயருமில்லை, செயலுமில்லை. சீர்திருத்தங்களும் இல்லாததால் யாதொரு பொருளற்ற இந்து சுதேசியம். (மேலது : 351)*

இவ்வாறாக, பௌத்தத்தை



படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்பதும் சாதிபேதம் வேண்டா மெனச் சொல்லிக் கொண்டே அனைவரையும் பூணூல் போட்டு பிராமணர் ஆக்கும் முயற்சியும் மதபேதம் வேண்டுமென்று சொல் லிக்கொண்டே உலகையே இந்துத் துவமயமாக்கிவிட வேண்டும் எனும் முயற்சியும் பாரதியை, அயோத்திதாசர் குறிப்பிடுவது போல பொருளற்ற இந்து சுதேசி யாகவே புரிந்து கொள்ளச் செய்கின்றன. வழக்காறு அற்றுப் போன சமஸ்கிருதத்தை இந்தியப் பொது மொழியாக்க வேண்டும். என பாரதி பேசுவதும் (பாரதி புதையல் பெருந்திரட்டு, 274) அயோத்திதாசர் கருத்துக்கு வலு வூட்டுகிறது.

தலித் மக்கள் கிறித்தவத்தைத் தழுவியபோது அது இந்து மதத் திற்கு நேரிட்ட இழிவாகவும் இழப் பாகவும் கருதி, பாரதி தலித் மக்கள் விடுதலையைத் தாம் பேசவாவது வேண்டுமென எண்ணிப் பேச ஆரம்பித்தார். கிறித்துவத்தை எதிர்க்கிறார்; அதன் வழி ஆங்கி லத்தையும் ஆங்கிலக் கல்வியையும் ஆங்கில மருத்துவ முறையையும் எள்ளி நகையாடுகிறார். இங்கி லாந்து அமெரிக்கா போன்ற நாடுக ளில் பொன்னையும் மண்ணையும் பொறுத்து ஏற்பட்டுள்ள பிரிவு களைப்போல் இந்தியாவில் பரம் பரையான ஞான விசேஷத்தையும், ஆசாரங்களையும் பொறுத்து ஏற்பட்டுள்ள சாதிப்பிரிவு அத் தனை தீங்குடையன அல்ல என்கிறார்.

சாதி வேற்றுமையானது ஸனா தன தர்மத்தில் சம்பந்தப்பட்ட தில்லையென்றும், அது சில சவுகரி யங்களை உத்தேசித்து மனிதர் களால் செய்து கொள்ளப்பட்ட கட்டுப் பாடேயாமென்றும் அபே தானந்தர் குறிப்பிடுவதை ஆதரித் துப் பேசுகிறார்.(பா. தரி : 340)

அயல்நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரிவுகளைப் போல் இந்தியாவில் ஏற்பட்டுள்ள சாதிப்பிரிவு அத் தனை தீங்குடையன அல்ல என் கிறாரே பாரதி. இது உண்மை தானா?

*ஒவ்வொரு நாட்டிலும் ஆதிக்க வர்க்கம் இருக்கிறது. ஆனால் இந்தி யாவில்இருப்பது போன்று முழுக்க முழுக்க சுயநலம் கொண்ட, சீரழிவுப் பாதையில் செல்லுகின்ற, மிகவும் அபாயகரமான, மூர்க்க வெறி மனோபாவம் கொண்ட ஓர் ஆதிக்க வகுப்பு உலகில் வேறு எங்கேனும் இருக்கிறதா? ஆதிக்க வகுப்பினரின் அதிகாரத்தையும், புகழையும், சீர்த்தியையும், கீர்த்தி யையும் நிலைநாட்டும் பொருட்டு அடிமட்ட வகுப்புகளை மிதித்துத் துவைக்கும்படி போதிக்கும் ஓர் அருவருப்பான, இகழார்ந்த, வெறுக்கத்தக்க வாழ்க்கைத் தத்து வத்தைக் கொண்ட ஓர் ஆதிக்க வகுப்பு இப்பூவுலகில் எங்கேனும் இருக்கிறதா? எனக்குத் தெரிந்த வரை இல்லை. பிற நாடுகளிலுள்ள ஆதிக்க வர்க்கங்கள் தங்கள் வர்க்கத்தைச் சேராதவர்களை இருகை நீட்டி வரவேற்றுத் தங்க ளது சமுதாயத்தில் அனுமதிப் பதில்லை என்பது உண்மையே. எனினும் தங்கள் தரத்துக்கு உயர்ந்துவிட்டவர்களை அனு மதிப்பதற்கு அவர்கள் மறுப்ப தில்லை. தங்கள் தரத்துக்கு உயர முயலும் எவரையும் அவர்கள் தடுப்பதுமில்லை. ஆனால் இந்தி யாவில் ஆதிக்க வகுப்பு மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட ஓர் அமைப் பாக, அதன் கதவுகள் மூடப்பட்டு விட்ட ஓர் அமைப்பாக இருக் கிறது. பிறப்பின் மூலம் தங்களைச் சேர்ந்தவர்களல்லாதவர்கள் எவரையும் அது அனுமதிப்பதில் லை. அடிமட்ட வர்க்கங்கள் தங் கள் தரத்துக்கு உயர்ந்து விடா தபடிதடுக்க அது எல்லா வழிமுறை களையும் கையாள்கிறது. (அம். தொகுதி - 17 : 108)*

*இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடுகளின் ஆதிக்க வர்க்கங் கள் சமூக விரோதமானவை அல்ல; மாறாக சமூகச் சார்பற்றவை எனும் அம்பேத்கர் இந்தியாவிலுள்ள ஆதிக்க வகுப்பினர் கடைந் தெடுத்த சமூக விரோதிகளாக இருந்து வருகின்றனர் என்பதையும் சுட்டுகிறார். (அம். தொகுதி - 17 : 124, 125)*

ஆக, சமூக விரோத ஆதிக்க வர்க்கத்தின் ஊதுகுழலாகப் பரிண மித்த பாரதிக்கு சமூக எதார்த்தங் களில் மனம் படிய வாய்ப்பில்லை தான். மனுவின் மறுகுரலாக பாரதி இருந்திருக்கிறார். புதியதாக ஏதோ செய்து விட்டது போல் ஓர் மாயத் தோற்றம் அளித்திருக்கிறார்.

மனுநீதி கடந்தகால வரலாறு, இந்துக்களின் இன்றைய வாழ்க்கை நடைமுறையில் அதற்கு எவ்விதப் பங்கும் இல்லை என்று சிலர் நினைக்கக்கூடும்.

இதைவிட பெருந்தவறு வேறு இருக்க முடியாது என்று நிச்சய மாகக் கருதுகிறேன். மனு நியதி என்பது ஒரு கடந்தகால நடை முறையல்ல. தற்காலத்தின் இறந்த காலத்தைவிட அது அதிக மெய் யானது. 'அது வாழ்ந்து வரும் கடந்த காலம்' எனவே எந்த நிகழ் காலத்தையும் போலவும் அது ஓர் உண்மையான நிகழ்கால விஷயம் தான். (அம். தொகுதி - 25:76).

இதற்கு உதாரணமாக கண்ட தேவி தேரோட்ட நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். தேரோட்டத்தில் தலித் மக்கள் பங்கேற்க அனு மதிக்குமாறு சென்னை உயர் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால் சமூகப்பழக்கம் என்ற காரணம் காட்டி இன்னும் அது நிறைவேற்றப்படவில்லை. தலித் மக்களுக்கு சட்ட அங்கீகாரம் இருந்தும் சமூக அங்கீகாரம் இன் னும் கிடைக்கவில்லை. எனவே தான் மலமும், சிறுநீரும் தலித் மக்களின் வாயில் திணிக்கப்படு தலும் இதுபோன்ற இன்னும் பல கொடுமைகளும் ஒடுக்குமுறை களும் சட்ட அத்துமீறல்களும் தொடர்ந்து கொண்டேயிருக் கின்றன என்பது அனைத்து இந்துக்களுக்கும் தெரிந்தவைதான். ஆனால் மவுனம் என்கிற பெயரில் தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத் திக் கொள்கிறார்கள். உலகின் வேறெந்தப் பகுதியிலும் இப்படி (மலம் திணிப்பு) நடந்திருந்தால் அங்கிருக்கும் அனைத் துத்தரப் பினரும் எதிர்த்திருப்பார்கள். இதுதான் மனுவின் சமூகமாயிற்றே. இதில் மனசாட்சிக்கு இடமேது.

பாரதியின் பெண்விடுதலைக் கருத்துக்களையும் இந்தப் பின்புலத் தில் இனிக்காணலாம். •



படிப்பகம்

www.padippakam.com



■ சாக்கியன்
என்ற
குடியரசு

# கொள்கையில் உறுதி

இத்தாலி நாட்டைச் சேர்ந்த சல்வதோர் கிளாட் என்பவர் ஒரு புத்தத் துறவி. இவர் மே 1936-இல் அம்பேத்கரை பம்பாயில் சந்திப்பதற்காக இந்தியா வந்தார். அம்பேத்கரை சந்தித்து, அம்பேத்கர் தன்னுடைய மக்களுடன் பௌத்தம் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அம்பேத்கருக்கு பௌத்தம் குறித்து தான் உணர்ந்ததை தெரியப்படுத்தினார். இந்த நாட்டை பௌத்த சிந்தனை நாடாக மாற்ற அம்பேத்கர் 1935 முதற்கொண்டே திட்டமிட்டு தன்னுடைய செயல்பாடுகளை நகர்த்திக் கொண்டிருக்கும் போது, அம்பேத்கரின் லட்சியத்தை அம்பேத்கரிடமே தெரிவித்த புத்தத் துறவி சல்வதோர் கிளாட் போல இன்றும் நமது நாட்டில் இருக்கத்தான் செய்கின்றனர்.

அந்தத் துறவியிடம் அம்பேத்கர் கூறினார். உங்களது சொல்லை நான் கவனமாக நினைவில் கொள்கிறேன். ஆனால் மக்களிடம் பௌத்தம் குறித்து மெய்யறிவு புகட்ட உங்கள் கைகளில் உள்ள பிச்சைப் பாத்திரமும், குடையும் மட்டும் போதாது. சமூக விடுதலையைப் பற்றிய தெளிவும், அதை நடைமுறைப்படுத்துவதற்கு வேண்டிய மன திடமும் தேவை.

அம்பேத்கர் The Times of India, 18.6.1941-இல் வெளியான கட்டுரையில் இவ்வாறு தெரிவிக்கிறார்.

மகர்கள் போர்க்குணம் மிக்க வீரர்கள். கிழக்கிந்திய கம்பெனியின் படைவீரர்கள் மகர்களாக இருந்தமையால், பெஷாவர் படையை பிரிட்டிஷ் அரசு வெற்றி கொள்ள முடிந்தது. பெஷாவர் படைக்கும் கிழக்கிந்திய கம்பெனியின் படைக்கும் நடைபெற்ற இறுதிப் போரானது பூனாவில் உள்ள கொரிகான் என்ற இடத்தில் நிகழ்ந்தது. இதற்கான நினைவுச் சின்னம் இன்றும் கொரிகானில் உள்ளது. இந்த நினைவுச் சின்னத்தில் மகர் வீரர்களின் பெயர், அவர்களின் போர்திறன், தியாகம் பதிக்கப்பட்டுள்ளது. அந்த படைவீரர்களில் 10-இல் 9 பேர் மகர் வீரர்களாக இருந்தனர். இந்த மகர் வீரர்களின் போர்ப் பங்களிப்பு 1892 வரை தொடர்ந்து நிகழ்ந்துள்ளது. திடீரென 1892-ஆம் ஆண்டு முதல் மகர் இளைஞர்கள் இராணுவத்தில் சேர்க்கப்படுவது நிறுத்தப்பட்டது. இதைக் குறித்து மகர்கள் பிரிட்டிஷ் அரசிடம் தங்கள் குறையாக மகஜர் அளிக்கப்பட்டது. இந்திய நாடு முழுமையும் பிரிட்டிஷ் அரசின் கைவசம் வந்துவிட்டதை உணர்ந்த சாதி இந்துக்கள் பிரிட்டிஷ் அரசுப் பணியினை அனைத்துத் தளங்களிலும் விரவினர்.

மகர்கள் இதைக் கண்டித்து தங்களது எதிர்ப்புக் குரலை எழுப்பினர். ஆனால் இதை பிரிட்டிஷ் அரசு கவனத்தில் கூட எடுத்துக் கொள்ளவில்லை. இதன் பிறகு பிரிட்டிஷ் அரசு தன்னுடைய தேவையையொட்டி 1914-இல் மகர் இளைஞர்கள் மீண்டும் ராணுவத்தில் சேர வாய்ப்பளித்தது. அவ்வாறு உருவாக்கப்பட்ட மகர் படை இராணுவப் பிரிவு வடமேற்கு எல்லைப் பிரதேசங்களில் பணிசெய்ய பயன்படுத்தப்பட்டது. பதானியர்களின் உடன் போரில் பிற இராணுவப் பிரிவினர் தங்களது ஆயுதங்களை இழந்த நிலை உருவாகியிருக்க, மகர் பிரிவிலிருந்து ஒரு துப்பாக்கித் தோட்டாவைக்கூட கவர இயலாமல், மகர் ராணுவப் பிரிவு மிகுந்த விழிப்புடனும் திறமையுடனும் செயல்பட்டது. இதனால் பிரிட்டிஷ் அரசு அதிக அளவில் மகர் வீரர்களை தங்களது ராணுவத்தில் இணைத்துக் கொண்டது. இந்தப் போர் முடிவிற்கு வந்தவுடன் மகர் பிரிவு பிரிட்டிஷ் அரசால் கலைக்கப்பட்டது. இது மகர்களின் மனதில் கசப்புணர்வை விதைத்தது. போர் உருவாகும்போது மட்டும் தங்கள் படை திரட்டப்படும் என்பதை மகர் வீரர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். போரில் காயப்பட்டதைவிட பிரிட்டிஷ் அரசின் பாரபட்ச அணுகுமுறை மகர் வீரர்களை அதிகம் காயப்படுத்தியது. போர் புரியும் மகர் வீரர்கள் தலைமை தாங்கும் தகுதி தொடர்ந்து நிராகரிக்கப்பட்டு, எதிரிகளின் முழு எதிர்ப்பை சமாளித்தும் அதற்கான பயன் பெறுவதிலிருந்து தவிர்க்கப்பட்டனர்.

பிரிட்டிஷ் அரசு, இந்தியாவில் நிலவிவரும் சாதி முறைமையை சீர்குலைக்க விரும்பாமல், அதை அனுசரித்துப் போக முடிவுசெய்ததையே இது காட்டுகிறது. இந்த நாட்டின் அடிப்படை வாதத்தை முழுமையாக சாதி பாதுகாக்கும் போது; சாதியை காயப்படுத்தாமல் பிரிட்டிஷ் அரசு நடந்துகொண்டு தன்னுடைய ஆட்சியை நடத்துவது, இந்த நாட்டு முற்போக்குவாதிகளின் அடிப்படை சாதிப் பார்வையையே காட்டுகிறது.

பிரிட்டிஷ் அரசிடம் சுதந்திரம் வேண்டும் என்று போராடும் சாதி இந்துக்கள், சாதியின் கொடூரத்தை பிடிட்டிஷ் அரசு பாதுகாக்க வேண்டும் என்றும் போராடுகின்றனர். 300 ஆண்டுகளாக பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்க்கும் இவர்கள், 300 ஆண்டுகளாக பிரிட்டிஷ் அரசின் ஒடுக்குமுறைக்கு எதிராக திரளும் இவர்கள், அதைவிட நெடுங்காலமாக சாதி முறையால் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கும் தாழ்த்தப்பட்ட மக்களை, அவர்களின் போராட்டத்தை எதிர்க்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com

சுதந்திரம் வேண்டும் என்பதற்காக போராடுவதாகச் சொல்லிக் கொள்ளும் இவர்கள், தாழ்த்தப்பட்டவர்களின் மீது அடக்கு முறையையும், அடிமைத்தனத்தையும் ஏவிவிடுகின்றனர்.

தங்களின் போராட்டத்திற்கு, தாழ்த்தப்பட்ட மக்கள் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கூறி வருகின்றனர். நமது சக்தியை மீண்டும் மீண்டும் தங்களின் சுய வரவுக்காக பயன்படுத்துகின்றனர். இதை தாழ்த்தப்பட்ட மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நமக்கு, நமது இலக்கிற்கு சாதி இந்துக்கள் எதிராகச் செயல்படும்போது, பிரிட்டிஷ் அரசும் அதை ஆதரவு தந்து பாதுகாக்கிறது. இதை நாம் எச்சரிக்கையுடன் கவனத்தில் கொண்டுநமது போராடும்முறையை வடிவமைக்க வேண்டும் என்றார் அம்பேத்கர்.

அம்பேத்கர் சட்ட அமைச்சராக இருந்து பதவி விலகிய பின்பு, திரு. அசோக் மேத்தா, பிரஜா சோசியலிஸ்ட்டு கட்சியின் பொதுச் செயலாளர் அம்பேத்கரை சந்தித்தார். இவர் காங்கிரசு கட்சியின் சிந்தனை, போக்கு ஆகியவற்றிற்கு எதிரானவர். இவர் பம்பாய் மாகாணம் முழுவதும் காங்கிரசு அதிருப்தியாளர்களை ஒருங்கிணைத்து அது குறித்து பெரிய ஒன்றுபட்ட சக்தியை உருவாக முயற்சி செய்து வந்தார்.

அம்பேத்கரை சந்தித்த பிறகு, The National Standard பத்திரிக்கைக்கு 28.8.1952 அன்று ஒரு நீண்ட பேட்டி தந்தார். அம்பேத்கரிடம் பேசினேன். எனக்கு மிகப் பெரிய அளவில் மக்கள் செல்வாக்கு, புகழ், பணம் இருக்கலாம். இவையெல்லாம் வம்சாவழியாக வந்தவை. இவை நான் என்னுடைய உழைப்பால் சம்பாதித்தது அல்ல. நான் சார்ந்த சாதியைச் சார்ந்தவர்கள் மக்களை ஏமாற்றிப் பெற்றது. ஆனால் அம்பேத்கருக்கு உள்ள மக்கள் செல்வாக்கு, புகழ் அவர் நேர்மையாக உழைத்துச் சேர்த்தது.

அது வெகு மக்களின் நன்மைக்கானது. இவரின் வளர்ச்சி இந்திய நாடு நல்ல நாடாக விளங்க தேவையான ஒன்றாகும். இவரால்தான் இந்த மக்களின் மூட வழக்கங்களை போக்க இயலும். சாதியின் கொடூரத்தை வேரறுக்க இயலும். ஏன், இந்த நாட்டின் விடுதலையை இவரால் மட்டுமே சாதித்துத் தர இயலும். இன்று நாம் பெற்றிருப்பது விடுதலை அல்ல. இது வெள்ளையர்களின் கையிலிருந்த ஆளும் உரிமை காங்கிரசிடம் கைமாறியுள்ளது. இந்த நாட்டிற்கு உண்மையான விடுதலை தேவை. அதை அம்பேத்கர் ஒருவரால் மட்டும்தான் பெற்றுத்தரவியலும் என்றார்.

மேலும் தன்னுடைய Praja Socialist Party-ஐ Scheduled Caste Federation உடன் இணைத்து அம்பேத்கர் தலைமையில் இயங்க விரும்புவதாக உணர்ச்சிப் பொங்க குறிப்பிட்டார். எனக்கு மட்டுமல்ல, இந்த நாட்டில் உள்ள அனைவருக்கும் நல்வழிகாட்டும் வல்லமை அம்பேத்கருக்கு மட்டுமே உண்டு என்று திரு. அசோக் மேத்தா குறிப்பிட்டார்.

இந்த செய்திக்கு அம்பேத்கர் தன்னுடைய பதிலாக, யார் நெகிழ்ச்சியடைகிறார்கள் என்பது மட்டுமே கணக்கல்ல. தாழ்த்தப்பட்ட மக்களின் பிரச்சனைகளை தங்களின் பிரச்சினைகளாக எந்த மனிதன் ஏற்றுக் கொள்ள முன்வந்தாலும் (அவ்வாறு செய்வது மிக மிக அரிது) நான் முழு மனதுடன் வரவேற்பேன். ஆனால் Socialist கட்சியினர் காங்கிரசில் இருந்து வெளிவந்ததற்கான காரணங்களாக, தங்களுக்கு காந்தியத்தில் நம்பிக்கையில்லை என்று மட்டுமே தெரிவித்துள்ளனர். தங்களுக்கு சாதியத்தில் நம்பிக்கையில்லை, சாதியின் பெயரால் பேதம் பாராட்டுவதை எதிர்க்கிறோம் என்று தங்களுடைய கோட்பாட்டை முன் வைத்து வெளியேறி இருந்தால், SCF & PSP ஆகியன இணைப்பு குறித்து நாம் விவாதிப்பது சிறப்பாக இருக்கும். மாறாக நேற்று தோன்றி மறைந்த காந்தியின் எதிர்ப்பாளர்கள் என்ற ஒரே ஒரு கோட்பாட்டை மட்டும் முன்னிருத்தி இரு கட்சிகளும் இணைவது மிகவும் தவறான ஒன்றாகும். தங்களது SCF சாதி கொடுமையின் கொடூரத்திற்கு எதிரானது. காந்தி என்ற தனி மனிதனின் விருப்பு வெறுப்புகளை மையப்படுத்தி நாங்கள் எங்களது திட்டங்களை வரையறுத்துக் கொள்ளவில்லை. எங்கள் மக்களின் வாழ்வியல் மனிதத்தோடு இணைத்து நாங்கள் வரையறை செய்துகொண்டு போராடுகிறோம். இந்தப் போராட்டம் ஒட்டுமொத்த மனித சமூகத்தின் விடுதலையை இறுதியாகக் கொண்டதாகும். சாதியும், சனாதனமும் மனத்திற்கு எதிராக உள்ளபோது, அதை தொடர்ந்து தங்களின் ஆதாரமாகக் கொண்டு வாழ்பவர்களோடு நாங்கள் எப்படி முரண்படாமல் வாழ இயலும்? மாற்றுக் கருத்துக்கள் இல்லாமல் வாழ்வதென்பது அடிமைகளாக வாழ்வது போன்றதுதான் என்றார்.

இந்த அடிமை முறையை, கேவலமான சாதியுடன் ஏற்றுக் கொண்டு வாழ்வதைவிட அதை எதிர்த்து போராடும் வாழ்க்கையும், அதில் நிம்மதி காண்பதும் சிறந்தது என்றார். அம்பேத்கரின் இந்த வார்த்தைகளை இன்றும் நாம் பொருத்திப் பார்க்கவேண்டியுள்ளது.

அம்பேத்கர், தன்னை ஏற்றுக் கொள்பவர்கள் என்பதற்காக மட்டுமே கண்மூடித்தனமாக திரும்பி ஏற்றுக் கொள்ளவில்லை. தன்னுடைய கொள்கைகளை, மக்களை தன்னுடைய மக்களின் விடுதலைக் குரலை ஏற்றுக் கொள்பவர்களை மட்டுமே அம்பேத்கர் ஏற்றுக் கொண்டார்.

அது புத்தத் துறவியாக இருந்தாலும், அரசியல் கட்சியினராக இருந்தாலும், பிரிட்டிஷ் அரசாக இருந்தாலும் சரி. இதனால்தான் அம்பேத்கர் பல்வேறுபட்ட சக்திகளை கையாளும்போது கூட மிகவும் வெற்றிகரமாக செயல்பட முடிந்தது.

அம்பேத்கரின் வெற்றிக்கு அவ்ருடைய தெளிந்த அறிவு, புரிந்து கொண்ட உண்மையின் மீது பெற்ற உறுதி ஆகியன மட்டுமே அடிப்படைக் காரணங்களாக வாய்த்தன.



படிப்பகம்

www.padippakam.com

# உடல்மொழி

குடும்பம் என்பது தனிச்சொத்து சார்ந்த சிறு நிறுவனம். மூதாதையர் சொத்துக்கள், தாங்கள் சுயமாக சேர்த்த சொத்துக்கள் இவற்றைப் பாதுகாக்கவும் பேணவும் இது சிதறிப் போகாத வண்ணம் உறவுகளை மிக இறுக்கமாக இருத்திக்கொள்ளவும் போதுமான புனைவுகளுடன் உருவானது இது.

## உடல்மொழி

■ சிவகாமி

உழைப்பு என்ற கருத்தாக்கத்தை ஆய்வுக்குட் படுத்தியது போல ஆண்மை / பெண்மை கருத்தாக்கங் களை ஆய்வோம். உடல் கூறுகளின் வேறுபாட்டின் அடிப்படையிலான கருத்தாக்கங்கள் இவை என பரவலாக நம்பப்பட்டு வந்தாலும், உழைப்பும் பகுப் பிலான உற்பத்தி உறவுகள், சமூகம், கலாச்சாரம் சார்ந்தே இவை உருவாக்கப்பட்டுள்ளன.

ஆண்மை என்பது, ஆணுடலை அடிப்படையாகக் கொண்டு, அந்த உடலுக்கான குணாதிசயங்கள், தன்மைகள், இவையொட்டிய விதிகள் என்பதாகக் கூறப்பட்டு, சமூகத்தில் அவனாற்றும் பங்கு, கடமை, தேவை ஆகியவைகளின் அடிப்படையில் வடிவமைக் கப்பட்டுள்ளது. அவ்வாறே பெண்மையும்.

தாய்மை, குழந்தை வளர்ப்பு, குடும்ப நிர்வாகம் இவை பெண் இயங்கு தளமாகவும், அரசு, மதம், சமூகம் ஆகிய பிற நிறுவனங்கள் யாவும் ஆண் இயங்கு தளமாகவும் வரலாற்றுக் காலம் முதல் இருந்து வந்துள்ளன.

உலக அளவில் உள்ள பழைய இலக்கியங்கள் யாவும் மிகவும் கறாராக இந்தப் பாகுபாட்டை வலியுறுத்தி வந்துள்ளன. (ஓரிரண்டு விதிவிலக்குகள் இருக்கலாம்). பெண்ணுக்கு உலகம் என்பது குடும்பம் என்றளவிலே நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் ஆண் / பெண் உடல் வேறுபாடும் அதை யொட்டிய குணாதிசயங்களும் என்றார்கள் ப்ளேட் டோ, அரிஸ்டாட்டில், ஹாப்ஸ் மற்றும் ரூசோ போன்ற பழங்கால கிரேக்க தத்துவவியலாளர்கள். பகுத்தறியும் திறன் கொண்ட ஆண் அரசியலுக்கும் உணர்ச்சிவயப்படும் பெண் குடும்பத்திற்கும் தோதான வர்கள் என வாதிட்டுள்ளனர்.

ஆனால் சமூக இயங்கு தளங்களையொட்டியே ஆண்மை, பெண்மை கருத்தாக்கங்கள் உருவாகியுள் ளன என்பதை கீழ்க்கண்ட பகுப்பின் மூலம் உணர்ந்து கொள்ளலாம். ஆண்மை என்ற கருத்தாக்கத்தினுள் வீரம் / துணிவு (போரில் வெற்றியை நோக்கியது), வலிமை / ஆற்றல் (போரில் எதிரியை வீழ்த்தும் உடல் வலிமை), அறிவு / ஞானம் (கல்வி, பேச்சாற்றல், பதவி போன்ற அரசியல் நிர்வாகம் சார்ந்தவை), உறுதி (சமூக-சாதியக் கட்டுப்பாடுகளைப் பேணுவதில்) போன்ற பலவும் கட்டமைக்கப்பட்டுள்ளன. இக்குணங்களை ஒட்டி அதற்கேற்றவாறு பெண்மை வடிவமைக்கப் பட்டுள்ளது. அச்சம் (வீரம், துணிவுக்கு எதிராக, அதே சமயத்தில் குடும்பத்தில் ஆணுக்கு கட்டுப்பட்டு நடக்கும் விதமாக), மென்மை/நாணம் (ஆணின் வலிமை/ஆற்றலுக்கு எதிராகவும் அதே சமயத்தில் அவனது இச்சையைப் பூர்த்தி செய்யும் வேட்டைப் பொருளாகவும்), மடம் (அறிந்தும் அறியாத பேதை யாக நடந்து ஆணின் அறிவை கேள்விக்குட்படுத்தாத வகையில் அல்லது அறிவின்பாற்பட்ட அதிகாரத்தை கைக்கொள்ளாத வகையில்), கற்பு (குடும்பம் என்ற அமைப்பிலிருந்து வெளியேற முடியாதபடி உடல் சார்ந்த ஒழுக்க விதிகளுக்கும், சமூகத்திற்கும் கட்டுப் பட்டு நடத்தல், சாதி விதிகளை மீறாதிருத்தல்). இப்படி ஆண் பெண் சமூக இயங்கு தளங்கள் ஆண்மை/ பெண்மையை வரைந்துள்ளன.

இவற்றை தமது பிறப்பியல்புகளாக புனைந்து கொண்டு அதன்படி ஆண்களும் பெண்களும் சிந்திக்க வும் செயல்படவும் கற்றுக் கொண்டுள்ளனர். இது துரதிர்ஷ்டவசமானது.

இக்கருத்தாக்கங்கள் மாறக்கூடியவை அல்லது இருவருக்கும் பொதுவானவை என்பதே உடல்மொழி கூறும் பாடம். ஆனால் ஆண்மையும் பெண்மையும் முறையே பொது என்றும் தனி என்றும் நேர் செய்யப் படுவதால் பொது என்பது என்ன, தனி என்பது என்ன, என்பதை புரிந்து கொள்வதும், இவை அதிகாரம் சார்ந்தே வரையறுக்கப்பட்டுள்ளன என்று உணர்ந்து கொள்வதும் அவசியம்.

குடும்பம் என்பது தனிச்சொத்து சார்ந்த சிறு நிறுவனம். மூதாதையர் சொத்துக்கள், தாங்கள் சுயமாக சேர்த்த சொத்துக்கள் இவற்றைப் பாதுகாக்க வும் பேணவும் இது சிதறிப் போகாத வண்ணம் உறவுகளை மிக இறுக்கமாக இருத்திக்கொள்ளவும் போதுமான புனைவுகளுடன் உருவானது இது. இது தனி என்ற வரையறைக்குள் வருகிறது. தனி என்று



படிப்பகம்

www.padippakam.com

வரையறுக்கப்பட்டாலும் இக்குடும்பத்தின் விதிகள் அல்லது சட்டங்கள் யாவும் அரசு-சமூக-மத நிறுவனங்களாலேயே இயற்றப்பட்டும் கட்டுப்படுத்தப்பட்டும் வருகின்றன. குடும்பம் என்பது பெண்ணின் இயங்கு தளம். இதன் விதிகளை அவள் சாராத 'பொது' நிறுவனங்களே வடிவமைக்கின்றன. அவளது இயக்கத்தைக் கட்டுப்படுத்துவதிலும், அந்த எல்லையை மீறாதிருக்கும் வகையிலும் மனுவின் 'பெண்' பற்றிய கருத்தாக்கங்கள் இருந்துள்ளன என்பது சிறந்த எடுத்துக்காட்டு.

குடும்பம்தான் அடிப்படை அலகு. என்றாலும் இது எந்த வகையிலும் பிற பொது நிறுவனங்களைக் கட்டுப்படுத்தாதபடி ஆண்மை/பெண்மை செயல்படுகின்றன என்பது பெண்களது உரிமைகள் மறுக்கப்படும் வகையிலும், தன்னிச்சையாகவும் வரையறுக்கப்பட்டவைதான் பொது x தனி பாகுபாடுகள் என்பதை உறுதி செய்கின்றது.

1960-70 களில் மேலைநாட்டின் இரண்டாம் அலை பெண்ணியலாளர்கள் குடும்பம் என்பது அரசியலோடு சம்பந்தப்படாதது என்பதைத் தகர்த்து தனியானதென்பது பொதுவானதே அதாவது Personal is Political என்ற வாதத்தை வைத்தார்கள். இவர்களது இந்த முயற்சிகள் மூலம்தான் மனைவி என்ற அந்தஸ்துக்கு சட்டப் பாதுகாப்பு, குழந்தை வளர்ப்பு குறித்த அரசு கொள்கை, அதற்கான கணிசமான நிதி ஒதுக்கீடு, பெண் தொழிலாளிகளுக்கு சட்டப் பாதுகாப்பு, பாலியல் வன்முறைக்கு எதிரான சட்டங்கள் அங்கு கொண்டுவரப்பட்டன. இதுவரை குடும்பம் என்பது தனி அல்லது அந்தரங்கம் என்று கருதியதால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் அல்லது ஒடுக்குமுறைகள் அதைப் 'பொது' எனக் கருதி அரசியல் தலையீடு மூலம் எதிர்கொண்டதால் களையப்பட்டன. இதன் மூலம், அந்தரங்கம் என்று மூடி மறைத்திருந்த மூடாக்கு விலகி பெண்ணினத்தின் சேவைகளும், பெருமைகளும் உரிய அங்கீகாரம் பெற்றன என்று எழுதுகிறார் லிஸ்டர்.

'The ideological construction of the public--private devide thereby contributes to the opposition of justice and care and to the convenient camouflaging of men's dependance upon women for care and servicing' (Lister R. 'Citizenship - Feminist Perspectives' Pg.120)

தனி x பொது விவாதம், பெண்களின் உரிமைப் பிரச்சினைகள் அல்லது அவர்களுக்கு சம அதிகாரம் என்றளவில் அனைத்து நிறுவனங்களையும் மறு பரிசீலனை செய்ய உதவியது. அதேபோல் ஆண்மை பெண்மை கருத்தாக்கங்களையும் அசைத்துள்ளது. அதாவது சமத்துவம் என்ற பெயரில் ஒதுக்கி வைத்த பொது நிறுவனங்களில் பெண்களை நுழைத்து விடுவது மட்டும் ஆண்மை/பெண்மை கருத்தாக்கங்களை சிதைப்பதில்லை. மாறாக எந்தக் காரணங்களின் அடிப்படையில் பெண்கள் இந்நிறு வனங்களிலிருந்து கவனமாகத் தவிர்க்கப்பட்டார்களோ அந்தக் காரணங்களை ஆய்வதும், புதுக் கருத்தியல்களுக்கு ஏற்றவாறு எல்லா நிறுவனங்களையும் மறு கட்டமைப்பதும் அவசியமாகும் என்றும் வலியுறுத்தியது இவ் விவாதம். இந்த மறுகட்டமைப்பு என்பது பால்சார்ந்த சமூக மதிப்பீடுகளை இந்த நிறுவனங்களிலிருந்து பிரித்து விடுவதும், தனி மற்றும் பொது என்ற விஷயங்கள் ஒன்றையொன்று பாதிக்க வல்லது என்பதை அங்கீகரிப்பதும், பழைய இறுக்கமான தனி x பொது எல்லைகளைத் தளர்த்துவதோடு தொடர்ந்து மாறக் கூடிய அளவில் நெகிழ்வாக வைத்திருப்பதுமாகும். இச் செயல்பாடுகள், பால்பாகுபாடு என்பது அது சார்ந்த அதிகாரக் கட்டமைப்பாக மாறாதிருக்கும் வழிகளாகக் கருதப்படுகின்றன.

இதுகாறும் ஆண்மை, பெண்மை கருத்தாக்கங்களை சமூக உறவுகளே வழிநடத்தி வந்திருக்கின்றன எனும் பட்சத்தில் உடல்ரீதியான வேறுபாடுகளுக்கு எந்தப் பங்கும் இல்லையா எனும் கேள்வி எழுகிறது.

குடும்பநல அறுவை சிகிச்சையை எடுத்துக்கொள்வோம். வாசக்டமி என்பது ஆணுக்குச் செய்யப்படுவதும் ட்யூபக்டமி என்பது பெண்ணுக்குச் செய்யப்படுவதுமாகும். கணவன், மனைவி ஆகிய இருவரும் செய்து கொள்ள வேண்டும் என்ற அவசியமில்லையாதலால் பெரும்பாலும் பெண்களே அறுவை சிகிச்சை செய்து கொண்டார்கள். வாசக்டமி என்பது ட்யூபக்டமியைவிட சுலபமானது என்றாலும் கூட, வாசக்டமி செய்துகொண்டால் ஆண்மை இழந்து விடுவதாக உணர்ந்ததும், பிள்ளை பெறுவது பெண்களுடைய பொறுப்பு / தொல்லை என்பதும், ஆணின் உயிர் பெண்ணின் உயிரைவிட மேலானது என்பதுமான பல்வேறு கருத்தாக்கங்கள் இதில் செயல்பட்டுள்ளன. பாலுறவில் யாருடைய அதிகாரம் அல்லது இயக்கம் மேலானது என்பதும், ஆண் பெண்ணின் சமூக முக்கியத்துவமுமே இதில் செயல்பட்டுள்ளன உடல் ரீதியான வேறுபாடுகளை மீறி; இது உடல் ரீதியான விஷயம் என்றாலும் கூட, மற்றும் அறுவை சிகிச்சையின் நோக்கமும் ஒன்றே என்றாலும் கூட, ஆணின் அதிகாரமே மேலோங்கியுள்ளதையும் இது வெளிப்படுத்துகிறது.

அதேபோல் இருவருக்கும் பொதுவான பாலுறவு என்பதும் ஆணின் அதிகாரம் சார்ந்ததாகவே உள்ளது. மென்மை, நாணம் என்ற குணங்கள் பெண்களுக்கு உரியதாக்கப்பட்டு அவர்களது உணர்வுகள் வெளிப்படுத்தக் கூடாததாகவும் அவர்களது பாலியல் இச்சைகள் ஆபாசமானதாகவும் கருதப்படுகிறது.

ஆண் என்பவன் இனவிருத்தியைப் பொறுத்த வரை ஒத்திசைவுக்கான செயல்பாட்டில் ஒரு அங்கம். பெண்ணும் அவ்வாறே. இதில் ஏதேனும் விசேஷத் தன்மை இருந்தால் அது இருவரிடமும் உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இனவிருத்தி இருவருக்குமே விசேஷமானது என ஏற்றுக் கொண்டோமேயானால் அது நீங்கலாக மீதி யாவும் வரலாற்றால் விளக்கங்கொள்பவையே: கோபம், பொறாமை, இரக்கம், துக்கம், காமம் போன்ற அனைத்து உணர்வுகளும் இருவருக்கும் பொது வானவை. இவற்றின் விகிதாச்சாரங்கள் வளர்ப்பு, சமூகச் சூழலால் விளக்கங்கொள்பவை. இவ்வுணர்வில் எவை மிகுந்தாலும் அவை நோயின் அறிகுறிகளே. ஆணுக்கென்று விகிதாச்சாரம் வேறுபடுகிறது என்று யாரேனும் அதைத் தனித் தொகுதியாக்க முயற்சித்தால், ஒவ்வொரு தனி நபரும் தலைமுடி முதல் கால் நகம் வரை வித்தியாசமான விகிதாச்சாரங்கள் கொண்ட வர்கள் என வாதிட வேண்டி வரும்.

அரவாணிகள் வாய்மொழி இலக்கியப் பதிவு களின்போது ஒரு அரவாணி நம்மிடம் சொன்னது. தான் ஒரு ஆணாகத் தன்னை உணராததிற்குக் காரணம் அவர் நான்கு சகோதரிகளின் கடைசித் தம்பியாகப் பிறந்தார் என்றும், அவர்களைப் போலவே பொட்டும் பூவும் வைக்கவும், இரட்டைக் குடம் சுமந்து தண்ணீர் எடுக்கவும் ஆசைப்பட்டதும் என்றார். ஒரு ஆண் தன்னை இந்த சமூகத்தின் உயிரி என்றுதான் உணர முடியும். அதேபோல் பெண்ணும். ஒரு ஆண் தன்னை ஆண் என்று உணர்தலும், நிறுவிக்கொள்வதும் வெவ்வேறான விஷயங்கள். ஒரு ஆண் தன்னை ஆண் என்றும், ஒரு பெண் தன்னைப் பெண் என்றும் உணர்வது உடலியலினால். தாங்கள் வேறுபட்ட வர்கள் என்று உணர்வதே அது. உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற அடிப்படையிலல்ல.

பெரும்பாலும் குழந்தைப் பருவம் தாண்டி இனவிருத்திக்கு தயாரான நிலையிலேயே ஒருவர் தன்னை ஆண் என்றும் அல்லது பெண் என்றும் உணர்கிறார். (ஆனால் அதற்கு முன்பாகவே நமது சமூகம், குடும்பம், கல்வி தங்கள் கட்டமைப்பு வேலையைத் துவங்கிவிடுகின்றன என்பது வேறுகதை. அதிலும் ஒரு பெண், ஒரு ஆணைப்போல் உடையுடுத்த வும் பள்ளிக்குச் செல்லவும் வெளியுலகில் பழகவும் இயன்றாலும், பருவம் எய்தியவுடன் அவளுடைய இயக்கம் (Mobility) கட்டுப்படுத்தப்படுகிறது. தனியாகச் செல்லவும், ஆண்களுடன் தனிமையில் பழகவும் தடை விதிக்கப்படுகிறது. இது, மேலை நாடுகளைப் போல உடல்நலம் சார்ந்த கட்டுப்பாடாக இல்லாமல், உயர்வு, ஒழுக்கம், சாதி மதக் கோட்பாடுகள் என்றளவில் பேணப்படுகின்றன.

உதாரணமாக நான் படித்தப் பள்ளிக்கூடத்தில் தவறு செய்யும் பட்சத்தில் ஒவ்வொரு கிறித்துவப் பெண்ணையும் பார்த்து, நீ உண்மையான கிறித்துவப் பெண்ணாக இருந்தால் இப்படிச் செய்வாயா எனக் கேட்கப்பட்டது. அதேபோல் நம் சாதி என்ன, குலம் கோத்திரம் என்ன, இப்படிச் செய்துவிட்டாயே என்று பெற்றோர்களும், சாதியை வெளிப்படையாகச் சொல்ல முடியாதவர்கள் நமது மானம், கௌரவம் எல்லாம் போய்விட்டதே என்று புலம்புவதையும் கேட்டிருக்கிறோம். ஆண் பெண் உறவுச் சிக்கல்கள் இவ்வாறு சாதி மதக் கட்டுப்பாடுகளினால் கூடுதல் பரிமாணங்கள் பெறுகின்றன. இன்ன சாதி அல்லது மதத்தைச் சேர்ந்த ஆண் அல்லது பெண் என்று உணர் தலில் அதிகாரம் X ஒடுக்குமுறையின் அளவுகள் வேறு படுகின்றன.

எனவே, ஆண் பெண் என்று இயல்பு நிலைகளில் உணர்தல் உண்டு என்றாலும், அதை நிறுவிக் கொள் ளும் வழிகளிலேதான் அதிகாரக் கட்டமைப்பாக அது மாறுகிறது.

ஆண்களுக்கான கழிப்பறை என்பது அவர்கள் உடல் தன்மைக்குப் பொருத்தமானது. அதே போல் பெண்கள் கழிப்பறையும். பெண்ணின் கர்ப்பநாடி அவளது நோய்க்குறிகளில் ஒன்றாகப் பரிசோதிக்கப் படுகிறது. அதேபோல் ஆணினது இந்திரியச் செயல் பாட்டுத் தன்மை பரிசோதிக்கப்படுகிறது. அந்தளவில் மட்டுமே உடல் ரீதியான வேறுபாடுகளின் விசேஷத் தன்மைகள் முடிவடைந்து விடுவதில்லை. இனவிருத்தி உறுப்புகளை ஒட்டிய செயல்பாடுகள், அதற்கான உளவியலையும் கொண்டுள்ளன. இவை ஆய்வுக்குரி யன.

ஆனால் இவை எதுவும் ஆண்மை பெண்மை கருத்தாக்கங்களை தன்னிச்சையாக வரைய வல்லமை பெற்றவை அல்ல. அல்லது அவர்களது பொதுத் தன்மைகளையும் ஆற்றல்களையும் மதிப்பிட ஏது வானவை அல்ல. இன்னும் சொல்லப்போனால் இந்த விசேஷத்தன்மைகள் இருவருக்கும் பொதுவாக இருக்கும் பட்சத்தில் சமநோக்குடன் ஆய்வது பொருத்தமாக இருக்கும்.

உதாரணமாக தாய்மை குறித்த அரசு பலன்களை பெறுவது எதனடிப்படையில் என்று மேலை நாட்டில் கேள்வி வந்தது. தாய்மை பெறற்கரிய பேறு. பெண் களின் விசேஷத்தன்மைகளில் ஒன்று. விடுப்பு, சம்பளம் இதையொட்டி வழங்கப்பட வேண்டும் என்று சிலர் வாதிட்டபோது, ஆண் நோய்வாய்ப்படுகையில், விடுப்பு, விடுப்புடன் கூடிய சம்பளம் பெறுவதுபோல் தாய்மையும் கருதப்பட வேண்டும் என்றனர் சிலர். சமத்துவத்தைக் கூறியோ அல்லது வித்தியாசத்தைக் கூறியோ பெண்கள் அதிகாரம் பெறுவது தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதையே இது குறிக்கிறது.

ஆகவே, தனித்தன்மைகளுக்கு உரிய முக்கியத் துவத்தை (யூரினல்கள் போல) இருவருக்கும் அளித்து விட்டு குடும்பம் உள்ளிட்ட அனைத்துத் தளங்களிலும் ஆண்களும் பெண்களும் சம அதிகாரத்தைப் பெற வேண்டும் என்பதே உடலியல் வகுத்த விதி. ஆண்மை பெண்மை என்பதும் இதனடிப்படையிலே கட்டமைக் கப்பட வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

*பெண்ணின் மார்பு ஒரு பிரத்யேக பெண் போக அடையாளமாக ஆரம்ப முதல் கவனிக்கப்பட்டதில்லை என்பது வியப்புக்குரிய உண்மை.*

# பிரத்யேகப் பெண் அங்கம்

## மீள் பார்வையில்

■ மாலதி

பெண்ணுடலின் பாகங்களைக் குறிப்பிட்டுப் பெண் கவிஞர்கள் எழுதுவது பெரியதொரு எரிச்சலை ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு வகையான ADAM TEASING போலப் பல ஆண்களை எதிர் வினைக்குத் தூண்டியிருக்கிறது. உண்மையில் இந்த கவிவழிச் சிந்தனை எல்லாரையுமே சீண்டிவிட்டிருக்கிறது. இலக்கியம், கலை வாழ்க்கை எல்லாமாகச் சேர்ந்து பொத்தி வைத்திருந்த கிசு கிசுப்பை உசுப்பிவிட்டிருக்கிறது.

பெண் தன் உடலுறுப்பை முன் நிறுத்தி தானே எழுதுவது, அது வலியுடனா, வெறியுடனா, இயல்புடனா என்கிற புரிதல்களுக்கு அப்பாற்பட்டுக் கண்டனத்துக்குரியதாகிறது. ஆண், பெண் உறுப்பைக் குறித்து எழுதியபோது அது கிளு கிளுப்புக்குரிய போர்னோவாயிற்று. அதையே பெண் செய்தபோது போலிப் புளகிதங்கள் உருவழிந்து உண்மைவெளியே வந்து உறுத்துகிறது.

பெண்ணின் மார்பு ஒரு பிரத்யேக பெண் போக அடையாளமாக ஆரம்ப முதல் கவனிக்கப்பட்டதில்லை என்பது வியப்புக்குரிய உண்மை. தமிழிலக்கியத்தில் சங்க காலம் 'பெண் மார்பு' குறித்து அதிகம் பேசவில்லை. சொல்லியிருக்கிற சில இடங்களிலும் தாய்மையின் தொடர்புடன் மட்டுமே பேசப்பட்டது.

சங்ககாலம், அதி உன்னத வடிவத்தில் உண்மையே பேசும் என்பதற்குச் சான்றாக, பெண் மார்பை இருக்கிறபடி வர்ணிக்கும் இடங்களைச் சொல்லலாம். குறிப்பாக, சிறிய, குறும் வடிவத்தைப் போகிறபோக்கில் எந்த அநாவசியக் கிளுகிளுப்புமின்றி சொல்லியிருப்பார்கள். பிற்காலத்துக்கு மேல்வந்த, உண்மைக்குப் புறம்பான, போலிக் கற்பித வடிவங்கள் அவர்களுக்குத் தெரியாது.

'புறமுதுகிட்டிருந்தால் மகனுக்குப் பால் கொடுத்த மார்பையறுத்து எறிவேன்' என்று போர்க்களம் கிளம்பிய புறநானூற்றுத் தாயையும் 'குழந்தை குட்டிகளை வளர்த்து இல்லத்தரசியராயிருக்கும் பெண்களின் மார்பில் முடை நாற்றம்தான் வரும். எங்கே அது இல்லாமலிருக்குமோ அங்குபோய் அவர்களுடன் குடித்தனம் செய்யட்டும் தலைவன்' என்று விட்டேற்றியாகப் பேசும் தோழியையும் ஞாபகப் படுத்திக்கொள்ளலாம்.

சில சமயம் மார்பின் தேமலும் பசலையும் பேசப்பட்டது. ஆனால் பெண் மார்பைப் போகமாக வர்ணித்து பாடல் கிடையாது. கிட்டத்தட்ட அந்த போக வடிவத்தைப் பெண்ணின் தோளுக்கு நகர்த்திச் சென்றிருக்கிறார்கள். பெண்ணின் மெலிந்த தோள்கள் பேசப்பட்டிருக்கின்றன.

ஆனால் சமஸ்கிருதம் இதற்கு நேர் விரோதம். பெண்ணின் அவயங்களைப் பாலியம் சொட்ட வர்ணிப்பதை ஒரு தனித் திறமையாகவே வடமொழிக் கவிஞர்கள் வளர்த்து வந்தார்கள். ஒருவரை விட ஒருவர் சாமர்த்தியமாகப் பெண்ணின் பிரத்யேக பாகங்களை வர்ணித்தார்கள். அதற்கிசைவாக விக்கிரக ஆராதனை மெள்ள மெள்ள வேரூன்ற ஆரம்பித்தபோது பருத்த முலைகளும் சிறுத்த இடையும் பின் தட்டுகளும் தெய்வாம்சங்களாகவே சிலைகளில் இறங்கலாயின. தமிழின் மூத்த தன்மைக்கும் எண்ணத்தின் பரிபக்குவ தனத்துக்கும் எடுத்துக்காட்டாக பழைய ஆங்கில, மேற்கத்திய இணை மரபுகளைக் காணலாம்.

மேற்கத்திய கலாச்சாரத்தில் பெண்ணின் மார்பு எப்போதும் தாய்மையுடன் சம்பந்தப்பட்டு வழங்கலாயிற்று, திறந்த வாழ்க்கையை, மேலாடை இல்லாத நடைமுறையை சுலபமாக விகல்பமில்லாமல் அனுமதித்தது. இப்போது அது வணிக தந்திரங்களுடன் பெண்ணின் மார்பைப் பார்ப்பதும் காட்டுவதும் நிஜம். அதிலும் மிகக் கவனமாகக் காம்புகளைத் தவிர்ப்பது உடனடியான தாய்மை ஞாபகங்களைக் கட்டுப்படுத்திக் கிறக்கத்தைத் தக்கவைக்கத்தான்.

அமெரிக்கப் பின் நவீனத்துவக் கவிஞர் ஒருவர் ஒயின் கிளாசைக் கவிழ்ந்த பெண் மார்பாக வர்ணித்துக் கடைசியில் அதை நாடிச் சென்றவர்கள் 'தாயன்பு மறுக்கப்பட்டவர்கள்' என்று முடித்து விடுவார். இது அந்த மரபை முழுமையாக விளக்கி விடுகிறது.

அவர்கள் மரபில் பெண் விரும்பிக் கவிதைகள் பெரும்பாலும் 'கால்களை' நாடுகின்றன.

முதன் முதலாகத் தமிழில் பெண் மார்பை முக்கியப்படுத்தி



படிப்பகம்

www.padippakam.com

> ஒரு முலையில்லாத பெண்ணைக் கூடப் பயனில்லாத பொருள் போலப் பேசினார் வள்ளுவர்

பாலிய ஒளி கூட்டியது வள்ளுவராகத்தானிருக்க வேண்டும். பல அத்தியாவசிய விஷயங்களைத் தவிர்க்கவும் புறக்கணிக்கவும் 'முலைகளில்லாத பெண்ணை விரும்புவ'தை உதாரணமாக்கினார். ஒரு முலையில்லாத பெண்ணைக் கூடப் பயனில்லாத பொருள் போலப் பேசினார்.

அது பற்றின எல்லா கருத்துக்களையும் உடைப்பது போலவோ துறப்பது போலவோ இடது முலையைத் திருகி எறிந்து மதுரையை எரியூட்டினாள் கண்ணகி.

அர்த்த நாரீஸ்வரன் தத்துவத்தில் பெண்ணுக்கு 'இடம்' கொடுக்கப்பட்டது. அதை நிராகரித்தது போல இடது முலையை எறிந்து ஆணின் வள்ளல் படிமத்தை ஆக்ரோஷத்தோடு எதிர்த்துத் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கிறாள் கண்ணகி.

அந்த நிகழ்வை சர்வ சாதாரணமாக ஏதோ ஒவ்வொரு பெண்ணும் தீக்குச்சிக்குப் பதிலாக இதுபோன்று ஒரு அங்கத்தை உபயோகித்து நெருப்பு ஏற்படுத்தினாள் என்பது போல இளங்கோவடிகள் சொல்லி விட்டு நகர்ந்து போயிருப்பார்.

நகரத்தை எரிக்க அவளுக்கு வேறு அவயவம் ஏன் எறியப்படும்படி ஞாபகம் வரவில்லை?

சிலப்பதிகாரக் கதையை இன்னும் ஊன்றிப் பார்த்தோமானால் கண்ணகி கோவலனின் மனைவியாகவோ அவனது மகவின் தாயாகவோ ஆக சந்தர்ப்பம் நேரவில்லை. அது அவளை எந்த எந்த விதத்தில் பாதித்ததோ? இதயத்துக்கு இடமான இடது முலையில் எத்தனை ஆவேசங்களைத் தேக்கியிருந்தாளோ? அதைத் தொட்டுத் திருகி வீசியெறிந்து பழி தீர்த்துக் கொண்டிருக்கலாம்.

எறியப்பட்டது காதாகவோ மூக்காகவோ இல்லாமல் மார்பானது அதிலும் ஒற்றை மார்பானது மிகவும் ஆச்சர்யம் ஏற்படுத்துகிறது.

பாமா எழுதிய 'ஒத்தை' என்கிற கதை ஞாபகம் வருகிறது. ஒத்தை'யில் தாழ்த்தப்பட்ட குடிப் பெண் ஒருத்தியின் ஒற்றை மார்பை பன்றி கடித்து, தையல் போடப்பட்டு, அதன் வளர்ச்சி நின்றிருக்கும். அவளுக்குத் திருமணம் நடக்காது. ஊரில் அவளை 'ஒத்தை' என்று அழைப்பார்கள். இறுதியில் ஒரு ஆடவன் தனிமையில் அவளைச் சீண்டவும், 'ஒத்தை' என்று வேறு குறிப்பிடவும் அவள் ஆக்ரோஷமுற்று அரிவாளால் அவனுடைய ஒத்தைக் கண்ணைப் பாதித்து விடுவாள்.

'பிறகு 'ஒத்தை'யை யாரும் 'ஒத்தை' என்று அழைப்பதில்லை என்று முடித்திருப்பார் பாமா.

இதிலிருக்கிற உக்கிரம் சிலப்பதிகாரத்திலிருந்து வழிந்து வந்தது தான். பெண் உறுப்பை போகமாகப் பார்க்கிற ஆணாதிக்கத்தைத் தூக்கி எறிந்தது போலவும் அடையாளப்பட்டிருக்கிறது கண்ணகியின் திருகி எறியப்பட்ட சதைக் கூம்பு.

இன்னும் அதில் அகலிகையின் பொருமல்களும், 'ஐவர்' தடங்களும் அம்பையின் பெருமூச்சும் கூட இருந் திருக்கலாம்.

அல்லது கணவன் இறந்தபின் உபயோகத்துக்கு வாய்ப்பே இல்லாத அந்தப் பாலூட்டி அங்கம் எதற்கு? என்ற வெறுப்புடன் கண்ணகி தூக்கி எறிந்திருக்கலாம். அல்லது அதன்வழி தீ கசிந்து ஊரெரிந்தபோது திருப்தியும் மகிழ்வும் எய்தியிருக்கலாம் என்று தோன்றுவதற்கு அடிப்படையாக புதுமைப்பித்தன் ஒரு கதை எழுதியிருக்கிறார்.

'வழி' என்று விதவைப் பெண் அலமுவின் கதை. அவள் உடல் முனைப்புகளில் தவித்து உருகும் சமயம் தலையணையடியில் இருந்த சாவிக் கொத்தின் முள்முனை மார்பில் செருகிக் கொள்ளும். அந்தக் கூர் முனையால் நல்லதொரு சிரை அறுபட்டு குருதி பெருகும். ரத்தக் குழாய் வெட்டப்பட்டு குதித்தெழும் குருதியின் வெளியேற்றம் அவளுக்குப் பரவசத்தை ஏற்படுத்தும்.

(இந்த மாதிரியான வெளியேற்றத்தின் பரவசத்தை வலியோடு கூட்டிபின் வந்த மேற்கத்திய பெண்ணிய எழுத்து அடையாளப் படுத்தியிருப்பதின் கோடிகாட்டலாகப் புதுமைப்பித்தனைக் கொள்ளலாமோ என்னவோ?)

இறந்த கணவனை அடையும் வழியாக ரத்தப் பெருக்கைக் கண்டு பிடிப்பாள் அலமு. தகப்பன் அதை நிறுத்திவிடாமல் தடை போட்டு தலை சாய்ந்து விடுவாள். இந்தக் கதையில் அலமு சொல்வாள். வெள்ளைக்காரன் 'சதி'யை நிறுத்தி ஒரு நேரத்து எரிதலைத் தவிர்த்தான். விதவை எப்போதும் எரிவதை யார் தடுக்கிறார்கள்? என்பாள் மனசுக்குள்.

கண்ணகி தூக்கி எறிந்த அவயவம் பின்னும் ஆண் கலைகளிலும் காவியங்களிலும் செழித்து வாழ்ந்து வந்தது.

இப்போது தூக்கியெறிந்த பெண்ணே பொறுக்கி எடுத்துக் கொண்டிருக்கிறாள். தூக்கியெறிந்த போதிருந்த அதே வன்மத்துடன்.

ஆனால் பெண்ணின் நோக்கம் ஆணாதிக்கச் சிந்தனையின் கருவறுக்கலே இப்போதும் அடியெடுப்பதாக சொல்லுவோமா அல்லது அதற்கு எதிர்ப்புறத்தையே மீண்டும் நிறுவுமென்போமா பின்னும் இதெல்லாமே பொதுவாக சமன்பாட்டை நோக்கும் ஆரம்பம் என்றாகிலும் கண்டடைவோமா?

பாசாங்குள்ள சமுதாயம் என்ன செய்யுமோ?



படிப்பகம்

www.padippakam.com

# இரண்டு ஆண் மைய சினிமாக்கள்

■ அ. ராமசாமி

சொல்ல மறந்த கதை - நாவலாசிரியர் நாஞ்சில் நாடனின் முதல் நாவலான தலைகீழ் விகிதங்களின் திரைப்பட வடிவம். திரைப்பட வடிவமாக்கி நெறியாள்கை செய்ததுடன் ஒளி ஓவியம் செய்தவர் தங்கர் பச்சான். தங்கர் பச்சான், ஒளிப்பதிவுத் தொழில்நுட்பத்தை முறையாகக் கற்றுக் கொண்டு திரைப்படத் துறையில் நுழைந்து, தனது சிறுகதையான கல்வெட்டை, அழகி என்னும் படமாக இயக்கி/நெறியாள்கை செய்து அதன் மூலம் தனது திரைப்படங்கள் எவ்வாறு இருக்கும் என அடையாளம் காட்டியவர். தனது சினிமா வியாபார வெற்றி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு எடுக்கப்பட்டதாக இருக்காது, வாழ்க்கையினூடான பயணமாக இருக்கும் எனப் பேட்டிகளிலும் சொல்லிக் கொண்டவர். அவர் எடுத்த சொல்ல மறந்த கதையும் அதிலிருந்து விலகி விடவில்லை. இப்பொழுது அவர் நெறியாள்கை செய்த மூன்றாவது படமாக தென்றல் வந்து ஓடிக் கொண்டிருக்கிறது; கவனிக்கத்தக்க படமாக.

சொல்ல மறந்த கதையில் மையக் கதாபாத்திரத்தில் நடித்துத் தன்னை ஒரு நடிகராகவும் அறியப்படுத்திக் கொண்டவர் சேரன். சேரனுக்கு ஒரு நடிகராக சொல்ல மறந்த கதை முதல் படம். ஆனால் கவனிக்கத்தக்க இயக்குநராக அதற்கு முன்பே திரைப்படத் துறையில் இருந்தவர்தான். பாரதி கண்ணம்மா, பொற்காலம், வெற்றிக் கொடிகட்டு, தேசிய கீதம், பாண்டவர் பூமி போன்ற படங்களின்வழி தனது சினிமாக்கள் வழக்கமான மசாலா சினிமா அல்ல; வாழ்க்கையைப் பேசும் படங்களே தனது விருப்பம் எனக் காட்டிக் கொண்டவர் அவர். இவரது இயக்கத்திலும் இப்பொழுது ஒரு படம் ஆட்டோகிராப் வந்து ஓடிக்கொண்டிருக்கிறது; கவனிக்கத்தக்க படமாக.

திரள்மக்களை நோக்கிப் பேசும் வணிக இதழ்களும் தொலைக் காட்சி அலைவரிசைகளும் கவனிக்கத்தக்க படங்கள் எனச்சொல்வதில் வேறொரு பின்புலம் இருக்கிறது. வணிக வெற்றி; அதுதான் அந்தப் பின்புலம். எப்படி வணிகவெற்றி அடைகிறது என்பது அவர்களுக்கு முக்கியமல்ல. படம் பார்க்கிறவனுக்கு எதனைக்காட்சிப் பொருளாக்கிக் கவனிக்க வைக்கிறது என்பது பற்றி அவர்கள் விமரிசிப்பதே இல்லை. காட்டப்படும் சரக்குகள் பார்வையாளனைச் சிந்திக்க வைப்பவையா? சீரழிப்பவையா? போன்ற அக்கறை இல்லாமல் திரைப்பட உலகமும் அதில் பங்கேற்கும் படைப்பாளிகளும் பணியாளர்களும் வசதியாக வாழ்வார்கள் என்ற கோணத்தில் மட்டுமே கவனிக்கத்தக்க படங்களை அவை அடையாளப்படுத்துகின்றன.

திரைப்படத் துறையில் மட்டுமே இந்தப் போக்கு காணப்படுகின்றது என்று சொல்ல முடியாது. தன் உழைப்பில் கிடைத்த பணத்தில் டிக்கெட் வாங்கித் தியேட்டருக்கு வந்து தனது ஓய்வு நேரத்தில் மூன்று மணி நேரத்தை ஒதுக்கும் பார்வையாள உயிரியிடம் பொய்யான மனிதர்களை, தர்க்கமற்ற கற்பனைவெளியில் உலவ விட்டு அவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களுக்கும் முரண்பாடுகளுக்கும் கற்பனை சார்ந்த முடிவுகளை முன் வைத்து அனுப்பினால் போதும் எனச் சில இயக்குநர்கள் செயல்படுகின்றனர். அப்படிச் செயல்படுகின்றவர்களால் அத்ற்குக் கோட்பாட்டு விளக்கம்கூடத் தர முடியும். சொந்த வாழ்வின் துயரங்களை மறக்கவே பார்வையாளர்கள் திரையரங்கிற்கு வருவதாகவும் அங்கும் அவனது வாழ்வின் துயரங்களையொத்த காட்சிகளையே காட்டுவது நியாயமல்ல எனவும், அதற்குப் பதிலாகப் புனைவு உலகம் ஒன்றில் மூன்று மணி நேரமாவது மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்வதே கலையின் வேலையாக இருக்க வேண்டும் என வாதமும் செய்கின்றனர். இந்த வாதத்தில் அர்த்தமிருப்பது போலத் தோன்றவும் செய்யலாம். ஆனால் அந்த அர்த்தம் ஓய்வுப் பொழுதுக்கும் கலை இலக்கியங்கள் உண்டாக்கும் உணர்வுகளுக்கும் இடையில் உள்ள உறவை உணர்ந்து கொண்டபின் உண்டாகும் அர்த்தமல்ல. பொதுப்புத்தி சார்ந்த இந்த அர்த்தமும் அதன் ஆதரவாளர்களும் மிகச் சாமர்த்தியமாக அவர்களது தந்திரோபாயத்தை மூடி மறைக்க முயல்கின்றனர் என்பதையும் மறந்து விடக் கூடாது. நூறு சதவீதம் பொழுதுபோக்குப் படங்கள்தான் தமிழ் நாட்டில் நடிகர்களை வாழ்வின் வழிகாட்டிகளாகக் கருதும் ரசிக மந்தையை உருவாக்கி, அவனையே தலைவனாகவும், ஆட்சியதிகாரத்தில் அமர வேண்டிய சிந்தனையாளனாகவும் ஆக்கிப் பார்க்கும் ஆசையை வெறியாகவும் ஆக்கி வைத்திருக்கின்றன.

மனிதன் தனது ஓய்வுப்பொழுதில் பார்த்த சினிமா, நாடகம் போன்றவற்றை அல்லது படித்த கதையை ஓய்வுப் பொழுதுக்குரியதாக மட்டுமே கருதுவதில்லை



படிப்பகம்

www.padippakam.com

தனது தனிமனித வாழ்வில் அல்லது சமூக வாழ்வில் தோன்றும் சந்தோஷங்களும் சிக்கல்களும் முரண்பாடுகளும் அவன் வாசித்த கலைப் படைப்பு தந்த அனுபவத்தோடு ஒத்துப்போகின்ற பொழுதோ முரண்படுகின்ற பொழுதோ நினைவுபடுத்திக் கொள்ளவும் பயன் படுத்திக் கொள்ளவும்தான் செய்கிறான். ஓய்வுப் பொழுதுக்கான கலை என்று சொல்வதும் வாதிடுவதும் உண்மையில் பொய் மட்டுமல்ல; பயங்கரமான ஏமாற்றும்கூட.

தென்றலும் ஆட்டோகிராப்பும் கவனிக்கத்தக்க படங்கள் என்று சொல்லப்படுவதை இந்தக் கோணத்தில்புரிந்துகொள்ளவேண்டியது இல்லை. இந்தப் படங்களை இயக்கியுள்ள தங்கர்பச்சானும் சேரனும் பொழுதுபோக்குப் படங்கள் என்ற கருத்தாக்கத்திலேயே நம்பிக்கை வைக்காதவர்கள் என்பதை இந்தப் படங்கள் மட்டுமல்ல இவற்றிற்கு முந்திய படங்களே காட்டியிருக்கின்றன. அவர்களின் பத்திரிகைப் பேட்டிகளும் எழுத்துக்களும்கூடச் சாட்சிகளாக இருக்கின்றன. அப்படியானால் இவர்கள் எதனைச் சினிமாவாக ஆக்குகிறார்கள்; எதற்காகச் சினிமா எடுக்கிறார்கள்; பார்வையாளனுக்குப் படமாக விரிப்பது என்ன? என்ற தொடர் கேள்விகளை யாரும் கேட்கலாம்.

மனித வாழ்க்கையிலிருந்தே தங்களின் திரைப்படங்களை உருவாக்கிட வேண்டும் என்ற நம்பிக்கை இந்த இருவரிடமும் இருந்து வந்துள்ளது. திரைப்படக் கலை, அதன் மொழியான காட்சி ரூபம், காட்சிகளைக் கையகப்படுத்தும் கோணங்கள், அவற்றை அடுக்கி உருவாக்கும் கதைகூற்று முறை, அதற்கு உயிர்த்துடிப்பை உண்டாக்கும் பின்னணி இசை என்பதான தொழில் நுட்பங்கள் சார்ந்த தெளிவும் அறிவும் அனுபவமும் நிரம்பப் பெற்ற இவர்களுக்கு சமகாலத்தமிழ் வாழ்வின் சிக்கல்கள் குறித்த அக்கறைகளும்கூட இருக்கின்றன. என்றாலும் இவர்களிருவரும் தங்களது கலைக்கோட்பாடாக எதனைப் பின்பற்றுகின்றனர் எனத் தெளிவாகச் சொல்ல முடியவில்லை.

ஆண்-பெண் உறவை மையப் படுத்தும் காதல் அல்லது திருமணம் அல்லது குடும்ப வாழ்க்கை என்பது தான் இவர்களின் திரைப்படங்களிலும் மையப் பிரச்சினைகளாக இருக்கின்றன. அந்த வகையில் தமிழ்ச் சினிமாவின் மைய நீரோட்டத்திற்குள்தான் இவர்களும் உள்ளனர். என்றாலும் நம்பத்தகுந்த காட்சியமைப்புக்கள் மூலமும், இடம் பெறும் கதாபாத்திரங்களை சமகால வாழ்வில் சந்திக்கத்தக்கவர்களாகக் காட்டுவதன் மூலமும் அதிலிருந்து விலகிக் கொள்ளவும் செய்கின்றனர். முந்தைய படங்களின் காட்சியமைப்புக்களை மனதில் நினைத்துக் கொண்டு, இப்பொழுது வந்து ஓடிக்கொண்டிருக்கும் ஆட்டோகிராப், தென்றல் படங்களில் இடம் பெற்றுள்ள காட்சிகளைக் கவனத்தில் இருத்தினால் இரண்டிலுமே நம்பத்தகுந்த காட்சிகள் - தமிழ் வாழ்வில் ஊடும் பாவுமாகப் பேசப்படும் சொல்லாடலுடன் கூடியனவாகத் தோன்றுவதைப் பார்வையாளர்கள் உணர்ந்திருக்கக்கூடும். ஆனால் இந்த உணர்வு தமிழ் நாட்டின் அனைத்துத் தரப்பினருக்கும் உண்டாகத் தக்க உணர்வு அல்ல என்பதும் மறுத்துவிட முடியாத உண்மை.

மிகத் தெளிவான திரைக்கதையுடன், ரசிக்கத்தக்க காட்சிப் பின்னணிகளுடன், எழுப்ப விரும்பிய உணர்வு, சொல்ல வந்த செய்தி என எல்லாவற்றிலும் தீர்மானமான முடிவுடன் எடுக்கப்பட்டுள்ள படம் ஆட்டோகிராப். ஆட்டோகிராப்பின் கதையமைப்பில் இடம் பெற்றுள்ள காட்சிகள் ஒரு நடுத்தர வர்க்க இளைஞனின் கடந்தகாலக் காதல் நினைவுகள். பொதுவாகத் தமிழ்ச் சினிமாக்களில் காணப்படும் மிகைத் தன்மைகள் எதுவுமில்லாமல் நடப்பியல் அம்சம் அதிகமாகவுள்ள இப்படத்தின் நிகழ்வுகள் உண்மையான நிகழ்வுகள் போலத் தோன்றலாம். அத்தோற்றம் ஒரு மாயத்தோற்றம்தான். இந்நிகழ்வுகளுக்கும் குறிப்பான கால இடப் பின்னணிகள் உண்டு. திண்டுக்கல் மாவட்டம் நெய்க்காரபட்டி, கேரளத்தின் ஆலப்புழை, கோயம் புத்தூர், சென்னை என்று கதை நிகழ்வுகள் பின்னப்பட்டுள்ள இடப் பின்னணிகளை விடவும் கிராமம் - நகரம் என்ற எதிரெதிரான வெளியின் பின்னணியும் எழுபதுகளுக்குப் பிந்திய காலப் பின்னணியும் இப்படத்திற்கான நடப்பியல் தன்மையைக் கட்டமைப்பதில் முக்கிய இடம்பிடித்துள்ளன.

சாதி அடையாளம் சொல்லப் படவில்லை என்றாலும், தமிழ் நாட்டு இடைநிலைச்சாதியைச் சேர்ந்த இளைஞனின் காதல்சார்ந்த கடந்த காலம் என்பது கூடுதல் அடையாளத்துடன் பதிவு செய்யப் பட்டுள்ளது. எந்தவித அடையாளங்களும் அற்றதாய் இல்லாமல் குறிப்பான அடையாளங்களோடு எடுக்கப்படுகின்ற படங்களே தமிழ்படங்களாகும் தன்மையன. தமிழ் அடையாளம் என்பது கால இடப் பின்னணிகளால் மட்டுமல்ல, சாதி அடையாளத்தினாலும்தான் உருவாகக்கூடியது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்கலாம். ஆனால் நடப்பியல் என்னவோ அந்த அடையாளங்களோடுதான் இருக்கின்றன. இப்படத்தின் நாயகக் கதாபாத்திரத்தின் அனுபவங்கள் நிச்சயம் ஒரு பிராமண இளைஞனின் அனுபவங்களாவோ தலித் இளைஞனின் அனுபவங்களாகவோ இருந்திட வாய்ப்பில்லை.

பிராமணர்கள் அதிகமும் தங்களின் கடந்த காலத்தின்மேல் மோகம் கொண்டு கடந்துபோய் விட்டதே என வருந்துவதில்லை. ஏனெனில் பிராமணர்களின் கடந்த காலம் சரியாகக் காட்டப்பட்டால் அவர்களைக் குற்றவுணர்வுக்குள்தான் கொண்டுபோய்ச்சேர்க்கும். தலித்துகளுக்கோ அழித்துவிட வேண்டிய தாகவும் பழிவாங்கத் தூண்டுவதாகவும் மட்டுமே கடந்த கால நினைவுகள் இருக்க முடியும். நினைந்து நினைந்து கசிந்துருக வேண்டிய கடந்தகால நினைவலைகள் இருந்திட வாய்ப்பில்லை. ஆனால் இடைநிலைச் சாதி இளைஞனுக்கு அவனளவில் கடந்தகாலம் நினைத்துப் பார்த்துக் கொள்ளத்தக்கதுதான் அந்தக் காட்சிகளைக் கொஞ்சமும் பிசகாமல் அடுக்கிக் காட்டுகின்ற போது வாழ்க்கையைப் பற்றிய படமாகவும் கவனிக்கத்தக்க படமாகவும் கருதப்பட வாய்ப்புண்டு. ஒரு மனிதனின் குறிப்பிட்ட கால



படிப்பகம்

www.padippakam.com

கட்டத்தைக் கொஞ்சமும் பிசகாமல், அவனது மனப்போராட்டங்களோடு பதிவு செய்தாலே நல்ல திரைப்படம் உருவாகிட வாய்ப்புண்டு என்பதற்கு ஆட்டோகிராப் ஓர் உதாரணமாகச் சொல்லப்படலாம். காதல், காதல் இல்லையென்றால் சாதல் என்பதை ஒரு தொன்மமாகவே மாற்றிவரும் தமிழ்த் திரையுலகிலிருந்து காதல் முக்கியம்தான்; ஆனால் காதல்தான் வாழ்க்கை என்று கருதவேண்டியதில்லை. காதலையும் தாண்டி வாழ்க்கையிருக்கிறது. அவற்றிலும் பெண்கள் பங்கேற்க முடியும் எனக் காட்டியுள்ளார் சேரன். ஒரு இளைஞனின் வாழ்க்கையில் நட்பு சார்ந்தும் யுவதியொருத்திக்கு (சிநேகா நடித்துள்ள கதாபாத்திரம்) இடமுண்டு எனச் சொல்லியுள்ள செய்தியும் விதமும் தமிழ்ச் சினிமாவுக்கு புதியது.

தங்கர்பச்சானின் தென்றல் சமூக அக்கறைகள் நிரம்பியதாகக் காட்டிக் கொண்டாலும் அதுவும் ஒரு காதல் படம்தான். அந்தக் காதல் ஒரு விவரமில்லாத பெண்ணின் ஒரு தலைக் காதல். ஓர் எழுத்தாளனின் (எழுத்தாளனின் எழுத்துக்களை மட்டும் பார், அவனது சொந்த வாழ்க்கையில் இருக்கும் ரகசியப் பக்கங்களைப் படிக்க முயற்சிக்கக் கூடாது எனச் சொல்லாமல் சொல்லும் எழுத் தாளனின்) எழுத்துக்களை வாசிக்கவும் நேசிக்கவும்தொடங்கிய ஒரு சிறுமி கொஞ்சங் கொஞ்சமாக அந்த எழுத்தாளனை ஒருதலையாகக் காதலிக்கத் தொடங்குகிறாள். திடீரென்று ஏற்பட்ட தீ விபத்தில் அவளுக்கு ஆதரவாக இருந்த அம்மாவும் இறந்துபோக அனாதையாகிறாள். அப்பொழுது அவளை ஆதரித்த வசதியான குடும்பம் சாதி, அந்தஸ்து போன்றவற்றையெல்லாம் பார்க்காமல் மருமகளாக ஆக்கிக் கொள்ளவும் தயாராகிறது. ஆனால் அவளோ தனது பிஞ்சுப் பருவத்திலேயே மனதுக்குள் புகுந்து விட்ட எழுத்தாளனோடுதான் தனது வாழ்க்கை என முடிவு செய்து கிளம்பி விடுகிறாள்.

வாழ்க்கைச் சக்கரம் சுழற்றிப் போட்ட சுழற்சியில் அந்த எழுத்தாளனோடு ஒருமுறை கட்டிலைப் பகிர்ந்து கொள்ள நேர்கிறது. அதனால் கருவுற்று பிள்ளையைப் பெற்றுக்கொண்டு அவனது நினைவிலேயே வளர்த்து வருகிறாள். தந்தை பெயர் தெரியாத அந்தச் சிறுவன் தற்செயலாக(!) அந்த எழுத்தாளனால் எடுத்து வளர்க்கப்படுகிறான். அவனது அன்பு அல்லது தொந்தரவு காரணமாக எழுத்தாளனிடம் இருந்த குடிப்பழக்கம் கூத்தியாள் பழக்கம் எல்லாம் ஆட்டம் காணத் தொடங்குகின்றன. காணாமல் போன மகனைத்தேடி வந்த அந்தப் பெண் திரும்பவும் எழுத்தாளனைச் சந்திக்கிறாள்; ஆனால் நடந்த எதையும் - ஒரு நாள் படுக்கையைப் பகிர்ந்து கொண்டு ஆண் குழந்தையைப் பெற்று வளர்த்தது, அந்தக் குழந்தை காணாமல்போனது; என எதையும் சொல்லாமலேயே திரும்பி விடுகிறாள். திரும்பியவள் தன் மகனைத் தேடியலைந்து காணாத சோகத்தில் விபத்துக்குள்ளாகி சாக்கடைக்குள் கிடக்கிறாள். தற்செயலாக(!) அந்த வழியே வந்த எழுத்தாளனும் அவனால் எடுத்து வளர்க்கப்படும் அவளது மகனும் அவளைக் கொண்டு மருத்துவமனையில் சேர்க்கின்றனர். தன்னிடம் வளர்பவன் தனது மகன்தான் என எழுத்தாளன் உணர்கிறான். தன்னை ஒருதலையாகக் காதலித்த அந்த அப்பாவிப் பெண்ணின் நினைவாகத் தாடிவளர்த்துச் சோகமாக அலையும் அந்த எழுத்தாளன் அவளது நினைவாக ஒவ்வொரு ஆண்டும் கல்லறையில் போய் ஒரு நாள் முழுக்க அழுது கொண்டிருக்கிறான்.

"அடிதடி சண்டை, ஆறு பாடல்கள். முக்கியக் கதைக்கு இணையாகக் காமெடி டிராக், படத்தின் இறுதியில் தர்மம் வென்றது; அதர்மம் தோற்றது அல்லது உண்மையான காதலுக்குத் தோல்வியென்பதே இல்லை" என்பதான முடிவு என்றுதான் வழக்கமான தமிழ்ச் சினிமா அமையும். தங்கர்பச்சானின் தென்றலில் இந்த அமைப்பு இல்லை. அதற்கு மாறாக ஒரு அப்பாவிப் பெண்ணின் காதலையும் சோகத்தையும் சொல்லுகிறது. ஒரு பெண்ணின் அப்பாவித்தனமும் தியாகமும் எப்பொழுதும் பார்வையாளக் கூட்டத்தைக் கண்கலங்க வைக்கக்கூடியனதான். அதிலும் ஒரு எழுத்தாளனுக்காக அவள் சொந்த வாழ்க்கையைத் தியாகம் செய்கிறாள் எனக் காட்டுகின்றபோது நடுத்தவர்க்க ஆண்களின் மனம் அந்தப் பாத்திரத்தின் மீதும் படத்தின் மீதும் கவனம் செலுத்தும் என்பது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான். தமிழின் பெரும் பத்திரிகைகளின் விமர்சனங்கள் இந்த அடிப்படையில்தான் இருந்தன.

தங்கர்பச்சான் தனது படத்தின் வெற்றிக்கு - கவனிக்கப்படுவதற்கு இது மட்டும்போதாது என்று நினைத்ததால் கூடுதலாகச் சில சரக்குகளையும் சேர்த்துள்ளார். எழுத்தாளர் நலங்கிள்ளியைத் தமிழ்த் தேசியவுணர்வும் தலித் விடுதலையை ஆதரிக்கும்குரலும்கொண்ட எழுத்தாளன் எனக் காட்டுவதும் பறையைக் கற்றுக் கொள்ள அவன் முயல்வதாகவும் சிறைக்குள் ஒரு தலித்தின் சோக வாழ்க்கையைக் குறும்படம் போல் தருவதும் மையக் கதையொடு ஒட்டாமல் புதுவகை வியாபாரத்திற்காகச் சேர்க்கப்பட்ட புதுவகைச் சரக்குகளாகவே நிற்கின்றன. வட மொழிக்கெதிராகத் தமிழ் வழிபாடு, கர்நாடக சங்கீதத்திற்கெதிராக பறையாட்டம், பக்தியின் பெயரால் நடைபெறும் வியாபாரத்திற்கெதிரான மேடைப்பேச்சு எனத் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் எழுத்தாளனின் (தமிழில் இப்படியொரு எழுத்தாளன் இருக்கிறான் என்றோ இருந்தான் என்றோ சொல்ல முடியாது என்றுதான் நினைக்கிறேன். ஏனென்றால் தமிழ்த் தேசியம் பேசுபவர்கள் பொதுவாகக் கதைகள் எழுதுவதில்லை; குடித்தாலும் கூத்தியாள் வைத்துக் கொண்டாலும் வெளியில் தெரியாமல் செய்ய வேண்டும் என்பதே அவர்களின் வாழ்க்கைக் கோட்பாடாகும் சொந்த வாழ்க்கை வேறு, எழுத்தின் வெளிப்பாடு வேறு எனப் பிரித்துப் பேசுவது அவர்களுக்கு உடன்பாடானது அல்ல என்பதுதான் நிலவும் உண்மை. தென்றலில் வரும் நலங்கிள்ளி யாராக இருக்கக் கூடும் என யோசித்துப் பார்த்ததில் பலன் எதுவும் கிடைக்கவில்லை; எந்தத் தமிழ் எழுத்தாளனின் பிம்பமும் நலங்கிள்ளியோடு பொருந்த வில்லை.) கதைகள் அல்லது எழுத்துக்கள்



படிப்பகம்

www.padippakam.com

ஒரு பெண்ணின் சொந்த வாழ்க்கையைத் திட்டமிட உதவவில்லையென்றால் அந்த எழுத்தில் கோளாறு இருக்கவேண்டும்; அல்லது அந்த வாசகியிடம் கோளாறு இருக்க வேண்டும்.

தொடர்ந்து வாசித்த அவளைத் தேர்ந்த வாசகியாகக் காட்டாததில்தான், தங்கர்பச்சான் என்கிற ஆணின் பார்வை இருக்கிறது. பெண் கண்ணை மூடிக்கொண்டு காதலிப்பவள்; தனது காதலை வெளிப்படுத்த வேண்டிய நேரத்திலும் ஆணின் பெருமைக்கும் புகழுக்கும் பங்கம் வரும் என்றால் தன்னையே தியாகம் செய்வாளேயொழிய ஆண்களின் சமூக மதிப்புக்குக் குந்தகம் ஏற்படுத்தி விட மாட்டாள் எனக்காட்டுவது அப்பட்டமான ஆண் மையச் சிந்தனையேயன்றி வேறில்லை.

இந்தப் படத்தை நோக்கி இன்னொரு கோணத்திலும் கேள்வியை எழுப்பலாம். தென்றல் படத்தின் மூலம் தங்கர் பச்சான் விசாரிக்க விரும்பிய வாழ்க்கை யாருடையது. தமிழ்ச் சமூகத்தை மேம்படுத்துவதாகப் பேசிக்கொண்டு ஓர் அப்பாவிப் பெண்ணின் துயர வாழ்க்கைக்குக் காரணமாக இருந்து விட்டாயே? இது சரியா? என்ற கேள்வியை எழுத்தாளர் நலங்கிள்ளியை நோக்கி எழுப்பியிருக்கலாம். அதைச் செய்யும் விருப்பம் தங்கர் பச்சானுக்கு இருந்ததற்கான சுவடே இல்லை. இவ்வளவு கதைகளை வாசித்த நீ உனது சொந்த வாழ்க்கையைத் திட்டமிட முடியாமல் ஏமாறலாமா? என்று அவளை நோக்கியாவது விசாரணையைத் தொடங்கியிருக்க வேண்டும். அதுவும் இயக்குநரின் நோக்கமாகத் தெரியவில்லை. ஆங்காங்கே தெறிக்கும் வசனங்கள் வழியே ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையே விசாரணைக்குட்படுத்த விரும்பியுள்ளாரா..? ஏதாவது பத்திரிகைப் பேட்டியில் தங்கர் பச்சான் சொல்லும்போது கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

குழப்பமும் பதட்டமும் நிரம்பிய காட்சி அமைப்புக்களோடு தங்கர் பச்சான் ஒரு ஆண் மையக் கதையைச் சினிமாவாக்கியிருக்கிறார் என்றால் தெளிவான குழப்பமில்லாத திரைக்கதையமைப்பில் சேரனும் ஆண் மையத் திரைப்படத்தைத்தான் தந்துள்ளார். நினைவுகளும் காட்சிகளும் செந்தில் என்கிற இளைஞனின் நினைவுகளாகவும் காட்சிகளாகவும் அமைத்துக் கதையை நகர்த்துவது என்று முடிவு செய்த சேரன், ஓர் ஆணின் அதிகாரம் கொப்பளிக்கும் முடிவையே படத்தின் முடிவாக அமைத்துள்ளார். அவனைக் காதலித்த பெண்கள் இருவரும் நட்பாகப் பழகிய இன்னொருத்தியும் இவன் நமக்குக் கிடைக்காமல் போய்விட்டானே! இவனைக் கணவனாக அடையாமல் போய்விட்டோமே என்று கலங்கிச் செல்லும் விதமாக அமைக்கப்பட்டுள்ள காட்சிகள் ஆண்மை கொப்பளிக்கும் உள்நோக்கம் கொண்டவைகள் என்பதைத் தனியாக விளக்க வேண்டியதில்லை.

இப்படி பெண்மைய நோக்கிலோ தலித்பார்வையிலோ அணுகினால் சேரனின் ஆட்டோகிராப்பும் தங்கர் பச்சானின் தென்றலும் கவனிக்கத்தக்க படங்களே அல்ல தான். ஆனால் மழுங்கடிக்கும் சரக்குகளுக்கு நடுவே நேர்த்தியான முறையில் சிறிய அளவேயான மனிதர்களின் வாழ்க்கையைப் பதிவு செய்வதும் ஒட்டுமொத்தச் சமூகத்தின் கவனத்தை ஈர்க்கக் கூடிய வசனங்களையோ பாடல் காட்சிகளையோ இடம் பெறச் செய்வதும் கூட கவனிக்கத்தக்க சினிமாவின் அம்சங்களாக ஆகிவிடுகின்றன. அந்த வகையில் தென்றல், நம் மீது உரசி விட்டுப் போகும் தென்றல் அல்ல. கண்களில் புழுதியை வாரியிறைத்துக் கொஞ்ச நேரம் திக்குமுக்காடச் செய்யும் சூறைக் காற்று. ஆட்டோகிராப், திரும்பவும் திரும்பவும் கால்களை நனைத்து விட்டுச் செல்லும் குளத்து அலைகள்.

●

# மழைக் காமம்

● பாரதி நிவேதன்

**ஊ**ருக்குப் போனவளோடு
புகைக்காற்று கனிந்து
அவளற்று அவளற்று
இன்று பார்த்து
வாரா மழை தீரக்கொட்டி

கனவுடைத்து
வெளியேறும்
குளம்பொலி

உச்சியிலிருந்து நழுவி
இலை தவழும்
நட்சத்திரம் பொறுக்கலாமங்கு நீ

மழைச்சுமந்து
விடிவதற்குச் சற்றுமுந்தி
புரவி பறத்தி
நட்சத்திரம் மடி கணக்கும் உன்னை
வந்திழுத்திம்சிக்க

சதைக்கூடு
எனைப்பூட்டிவிட்டு
மழைவடிதலை
வன்மமாய் புணர்கிறாய் நீ



படிப்பகம்

www.padippakam.com

# தப்பும் தங்கரும்

■ கோபு

செருப்பால் அடித்துவிட்டு வெல்லம் தருவதில் கில்லாடியான தங்கர் பச்சானின் சமீபத்திய படம் 'தென்றல்.' படம் முழுவதிலும் பெண்களை எப்படி உருவகித்தாலும் கிளைமேக்ஸில் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டுவிட்டால் போகிறது என நம் டைரக்டர்கள் ரொம்பவும்தான் அசட்டையாக இருக்கிறார்கள். தீவிர இலக்கியம் படிக்கிற பெண், அதுவும் சென்னை, அறந்தாங்கி, திருச்சி என தமிழ் தேசமெங்கும் ஒருபாட்டம் சுற்றிவிட்டு இவ்வளவு அப்பாவியாக இருப்பாளா என்று ஆச்சர்யமாகவும், கடும் எரிச்சலாகவும் இருக்கிறது. தங்கரின் கைவண்ணத்தில் 'ஆண்டாள்-கண்ணன்' என்கிற புராணிகம் நவீனமயமாகி இருக்கிறது. ஐம்பது வருடங்களுக்கு முன்பு வந்திருக்க வேண்டிய இப்படம் இவ்வளவு தாமதமாக இப்போதுதான் திரைக்கு வருவதில் தங்கர் பச்சானின் அதீத தைரியம் தெரிகிறது.

இவர் படத்தில் வருகிற பறையன் எல்லோரையும் 'ஐயா' போட்டே அழைக்கிறான். குடிகாரனுக்கு சாராயம் வேண்டி கைகால் நடுங்குவதுபோல தங்கரின் பறையனுக்கு பறையைக் கண்டால் கைகால் நடுங்குகிறது. அதை அடித்தாகவேண்டுமென்று துடிக்கிறான். அவன் வாழ்வும், சாவும் தப்பாட்டத்தில்தான். அம்மாவின் இருண்ட கர்ப்பப்பையிலிருந்து வெளியேறி, பின் மீண்டும் சாவென்னும் இருளுக்குள் மூழ்கும்வரை தப்புக் கொட்டிக் கொண்டே இருப்பதுதான் அவனுக்கு மகிழ்வுக்குரிய இலட்சியமாக இருக்கிறது. பாட்டனும், அப்பனும் செய்த குலத் தொழிலைச் செய்ய முடியாமல் அவனை ஜெயிலுக்குள் போட்டு விட்டதுதான் மகாப் பெரிய சோகம். அதாவது பறையர்களுக்கு நேர்ந்த கொடுமை.

வேட்டைச் சமூகத்தில் வன விலங்குகளை பயமுறுத்தி சிதறச் செய்ய பறை பயன்பட்டதாகக் கூறப்படுகிறது. இப்புதிய ஆயிரமாண்டில் நாம் வன விலங்குகளை வேட்டையாடி நம் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில்லை. தப்படித்தல் என்பது தேவையின் நிமித்தமின்றி சாவுடன் ஒருங்கிணைந்த ஒரு சடங்காகவே நிலை பெற்றுள்ளது. தப்படித்தல் என்பது சாதிவழி கட்டாயமாக்கப்பட்ட ஒரு தொழில். நாதியற்ற தலித் தொழிலாளர்களாக அழலும் பறையர்களும், அருந்ததியர்களும் வாய்ப்புக் கிடைக்கும்போது கூடுதல் வருமானத்திற்கான உப தொழிலாகவும், பல இடங்களில் கட்டாயத்தின் பேரிலும் இதைச் செய்து வருகின்றனர். தப்படிப்பது உன்னதமான ஒரு கலை என்று கருதி இவர்கள் அதைச் செய்வதாகக் கொள்ள முடியாது. வருமானத்திற்கும் கலைக்கும் உள்ள உறவு என்பது வேறு விஷயம். ஆனால் அதே போன்ற வேட்டைச் சமூகத்தில் வாழ்ந்திருக்கக்கூடிய தங்கரின் சாதிக்காரர்கள் யாரும் இப்போது தப்புக் கொட்டிக் கொண்டிருக்கவில்லை. அல்லது அது உன்னதமான ஒரு கலை என்கிற அடிப்படையிலும் அதை கற்றுக்கொள்ள அவர்கள் ஆர்வம் காட்டுவதில்லை.

சாதிப்பிரச்சினைகள் (தலித்) என்றாலே 'உவ்வே' காட்டி வந்த இடதுசாரி இயக்கங்களில் மகஇகவும் ஒன்று. அர்ப்பணிப்பான உறுப்பினர்களைக் கவர வேண்டி இவர்கள் முன்வைத்த செயல்திட்டம் பறையை அடையாளமாக்கியது. பறை முழக்கமென்ற வார்த்தை பெருமளவில் பிரபலப்பட்டது ஒரு 'நல்ல' பார்ப்பனரைத் தலைவராகக் கொண்ட இவ்வியக்கத்தினரால்தான். பரபரப்பு அரசியலை மட்டும் வாழ்க்கையாகக் கொண்ட இவர்கள்தான் கர்நாடக சங்கீதப் பார்ப்பனர்கள் கூடும் இடங்களில் தங்களுக்குச் சம்பந்தமற்ற பறையை முழக்கிக் கொண்டிருப்பவர்கள். சில இயக்கக் கூட்டங்களில் உணவு இடைவேளைகளில் 'மாட்டுக்கறி' உணவு பரிமாறப்படும். இது ஒரு புரட்சிகரச் செயலாகவும் கருதிக் கொள்ளப்படும். இவர்கள் புரட்சிக்காக மட்டுமின்றி பறை முழக்குவதைத் தொழிலாகவும், மாட்டுக் கறியை குடும்பத்துடன் ஏற்றுக் கொள்ளும் வீட்டு உணவாகவும் மாற்ற வேண்டும் என்பதுதான் நம் கோரிக்கை.

பறையுடன் சம்பந்தப்பட்ட மக்கள் தாங்களாக விரும்பி அதை அடையாளமாக ஏற்பது வேறு. வேண்டாமென்று விட்டு வெளியேற விரும்பும் சமாச்சாரங்களை அடையாளமாக மற்றவர்கள் ஏன் திணிக்க வேண்டும். காந்தி தாழ்த்தப்பட்டவர்களுக்கு அவராகவே 'ஹரிஜன்' எனப் பெயரிட்டார். அம்பேத்கர் உள்ளிட்ட தலைவர்களின் கடும் எதிர்ப்பிற்குப் பின்பும் வெறுப்பிற்குரிய அவ்வடையாளம் இன்னும் தொடர்ந்து வருகிறது எச்சில் இலை நாயாய் நம் சுவடுகளை முகர்ந்தபடி.

கொஞ்சநாள் முன்பு 'எழுத்தர்' இ.பா. அவர்கள் இலக்கியத் தரத்தின் நலிவுக்குக் காரணம் சமஸ்கிருதம் புறக்கணிக்கப்பட்டதும், அம்மொழி இலக்கியங்கள் கற்கப் படாததும்தான் என்கிற விதமாய் தினமணியில் திருவாய் மலர்ந்தார். மரபிலிருந்து துண்டித்துக் கொண்ட எழுத்தர்கள் மற்றும் தமிழ் x சமஸ்கிருத அரசியல் பற்றியும் மிகவும்



படிப்பகம்

www.padippakam.com

கவலைப்பட்டிருந்தார். இதற்கெல்லாம் பிரிட்டிஷாரின் சதிதான் காரணம் எனக் குற்றஞ் சாட்டுவது 'சமூக ஆய்வில்' ஈடு படும் பார்ப்பனர்களின் வழக்க மான பணியாகும். (சாதியொடுக்கு முறை மொத்தத்திற்கும் பிரிட்டி ஷார்தான் காரணம் என்று செங் கல்பட்டு தரவுகளிலிருந்து விளக்க மளிக்கப்படுவதை கவனிக்க வேண் டும்) இ.பா.விற்கு மட்டுமல்ல பல பழுத்த அறிவாளிகளுக்கும் இப்ப டிப்பட்ட கருத்துகளும், கவலை களும் உண்டு.

தமிழ், சமஸ்கிருதம் முதலி யவை வெறும் மொழிகள் என் பதைத் தாண்டி சாதியரசியலின் குறியீடாக என்றோ மாறிப் போய் விட்டவைதான். சமஸ்கிருதம் 'செத்தமொழி' என்றும் பலபேர் கூறுகின்றனர். ஆனால் அது ஏன் செத்தது, கொலையா, தற்கொலையா? போன்ற விவகாரங்களை யாரும் கிண்டுவதில்லை. இந்து சமூக அமைப்பின் அதிகார மொழி சமஸ் கிருதம். அத்தகைய அதிகார மொழியை வெகுமக்கள் கற்றுக் கொள்ள தடைவிதிக்கப்பட்டதும், அதன் காரணமாக பூடகத் தன்மை வாய்ந்த கடவுள் மொழியாகவும் மாற்றப்பட்டது. ஆங்கிலம் அதி கார மொழியானபோது சமஸ் கிருதத்தை பெருவாரியான பார்ப் பனர்களும் கைகழுவி விட்டு ஆங் கிலத்திற்கு மாறினர். ஹிட்லருக் குப் பணிவிடை புரியும் ஆசையில் ஜெர்மனி மொழிக்கும் தாவ முயல் கின்றனர். நல்ல வேளையாக ஹிட் லர் வீழ்ந்தார். ஹிட்லர், பார்ப் பனர் என இரு ஆரியர்களும் ஒன் றிணைந்திருக்கக்கூடிய கேடுகாலம் தவிர்க்கப்பட்டது. வெகுமக்கள் கற்கத் தடை விதிக்கப்பட்ட சமஸ் கிருதம் பார்ப்பனர்களின் புறக் கணிப்பால்தான் செத்தது. அதன் அதிகாரம் இன்னும் வாழ்கிறது. அதைக் கொன்றவர்கள் இ.பாவின் சாதியினர்தான். ஆனால் அவரோ வழக்கப்படி 'திருடனப்புடி, திரு டனப்புடி என்று கத்திக் கொண்டு திருடனே ஓடுவது போல' பாதிக் கப்பட்டவர்களின் மீதே பழியைப் போடுகிறார்.

திராவிடம் என்ற கொள்கை யின் பிதாமகரான அயோத்திதாசர் தான் சென்ற நூற்றாண்டில் மாய, மந்திர பூடகத் தன்மைகளைக் கொண்டிருந்த சமஸ்கிருத அரசி யலை (சமயங்களில் தமிழையும்) உடைத்து தமிழ் பௌத்த எதிர் அரசியலை உற்பத்தி செய்தவர். பின்னாளில் வேறு வகைகளில் அது சூத்திரர்களால் பயன்படுத் திக் கொள்ளப்பட்டது.

தங்கரும் தம் பங்குக்கு குரல் கொடுத்திருக்கிறார். கோவில்களில் தமிழ் வழிபாட்டு மொழியாக வேண்டி கரூரில் மூன்று இளைஞர் கள் உயிர்விட்ட சம்பவம் நினை வுறுத்தப்படுகிறது. சமஸ்கிருதத் திற்கு மாற்றாக தமிழுக்குக் குரல் கொடுப்பவர்களில் பார்ப்பனர் களுக்கும் பெரிய மனது பண்ணி பிரதிநிதித்துவம் வழங்கியிருக் கிறார். ஒரு பார்ப்பனர் தமிழுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்து அடி உதையெல்லாம் வாங்குகிறார். தமி ழுக்குச் சேவை புரிந்ததாகக் கருதப் படும் பார்ப்பன அறிஞர்கள் யாரும் சமஸ்கிருதத்திற்கு மாற்றாக தமிழை கருவறை மொழியாக ஒப்புக் கொண்டதாகவோ, அதற்காக உதை வாங்கியதாகவோ தெரிய வில்லை. பொருந்தாக இச்சித்த ரிப்பு மூலம் 'நான் தமிழ் மொழி ஆதரவாளனே தவிர பார்ப்பன எதிரியல்ல' என தங்கர் ஜகா வாங்குவது தெரிகிறது. ஒருவேளை அது தமிழ் x சமஸ்கிருதச் சண் டையை சாதியரசியலுக்கு அப்பாற் பட்டதாக பார்க்க விரும்பும் அவ ரது ஆசையாகவோ, ஆபாசக் காட்சிகளுக்கு கிஞ்சித்தும் அஞ் சாத தணிக்கைத் துறையினரை தாஜா செய்வதற்காகவோ இருக்க லாம். 'எல்லா பார்ப்பனர்களும் மோசமானவர்களில்லை' என்று வலியுறுத்த எடுக்கப்படும் அதிகப் படியான முயற்சியில் பிற்படுத்தப் பட்டவர்களின் பார்ப்பன எதிர்ப்பு ஒருவித அச்சவுணர்வு தொனிக் கவே வெளிப்படுகிறது.

இவருடன் ஒப்பிடும்படியாக, இயக்குனர் சங்கர் வேறு விதமான வேலையைச் செய்தார். இவரும், அறிவுஜீவி சுஜாதாவும் சேர்ந்து உருவாக்கிய பாய்ஸ் படத்தின் ஆபாசத்தைப் பொறுக்க மாட் டாமல் படம் பார்க்க வந்த திரைத் துறையைச் சார்ந்தவர்களே பின் னங்கால் பிடறியில் பட ஓடிய சம்பவங்கள் நடந்தன. பத்திரிக்கை களோ எப்பேர்பட்ட இயக்குனர் சங்கர், அவரே இப்படிச் செய்ய லாமா என்றெல்லாம் அழுது புலம்பின. ஆனால் சங்கருக்கும் ஆபாசத்திற்குமுள்ள உறவு காலத் தால் முந்தியது. திரையுலகின் சங்க ராச்சாரியாக சங்கர் விஸ்வரூபம் எடுத்ததே 'ஜென்டில்மேன்' திரைப் படத்திற்கப்புறம்தான். இதில் இடம் பெற்ற ஆபாசக் காட்சிகள் அதுவரையிலான தமிழ் ஆபாச சாதனைகளை முறியடித் திருக்கக் கூடும். எனினும் வெளிப்படையான பார்ப்பனிய ஆதரவு கருத்துக் களைக் கொண்டிருந்ததால் ஆபா சம் குறித்துக் கவலைப்படாமல் இப்படம் வரவேற்கப்பட்டது. அதில் தகுதி திறமை வாய்ந்த அப் பாவி பார்ப்பனன் மெடிக்கல் சீட் கிடைக்காமல் உடல் வெடித்துச் சாக, 'தலித்தாக' நடித்த 'சுதந்திரப் போராட்ட தியாகி' அர்ஜுன் அவர்கள் பூணூல் மாட்டிக்கொண்டு பல்வேறு வன்முறையான காரியங் களைச் செய்து பார்ப்பனர்களுக் கும், ஏழைகளுக்கும் உதவுகிறார். ஒரு பார்ப்பனனே கோபப்பட்டு வன்முறையில் ஈடுபடுவதாகக் காட்டினால் என்னதான் நேர்ந்து விடும். தங்கரின் பார்ப்பனனும், சங்கரின் தலித்தும் ஒருவகைப் பட்டவர்கள்தான்.

பெரும்பாலான தமிழ் திரைப் படங்களில் வாந்திக் காட்சிகளும், தாலி சென்டிமெண்டும் தவிர்க்க முடியாத பகுதிகளாகி இருக்கின் றன. அதீத செயலூக்கமற்ற பாத்தி ரங்களைப் படைப்பது, நம்பமுடி யாத தொடர்பு இடைவெளியே படம் நகர்ந்து செல்லுவதற்கான காரணியான இருப்பது முதலி யவை குறித்து படம் எடுப்பவர் களும் சரி, அதைப் பார்ப்பவர் களும் சரி பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. படக் கதாநாய கன் நலங்கிள்ளி மாதிரி சக்தியா வேசம் கொண்டு மற்றவர்களைத் திட்டிக்கொண்டிருந்த தங்கர் பச் சான் குறிப்பிடும்படியாக எதுவும் சாதித்துவிடவில்லை.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி பதில்

■ முனிமா

✉ தொடர்ந்து காங்கிரஸ் கட்சி நேரு குடும்பத்தையே பிரதானப்படுத்தி அரசியல் நடத்துவது சரிதானா?

- பாலன், தேனி.

காஷ்மீர் ரோஜா வண்ணமும், நீண்ட மூக்கும், கன்னங்குழியும் சிரிப்பும், தேர்தல் நேரங்களில் ஏழை பாழைகளைக் கட்டித் தழுவும் தந்திரமுமே நேரு குடும்பத்தின் அஸ்திரங்களாக பிரயோகிக்கப்படுகின்றன. இவற்றுக்குப் போட்டியாக பா.ஜ.க-வும் நடிக நடிகைய மைதா முகங்களையும் பிளாஸ்டிக் சிரிப்பையும், சதைத் தினவையும் முன்னிலைப்படுத்தத் தவறவில்லை. அடிமைகள் விழித்தெழுந்து போராடும் வரை இப்படிப்பட்ட நான்சென்சுகள் தொடர்வது நம் தலைவிதி!

✉ தேர்தல் முடிவதற்கு முன்பாகவே, முதற்கட்ட வாக்குப் பதிவுகள் முடிந்ததையொட்டி பத்திரிக்கைகள் கருத்துக் கணிப்பு வெளியிடுவது சரிதானா?

- குமார், பம்மல்.

தலைமைத் தேர்தல் ஆணையம் இதைக் கண்டித்துள்ளது. ஆனால் என்ன ஒற்றுமைப் பாருங்கள், எல்லாப் பத்திரிகைகளும் போட்டி போட்டுக் கொண்டு முதற்கட்ட வாக்குப் பதிவையொட்டி பா.ஜ.க. வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தியிருப்பதை! பத்திரிக்கைகள் யாவும் பார்ப்பனர் கையிலிருப்பதும், அவர்களது அபிலாஷையே அதில் வெளிப்பட்டிருப்பதும்தான் நாம் தெரிந்துகொள்ள வேண்டியது. தோற்கும் கட்சிகளுக்கு மக்கள் வாக்களிக்க விரும்ப மாட்டார்கள் என்பதையொட்டி இக்கருத்துக் கணிப்பு திணிக்கப்படுகிறது. ஆனால் பா.ஜ.க-வே நம்பிக்கையிழந்து, அறுதிப் பெரும்பாண்மை எந்தக் கட்சிக்கும் கிடைக்காது, ஆகையால் நாங்கள் எந்தக் கட்சிகளுடனும் கூட்டணிக்குத் தயார் என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும்போது பத்திரிக்கைகள் பா.ஜ.க-வுக்குப் பெரும்பான்மை கிடைக்கப் பாடுபடுவதை எப்படி எடுத்துக் கொள்வது?

✉ இந்தியா டுடே ஆங்கிலப் பத்திரிக்கை முதல்வர்களில் மிகச்சிறந்தவராக ஒரிஸ்ஸா முதல் வரையும், மிக மோசமானவராக ஜெயலலிதாவையும் கூறியுள்ளனர். இது ஏற்கக் கூடியதா?

- ராமன், சென்னை.

ஜெயலலிதா பத்திரிக்கைக்காரர்களை, மதிப்பதில்லை என்பதும் அவர் மோசமானவர் என்பதற்கு காரணமாகக் கூறப்பட்டுள்ளது. ஒருவேளை பத்திரிக்கைகளுக்கு பசை போட்டுக்கொண்டிருந்தால் அவர்களது கணிப்பு மாறியிருக்கலாம் கூட. தலித் நோக்கில் சிறந்த முதல்வர் என்று யாரையும் கூறுவதற்கில்லை. இனி மேல்தான் உருவாக வேண்டும்.

✉ தேர்தலில் போட்டியிடும் சில சுயேட்சை நபர்கள் டெபாசிட் தொகையை ஒரு ரூபாய் சில்லறையாகக் கொண்டுவந்து கொட்டினார்கள் என்று சன் டி.வி. செய்தி வெளியிட்டது. இதிலிருந்து நீங்கள் புரிந்து கொண்டது என்ன?

- நெல்சன், சென்னை.

மக்கள் கவனத்தை ஈர்க்க சில்லறை புத்தியும் ஒரு யுத்தி என்று அவர்கள் கருதியிருப்பதுதான் அதில் வெளியிடப்பட்டுள்ளது.

✉ தனக்கு ஆங்கிலம், ஹிந்தி, தமிழ் மற்றும் தெலுங்கு தெரியும், எனவே அனைத்து மொழிகளிலும் மக்களுடைய கோரிக்கைகளை சட்டமன்றத்தில் பேச முடியும் என்று நடிகை ரோஜா பிரச்சாரம் செய்து வருகிறார். மக்கள் நலனில் உள்ள ஈடுபாட்டின் காரணமாகத்தான் இம்மொழிகளைக் கற்றுக் கொண்டாரா?

- ராசாத்தி, செங்கல்பட்டு.

அகப்பை எவ்வளவு நேரம் குழம்பில் ஊறினாலும் அதற்கு குழம்பின் ருசி தெரியாது. முதலில் அவர் மக்களின் மொழியைக் கற்றுக்கொள்ளட்டும். எழுதிக் கொடுத்த வசனங்களைப் பேசுபவர்களும், தெரியாத மொழிக்கு வாயசைத்து நடிப்பவர்களும் சட்டமன்றங்கள் செல்வது அங்கு கால்ஷீட் ரேட்டைக் கூட்டிக் கொள்ளத்தான்.

✉ புதிய கோடாங்கி பரவலாக செல்கிறது என்பதை அறிந்து மகிழ்ச்சி கொண்டேன். என் நண்பர்களுக்கு புதிய கோடாங்கி கொடுத்து படிக்குமாறு ஊக்கப்படுத்தி வருகிறேன். பட்டி தொட்டிகளெல்லாம் புதிய கோடாங்கியை சென்று சேர்க்க என்ன முயற்சி செய்து வருகிறீர்கள்?

- பழனிச்சாமி, மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

புதிய கோடாங்கியை எழுத்தாளர்கள், தலித் இலக்கிய வாசகர்கள் மற்றும் அம்பேத்கர் மன்ற / சங்க உறுப்பினர்கள் என்ற எல்லையைத் தாண்டி எழுதப் படிக்கத் தெரிந்த அனைத்து தலித்துகளுக்கும் சென்று சேர்க்க முகாம்களும், பொதுக் கூட்டங்களும் உதவி புரிகின்றன. உங்கள் உதவிக்கு நன்றி.

**ரஜினிகாந்த் என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

- பாலன், விழுப்புரம்.

ம்... யார் நடிகர் ரஜினிகாந்தைத்தானே கேட்கிறீர்கள்? அவர் 'பாபா' படத்தோடு சமாதி யாயிட்டாரே! கோடையில் வடாம் போடவேண்டும் என்று லதா மாமி தன் ஆத்துக்காரருக்கும், ஒய்.ஜி. மகேந்திரன் தன் அத்திம்பேருக்கும் சொல்லிக் கொடுத்திருக்கலாம். அடைமழையில் வடாம் போட்டுவிட்டு, துணியில் பாதி கையில் பாதின்னு இச்சுக்கு பிச்சுக்குனு துடிக்கிறார்கள் ஊருக்கு பத்து ரசிகர்கள். ரஜினி பாவம், இமயமலைக்கு டிக்கட் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

**தேர்தல் பிரச்சாரத்தில் தி.மு.க. கூட்டணி பி.ஜே.பி-யை தாக்குவதில் தடுமாறுவது கொள்கையின் அடிப்படையிலா?**

- தாஸ், பாண்டிச்சேரி.

அடுப்பில் ஒன்றாக ருசி பார்க்கப்பட்ட பதார்த்தம் (இந்துத்துவம்) வெவ்வேறு சட்டிகளில் நிறைந்து கொண்டு வெவ்வேறு கொடிகளால் மூடிவைக்கப் பட்டுள்ளது. அத்தியைப் புட்டா அத்தனையும் சொத்த, இதுல யாரு யாரை மொத்த?

**வாஜ்பேயி அடுத்த பிரமராக வந்தாலும் உடனே அவர் விலக்கப்படுவார் என்று அவரே புலம்புவது காங்கிரஸ் கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பைத் தருமா?**

- புண்ணியகோடி, திண்டிவனம்.

வாஜ்பேயி மீடியாக்களினால் தூக்கி நிறுத்தப்பட்ட கட்அவுட். இந்த மனிதர் என்ன தவறு செய்தார் என்று வாஜ்பேயி படத்தைப் போட்டு கேள்வியைக் கேட்டு பிறகு வாஜ்பேயி நல்லவர் என்ற கருத்தைத் தொடர்ந்து பதிவு செய்து அவரை பெரிய தியாகி போல் வர்ணித்துவிட்டார்கள். இந்தக் கட்டவுட் விழுந்தால் இன்னொன்று விரைவில் தயாராகிவிடும். இந்துத்துவம் என்ற நச்சுப் பாம்பின் தலையாக வாஜ்பேயி இருக்கும்போது இது நல்லபாம்பு, கடிக்காது என்று சொல்வது எப்படி பொருத்தமாக இருக்கும். இந்த நல்ல பாம்புக்கு கருணாநிதியும் வைகோவும் ஏன் பாலூற்றினார்கள் என்பது, அவரோடு அதிகாரத்தைப் பங்குபோட விரும்பித்தானே அன்றி, அவர் நல்லவர் என்பதால் அல்ல. அந்த சமயத்தில் நல்லவர் என்ற கேடயம் அவர்களுக்குப் பயன்பட்டது போல் எதிர் காலத்தில் இன்னும் சிலருக்குப் பயன்படலாம்.

**தலித்தல்லாதார் தலித்தியத்தின் ஆசான்களாக வலம் வந்தது தொடரவில்லையே, ஏன்?**

- கோபாலன், மதுராந்தகம்.

நீலச்சாயம் வெளுத்துப் போச்சி டும் டும்

ஆட்டம் பாட்டம் நின்னு போச்சி டும் டும்

**வைரமுத்து, பாரதிராஜா இவர்களுக்கு பிரசிடென்சி கிளப் என்ற பெயரில் பிரமலைக் கள்ளர்கள் பாராட்டுக் கூட்டம் நடத்த, அதில் பாரதிராஜா தான் கள்ளப்பயல் என்றும், கள்ளர்கள் கத்தி இல்லாவிட்டாலும் குச்சியாவது வைத்துக் கொண்டு முரட்டுத்தனத்தைத் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். து குறித்து உங்கள் கருத்து என்ன?**

- வாணவன், காட்பாடி.

வைரமுத்து தான் கள்ளர் என்று சொன்னால் திமுக ஆதரவை இழந்து விடுவார். பாரதிராஜா கள்ளர் என்று சொல்வதன் மூலம் அதிமுக-வில் சீட்டு கேட்க முடியும்.

## முளைவிடும் படைப்பாளிக்கு

■ சத்யானந்தன்

அட்டகாசமாய் இயங்கு
ஆத்திரத்தைப் பதிவு செய்
இலக்கே இருப்பு
ஈனம் சமரசம்
உழைப்பு வாசிப்பு
ஊட்டாதே - வலை பின்னி வீசு
எளிய உருவம் ஏற்றி
ஏழ்கடல் உள்ளடக்கு
ஐம்புலன் தூண்டிலில்
ஒரு சுறாவைப் படிமமாக்கு
ஓரம் சார் - சமூக நீதிப் பக்கம்
ஔடதம் அல்ல எழுத்து
அஃது அக்கினிக் குஞ்சின் அச்சு வடிவம்



படிப்பகம்

www.padippakam.com

நூல் மதிப்புரை

ஆசிரியை : புதிய மாதவி
பக்கம் : 124
விலை : ரூ. 70

## வித்தியாசமான மொழியில்

# விடுதலைக் குரல்கள்!

■ விழி.பா. இதயவேந்தன்

பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் அடிமைத்தனத்திற்கும் துரோகத்திற்கும் எதிராகக் குரல் கொடுக்கக் கூடிய சூழல் என்பது மிகக் குறைவாகிக் கொண்டிருக்கிறது.

சங்ககாலம் தொடங்கி பெண்பாற் புலவர்களின் சிந்தனைகளும் அவற்றின் சமூக மதிப்பீடும் கவனம் கொள்ள வேண்டியவை. சமூக ரீதியாக பெண்களை ஓர் ஒடுக்கப்படும் தலித் இனமாகக் கொள்ள முடியும்.

இவர்களின் எதிரிடையான சமூகப் பார்வையும் அக்கறையும் இன்றைக்கு ஒருசில கவிஞர்களை வைத்தே நாம் பேச வேண்டியிருக்கிறது. தொடர்ந்து காலம் முழுவதும் நசுக்கப்பட்டே வரும் இந்த பெண்ணினத்தின் குரல்கள் போர்க்குணமாக மாறிவிடக் கூடாது என்பதில் நம் அமைப்புமுறை தொன்று தொட்டு மிகக்கவனமாகவே பின்பற்றி வருகிறது. இவற்றிலிருந்து மீறவும் சமூக சீர்கேடுகளை சுட்டிக் காட்டுவதுடன் மாற்றத் துடிப்பதற்கான ஓர் சமூகப்புரட்சியை எழுத்துத் தளத்தில் காண்பித்துக் கொண்டிருப்பவர்களில் ஒருவர் மும்பை தமிழ்க் கவிஞர் புதிய மாதவி (எ) மல்லிகா.

இவரின் முதல்தொகுப்பு 'சூரியப் பயணத்திற்குப் பிறகு.' இரண்டாம் தொகுப்பு 'ஹே... ராம்!' தற்போது வெளிவந்துள்ளது. கவிஞர்கள் இன்குலாப், முத்து நிலவன் ஆகியோர் இக்கவிதைகளின் பாதிப்பால் அணிந்துரை வழங்கி இருக்கிறார்கள்.

சரி, பெண் என்பவள் ஆணுக்குக் கட்டுப்படுவதும் பிள்ளைகள் பெற்று வளர்ப்பதுமான காரியங்களில் மட்டுமே முடங்கிப் போவதா? இல்லை; எங்கெல்லாம் என் இனம், என் மக்கள், என் சகோதரர்கள் துன்பத்திலும் துயரத்திலும் உழல்கிறார்கள் அவற்றுக்கெதிராய் என் மொழி பேசும் என்பதற்கான உதாரணங்கள் நிரம்பியவைதான் இத்தொகுப்பு ஹே... ராம்!

திராவிட இயக்கக் கூறுகளும், மதங்கள் கடவுள்கள் எதிர்ப்பு அம்சங்களும் கவிதைகளில் நிரம்பிக் கிடக்கின்றன.

"என் கவிதை
சூரியனில் பிறந்தாலும்
சுவாசம் என்னவோ
பூமியுன் மடியில்தான்"

என்கிறார்.

நாடெங்கிலும் கிளர்ந்தெழும் சமூக விரோத சக்திகளின் மதச்சண்டைகள் படுகொலைகள் கோத்ரா, குஜராத் உள்ளிட்ட சூழல்களை விளக்கி;

ஹே ராம்...!
உன் ஜனனம்
ஏன் சாபக்கேடானது?

என்றும்,

"ஏ அல்லா!
எரிகின்ற
புகைவண்டிகளில்
இனி - உன்
குரான் ஒலிக்கட்டும்."

எனவும்,

"மனித நேயத்திற்கு
மாலையிடாத மதங்கள்
இனித் தேவையில்லை
அந்த மதங்களுக்கு
வைப்போம் மலர் வளையம்"

எனவும் நெஞ்சம் பதற குமுறுகிறார்.

கடவுள்கள் நம்மை மனிதனாக வாழவைக்கவில்லையே அப்புறம் நமக்கெதற்கு கடவுள் எனும் தோனியில்,

"உன்
கடைசி அவதாரமாவது
எங்கள் சேரியில்
நடக்கட்டும்"

என்றும் நான்கு முகங்கள் எட்டு கைகள் கடவுளுக்கு இருந்தும் ஏன் ஆயுதந்தாங்கிய போலிசு கோவிலுக்கு எனும் கேள்வியை ஒரு கவிதையில் முன்வைக்கிறார். ஆண்டவனில்கூட சாதிப்பிரிவு உண்டென்பதை வன்மையாக கேலிக்குள்ளாக்குகிறார். மற்றொரு கவிதையில் தரிசனமின்றி கோயிலில் தள்ளிவிட பிச்சைக்காரனின் குரலில் தான் தெய்வமாகி உதவியதை,

"நான் நீயானேன்
நீ மீண்டும்
சிலையானாய்"

எனும் வலுவான குரல் சமூகத்தில் பதிகிறது.

பெண்களின் பிரச்சினைகளை பல்வேறு கவிதைகளில் பாடுகிறார்.

"அவள் உங்களுக்காக சுமப்பது
வெறும் நீர்க்குடமடல்ல
வாழ்க்கையின் உயிர்க்குடம்"

என்பதோடு குடும்ப விளக்காய்த் திகழும் பெண்களை ஆண் வர்க்கத்தோடு இணைத்து சமநிலைப் படுத்துகிறார். குடிகார கணவன் இறந்து விடியலாகும் பெண்மையின் வாழ்க்கையும், இறந்துபோன 'கல்பனா சாவ்லா'வை இரண்டாவது சூரியன் எனவும் சித்தரிக்கிறார்.

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் காண யாராலும் முடியும்? புதிய மாதவி ஈழத்தமிழனின் நிலை கண்டு,



படிப்பகம்

www.padippakam.com

"நீ - அகதி
என்று எழுதியது
என் சட்டம்...!
நீ - அண்ணன்
என்று துடித்தது
என் ரத்தம்...!"

எனக் கவிதைகளில் வெடிக்கிறார்.

சாதியப் பிரச்சினைகளும் கவிஞரை உசுப்பி எழுச்சி கொள்ள வைக்கின்றன.

"ஆதி திராவிடன்
தாழ்ந்தவன் என்றால்
மீதி - திராவிடன்
உயர்ந்தவனா"

என்பதை ஆழமாகப் பதிவு செய்வதோடு

"சாதிகளில்லாத - தமிழ்
சமுதாயம் காணும்வரை
இந்தப் போராளியின்
பயணம் தொடரும்..."

என தனது இலட்சியத்தையும் கவிஞர் முன்வைக்கிறார்.

இந்த அனுபவங்களுடன் கடக்கையில் கவிஞர் நமக்குள் அய்க்கியமாகிறார். மானுடம் பேசும் கவிதைகளால் மக்கள் மத்தியில் சாட்சியாய் முன்நிற்கிறார். விடுதலைக் குரல்கள் வித்தியாசமாய் ஒலிக்கச் செய்வதே கவிதையில் நாம் படிக்கக் காணலாம்.

புதிய மாதவியின் போர்க் குணமும் நெஞ்சுரமும் கவிஞர்கள் எவரையும் உசுப்பத்தான் செய்கின்றன.

கவிதைகளை நிறைய ஓவியங்களுடன் அழகிய தாள்களில் அச்சிட்டு மும்பை மராத்திய மாநில தமிழ் எழுத்தாளர் மன்றம் வெளியிட்டுள்ளதை நாம் குறிப்பிட்டாக வேண்டும். •

## மடாதிபதியின் சொல் யாத்திரைக்கான புதிய வழித்தடம்

■ சொர்ணபாரதி

முட்டுச் சந்தில் கிடந்த கோட்டுடை
நெடுந்தண்டப் பீடங்களின்
ரங்கராட்டிணம்.
பிண்டங்களின் வேற்றுமையைப்
பண்டமாக்கிப் புசித்துக் கடைவாயில்
வ
ழி
யு
(ஓ)ம் குருதியுடன்
சாந்தி சொரூபம் காட்டி
நகர்வலம்.

ஒளிர்வதாயின் எவ்வர்ணமும் தன்
வர்ணமெனப் பூசிக்கொள்ளும்.

மனிதக் கழிவோடைக் கரைகளில்
மிதிபடும் மனங்களில்
மதக்கழிவைக் குவிக்கும்
விலைப் போன எருதுகளைப் பூட்டி.
எட்ட நின்று அபயக்கரம்
நீட்டுவதாய்ச் சொல்லும்.
பின்னொரு நாள் நின்ற கோட்டைச்
சுவரில் துளையிட எத்தனிக்க
எழுந்தது பெரும்புயல்.
நின்ற கோட்டுடைக் காவல் பூதங்கள்
அலறின தங்கள் உரிமை பறிப்போவதாய்

இடித்தல் நின்றது.
பெருங்குந்தங்களின் முகம் கிழிக்க
அது மாற்றியது ஸ்ருதியை;
நின்ற மலையே என்தலை யென்றது.
'மொட்டையும் உனதே கட்டையும் உனதே'

ரணம் மாற்றி அவரோகணம் செய்தது -
படுக்கைக் கோட்டில் நெடுங்கோட்டுக் கீறல். ■

■ தமிழ் மணவாளன்

## மரபின் வேர்கள்...

குடித்து முடித்த தேநீர் கோப்பையை
உதட்டில் பொருத்தி
உறிஞ்சிப் பார்க்கும் கடைசி மிடருக்காய்
நிகழ்த்தும் அனிச்சையென
இணக்கத்தோடு பிரிந்து செல்கிறது.

திடீரென பெருக்கெடுத்தோடும்
நீர்ச்சுளிப்பின்
வேகத்தில் நிலை குலைந்து
அடித்துச் செல்லப் படுகிறததனோடு.

காலத்தின் நீட்சியில்
கண்ணெதிரிலேயே மாற்றமுறும்
வண்ணங்களும் வடிவங்களும்.

எச்சரிக்கையாய் கண்காணித்துக்
கொண்டிருப்பதாய்
எண்ணிக்கொண்டிருக்கும்போதே
காணாமலும் சிலவேளை களவும் கூட.

கவலையுடன் பேசிக்கொண்டிருந்தேன்
கடலோடு.
இரைச்சலில் இருந்து எந்த பதிலையும்
ஏற்கவியலவில்லை என்னால்.
காத்துக்கிடந்த நேரந்தன்னில்
நுரைப் பூவொன்று பாதம் வழிந்து
குமிழிகள் எழுத்தைக் கோர்த்தன.

சமுத்திரம் நடுவே மூழ்கிவிடாது
பூத்துக் குலுங்கும் தோட்டம் போல
ஆழம் முழுதும் நீண்டு
ஊன்றி நிற்கும் மரபின் வேர்கள். ■



படிப்பகம்

www.padippakam.com

## என்.டி. ராஜ்குமாரின் மொழி

# காட்டாளன்

■ அரச. முருகுபாண்டியன்

கவிதை என்பது மொழிக்குள் ஒரு மொழியை உருவாக்குவது. அது மொழியை வசப்படுத்துகிற உத்தி. எல்லோருக்கும் அது வசப்படுகிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்த உத்தி தெரிந்தவர்கள்தான் காலத்தைக் கடந்து நிற்கும் கவிதைகளைப் படைக்கிறார்கள். என்.டி. ராஜ்குமாருக்கு அப்படி வாய்த்திருக்கிறது. அவரின் கவிதை மொழி தனி மொழி. தமிழில் இதுவரை யாரும் இப்படியொரு மொழியை உருவாக்கவில்லை. அப்படியொரு மொழியை உருவாக்குவது சாமானியமன்று. தமிழின் மரபை செறித்து புதுமரபொன்றை உருவாக்கியிருக்கிறார். அவரின் உயரத்தைத் தொடுவதற்கு தமிழ்க் கவிஞர்கள் இன்னும் பல படித்தாவவேண்டும்.

ஒரே மாதிரியான கவிதைகளைப் பார்த்துப் பார்த்து அல்லது எழுதி சலித்துத் தேங்கிக் கிடந்த தமிழ்க் கவிதையை அடுத்தக் கட்டத்திற்கு மடைமாற்றி விட்டது தலித் படைப்புகளே. அதுவரை எழுத்தில் வராத மொழியை, வாழ்வை, வலியை எழுத்துக்குள் கொணர்ந்தது தலித் இலக்கியங்களே. அத்தகைய தலித் கவிஞர்களிலேயும் என்.டி. ராஜ்குமார் தனித்து நிற்கிறார். அவரின் அனுபவங்கள், உணர்வுகள், வாழ்க்கைத் தத்துவங்கள் கவிதைகளாக வருகிறபோது நமக்குள் ஏற்படுகிற உணர்ச்சிகள் ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. ஆயிரமாண்டுகளின் தமிழ்க் கவிதை சாதித்த மௌனத்தை ஒரு நொடியில் உடைத்துப் போடுகிறார் கவிஞர்.

நவீன கவிதைகள் என்று எழுதப்படுபவைகள் அல்லது கொண்டாடப்படுபவைகள் எல்லாம் மணிக்கொடிக் காலக் கவிதைகளையோ எழுத்து அல்லது வானம்பாடிக் காலக் கவிதைகளையோ அல்லது புதுக்கவிதைக் கால கவிதைகளையோ 'ஜெராக்ஸ்' எடுத்தபடிதான் உள்ளன. தலித் இலக்கிய வரவுதான் தமிழை புதிய திசையை நோக்கி திருப்பி விட்டது. இல்லையேல் தமிழில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டிருக்கும். தலித் இலக்கியப் படைப்பாளிகள் தாம் அந்த வெற்றிடத்தை இன்று நிரப்பிக்கொண்டிருக்கிறார்கள். சொற்சிலம்பம் ஆடிக்கொண்டிருக்கிற பல பிரபலமான தமிழ்க்கவிஞர்கள் என்.டி. ராஜ்குமாரை ஒருமுறை வாசித்துப் பார்க்கவேண்டும். அவர் விவரித்து வைக்கிற வாழ்க்கையை அவர் சுட்டும் மனிதர்களை கொஞ்சம் உற்றுநோக்க வேண்டும். விட்மனையும் கிப்ரானையும் படி எடுப்பதை விடுத்து நம் மக்களின் வாழ்க்கையை, புண்களை, புன்னகைகளைப் பதிவு செய்து பழகவேண்டும்.

சாதி குறித்து பேசுவதற்கு கூச்சப்படுகிற, தலித்துக்களையே தலித்துக்களுக்கெதிராகப் பேசப்பழக்கியிருக்கிற, சாதி குறித்து பேசினால் எங்கே தன் அடையாளம் தெரிந்து விடுமோ, நமக்கான அங்கீகாரம் பறிக்கப்பட்டுவிடுமோ என்ற குற்றவுணர்வை தலித்துகளுக்கு ஏற்படுத்தி வெற்றிகொண்டிருக்கிற அதன் மூலம் ஆதாயம் தேடிக்கொண்டிருக்கிற பல போலி முற்போக்கு முகாம்களின் முகத்திரையைக் கிழித்து பீரிட்டுக் கிளம்புகிறார் என்.டி. ராஜ்குமார்.

இவரின் வருகை பலரின் இருப்பைக் காலி செய்திருக்கிறது. அதனால்தான் அவர்கள் தலித் இலக்கியத்தை தலித்துக்கள்தான் எழுதவேண்டுமா? என்று கேள்வியெழுப்புகிறார்கள் அவர்களை நோக்கி

"உங்களுக்காய் நாங்கள்தான்எழுதவும் செய்வோம்
வாய்களில் குறிகளை வைத்துக் கொண்டிங்கு
சும்மா கிடங்களடாவென
விசநீர் வழியும் கூரேறிய நாவையெடுத்து
சுழற்றி வீசி வருகிறதொருபுறம்
பூணூல் தரித்த சுடலைமாட சாமிகள்"

என்கிறார் கவிஞர்.

இன்று எல்லாம் இந்துத்துவமாகிக் கொண்டிருக்கிறது. நமது வாழ்வில், வரலாற்றில், கல்வியில் காவிகள் நுழைந்து நமது தொடையிலேயே கயிறு திரிக்கத் தொடங்கிவிட்டார்கள். சோதிடம் பல்கலைக் கழகத்திலேயே பாடமாகிறது. வர்ணாசிரமம் நமது பண்பாடு என்று போதிக்கப்படுகிறது. ஆரியர்கள் பூர்வீகக் குடிகள் என்று வரலாற்றைத் திரிக்கிறார்கள், இன்குலாமன் ஔவையோ பாடத்திட்டத்திலிருந்து நிராகரிக்கப்படுகிறாள். இந்தக் கல்வி காவிமயமாவதை என்.டி. ராஜ்குமாரின் கவிதைகள் நையாண்டி செய்கின்றன.

"பாடப் புத்தகங்களுக்குள்ளோடும்
காவி நதிகளிலிருந்து
சாயம் எடுத்திந்திய
வரைபடங்களுக்குள்
வண்ணம் தீட்டித் தீட்டி
ஆயுத விழாக்கள் அற்புதமாய் நடந்தேறிவிட்டதா
திரிசூலங்களே"

தலித் மரபுகள், தெய்வங்கள், கலைகள், நம்பிக்கைகள் அனைத்தும் உழைப்பு சார்ந்தவை, பெருந்தெய்வ வழிபாட்டுக்கு எதிரானவை. சைவ, வைணவ மரபுகளுக்கெதிரானவை. உழைக்கிற மக்களின் எல்லா



படிப்பகம்

www.padippakam.com

அடையாளங்களையும் அழித்தொழித்துவிட்டு ஒற்றை அடையாளத்தை உருவாக்கத் துடிக்கிறது பார்ப் பனியம். பௌத்தத்தை அது தோன்றிய மண்ணிலேயே அழித்ததைப் போலவே, புத்தரை விஷ்ணுவின் அவ தாரம் என்று கதைத்ததைப்போல இன்று தலித்து களின் மிக்க சொச்சங்களையும் விழுங்கத் துடிக்கிறது இந்துத்துவம். சட்டங்களாக, சடங்குகளாக, வேதங் களாக வந்து மிரட்டும் இந்துத்துவத்திற்கெதிராக நமது பன்மை இருப்பைப் பதிவு செய்கிறார். தலித்துகள் இந்துக்களல்ல என்று மறுபடியும் உறுதி செய்கிறார்.

"பனங்கள்ளும் தென்னங்கள்ளும்
கலந்தடித்த போதை கிறுக்கில்
கருவாடு சுட்டுத் திண்ணுகிறாள் எனதம்மைகள்
வலம்புரிச்சங்கிலும் கெண்டியிலும்
மாட்டு மூத்திரப் பிடிப்பவர்களே"

என்று பார்ப்பனர்களுக்கும் நமக்குமான வேறுபாடு களைச் சுட்டிக்காட்டி 'எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர் மக்களென்ப தொரு பரிகாசச் சொல்தானே மௌனக் கொலையாளி களே...' என்கிற வரிகளில் நமது தனித்துவத்தைப் பதிவு செய்கிறார். பாரதி விழாக் கொண்டாட்டங்களில் மயங்கிக் கிடக்கிற முற்போக்குகள்தான் இதற்கு பதில் சொல்லவேண்டும்.

பெருங்கதையாடல்களைக் கவிழ்ப்பதில், மறுப் பதில்தான் தலித்தியம் வேர்கொள்கிறது. தமிழ்த் தேசியம், இந்திய தேசியம், சர்வ தேசியம் என்கிற பெருங்கதையாடல்களால் தலித்துகளுக்கான விடு தலையை ஒருபோதும் வழங்கவியலாது என்பதைத் தான் கடந்தகால அனுபவங்கள் நமக்கு உணர்த்து கின்றன. பார்ப்பனிய இந்துத்துவ பெருங்கதை யாடல்களுடனும், பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொண்டு தலித்துகளுக்கெதிராக கொலைவெறியாடு கிற இடைநிலைச் சாதியினரின் திராவிடப் பெருங் கதையாடல்களுடனும் நாம் ஒருபோதும் ஒதுப்போவ இயலாது. இராமன் இந்து தேசியத்தின் நாயகன் என்றால் தலித்துகளுக்கு அவன் எதிரி. சம்புகள், தாடகை போன்ற தலித்துக்களை கொன்ற கொலையாளி. நாம் அதன் மரபினர். அதைத்தான் கவிஞர்

நான் சாத்தானின் குழந்தை
நாயும்
பேயும்
பிசாசும்தான் எனது தெய்வம்
எனது தலைவன் கறுப்பழகன்
சதிகார ராமனை
நேரில் நின்று குத்தி மலத்திய
"காட்டாளன்"

இங்கே கவிஞர் குறிப்பிடும் காட்டாளன்தான் நமக் கான மனிதன். அதுதான் இந்தத் தொகுதியின் தலைப்பு. காட்டாளன்தான் இங்கு மனிதனாக இருக்கிறான் காவிய நாயகர்கள் எல்லாம் நயவஞ்சகர்களாக இருக்கிறார்கள். இதுதான் நமக்கான புரிதல்.

இப்படியாய் என்.டி. ராஜ்குமாரின் கவிதைகள் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிராய், பார்ப்பனிய பயங் கரவாதத்திற்கெதிராய் அரச வன்கொடுமைகளுக்கெதி ராய் நீள்கிறது.

அறுபதுக்கும் மேற்பட்ட கவிதைகள் இத்தொகுப் பில் இடம் பெற்றிருக்கின்றன. எல்லாவற்றையும் சிலா கித்தால் அது ஒரு ஆய்வாகி விடலாம் என்கிற நிலை யில் ஒன்றிரண்டு வரிகளை உதாரணமாகத் தந்தேன்.

என்.டி. ராஜ்குமாரின் மொழி தலித் மொழி. தலித் இலக்கியத்திற்கு மேலும் வலுசேர்ந்திருக்கிற அவரின் நான்காவது தொகுதி இது. முந்தைய தொகுதிகளை விடவும் இது கூர்மையடைந்திருப்பதை உணர்கிறேன். இந்தக் கவிதைகளைப் பாடலாகவும் பாடவாய்ப்பிருக் கிறது. அவரது வாசிப்பே பாடலாக மாறும் என்று கேள்வியுறுகின்றேன்.

நமக்கான பாடல்களை நாமே பாடுவோம். 'காட்டாளன்' நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய தொகுதி. இதில் விமர்சனமே இல்லையா என்று கேட்கலாம். அது எனக்கான வேலை இல்லை.

## என் மாமிசத்தைப் பிடிங்கி பசியாறும் சைவம்

என் மீது பெய்கிறது மழை
காய்கிறது வெகில்
கீறுகிறார்கள் கிள்ளுகிறார்கள்
செதில் செதிலாய் வெட்டுகிறார்கள்
நாய்களும் நரிகளும்
கழுகுகளும் காக்கைகளும்
என் மாமிசத்தைப் பிடிங்கி பசியாறுகிறது
நீயாக நான் மாற்றிவிட்டதனால்
உன்னோடு சேர்ந்து
பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

■ ரகசியன்




படிப்பகம்

www.padippakam.com

# அமைதிக் கிராமம்

■ க. கலாமோகன், பாரீஸ்



எனக்கு அமைதிக் கிராமம் பற்றிய தகவலைத் தந்தவர் ஓர் வயோதிகர். அவர் எதை எண்ணுகிறார் என்பது பற்றி என்னால் அனுமானிக்க முடியாதபோதும் எண்ணுதலில் அவர் காட்டிய தீவிர கரிசனை என்னை அவர் பக்கம் இழுத்துச் சென்றது. அவரது எண்ணும் தியானம் எனது நிழலால் குழம்பக்கூடாது என்பதற்காக நான் அவரிலிருந்த என்னைச் சற்றே ஒதுக்கி வைத்தேன். ஆனால் அவர் எதை எண்ணுகின்றார் என்பதை அவரது சைகைகளை வைத்துக்கூட என்னால் ஊகிக்க முடியவில்லை. திடீரென என்னையும் மீறி நான் இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டேன்:

'வயோதியரே! உங்கள் தியானத்தைக் குழப்ப வேண்டும் என்கின்ற எந்த எண்ணமும் எனக்குள் இல்லை. உங்களிடம் ஓர் கேள்வியை நான் கேட்கலாமா?'

'கேள்! என்னிடம் பதில் இருந்தால் அதனை நான் உனக்குச் சொல்வேன்.'

'நீங்கள் எதையோ எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் என நினைக்கிறேன். ஆனால் எதை எண்ணுவீர்கள் என்பதை நான் அறியலாமா?'

'நான் அலைகளை எண்ணிக் கொண்டுள்ளேன்.'

'எவ்வளவு அலைகள் எண்ணப் பட்டன?'

'எண்ணி முடிவதற்கு முன்னர் என்னால் தொகையைச் சொல்ல முடியாது.'

'நீங்கள் எண்ணி முடியும்வரை நான் உங்கள் அருகில் இருக்கலாமா?'

'இரு! நான் எண்ணி முடியும் வரை என்னிடம் எந்தக் கேள்வி களையும் கேட்காதே!'

அவர் அலைகளை எண்ணும் விதத்தைப் பார்த்தபோது எனக்கும் அலைகளை எண்ணும் ஆசை வந்தது. நானும் எண்ணை வெளிக்கிட்டேன். எண்ணுவது பிழைக்கும் வேலைகளில் அலைகளை மீளவும் எண்ணுவதில் பலமணிகளைச் செலவளித்ததால் எனக்குக் களைப்பு வந்தது. இதே வேளையில் வயோதியர் மிகவும் அமைதியாக இருந்து எண்ணுவதைப் பார்த்து ஆச்சரியப் பட்டேன்.

வானம் மங்கி அலைகளை இருள் மூடியபோதும் அவர் எண்ணிக்கொண்டிருந்தார்.

'மன்னிக்கவும்! அலைகளை இருள் மூடியபோதும் உங்களால் எப்படி அலைகளை என்ன முடிகின்றது?'

'ஒலிகளின் துணையால்.'

'நாளை உங்களை இதே இடத்தில் சந்திக்க முடியுமா?'

'நான் அலைகளை எண்ணத் தொடங்கிப் பல வருடங்கள். அவைகளை எண்ணி முடிய இன்னும் பல வருடங்கள் எடுக்கலாம். நாளையும் நான் இங்கே இருப்பேன்.'

அலைகளது ஒலிகளைச் சுமந்தபடி நான் வீடு திரும்பினேன்.

மறுநாள் நான் கரைக்குச் சென்றேன். கடல் அமைதியாகவும் அலைகளற்றும் இருந்தது. வயோதியரும் அதே இடத்தில் இருந்தார். அவரது விழிகளோ கடல்மீது.

'இவ்வளவு அமைதியாகவும் பொறுமையாகவும் இருந்து அலைகளை எண்ண எங்கே கற்றுக் கொண்டீர்கள்?' எனக் கேட்டேன்.

'அமைதிக் கிராமத்தில்' என மிகவும் அமைதியாகச் சொன்னார்.

'அமைதிக் கிராமமா? அது எங்கே உள்ளது?'

'அங்குதான் நான் பிறந்தேன். வாழ்ந்தேன்.'

'அதனை விட்டு ஏன் இங்கு வந்தீர்கள்?'

'எனது மூன்று மனைவிகளும் ஒரே தினத்தில் ஒரே நேரத்தில் காலமாகிப்போன காரணத்தால்.'

'உங்களது கதை சோகமானது. அமைதிக் கிராமத்தில் ஏன் இந்த மூன்று மரணங்களும் ஒரே தடவையில் நிகழ்ந்தன?'

'அலைகள் வரப்போகின்றன. என்னால் இப்போது உனக்குப் பதில் சொல்ல முடியாது.'

'என்னால் உங்களை விளங்க முடிகின்றது. தயவு செய்து அமைதிக்



படிப்பகம்

www.padippakam.com

கிராமத்துக்கான பாதையை எனக்குக் காட்டமுடியுமா?

'ஏறு! இந்தப் படகில் உடனடியாக ஏறு! அது உன்னை அமைதிக் கிராமத்துக்கு அழைத்துச் செல்லும்' என்றபடி ஒரு படகைக் காட்டினார். அது ஓர் சிறு படகு. அதற்குள் எவருமே இல்லை.

'எனக்குப் படகோட்டத் தெரியாது.'

'உன்னோடுபேசுவதற்கு எனக்கு நேரம் இல்லை. ஏறு! அது உன்னை அமைதிக் கிராமத்துக்குக் கூட்டிச் செல்லும்!'

நான் படகில் ஏறினேன்.

❑ ❑ ❑

இன்னொரு கரையில் நான் விழித்தபோது எனக்குமுன் ஓர் கிராமம் தெரிந்தது. படகிலிருந்து வெளியேறினேன். நான் வந்து இறங்கிய இடம் வறண்டு கிடந்தது. மரங்கள் இலைகளைத் தொலைத்து மொட்டையாக இருந்தன. வீடுகள் உடைந்தும் கூரைகள் இல்லாமலும் இருந்தன.

இந்தக் கிராமத்தை விழுங்கிய பிசாசு எது என எனக்குள் நான் கேட்ட வேளையில் ஓர் கிழவியின் முகம் தெரிந்தது. உடலிலோ பல உடைவுகள்.

'அம்மா!' என நான் அவளை அழைத்தேன். என்னை அவள் விரக்தியோடு பார்த்தாள்.

'இந்தக் கிராமத்தின் பெயரை நான் அறியலாமா?'

'அமைதிக் கிராமம்' என்றபடி தனது முகத்தைத் திருப்பி சிரமப்பட்டு நடந்தபடி எனது விழிகள் முன் மறைந்தாள்.

அமைதிக் கிராமம் மனிதர்கள் இல்லாத கிராமமோ எனும் சந்தேகம் எனக்குள் ஏற்பட்டது. கிழவியைக் கண்டபின் எனது பாதம் சென்ற வழிகளில் எவருமே தென்படவில்லை. இதற்காக எனது பாதங்கள் சளைத்துக் கொள்ளவில்லை. நான் நடந்தேன், நடந்து கொண்டேயிருந்தேன்.

கூரையில்லா வீடொன்றின் உடைந்த கதவின் முன் தனது கூந்தலை நிலத்தில் அலையவிட்டபடி படுத்துக் கிடந்த ஓர் இளம்பெண் என்னைக் கண்டதும் எழுந்து என்முன் வந்தாள்.

'எனது கணவனை நீங்கள் எங்காவது கண்டீர்களா?' என கண்ணீர் தளும்பக் கேட்டாள்.

'நான் இப்போதுதான் முதலாவது தடவையாக அமைதிக் கிராமத்துக்கு வந்துள்ளேன். இங்கு ஓர் வயோதியர் வாழ்ந்தார் என்பது மட்டும் தெரியும். அவருக்கு மூன்று மனைவிகள் இருந்தனர் என்பதும் அவர்கள் ஒரே தடவையில் இறந்தனர் என்பதையும் அவர் வாயால் அறிந்தேன். இதனைத் தவிர இங்கு வாழ்வோர் பற்றி எனக்கு எதுவும் தெரியாது.'

'நீங்கள் சொல்லும் வயோதிகர் எனது தந்தையே. அவர் இப்போது எங்கு உள்ளார்? என்ன செய்கின்றார்?'

'அவர் ஓர் கடலின் கரையின் முன் உள்ளார். அலைகளை எண்ணிக் கொண்டுள்ளார்.'

'அந்தக் கரைக்கு என்னையும் அழைத்துச் செல்ல முடியுமா?'

'நான் இன்னமும் அமைதிக் கிராமத்தை முழுமையாகப் பார்க்கவில்லை. பார்த்தபின் திரும்பி வரும்போது உன்னை இங்கே கண்டால் அழைத்துச் செல்வேன்.'

❑ ❑ ❑

அதனை ஓர் சிறிய கிராமம் எனச் சொல்ல முடியாது. உடைந்த வீடுகளைப் பொருத்திப் பார்த்தபோது அது ஓர் வறிய கிராமமாக இருந்திருக்காது என எனக்குள் நினைத்துக் கொண்டேன்.

ஏன் அமைதிக் கிராமத்துக்கு இந்தக் கதி ஏற்பட்டது என எனக்குள் கேட்டுக்கொண்டபடி நடந்தபோது தூரத்தில் ஒருவர் நொண்டி நடப்பது போல எனக்குப் பட்டது. நான் விரைவாக அவரை அண்மித்தேன்.

'உங்களைச் சிரமப்படுத்துவதற்காக மன்னிக்கவும். நான் முதலாவது தடவையாக அமைதிக் கிராமத்துக்கு வந்துள்ளேன். இங்கே ஓர் வழிகாட்டியை எனக்கு அறிமுகப் படுத்துவீர்களா?'

'நான் கூட ஓர் வழிகாட்டியாகவே இருந்தேன். அமைதிக் கிராமத்தில் இருந்த அனைத்து வழிகாட்டிகளும் நொண்டிகளாகியும் காணாமலும் போய்விட்டனர்.'

'ஏன் அவர்களுக்கு இந்தக் கதி நடந்தது?'

'ஏன் என வானிடம் கேள்! கடலிடம் கேள்! நிலத்திடம் கேள்! ஆனால் மனிதர்களிடம் மட்டும் கேளாதே!' என்றபடி அவர் நொண்டி நொண்டி நடந்தபோது அவர் போகும் வழி எது என அவரிடம் கேட்கவேண்டும் என எனக்குள் எரிந்த அவாவை எரித்துக் கொண்டேன்.

❑ ❑ ❑

வெளிச்சம் கடலுக்குள் விழுந்து கொண்டிருந்தது. நான் அப்போது ஓர் வாடிய தென்னை மரத்தின் கீழ் இருந்தேன். அந்தக் கடலில் அலைகள் இருக்கவில்லை. மீன்களும் நண்டுகளும் இறால்களும் கடல் பாம்புகளும் கொக்குகளும் அட்டைகளும் பல மனித உடல்களும் அழுகிக் கொண்டு கிடந்தன.

'உனக்குக் கவிதைகள் விருப்பமா?' எனும் ஒலியைக் கேட்டுத் திரும்பினேன்.

இரத்தம் சீறிப்பாயும் தனது வயிறை இடது கையால் பொத்தியபடி வலது கையைத் தூக்கினான் ஓர் வாலிபன். ஓர் சிவப்புத்தாள் அவனது கையில் இருந்தது. நான் அதனை வாங்கியபோது தனது கடைசி மூச்சை எனது காதுக்குள் புகுத்திவிட்டுக் கரையில் விழுந்தான். அவனது சிவப்புத்தாளும் கரையில் விழுந்தது. அதனை எடுத்து புரட்டிப் புரட்டிப் பார்த்தேன். எந்த எழுத்துமேயில்லை. புரட்டியதால் எனது கரங்களும் சிவந்தன. எனது விழிகள் கலங்கித் துளிகளைக் கொட்டின.

❑ ❑ ❑

'நீர்! நீர்! நான் நீரைக் கண்டுவிட்டேன்!' என்றபடி ஓர் சிறுவன் என்முன் வந்தான்.

'நீரிற்காக நீ இப்படி ஏங்குவது



படிப்பகம்

www.padippakam.com

ஏன்?' என நான் அவனிடம் கேட்டேன்.

'அமைதிக் கிராமத்தின் கிணறுகளில் நீர் இல்லை. அவைகள் வற்றியும் பூஞ்சனம் பிடித்தும் உள்ளன. எனக்கு நீர் தேவை.'

'இந்தக் கடலின் நீரை நான் ஒருபோதுமே குடித்ததில்லை. அது இனிப்பானதா உப்பானதா உறைப்பானதா என்பது கூட எனக்குத் தெரியாது. ஆனால் அது நீர் என்பது மட்டும் எனக்குத் தெரியும். உனக்குத் தாகம் இருப்பின் நீரின் நிறங்களைத் தேடாமல் இந்தக் கடலின் நீரைக் குடிக்கலாம் தானே!'

'இந்தக் கடலும் வற்றிவிட்டது

எனது விழிகளைப்போல
இந்தக் கடலின் நடுவில்
தன்னை அடக்கம் செய் என
எனது காதலி
கேட்டிருந்தாள்
எனது உடைந்த படகில்
எப்படி அவளை
ஏற்றுவதாம்?
கரையில் படகு
படகின் அருகிலோ
அவளது மஞ்சள் உடலும்
அழுகிக்கொண்டுள்ளது.'

'இந்தக் கவிதையை எழுதியது நீயா?'

'எழுதியவர் காணாமல் போய்ப் பல வருடங்களாகுகின்றன.'

'இந்தக் கவிதையை மீளவும் எனக்காக வாசிப்பாயா?'

'அவளது மஞ்சள் உடலும் அழுகிக்கொண்டுள்ளது' என்றபடி தனது முதுகைக் காட்டியபடி அவன் நடந்தான்.

□ □ □

நான் திரும்புவதற்காக படகு என்னைக் கொண்டுவந்த கரையை நோக்கி நடந்தேன். வழியில் 'அமைதிக் கிராமம்' என்று கிராமத்தின் பெயரைமட்டும் சொல்லிவிட்டு மறைந்த கிழவியைக் கண்ட போது அவள் என்முன் வந்தாள்.

'வந்ததும் வராததுமாக என் இவ்வளவு அவதியாகத் திரும்பிப் போகின்றீர்கள்?'

'நான் திரும்பிப்போவதையும், அவதியாகத் திரும்பிப் போவதையும் நான் சொல்லாமல் உங்களால் எப்படி ஊகிக்க முடிந்தது?'

'உங்களது பாதங்களது மொழியை எனது காதின் விழிகள் வாசித்துவிட்டன.'

'அலைகளை என்னும் மனிதரை உனக்குத் தெரியுமா?'

'ஆம் அவரை எனக்குத் தெரியும்.'

'அவர் இங்கு பிறந்தவர் என்பது எனக்குத் தெரியும். இங்கும் அலைகளை எண்ணியவரா?'

'தொடக்கத்தில் நான் சிரிக்கும் போது எனது சொக்கையில் விழும் குழிகளை எண்ணவெளிக்கிட்டவர்' என கிழவி சொன்னபோது மடிப்புகளால் தொங்கிக் கொண்டிருந்த அவளது சொக்கைகளுள் விழுந்த குழிகளை மிகவும் சிரமமாக என்னால் அவதானிக்க முடிந்தது.

'அவரது மனைவிகளில் ஒருத்தி நீங்களா?'

'அவரது மனைவிகள் அனைவரும் இறந்துவிட்டனர். நான் அவரது காதலியாக இருந்தேன். அவருக்குப் பல காதலிகள் இருந்தனர் என்பது எனக்குத் தெரியும். இதற்காக நான் பொறாமைப்படவில்லை. அவரது காதலியாக இருந்தேன் என்பதற்காகப் பெருமைப் படுகின்றேன். அவர் வாழும் கரைக்கு என்னை அழைத்துச் செல்ல முடியுமா?'

'படகு தொலைவில் உள்ளது.'

'எனது பாதம் களைத்துவிடும் எனக் கருதவேண்டாம்.'

நானும் கிழவியும் நடக்க வெளிக்கிட்டோம். நடக்கும் போது மூசியது கிழவியல்ல, நானே.

கூரையில்லா வீட்டின் முன் தரையில் படுத்துக்கிடந்த இளம் பெண் அப்போதும் அவள் படுத்துக்கிடந்தாள்.

'இவளை உங்களுக்குத் தெரியுமா?'

'தெரியாது. அலைகளை எண்ணும் வயோதியரின் மகள் என என்னிடம் அவள் சொன்னதோடு மட்டுமல்லாமல் அவர் அலைகளை எண்ணிக்கொண்டிருக்கும் கரைக்குக் கூட்டிச் செல்ல முடியுமா எனவும் என்னிடம் கேட்டாள்.'

'நீ விரும்பினால் அவளையும் கூட்டிச்செல்லலாம்.'

அவளது மூடிக்கிடந்த விழிகள் தானாகத் திறபட்டன. அதே வேளையில் அவளது உதடுகளும்.

'எனது அண்ணன் கவிதைகள் எழுதுபவர். அவரைக் கண்டு பல வருடங்கள். அமைதிக் கிராமத்தில் நிறையக் கவிஞர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் காணாமல் போனபோது கூட எனது அண்ணன் பற்றிக் காணாமல் போகாதோர் பேசக்கேள்விப்பட்டேன். அமைதிக் கிராமத்தில் நீங்கள் நடத்திய குறுகிய பயணத்தின் போது ஓர் கவிஞரைக் கண்டீர்களா?'

'இல்லை, ஓர் நொண்டியைக் கண்டேன். தான் வழி காட்டியாக இருந்ததென்றும் இங்கே வாழ்ந்த வழி காட்டிகள் காணாமலும் காலமாகிவிட்டனர் என்றும் என்னிடம் சொன்னான். ஏன் அவர்களுக்கு இந்தக்கதி நடந்தது எனக்கேட்டபோது வானிடம் கேள் கடலிடம் கேள் ஆனால் மனிதர்களிடம் மட்டும் கேட்டுவிடாதே என்று சொல்லிவிட்டு தன்பாட்டில் சென்றுவிட்டான். அதன் பின்னர் உடல் முழுவதும் இரத்தம் வடிந்தபடியும் சாகும் தறுவாயிலும் ஓர் வாலிபனைக் கண்டேன். அவன் என்னிடம் எனக்குக் கவிதை விருப்பமா எனக் கேட்டுவிட்டு ஓர் தாளை வாசிக்கத் தந்தான். அதில் எந்த எழுத்துமே இருக்கவில்லை. ஆனால் இரத்தம் மட்டுமே இருந்தது. அவன் என்னிடம் தாளைத் தந்துவிட்டு இறப்பதற்கு முன் தனக்கு ஓர் சகோதரி இருப்பதாக சொல்லவில்லை. அதன்பின்னர் ஓர் சிறுவனைக் கண்டேன். அவன் எனக்கோர் கவிதையைச் சொன்னான். ஆனால் தான் அந்தக் கவிதையை



படிப்பகம்

www.padippakam.com

எழுதவில்லையென்றும் எழுதிய வர் காணாமல்போய் பல வருடங் கள் என்றான். கவிதையை மீளவும் சொல்லமுடியுமா எனக் கேட்ட போது அதனது கடைசி வரிகளை மட்டும் சொல்லிவிட்டுச் சென் றான்.'

'அவன் சொன்ன வரிகளை எனக்குச் சொல்ல முடியுமா?'

'அவளது மஞ்சள் உடலும் அழுகிக்கொண்டுள்ளது.'

'அது எனது அண்ணாவின் காதலி. உங்கள் முன் இறந்தது எனது அண்ணனே. அவரைக் கடைசியாகக் காணும் சந்தர்ப்பம் உங்களுக்காவது கிடைத்தது. எனக்கோ கிடைக்கவில்லை. அண் ணாவும் அப்பா போன்றவரே. ஆனால் மழைத்துளிகளை எண்ணு வதில் தனது காலங்களைச் செல வழித்தவர்.'

'நீங்கள் விரும்பினால் அவர் எங்கே மரணித்தாரோ அங்கு சென்று அவருக்குக் கடைசி அஞ் சலியைச் செலுத்தலாம்.'

'அவரது உடல்கூட இபோது காணாமல் போகும்படி செய்யப் பட்டிருக்கலாம். அங்கே போகா மல் நாங்கள் அப்பாவைக் காணச் செல்வோம்.'

நானும் கிழவியும் இளம் பெண்ணும் படகை நோக்கி நடந்து கொண்டிருந்தபோது சிறிதாக மழை பெய்யத் தொடங்கியது. நாங்கள் ஒதுங்குவதற்குக் கூரை களோ குடைகளோ இருக்க வில்லை, அவைகள் இல்லாதது எமக்கோர் பிரச்சனையாகவும் படவில்லை.

'ஆ! எவ்வளவு வருடங்க ளுக்குப் பின்னர் மழை பொழிகின் றது!' என்றபடி கிழவி வானத்தைப் பார்க்க வெளிக்கிட்டபோது நாங்க ளும் பார்க்க வெளிக்கிட்டோம். அவர்களது முகங்களில் ஓர் இனம் புரியாத பிரகாசத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. மழையை ரசித்தபடி நாங்கள் கரைக்கு வந் தோம்.

'நாங்கள் படகில் ஏறிக் கொண்டிருந்தபோது நொண்டி யும் சிறுவனும் எங்களை நோக்கி ஓடி வந்தனர். அவர்களையும் ஏற்றிக் கொண்டோம்.'

❑ ❑ ❑

மறுகரைக்கு படகு எங்களைக் கொண்டுவந்து இறக்கியபோது அங்கே இருளாக இருந்தது. எங் களை வரவேற்றது கோபம் கொண்ட காற்று. கொந்தளிக்கும் கடல் கரையை நோக்கி எறியும் அலைகளது ஒலிகள் எங்களது காதுகளைத் தொட்டன.

'அவர் எங்கே உள்ளார்?' எனக் கிழவி கேட்டாள்.

'தொலைவில் இல்லை. ஆனால் காலநிலை மோசமாக இருப்பதால் அவர் கரையில் இருப் பாரா என்பதில் எனக்குச் சந்தேகம் உள்ளது.'

'அவர் கரையில் இருப்பார்!' எனத் திட்டவட்டமாகச் சொன் னாள் கிழவி.

நாங்கள் நடந்தோம். நடந்து கொண்டிருந்தபோது காலநிலை அமைதிக்கு வந்ததுமல்லாமல் சூரியனும் தனது விழிகளைத் திறந் தது.

அவர் இருக்குமிடத்தில் யாரோ படுத்துக் கிடப்பது தெரிந்தது.

'அது எனது அப்பாவே' எனக் கத்தியபடி இளம்பெண் ஓடிய போது நாங்களும் அவளைப் பின்தொடர்ந்தோம்.

அவரைத் தூக்கித் தனது மடியில் வைத்தபடி 'அப்பா இறந்துவிட்டார்!' என மிகவும் அமைதியாகச் சொன்னாள். அவ ளது முகத்திலும் அவர்களது முகங் களிலும் கவலையையோ கண்ணீர்த் து ளி க ளை யோ காணமுடியவில்லை.

'அவரைப் பார்க்க எவ்வளவு ஆர்வத்துடன் இங்கு வந்தீர்கள். அவரோ இறந்துவிட்டார். ஏன் உங்களது விழிகளில் ஒரு கண் ணீர்த்துளிகூட இல்லை?' எனக் கேட்டேன்.

'அவர் அலைகளை எண்ணி முடித்துவிட்டார்' எனச் சிறுவன் மிகவும் அமைதியாகச் சொன்ன வேளையில் சில அலைகள் வந்து அவரது உடலைக் கழுவிவிட்டு திரும்பிச் சென்றன.

## அஞ்சலி



தூத்துக்குடியில் அமைந்துள்ள டாக்டர் அம்பேத்கர் அறக்கட்டளையின் ஸ்தாபகரும், புரவலருமான டாக்டர் ஆனந்தன் அவர்கள் 18.3.2004 அன்று இயற்கை எய்திவிட்டார். குழந்தை மருத்துவரான இரவது மறைவின் துக்கம் இன்னமும் காயல்பட்டிண மக்களின் மனதிலிருந்து அகலவில்லை.

தான் பிறந்த தலித் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு தொண்டாற்றுவதையே தன் உன்னத நோக்கமாகக் கொண்ட இம்மாமனிதர், தான் தொடங்கிய அம்பேத்கர் அறக்கட்டளையின் மூலம் எண்ணற்ற கல்விப் பணிகளையும், மருத்துவப் பணிகளையும் செய்து வந்தார். தன்னிடம் வரும் ஏழை நோயாளிகளுக்கு இலவசமாக மருத்துவ உதவி அளிப்பதை தனது கடமையாகக் கருதி செயலாற்றி வந்த டாக்டர் ஆனந்தனின் முயற்சியால், சுற்றுவட்டாரங்களில் உள்ள ஏழு கிராமங்களின் தலித் மக்கள் இலவச தடுப்பு ஊசி போடப்பட்டு மஞ்சள் காமாலை என்னும் ஆட்கொல்லி நோயிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.

மேலும், புதிய கோடாங்கி மற்றும் தென்னிந்திய தலித் எழுத்தாளர்கள் - கலைஞர்கள் பேரவைப் பணிகளை ஒருங்கிணைப்பதில் ஆர்வமுடனிருந்து இளைஞர்களுக்கான எழுச்சி முகாமினை நடத்து வதில் தீவிர ஈடுபாடுகொண்டு பணிபுரிந்தார்.

தலித் சமூக விழிப்பிற்கும் ஒற்றுமைக்கும் பணியாற்றிய டாக்டர் ஆனந்தன் அவர்களின் மறைவிற்கு புதிய கோடாங்கி தனது வீரவணக்கத்தை செலுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

■ சிவகாமி

# கடவுளும் [கந்தசாமி] பிள்ளையும்



இக்கதையைப் படிக்க புதுமைப்பித்தனின் கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் என்ற சிறுகதையைப் படித்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் என் அப்பா பெயர் கந்தசாமி, நான் அவரது பிள்ளை என்பது தவிர வேறு சம்பந்தம் ஏதுமில்லை.

ஒரு நாள் நான் அலுவலகத்தில் குழம்பிப்போய் உட்கார்ந்திருந்தேன். அன்று என் மனைவி எனக்கு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியிருந்தாள். அது எதிர்பார்த்ததுதான் என்றாலும் அப்படி ஒரு தாள் கைக்கு வந்து சேர்ந்தபோது தடுமாறினேன். அதே சமயத்தில் ஒரு அம்மா என்னைப் பார்ப்பதற்காக வெளியே காத்திருப்பதாக அலுவலக சிப்பந்தி சொன்னார்.

அலுவலகத்தில் நல்ல பெயரில்லை எனக்கு. வேலைகளை ஒழுங்காக செய்துவிடுவது மட்டுமின்றி, வேலை செய்யாதவர்களை நான் கேலி செய்வதும் ஒரு காரணம். அல்லது என்னுடன் வேலை செய்பவர்கள் இப்படியில்லாதிருப்பதும் காரணம். அலுவலக நேரங்களில் வேறு வேலை செய்துகொண்டிருப்பதாகவும், ஊழியர்கள் சங்கத்தில் ஆக்டிவ்வாக இருப்பதாகவும் வதந்தி கிளப்பப்பட்டு என் மீது புகார் பெட்டிஷன் நிலுவையிலிருந்தது. இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்துவிட்டு முதல் வகுப்பு டிக்கட் தொகையைப் பெற்றுக்கொண்டதற்காக புகார் ஒன்றும் நிலுவையிலிருந்தது. ஒருவன் தவறு செய்தானா இல்லையா என்பது அவ்வளவு முக்கியமில்லை. இந்தப் புகார்கள் நிலுவையிலிருப்பதே போதுமான தண்டனையாகும். அந்த வகையில் அந்த அலுவலகத்தில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்தேன்.

சிப்பந்தியைப் பின் தொடர்ந்து மூவ்மெண்ட் ரெஜிஸ்டரில் எழுதிவிட்டு வெளியே வந்தேன். எனது அலுவலகம் நகரத்தின் நடுவில் இருந்தாலும் சுற்றி மரங்கள் அடர்ந்து இருந்தது. ஒரு மரத்திற்கடியில் வெள்ளைச் சேலை பெண்மணி நின்றுகொண்டிருந்தார். அவர் தவிர வேறு யாரும் அங்கில்லை. அவர்கள்தான் என்னைத் தேடி வந்திருப்பவராயிருக்கக்கூடும் என ஊகித்து அவரிடம் சென்றேன். மரப் பெஞ்சில் அமர்ந்திருந்த அவர் என்னைக் கண்டதும் எழுந்து வணக்கம் கூறி முகமலர்ந்தார். எனது மனைவியுடன் பிரச்சினை என்பது என் அலுவலகத்தில் எல்லோருக்கும் தெரியும். ஏனென்றால் ஒரு நாள் அலுவலகத்திற்கு வந்து என்னை வாடா போடா என்று ஏக வசனத்தில் திட்டிவிட்டு போயிருந்தது அது. ஆகையால் வேறு பெண்களுடன் பேசுவதைத் தவிர்த்திருந்தேன். வீணான வதந்திகள் உருவாவதையும், ஏற்கனவே என் மனைவி என் மீது வைத்த புகார்கள் உண்மைதான் என்று யாரும் நம்பி விடக்கூடாது என்பதற்காகவும். இந்த அம்மா, அம்மாவாக இல்லை. நடுத்தர வயதினராயிருந்தார். நாகரீகம் கருதி அவரை அம்மா என்றழைத்தேன்.

'உட்காருங்கள்' இனிமையான குரலில் அந்தம்மா சொன்னதும் ஆட்டுக்குட்டி போல உட்கார்ந்தேன். அவர்கள், விதவையா, கிறித்துவரா அல்லது பிரும்மராஜ குமாரிகளில் ஒருவரா என்று சொல்ல முடியாதபடி அவர் தோற்றம் இருந்தது.

எனக்கு சிறிய வயதிலிருந்தே என்னைப் பற்றிக் கற்பனைகளும் கனவுகளும் உண்டு. அந்தக் கனவுகளையும் கற்பனைகளையும் பின் தொடரும் விருப்பம் எனக்கு இல்லை. ஆனால் அந்தக் கனவோடு சம்பந்தப்பட்ட ஆட்கள் என்னைப் பின்தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள் இன்னமும். இதை நான் நிச்சயமாக நம்புகிறேன். ஒரு நாள் எங்கள் வீட்டு வாசலில் கிடந்த பலகைக் கல்லில் மல்லாந்து படுத்து வானத்தைப் பார்த்தவாறிருந்து பிறகு தூங்கிவிட்டேன். தூக்கத்தில் இடிஇடிப்பது போல மிகப் பெரிய சத்தம். பிறகு தொடர்ந்து வானத்தில் சிலுவை ஒன்று ஒளி அச்சாக என் கண்ணுக்குத் தெரிந்தது. நான் மண்டியிட்டு யேசுவே என வணங்கினேன். இயேசு எனக்குக் காட்சியளித்து விட்டாரென புலம்பினேன். தூக்கம் விழித்ததும் இந்தக் கனவை மறந்து விடக் கூடாது என பத்திரப் படுத்திக்கொண்டேன். அவ்வளவு புளகாங்கிதமடைந்திருந்தேன், நான்.

அடுத்த நாள் நான் ஒரு



படிப்பகம்

www.padippakam.com

கிறித்துவ பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்பட்டேன். பெயரெழுதியதும் என்னை சர்ச்சுக்கு விரட்டினார்கள். அங்கே போனதும் நான் வானத்தில் கண்ட அதே சிலுவையைக் கண்டேன். என்ன ஆச்சரியம்! நான் புரிந்து கொண்டேன், கடவுள் என்னைப் பின் தொடர்கிறாரென்று.

வெவ்வேறு வழியில் என்னைப் பின் தொடர்ந்தார். குறிப்பாக எனது நல்லொழுக்கப் பாடப் புத்தகங்கள் மூலமாக, விவிலியம் மூலமாக, எனது பக்கத்து வீட்டுக்குக் குடிவந்த போதகரின் அழகான பெண் மூலமாக, ஏன்தான் இப்படி இவர் என்னை விடாமல் பின் தொடருகிறாரோ, ஒவ்வொரு முறையும் மனந்திரும்பு, மனந்திரும்பு என்கிறார். இதை நான் எனது வேலைக்கு இடையூறாக எண்ணத் தொடங்கினேன். நான் படிக்கும் காலத்தில் என்னைப் படிக்கவிடாது, சதா சர்வகாலமும், படிக்கும்போது மூக்கை நோண்டாதே என்றும், படித்ததைப் பகிர்ந்து கொள்ள முடியாதபடி அநாவசியமாய்ப் பேசாதே என்றும்என் பக்கத்துவீட்டுப்பெண்ணை நேசித்தபோது, தவறு செய்யாதே என்றும் எத்தனைத் தொல்லைகள்! முறையாக நான் காதலித்த பெண்ணிடம் உறவு வைத்துக் கொள்ள முயற்சித்தபோது விரைவில் ஸ்கலிதமாகி அவளால் வெறுக்கப்பட்டதுவரை எத்துணை மோசமானது அவரின் தொடரல்கள்!

முன்பெல்லாம் கிறிஸ்து என்ற ஒரே நபர்தான் கடவுள், அவர்தான் என்னைப் பின் தொடர்கிறார் என்று நம்பிக்கொண்டிருந்தேன். மேற்படிப்புக்கு இந்துக் கல்லூரி சேர்ந்ததும் அங்கே குடிகொண்டிருந்த கற்களெல்லாம் விநாயகரென்றும், சிவனென்றும் இன்னும் என்னென்னமாற்றுப் பெயர்களிலெல்லாமோ பின்தொடரத் தொடங்கி விட்டார்கள். சென்ற வாரம்கூட எங்கள் அலுவலகத்துப் பெண்கள் ஒரே மாதிரியான புடவை கட்டிக் கொண்டு கோஷ்டியாக கேரளத்து அமிர்தானந்தமயியை தரிசிக்க கிளம்பினார்கள். பிரம்ம ராஜகுமாரிகள் என்று ஒரு பட்டாளம் வேறு அலுவலகம் அலுவலமாக அலைந்து கொண்டிருந்தன. கடவுளர்கள் மனிதர்களைப் பி(பீ)டிக்கும் ஆட்களாகி தெருவில் அலைந்து கொண்டிருந்தார்கள்.

இந்த ஊரில்தான் கடவுள் வெவ்வேறு ரூபங்களில் பின் தொடருகிறார் எனக் கருதிக் கொண்டிருந்தேன். அவர் கடல் கடந்து கண்டி வந்துவிட்டார். கண்டியில் தாயாதி வழியில் எனது உறவினர்கள் இருந்தார்கள். நாங்கள் முன்னோர்கள் சொத்தை விற்க நினைத்தபோதுதான் அவர்கள் ஞாபகமே எங்களுக்கு வந்தது என்பது வேறு விஷயம். முன்சாக்கிரதையாக அவர்களிடம் ஒரு கையெழுத்து வாங்கி வந்துவிட்டால் நல்லது என்று பங்காளிகள் என்னை அனுப்பியிருந்தனர். அப்போது எனக்குத் திருமணம் ஆகியிருக்கவில்லை. வயது இருபத்திமூன்றுதான். வேலைக்கு வந்த புதிது. வயதுள்ள எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் எனது குதிரை தறித்துக்கொண்டு பறந்த காலம் அது. கண்டியில் ஒரு டவுன் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த போது மிடி அணிந்த இளநங்கை என்னைப் பார்த்துச் சிரித்தாள். நான் குறும்புடன் அவளைப் பார்த்தேன். அவளும் நானும் பார்வைகளைப் பரிமாறியவாறு பயணம் செய்தோம். ஓடிக் கொண்டிருந்த வண்டியில் நின்று கொண்டிருந்த என்னை நெருங்கினாள் அவள். பஸ், ஸ்டாப்பில் நின்றது. உடனே அவள் ஒரு காகிதச் சுருளைக் கையில் திணித்து விட்டு விடுவிடுவென இறங்கி நடந்து விட்டாள். அவளைப் பார்ப்பதா, அவள் கொடுத்த காகிதத்தைப் படிப்பதா என திகைப்பை விலக்கிக் கொண்டு, காகிதத்தைப் பிரித்தால் அது 'இயேசு அழைக்கிறார்' என அச்சிட்ட காகிதம். பிரித்த வேகத்தில் கசக்கித் தூக்கியெறிந்துவிட்டு மீதிப் பயணத்தை முடித்தேன்.

எங்கள் அலுவலகத்தின் கிளை ஊட்டியில் உள்ளது. அதற்கு கணக்குக் கண்காணிப்பாளராக நாலைந்து வருடங்களுக்கு முன் சென்றிருந்தேன். உட்கார்ந்து செய்யும் வேலையாதலாலும், அதிகமாக உண்ணப் பழகிவிட்டதாலும் செல்வமான தொப்பை உண்டு எனக்கு. இப்படி தொப்பை போட்டு விட்டேனே என எப்பொழுதாவது வருத்தப்படுவதுமுண்டு. அப்போதெல்லாம் வேகமாக கைகளை வீசி நடப்பேன். அன்றும் அப்படித்தான். ஒரே நாளில் தொப்பையைக் கரைத்துவிடுவது போல தேயிலை மலைச் சரிவில் நடந்து கொண்டிருந்தேன். அப்போது கருத்த மூதாட்டி ஒருவர் எதிர்ப்பட்டார். தம்பி என்றார் பாசமாக, நான் சடன் பிரேக் போட்டு நின்றேன். அன்பும் பாசமுமின்றி எல்லோராலும் நிராதரவாகக் கைவிடப்பட்டவன் என்ற நினைப்பு அடிக்கடி என்னை வருத்திக்கொண்டிருந்ததால் (எவ்வெப்பொழுது சவுகரியமோ அவ்வப்பொழுது இவ்வாறு கற்பனை செய்து வருத்திக்கொள்வது எனக்குப் பிடிக்கும்) - தான் இந்த சடன் ப்ரேக். பாட்டி... நானும் பாசத்துடன் அழைத்தேன்.

பிரம்ம ராஜகுமாரிகள் என்று ஒரு பட்டாளம் அலுவலகம் அலுவலமாக அலைந்து கொண்டிருந்தன. கடவுளர்கள் மனிதர்களைப் பி(பீ)டிக்கும் ஆட்களாகி தெருவில் அலைந்து கொண்டிருந்தார்கள்.

"கடவுளைப் பார்த்திருக்கியா தம்பி?"

இந்த விநோதக் கேள்வி என்னைக் கடவுளிடமே அழைத்துச் சென்றுவிட்டது.

"நான் பாத்திருக்கேன்" - அந்த மூதாட்டி தொடர்ந்தார். "அதோ அந்த கீரைப் பாத்தி இருக்குல்ல. (கீரைப் பாத்தி இருந்தது) அதில களை புடுங்கிக்கிட்டே, சேசுவே நீ இருக்கிறது உண்மையா இருந்தா, என் கண்முன்னாடி வான்னேன். சொல்லும்போதே இடி இடிச்சுது. அண்ணாந்து பார்த்தேன். வானத்தில் வெளிச்சமா ஒரு சிலுவை!"

நான் பேச்சு மூச்சற்றுப் போனேன்.



படிப்பகம்

www.padippakam.com

"இன்னொரு நாள் இந்த ஒழிங்கியில (ஒரு சிறிய வேலி யடர்ந்த பாதை தேயிலைக் காடு களுக்கூடாக ஓடிக்கிடந்தது) நான் போயிட்டிருந்தபோது, மாடுகள் திமுதிமுன்னு வந்துச்சி. ஐயோ மாடு வருதுன்னு நான் பயந்து ஓரமா ஒடுங்கறேன். அப்ப ஒரு சின்ன பையன் கல்பொறுக்கி வெளையாடிட்டிருந்தான். அவன் 'மாணிக்கம், ஏன் பயப்படுறே' அப்பிடின்னான். அவனுக்கு எப்படி எம்பெயர் தெரியும்னு நெனச்சிக் கேக்கலாம்னு பாக்குறதுக் குள்ளாற அவனைக் காணோம். அது வேற யாருமில்ல. ஜீசஸ்தான்."

நான் மலைத்துப் போய் நின்றேன்.

"தம்பி, போங்க இருட்டறதுக் குள்ள போயாகணுமில்லே"

நான் மெல்ல நடந்தேன். முனை திரும்பியதும் அந்தப் பாட்டியைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. திரும்பி நடந்தேன். அங்கே அந்தப் பாட்டி யில்லை. யாருமில்லை. நான் கடவுளால் சோதிக்கப்படுகிறேன் என்பதை அறிந்துகொண்டேன். எனது நண்பர்கள் சொன்னார்கள் 'டேய், அந்தப் பக்கத்தில் எதினாச்சும் குடிசையிலிருந்துருக்கும்டா பாட்டி, சும்மா கதை விடாத' என்றார்கள். அவர்கள் சொல்வது உண்மையா, நான் சொல்வது உண்மையா? என்னைக் கடவுள் பின் தொடர்கிறார் என்ற என் நம்பிக்கைக்கு விரோதமாக யார் எது சொன்னாலும் நான் நம்பும் நிலையில் இல்லை என்பதுதான் உண்மை. இப்படி கனவுகள் வடுக்களைப் போல ஆழப்பதிந்து என்னைப் பல்வேறு தடயங்கள் மூலம் பின் தொடர்ந்தன.

இன்று இந்தம்மாவின் கள்ள மற்றச் சிரிப்பில் மகுடிக்கு மயங்கிய பாம்புபோல் சுருண்டிருந்தேன். அவர்களை கடவுளின் வடிவாகவே கண்டேன்.

"உங்களைப் பற்றிக் கேள்விப் பட்டேன்"

உள்மனதில் மனைவி அனுப்பி யிருந்த விவாகரத்து நோட்டீஸ் வரிவரியாக ஓடிக் கொண்டிருந்தது.

"வாழ்க்கையில் பல பிரச்சி னைகள் வரும். அதிலிருந்து மீள ணும். எதற்கும் பயப்பட வேண்டாம். உங்களுக்கு நான் இருக்கி றேன்."

இதுகாறும் நான் அறிந்திராத தெய்வீக உணர்ச்சி என்னுள் பரவு வதை உணர்ந்தேன்.

புன்னகைத்து, தொலைபேசி எண்ணைக் கொடுத்தார்கள். நான் வாங்கி பத்திரப்படுத்திக் கொண்டேன்.

எனது இருக்கைக்கு வந்து உற்சாகமாக வேலைகளை கவ னிக்க ஆரம்பித்தேன்.

புகைப்பது, மதுவருந்துவது, புலால் உண்ணுவது, உடலிச்சை யில் ஈடுபடுவது தவிர்க்கக்கூடியது என்று தொலைபேசியில் பல விஷயங்கள் பேசும்போது கூடவே சொல்வார்கள். அப்போதெல்லாம் அவை பொதுவான விஷயங்கள் என வாளாவிருப்பேன்.

நான் புகைப்பதில்லை. எப் போதாவது மதுவருந்துவது உண்டு. அதுவும் நண்பர்களுடன் அளவோடு. அப்போதெல்லாம் புத்துணர்ச்சியும் உற்சாகமும் அடைவதுண்டு. அப்பழக்கத்திற்கு நான் அடிமையில்லை என்பதால் அதைத் தவறென்றே எண்ணு வதில்லை. உடலின்பம் என்பது காஸ்ட்லி சமாச்சாரமாகி விட்டது. பிறருடைய உணர்வுகளுடன் நாமும் ஒன்றாகிக் கலப்பது அபூர்வ (ஏழு கடல் ஏழுமலை தாண்டி கிளியின் வயிற்றில் உள்ள வைரக் கல் போல) மாய் நிகழ்வது. அதை யடைய நான் செய்த பிரயத்தனங் களில் பலமுறை தோல்வியுற்றிருக் கிறேன். அதற்காக அதை வெறுக்க வில்லை நான். வாழ்க்கையிலும், மனித உறவிலும் நம்பிக்கைக் கொள்ளச்செய்யும் உன்னதங்களில் அதுவும் ஒன்று என்று மதிப்பவன் நான். அதை ஏன் ஒரேயடியாக விட்டுவிடச் சொல்லி வற்புறுத்து கிறார், இந்த அம்மா? எனது விருப்பு வெறுப்புகள் யாரையும் இம்சிக்காது எனது கட்டுக்குள் ளேயே இருக்கும்போது கடவுள் ஏன் பிடிவாதமாய் என் வாழ்வில் வந்து அதைச் செய்யாதே இதை செய்யாதே என வற்புறுத்துகிறார்?

ஆனால் அவரது பேச்சினால் நான் மிகவும் கவரப்பட்டேன். அவர் யார், என்ன, ஏன், எதற்காக இது என்ற கேள்விகள் ஏதுமின்றி அவரை நேசிக்கத் துவங்கிவிட் டேன். விவாகரத்து நோட்டீஸ் வந்தபோது அசரீரி போல் வந்த அவரை எந்தக் கேள்விகளுக்கும் உட்படுத்த விரும்பவில்லை.

"மனித உறவுகளுக்கு அப்பாற் பட்டு, சமூகத்தினால் இழிவெனக் கருதப்படுகின்ற அனைத்து பழி பாவங்களிலும் இருந்து விலகி உயர்ந்து இந்த மானுடத்துக்கு வழி காட்டுபவன் நீ. அதனால் கடந்து விடு இந்தப் பாலங்களை. நீ தேர்ந் தெடுக்கப்பட்டவன். இதை நீ உணராதிருக்கிறாய். மகனே எழுந்து விடு. பல உன்னதங்களை நிகழ்த்தப் போகின்றவன் நீ."

தொலைபேசியில் அம்மா பேசிக் கொண்டிருந்தார்கள். நான் படுத்தவாறே கேட்டுக் கொண்டி ருந்தேன்.

"அம்மா, இந்த மனிதன் மேல் இரக்கம் கொள் அம்மா. என்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டார் கள் நேற்று. இன்னும் ஓரிரண்டு வருடங்களில் நான் மாற்று வேலை தேடிக் கொள்ளாவிட்டால் பிச்சை யெடுக்கும் நிலைக்கு வந்து விடு வேன் அம்மா. இந்த பயம் உன் அரவணைப்பை நாடுகிறது. நீயோ இரக்கமில்லாமல் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு பழிவாங்கப் பட்ட என்னை இம்சிக்கிறாய்."

நான் எனக்குள் இவற்றைச் சொல்லிக் கொண்டிருந்தபோது கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அம்மாவின் குரல் நின்று விட்டி ருந்தது. அவர் வேறு மகன்களுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு உபதேசம் செய்யக் கிளம்பியிருக்க லாம்.

கடவுள் கனவில் தோன்றுவது நன்மையா? தீமையா? என் கனவு களின் பலனை யார் சரியாகச் சொல்லக்கூடும்? ●



படிப்பகம்

www.padippakam.com

# நாய்க்கடன்

■ நீலவன்

**அவங்க தெருவுல வண்டிமேல ஒக்காந்துக் கிட்டு போவக்கூடாது. தெருவு வந்ததும் எறங்கி கயித்த முன்னால இழுத்துக்கிட்டுதான் நடந்து போவணும். நாலஞ்சி நடக்கி மனுசன் நடந்து பாத்திருக்காரு. அலுத்துப் போச்சி. சரி, மசுரானுவ என்னதான் பண்ணிப்புடுவானுவன்னு அடுத்த நடக்கி வண்டியில உக்காந்து கிட்டே ஓட்டிக்கிட்டு போயிருக்காரு.**

**பா**ட்டி சோறெடுத்து வைத்தாள். கிண்ணத்தில் குழம்பு இருந்தது. ஒருவாய் சோற்றிலேயே புரிந்து விட்டது. உப்பு சப்பு இல்லை. காரம் இல்லாம அப்படி என்ன சாப்பிடுவது? கொஞ்சம் செறுமிக் கொண்டே கேட்டேன்.

"ஒங்க ஆண்ட ஊட்டு கொழம்பா இது"

"ஆளு கொம்பன்ல. ஆமா அங்கிருந்துதான் வாங்கிட்டு வந்தன்"

"ஒனக்கு எத்தன தடவ சொல்றது, குண்டாந் தூக்கிக்கிட்டு போய் நின்னுக்கிட்டு மானத்த வாங்காதன்னு" கொஞ்சம் காட்டமாகவே கேட்டேன்.

"ஒப்பன் எத்தன காணி சம்பாதிச்சி வச்சிருக்கான் அவுங்களுகிட்ட கையேந்தாமா இருக்க, விறுவாடு வேணுமே"

"எதிர்த்த ஊட்ல வாங்க மட்டும் ஒரு பழமொழி சொல்லுவியே, அதெப்படி?"

"ஆமா. காடி கஞ்சான்னாலும் மூடிக் குடிக்கணும்னு. அது வேற, இது வேற. ஒரு கரண்டி கொயம்புல ரெண்டு கரண்டி தண்ணி ஊத்தி குடுக்கறதும் இல்லாம, நாளக்கி தொசுக்குன்னா, மல்லு கட்டிக்கிட்டு சொல்லிக்காட்டிப்புடுவாள்ல"

"ஒங்க ஆண்ட ஊட்ல மட்டும் என்னவாம். ஒரு கிண்ணி கொழம்புக்கு அவுங்கூட்டு பத்து பாத்திரத்த தேச்சி போட்டுதான வந்திருப்ப. ஒன்னல்லாம்... திருத்தவே முடியாது" என தட்டை தள்ளி விட்டேன்.

"ஏண்டா கலிகானம் கத்தவன, எனுமோ இப்பத்தான் புதுசா ரோசம் வந்திருக்கிறமாரி பீத்திக் காதிங்கடா. நீங்கதான் சாதி மானம் காக்க வந்தமாதிரி குதியா குதிக்கிறீங்க" என பாட்டி கொஞ்சம் கோபமாகவே பேசினாள். நான் சரியாக சாப்பிடவில்லையே என்கிறதும் காரணமாக இருக்கலாம்.

வாயிலிருந்த வெற்றிலைச் சாறை துப்பிவிட்டு, "அந்தக் காலத்துல ஏ மூட்டுக் காரரு பண்ணாததயா நீங்கள்லாம் பண்ணப் போறிங்க" என்றாள்.

"என்னா அப்பிடி பண்ணிப்புட்டாரு. சூராதி சூரன்ப, வீரன்பா"

"அப்பல்லாம் நம்ம ஆளுவ செருப்பு போட்டுக்கிட்டு ஊர்த் தெருவுல நடக்க முடியாது. தலையிலை வச்சிகிட்டுதான் போவணும். ஆண்டைவுல கண்டா சாமின்னு ரெண்டு கையும் எடுத்து கும்புடணும். வேட்டிய கீட்டிய மறந்து போய் ஒடத்தாரு உட்டு கட்டிக்கிட்டுப் போயிட்டா, அவ்வளவுதான். வேட்டிய உருவி கமக்கட்டியில வச்சிட்டு கோமணத் துணியோடத்தான் நடக்கணும். அதிலயும் நல்லொடையான் அப்பன் சுப்பு, பொல்லாத பொச்சரிப்பு உள்ளவனா இருந்தான். நம்மாளுவ அசமந்தமாரி வேட்டிய குதி பொரள உட்டுக்கிட்டு போறத பாத்துட்டா கூப்டு நல்லா பேசுற மாரி பேசுவான். நாலஞ்சி வெத் தலய போட்டு நல்லா கொயிக்க கொயிக்கமென்னு அப்பிடியே கொலய வேட்டில துப்பிடுவான்.

'பறப்பயலுக்கு அம்புட்டு ஆச்சாடா, குடியானவன் முன்னாடி மாப்ள நட நடக்க' - ம்பான். அட நாங்க பொம்மனாட்டிவ கூட, சீலய மாராக்கு போட்டுக்கிட்டு போவ முடியாது, குளிக்கப் போறமாரி ஒடம்ப சுத்திக்கணும்."

"சரி சரி, ஒம்புருசன்காரன் என்ன செஞ்சாரு. அத சொல்லன்" என்றேன்.

பாட்டி புகையிலை சக்கையை துப்பிவிட்டு வாய் கொப்பளித்தாள். வீட்டுக்காரர் பற்றி சொல்லப் போவதில் அவள் முகம் சந்தோசம் அடைந்திருந்தது.

"அப்ப நமக்கு ஆண்ட பரமசிவம் கோனாரு ஊடுதான். அவுரு பாட்டியின் புருஷன். அவள் எப்போதுமே அவரின் பெயரைச் சொல்லுவதில்லை. கேட்டால் வெட்கமாய் சிரிப்பாள் அல்லு பவ அறுவது நாயிகயும் அங்கதான் கெடப்பாரு. நாலாளு வேலய மனுசன் ஒண்டியா செய்வாரு. பாட்டாசாரியான ஆளு."

"ஏன்னா ராஜ வம்சம்ல. அப்டித்தான் இருந்திருப்பாரு" என நான் கிண்டலடிக்க, அவளுக்கு சுள்ளென்று கோபம் வந்துவிட்டது.

"ராஜா இல்லாத பின்ன என்னடா. இருவது பேத்த ஒத்தயா நின்னு கைகால ஒடச்சவரு அவரு"

"ஆ... ஆ... நல்லா கத உடுறியே. பொங்கலுக்கு திரைப்படம் காண்பிச்சமே, அதுல பாத்து உல் டா



படிப்பகம்

www.padippakam.com

பண்றியா" என்றேன். வருடா வருடம் பொங்கல், தீபாவளி விழாக் களுக்கு இளைஞர்களாக சேர்ந்து கூத்தோ, திரைப்படமோ வைப் போம். இன்னும் பாயையும் போர் வையையும் தூக்கிக்கிட்டு ஊர்த் தெருவுக்கு சனங்கள் செல்லக் கூடாதே என்பதற்காகத்தான்.

"ஆமா, டுப்பாக்கால டொமில் டொமில்னு சுடறது ஒரு சண்டை யாடா. ஏ மூட்டுக்காரரு அன்னிக்கு ஊர்த்தெருவையே கலக்கி வச்சிட் டாருல்ல"

"என்னத்த கலக்குனாரு. நீராறத் தண்ணியில உப்பு போட்டு கலக்கி யிருப்பாரு"

"சொல்றத காதுல வாங்கிட்டு பேசுறா. அது அறுப்பு நாளு. வெள்ளாமைன்னாலும் வெள்ளாமை அப்பிடி ஒரு வெள் ளாமை அந்த வருஷம். ஏரி வயக் காடு அறுத்து கெடக்குது. கட்டு கட்ட ஒரு ஆளு ஆம்படல. கோனாரு, அவரு, நானு. நாங்க மூனு பேரும்தான். அவரு எங்க ளோட கட்டு கட்டறதோட இல் லாம, ஒவ்வொரு கட்டா கரமேல தூக்கிக்கிட்டுப் போய் வண்டியில அடுக்குவாரு. வண்டி நெறஞ்சதும் ஓட்டிக்கிட்டு போயி களத்துல தள்ளி புட்டு வருவாரு. அப்ப என்ன பயக்கம்னா, நம்மாளுவோ அவங்க தெருவுல வண்டிமேல ஒக்காந்துக் கிட்டு போவக்கூடாது. தெருவு வந்ததும் எறங்கி கயித்த முன்னால இழுத்துக்கிட்டுதான் நடந்து போவ ணும். நாலஞ்சி நடக்கி மனுசன் நடந்து பாத்திருக்காரு. அலுத்துப் போச்சி. சரி, மசுரானுவ என்னதான் பண்ணிப்புடுவானுவன்னு அடுத்த நடக்கி வண்டியில உக்காந்து கிட்டே ஓட்டிக்கிட்டு போயிருக் காரு. அவுத்த இருந்த அம்புட்டு பேரும் அப்பிடியே வளச்சிக்கிட்டா னுவ. வண்டிய உட்டு எறங்கு டான்னு மானம் ஈனம் இல்லாத பேசியிருக்கானுவ. அவருக்கு வந்தது எரிச்ச. வண்டி மொளக் குச்சி ரெண்ட புடுங்கிக்கிட்டு, குதிச்சி, இண்டு சிண்டு இல்லாம வெலாகோவியிருக்காரு. கிட்ட ஒருத்தரும் நெருங்க முடியல. மூட்டு நயிவுனுது, மண்ட ஒடஞ்சதுன்னு, ஆளு ஆளுவலும் பிச்சிட்டு ஓட, காடு கரக்கி போயிருந்தவங்கலாம் வந்து தெரண்டுக்கிட்டானுவ. வந்ததுவர்றட்டும்னு வண்டியில ஏறி ஒக்காந்துக்கிட்டு மாட்ட தட்ட ஆரம்பிச்சிட்டாரு.

அது மாடுன்னாலும் மாடு. அவர தவிர ஒருத்த கிட்டப் போவ முடியாது. முன்னாடி வந்தவன்கள எல்லாம் மாடும் சீற ஆரம்பிச் சிடுச்சி. களத்துல கட்ட எறக்கி உடாமக்கூட நிறுத்திப்புட்டு ஊட் டுக்கு வந்திட்டாரு.

சேதி தெரிஞ்சி ஓடி வந்து பாத்தா, மனுசன் கரும்பு வெட்ற அறுவாள எடுத்துக்கிட்டு 'வர்ற வன் வரட்டும், உசுரு எனக்கு மசுருக்கு சமானம்'னு செறுத்துக் கிட்டு நிக்றாரு."

"அப்புறம்" என்ன அறியாம லேயே ஆர்வம் பொங்கக் கேட் டேன்.

"அப்புறம் என்ன, ஊரு ஆளுவ லும் சேரி ஆளுவலும் ஒக்காந்து பேசுனாங்க. பறையனுவ ஒருத்தன் கூட இவுருக்கு துணையாப் பேசுல. அதுலயும் தொராளி இருக்கானே, அவன் அப்பன் 'சாதிக்கட்டு மானம்னு ஒன்னு இருக்கும்போது மீறனது தப்புதான்'னு சொல்றான். வயித்து பொயப்புக்கு என்ன பண்றதுன்னு பங்காளி நாயிவகூட ஒரு வாத்த பேசல. சும்மா சொல்லக் கூடாது நம்ம கோனாருதான்

'ஆமாய்யா, அவன் நம்ம வீட்டு வேலையத்தான செய்யறான். அவ னும் மனுசன்தான. எத்தன வாட்டி தான் நடந்து நடந்து மாளுவான். ஏஞ்சாதிக்காரங்கன்னு வரிஞ்சி கட்டிக்கிட்டு நிக்கிறீங்களே, எவனா வது ஏமூட்டு வேலய செய்ய வரு வீங்களா. அவன்தான் தொணக்கி வர்றான். இனிமே வண்டி மேல தான் வருவான். ஆவ முடிஞ்சது பாத்துக்குவம்'னுட்டாரு. அவரு வேலத்தலயில மொட ஏற்பட்டும்னு அப்டி சொன்னாரோ இல்லியோ, அந்தப் பிரச்சினை அப்படியே அமிங்கி போயிருச்சி. அதோடு, கோனாரு ஊட்டுவளவு கொஞ்சம் அப்ப மெசாட்டியா இருந்ததால, குதிச்சிட்டு கெடந்த ஒடையானுவ ஒண்ணும்பண்ண முடியாத போச்சி.

அது மொதக் கொண்டு நம்ம

> ஏண்டா கலிகானம் கத்தவன, எனுமோ இப்பத்தான் புதுசா ரோசம் வந்திருக்கிறமாரி பீத்திக்காதிங்கடா. நீங்கதான் சாதி மானம் காக்க வந்தமாதிரி குதியா குதிக்கிறீங்க"

ஆளுவலுக்கும் துணிச்சல் வந்தி ரிச்சி. வண்டியிலேயும் ஏறுனானுவ, வேட்டியும் கீப்பா போட்டு கட்டிக் கிட்டானுவ, மீசயயும் முறுக்கி உட்டுக்கிட்டா னுவ

இப்ப புரியுதா நீங்கள்லாம் இன்னிக்கு அவனுவ ஊட்டு புள்ளி வுலயே தொரத்திக்கிட்டு திரியற அளவுக்கு வெத போட்டது எம் புருஷன்காரருன்னு" என்றாள் பாட்டி.

"அதுலாம் சரி. ஒமூட்டுகார னுக்கு இருந்த ரோசத்துல பாதி கூட ஒனக்கு இல்லையே"

"என்னா ரோசம்"

"இன்னும் அவனுவ ஊட்ல போய் சோறு கொயம்புன்னு நிக்கி றியே"

"எலே இதுக்குலாம் காரண மில்லாம நான் செய்யலடா. நம் மூட்டு ஒழப்பு, கொஞ்ச நஞ்சமா அவங்க ஊட்ல. ஏழேழு தலை முறைக்கு நமக்கு சோறு போட் டாலும் அவங்க கடன் தீராதுரா. நல்லது செய்ஞ்சவன் கடன. இந்த பொறப்பு இல்லன்னாலும் அடுத்த பொறப்புக்காவது நாயா வந்து தல காய காவகாத்து தீக்கனும்னு பெரிய வங்க சும்மாவா சொல்லியிருக் காங்க" என்றாள் பாட்டி

பாட்டிக்குள் இருந்த நியாயமும் என்னை யோசிக்க வைத்தது.

•



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை

■ குடியரசு

# தேநீரும் உரையாடலும்



**யானையின் பலம் எதிலே - தும்பிக்கையிலே**
**மனிதனோட பலம் எதிலே - நம்பிக்கையிலே...**

என்ற வரிகளில் வாழும் தனித்துவம் மிக்க மனிதன் நான். தும்பிக்கை வெளிப்படையாகத் தெரிகிறது. யானையின் பலமும் வெளிப்படையாகத் தெரிகிறது. என்னுடைய "பலம்" - அதை ஒவ்வொரு கணமும் இருத்திவைக்க போராட வேண்டியிருக்கிறது நம்பிக் கைக்காக. நம்பிக்கையை எப்படி நிரூபிப்பது? தொடர்ந்து தேர்வுகள்; தேர்வில் வெற்றிபெற தொடர் உழைப்பு; வெற்றியைப் பரிசிக்கும் முன்பே அடுத்த தேர்வு; தேர்வு கண்டு நான் வருத்தம் கொள்ள விரும்ப வில்லை; ஒரு நம்பிக்கையை உணர்த்த எத்தனை முறை தேர்வு எழுதுவது? இறுதி வெற்றியை எனதாக்கிக் கொள்ளும் வரையிலா? இதற்கு இறுதி என்று ஏதே னும் உண்டா? இல்லாமலிருக்கலாம். ஆனால் இதி லும் ஒரு சுகம் விரவிக் கிடக்கிறது. அலைகளின் மேல் காற்றாய் தவழ்வது போல ஒரு இன்பம். தொடர்ந்த அசைவை நிறுத்தி என்னுடைய தவழும் பருவத் திலிருந்து என்று எழுந்து நிற்பேனோ?

அன்று, நான் பணிபுரியும் நிறுவனத்தினுள் வேக மாக உட்சென்றேன். காரணம் அலுவலகம் ஆரம் பிக்கும் நேரம் கடந்து டீ (தேனீர்) பருகும் நேரம் வந்து விட்டதுதான். என்னுடைய அவசர நுழைவு தாமதம் கருதி அல்ல. நான் டீ விரும்பி சாப்பிடுபவன் அந்த நேரம் வந்துவிட்டது என்பதற்காக மட்டுமே.

எனக்கு டீ-யின் மீதுள்ள விருப்பம் சாதாரணமான தல்ல. மிகவும் வன்முறையானது. என்னுடைய எதிரி கூட டீ தந்தால் வாங்கி மறுப்பேதும் கூறாமல் குடித்து விடுவேன் என்று என்னுடைய எல்லா நண்பர் களுக் கும் தொடர்ந்து டீ சாப்பிடும் நாளாக கூறிவருகிறேன். தினமும் நான் மகிழ்வாய் இருக்கும் நேரம் டீ சாப்பிடும் நேரம்தான். டீ-யை பனித்துளியாக அனுபவித்து அருந் துவேன். அந்த நேரத்தில் மனம் வேறு எதையும் அசை போடாது.

டீ அருந்தும் நேரம். ஆதலால் வேகமாக உட் சென்றேன். செஞ்சுனா எதிர்ப்பட்டாள். செஞ்சுனா, இந்த நிறுவனத்தில் நான் டீயை விரும்பும் அளவிற்கு மற்றவர்களால் விரும்பப்படும் ஒரு மணமாகாத குமரி என்னை எதிர் கொண்டவள், எனக்கு இன்றைய டீயை தான் வாங்கித் தருவதாக அழைத்தாள். என் கையில் டீ டம்ளர். நான் சிறிதுகூட காற்றை உறிஞ்சாமல் டீயை மட்டும் ஆழமாக உறிஞ்சினேன். அதன் வெம்மை, என் உடல் குருதியின் வெதுவெதுப்பில் கூடியது. வெப்பத் தால் மனம் விரிவடைந்து லேசானது.

செஞ்சுனா என்னிடம் இன்றைக்கு தான் டீ எனக்கு வாங்கித் தந்ததன் காரணம் என்னவென்று யூகிக்கச் சொன்னாள்.

"நீங்கள் சொல்லுங்கள்."

"நான் சொன்னால் நீங்கள் எப்படி புரிந்து கொள்வீர்களோ?"

"சரியாகப் புரிந்து கொள்வேன்."

"இன்று நான் புதிய உள்பாடி வாங்கி உடுத்தி வந்துள்ளேன்."

எனக்கு சுரீர் என்றிருந்தது.

என்னுடைய வாயில் இருந்து அந்த முடக்கு டீ, தானாகவே உமிழப்பட்டு செஞ்சுனா மீதும் வழிந்தது.

அவள் கோபப்படவில்லை. அந்த நிறுவனம் கோபப்பட்டது. அவள் வார்த்தைகளை அவர்கள் கேட்காததுதான் அவர்களின் நிதானமின்மைக்குக் காரணம் என்று நான் நினைத்தேன்.

டாய்லெட் சென்று, டீக்கறையை கழுவிவர அவளுடைய உடல்நலம் விரும்பிகள் உதவி செய்தனர். உடல் டீயின் வெப்பத்தால் எரிகிறதா என்று அவளை வருடிவிட்டனர். என்னுடைய உடல் அவமான மிகுதியால் எரிந்தது. அவள் மீண்டும் என் அருகே வந்தாள்.



படிப்பகம்

www.padippakam.com

"நீ கொப்பளித்த டீ மிகவும் சுவையாக இருக்கிறது" என்றாள்.

"டீ உன் வாயிலா பட்டது?" இது நான்.

"என் உடல்கூட நீ சம்பந்தப்பட்டது என்றால் ருசி அறியும். எனக்கு தற்போது உடல் முழுவதும் சுவைக்கும் நாக்கு உள்ளதாக உணர்கிறேன்" என்று அவள் ரகசியமாகச் சொன்னாள்.

"உனக்கு உடல் முழுவதும் நாக்கு அல்ல. திமிர்" என்று ஓங்கிக் கத்தினேன்.

என்னுடைய கோபம், என்னுடைய நிறுவனம் என்னை குற்றவாளியாக்கியது. மேனேஜர் என்னை தன்னுடைய அறைக்கு அழைத்தார். கனமாகத் திட்டினார். நாகரிகம் இல்லாமல் நடந்து கொண்டதாக ஓங்கிக் கத்தினார்.

உன்னை இந்த கம்பெனியை விட்டு டிஸ்மிஸ் செய்யப் போகிறேன் என்றார். நான் அவர் அறையை விட்டு இயலாமையின் சோகத்தோடு வெளிவந்து என்னுடைய நாற்காலியில் அமர்ந்தேன்.

செஞ்சுனா மேனேஜர் அறைக்குள் நுழைந்தாள். அவள் கடவுளின் முகத்தில் பிறந்தவர்களின் சாதியைச் சார்ந்தவள். இதனால் கூடுதல் பாசம் வேறு மேனேஜருக்கு அவளின் மீது. நான் சட்டப்பூர்வமாக சலுகை பெறும் சாதியைச் சேர்ந்தவன். இது என்னை பொதுவான சாதி மக்களால் KD (கேடி) லிஸ்டில் வைத்திருக்கும் என்பதை வாசகர்கள் உணர்வீர்கள் என்று நம்புகிறேன். கேடி என்றால், யார் தப்பு செய்தாலும் முதலில் சந்தேகப்படும் நபர்கள் என்பது இங்கு கவனத்தில் கொள்ளவேண்டியது.

**மேனேஜர் அறையில் நிகழ்ந்தது:**

"செஞ்சுனா, நீ அவனுக்கு டிஸ்மிஸ் ஆர்டர் டைப் செய்." இது மேனேஜர். "அவனுக்கு எவ்வுளவு தூரம் கொழுப்பு இருந்தால் இப்படி செய்வான். டீயை உன்மீது துப்பியதும் இல்லாமல் உன்னைத் திட்ட வேறு செய்திருக்கிறான். அவனுக்கு வேலையில்லாமல் தெருவில் கிடந்தால்தான் புத்திவரும்." சற்று நேரம் அமைதி. பின்னர்,

"சார், நான் அவரை மிகவும் மதிக்கிறேன். அந்த மதிப்பு நேசமாக மாறி பல மாதங்களாகின்றன. நான் அவரை திருமணம் செய்துகொள்ள விரும்புகிறேன். நீங்களும் அவரும் ஒரு சாதி ஒரே மனுஷாள். நீங்க அவராண்டே சொல்லி..." செஞ்சுனா கண் கலங்கினாள்.

"என்னம்மா நீ? அவன் ஒரு காட்டுப்பயல். டீயை ரசிக்கும் அளவிற்குக்கூட மனிதர்களை ரசிக்கத் தெரிஞ்சுக்கல. அவனப் போயி..."

"சார், என்னை எல்லோரும் சுத்திச் சுத்தி வராங்க. யாரும் என்னை இதுவரை உதாசினப்படுத்தினதில்லை. அவர் என்னை தவிர்க்கத் தவிர்க்க நான் அவரை கூடுதலாக நேசிக்கிறேன்."

"சரிம்மா நீயே சொல்லிட்ட. அவன் பன்னுறதெல்லாம் நல்ல திட்டமிட்ட நடிப்பும்மா. நீ அவனை விட நல்ல, உங்க சொந்தத்திலியோ அல்லது உங்க மனுசால்ல அசல்லயோ கட்டிக்க."

"சார் அவருக்கு நல்ல மனசு. நீங்க அவரை இவ்வளவு தண்டிச்ச பிறகு கூட அவர் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை. மாறாக அவர் தன்மீது பழியைப் போட்டுக் கொண்டு, ஒரு பொம்மநாட்டியின் மானத்தைக் காக்க, தன்னுடைய கவுரவுத்தை விட்டுத் தந்துள்ளார்."

"நீ என்னம்மா சொல்றே"

செஞ்சுனா நடந்ததைச் சொன்னாள்.

மேனேஜர் என்னைக் கூப்பிட்டனுப்பினார்.

"தம்பி, நீ எந்த தப்பும் செய்யல. அது எனக்கு இப்பத்தான் புரியுது. உன்மீது நியாயம் இருக்கத்தான் உனக்கு கோபம் வந்துள்ளது. நீ சரியானவன்தான்."

நான் அவருக்கு நன்றி சொன்னேன்.

"இங்க பாருப்பா, நீ நன்றி சொல்ல வேண்டியவங்க, செஞ்சுனாதான்."

"ஏன்?"

"அவுங்கதான் எனக்கு முழு உண்மையை, தன் கூச்சத்தை விட்டு சொன்னாங்க. அவ really great"

"சார் நீங்க என் சமூகத்தைச் சார்ந்தவுங்க. அதனால் எனக்குள்ள துன்பத்தை நீங்க சரியாகப் புரிந்து கொள்வீங்கன்னு நம்புறேன்."

மேனேஜர் மிகவும் நல்லவர். மிகக் கடுமையான உழைப்பாளி. அவர் தன்னுடைய ஒரு நிமிடத்தைக் கூட வீணாகச் செலவு செய்யமாட்டார். அவரின் நேரம் இந்த கிளையின் வளர்ச்சி.

"ஏம்பா, அவ உன்னை திருமணம் செய்து கொள்ள விரும்புறா" - இது மேனேஜர்.

"சார், நான் என்ன சமூகம், அவங்க என்ன சமூகம்... நீங்க இதை..."

"தம்பி இங்க பாரு, டார்வின் சொல்லியிருக்கிறது, மனிதன் குரங்கிலிருந்துதான் தோன்றியுள்ளான்னு. இந்த அறிவியல் கோட்பாட்டை நாம எல்லோரும் சரியென நம்புறோம். உண்மை இதுவாக இருக்கும்போது, சாதி எப்படி பிறப்பிலிருந்தே வந்திருக்க முடியும்?

மேலும், மனிதக் கூட்டம் இன்றைக்கு - சென்னையில் உள்ள மனிதக்கூட்டம் முதன் முதலில் சென்னையில்தான் தோன்றியிருக்க வேண்டுமென்பதில்லை. அதாவது உலகின் ஏதோ ஒரு மூலையில்தான் முதன் முதலில் மனிதர்கள் தோன்றியிருக்க இயலும். அவர்கள்தான் உலகம் முழுக்க பரவியிருக்க முடியும். அப்படிப் பார்த்தா எல்லா மனிதர்களும் அந்த ஒரு இடத்தைப் பொருத்த வரையில் பூர்வகுடிகள் பிற இடங்களைப் பொருத்தவரையில் வந்தேறிகள். முதல் மனிதன் உலகத்தில் தோன்றிய பகுதி இந்தியா இல்லை என்று இருந்தால் இந்த நாட்டில் வாழும் நீ, நான் மற்ற எல்லோரும் வந்தேறிகள்தான் அல்லது பூர்வகுடிகள்தான்.



படிப்பகம்

www.padippakam.com

சமூகக் கூட்டங்கள் குடியேறிய காலங்கள்தான் மாறுபடுமே தவிர, பிறப்பாலேயே ஒருவன் பூர்வ குடியாகவும், மற்றவரின் வந்தேறியாகவும் எப்படி இருக்க முடியும்? இது விஞ்ஞானத்திற்கு எதிரானது அல்லவா?"

என்னால் பதில் சொல்ல இயலவில்லை.

"சார். நீங்க உங்க வாதத்தாலே என்னை பதில் சொல்ல முடியாதபடி மடக்கிட்டீங்க. ஆனால் என் உள் மனசு சொல்லுது, சமூகம் தாண்டி திருமணம் செய்துகொள்வது வாழ்க்கை முழுவதும் பிரச்சினை தான். பின்னாடி வாழ்க்கையில் எதையும் நாம சுதந் திரமாகச் செயல்பட முடியாது."

"தம்பி, நீ வீட்டுக்குப் போய் நன்றாக யோசிச்சுப் பாரு."

"சார். நீங்க எங்க சமூகம். அதனாலே உங்களுக்கு பெரிய மனசு. ஆனால் நாங்க அப்படியில்ல"

"நீ எல்லா விசயத்திற்கும் சாதிக் கலர் தர முயற் சிக்கிறாய்."

"இல்ல சார். சிலருக்குத்தான் Colour Blindness. அதாவது நிறக்குருடு. எனக்கு அதைச் சுட்டிக் காட்டு வதில் தயக்கமேதுமில்லை."

"தம்பி, நான் சொல்லறதை நீ இப்படி சிந்திச் சுப்பாரு."

"சொல்லுங்க."

"மனிதனுக்கு துவக்கத்திலிருந்தே சாதி இருந் திருக்குமா?"

"கண்டிப்பாக இருந்திருக்காது சார்."

"இன்று தன்னை பிற்படுத்தப்பட்டவர் என்று சொல்லிக் கொள்ளும் ஒருவர், ஒரு 2000 ஆண்டு களுக்கு முன்னர் என்னவாக இருந்திருப்பார்?"

நான் மவுனமாக பதில் சொல்ல விரும்பாமல் இருந்தேன்.

அவர் தொடர்ந்தார். "கண்டிப்பாக, 2000 ஆண்டு களுக்கு முன்னர் அல்லது 5000 ஆண்டுகளுக்கு முன்னர் சாதியற்று, சமத்துவ சமூகமாக - துவக்க சமூகமாக - ஏன் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்திருப் பார்கள். பின்னர் தங்கள் வரவுகளுக்கா, புதிய புதிய சமூகப் பெயர்களை உருவாக்கிக் கொண்டு, பலம் பொருந்தியவர்களோடு இணைந்து வாழ்ந்திருப்பார் கள். பின்னர் பலம் குறைந்த தங்கள் சமூகத்தை தன் சுயவரவுக்காக ஒடுக்கியிருப்பார்கள்.

ஆக சாதியென்பது, தனித் தனி மனித கூட்டங்கள் மையத்திலிருந்து விலகி வந்தவர்கள் என்பது என்னு டைய நம்பிக்கை.

தம்பி இதை நீ எப்படி பார்க்கிறாய்?"

"சார் எனக்கு எதிர் கருத்து கூறத் தெரியவில்லை."

"அப்ப, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர், பூர்வ குடிகளாய் வாழ்ந்தவர்கள் விலகி சாதியைச் சுமக்கும் பிரிவினராய் மாறும்போது, இன்று நமது செஞ்சுனா ஏன் அதேபோல் தன்னுடைய சாதியை மாற்றிக் கொள்ளகூடாது. அப்படி அவள் மாற்றி உன் சமூக மாக மாற விரும்பினால் அதைத் தடுக்க நீ என்ன கார ணம் சொல்லப் போகிறாய்?

பிற்படுத்தப்பட்டவர்கள் தங்களின் சாதியற்ற நிலைக்குப் போவதை தடுப்பதும் ஒரு வகையான சநாதன சாதி ஒடுக்குமுறை தானே? ஆதி மனிதன் சாதியை போர்த்திக் கொண்டதால் பிற்படுத்தப் பட்டவனான் என்பது உண்மையாக இருக்கும்போது, சாதியை ஒழிக்க அதே பிற்படுத்தப்பட்டவன் சாதியற்ற பூர்வ குடியாக மாற ஆதிமனிதனாக, அதாவது உன் சமூகத்தவனாக மாற நீ அனுமதிப்பது மட்டும்தான் சாதியை ஒழிக்கும் என நான் நம்புகிறேன். சாதியை ஏற்றுக்கொண்ட நேர் வினைக்கு, சாதியைப் புறந்தள்ளி எதிர்வினையாக உன் சமூகமாக மாற விரும்புபவர் களை நீ என் தடுக்கிறாய்?"

"சார். எல்லோரும் உண்மையிலேயே சாதியை ஒழிக்கத்தான் சாதியற்ற நிலைக்குப் பின்னோக்கிப் போக முயற்சிக்கின்றனர் என்று நீங்கள் நினைக்கின்றீர் களோ?"

"அதுவும் ஒரு பெரிய காரணமாக ஏன் இருக்கக் கூடாது?"

"என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை சார். சாதியால் பாதிக்கப்பட்டவங்களுக்கு இட ஒதுக்கீடு தந்தால், அவர்கள் தெளிவாக பலம் பெற்று சாதியை ஒழிக்க முயற்சிப்பாங்க. ஆனா நீங்க நம்மை ஒடுக்கும் சாதியாருங்க தாய் சாதியை சேருவாங்கன்னு சொல் லறது அவ்வளவு பொருந்தி வரலையே?"

"சரிப்பா, பிற்படுத்தப்பட்டவங்க, தங்களின் பழைய நிலையை அடைய வழியே இல்லையாப்பா? அவங்க பழையபடி குற்றங்குறை இல்லாமல் ஆதிச் சமூகமாக மாற வழியே இல்லையா? அவங்கள்ள முற் போக்கா இருக்கிறவுங்க, பிற்படுத்தப்பட்டவங்கன்ற அடையாளத்தோடதான் சாதி ஒழிக்க வரனும்னு சொல்றது அவர்களுக்கு இழைக்கப்படும் உளவியல் கொடுமையில்லையா?"

நான் மிகவும் அமைதியானேன். அவரின் வார்த்தை கள் பிழையானவை என்பதை நான் நன்றாக உணர் கிறேன். பிழையான அவருடைய வார்த்தைகளை எப் படி அவருக்கு விளக்குவது என்று நான் சிந்திக்க லானேன்.

அவரே மீண்டும் தொடர்ந்தார்...

"நீங்கள் இவ்வளவு நாட்களாக இந்துக்களாக இருந்து வருகிறீர்கள். திடீரென 2500 ஆண்டுகளுக்கு பின்னர் சென்று, பூர்வ புத்தமதம் செல்லப்போவதாகக் கூறுகிறீர்கள். 2500 ஆண்டுகளுக்கு முன்னர் நீங்கள் புக சாத்தியம் உள்ளபோது, பிற்படுத்தப்பட்டவர்கள் மட்டும் எப்படி ஆதிக்குடிகளாக, சாதியற்ற உங்களைப் போல மாற வாய்ப்பைத் தரக்கூடாது. என்றார்."



படிப்பகம்

www.padippakam.com

"எப்படி அது சாத்தியப்படும் சார்?"

"தம்பி, என் தந்தை - தாய் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள். அவர்கள் சாதியை முழுமையாக புறக்கணித்து கம்யூனிச இயக்கத்தில் தங்களை 80 ஆண்டுகளுக்கு முன்னரே இணைத்துக் கொண்டனர். தங்கள் ஊரிலிருந்து வெளியேறி தாழ்த்தப்பட்ட மக்களோடு சேரி மக்களாக இவ்வளவு நாட்களாக வாழ்ந்து வந்தனர். ஒரே மகனான என்னையும் தாழ்த்தப்பட்டவன் என்ற உணர்வோடே வளர்த்தனர். எனக்கு தற்போது வயது 40. எனக்கு மனைவியும் ஒரு தாழ்த்தப்பட்ட பெண். நான் ஆதிக்கச் சாதியைச் சார்ந்தவன் என்பது, இரண்டாண்டுகளுக்கு முன்னர் தான் தெரிந்தது. என் தந்தையின் தியாகத்தையும், என் நிலைமையும் நினைத்து நான் பெருமைப்படுகின்றேன். என்னை உன்னால் சாதியாளராகப் பார்க்க முடிகிறதா? தம்பி."

"சார், எனக்கு இப்பொழுது புரிகிறது. நீங்கள், உங்கள் நல்ல இதயம் எனக்குப் புரிகிறது."

நானும் அவரும் வெவ்வேறு முடிவை எடுத்தோம். அவர் வெளியிட்ட ரகசியம் எனக்கு புதிய தெளிவை புரியவைத்தது - நீதிபதி என்று நினைத்துக் கொண்டு வக்கீலிடம் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று. ●

# அப்பாவின் கையெழுத்து...

■ கா.வ. கன்னியப்பன், இருளர்

கருத்த உடலுக்கு ஏத்த
கட்டையான மீசை
ஊரில்கூட - பெயர்
அழைப்பதில்லை.
டேய்!
மீசக்காரா... என்றுதான்
கூப்பிடுவார்கள்.
சூரியன் சுட்டெடுத்தாலும்
மேனிக்கேது சட்டை!
பேனாவை பிடிப்பார்
கட்டாபாறையை பிடிப்பதுபோல்,
அழுத்தி.
எழுதுவார் அட்டையே
கிழிந்து விடும் அளவிற்கு.

நாகலிங்க(ம்)தான்
நம்ம வகுப்பிலே
முதல் ரேங்க்...
எல்லோரும் கைத்தட்டுங்க...
இந்தாப்பா
ஒங்க அப்பாவுக்கு படிக்க தெரியாதா?
மதிப்பெண் அட்டையில வரிசையா
கைனாட்டுத்தான் வைச்சிருக்கு!

ஆமா சார்...
எங்க அம்மாவுக்கும் படிக்க தெரியாது சார்.
ஆனா
என்னையும் எங்க அண்ணனையும்
ரொம்ப கஷ்டப்பட்டு படிக்க வக்கிறாங்க சார்

அட...
கேக்கவே
ஆச்சிரியமா இருக்குபா...
இந்தாப்பா
ஒங்க அப்பா, அம்மா படிக்கலனா
பரவாயில்லப்பா
நீ கையெழுத்து கத்து கொடுப்பா

செரி சார்.

எப்பா! இந்தப்பா கையெழுத்து வாங்கிட்டு
வரச் சொன்னாரு சாரு.

எவ்வுளோ மார்க்கு
வாங்கி இருக்க

நான்தாம்பா முதல் ரேங்க்...

இதையேத்தாண்டா
ஒவ்வொரு தடவையும் சொல்ர...
செரி... செரி...
இந்த கட்ட வெரல்ல
மைய தடவு...

இந்தாப்பா...

என்னடா!

பேனாவ கொடுக்குர...
புடிப்பா நானு ஒங்க
கையெ புடிச்சி - பேரு
கத்து தரம்பா
கத்துக்கப்பா!

ஏண்டா!
ஒனக்கு ஏதாவது கிருக்கு
புடிச்சிருக்கா
கட்டாப்பாறையை புடிச்சி
சவுக்க வேர் வெட்டர கைக்கு
பேனாவ புடிக்க சொல்ரையா!
ஒழைச்சி தேஞ்சி போன
கட்டைக்கு - ஏய்யா!
அதுலாம்!

ஏவ்வு! மாமா...
கத்துக்கையா

அட!
கம்முனு கடபுள்ள
செரி... செரி...
பேனாவ எப்படி புடிக்கனும்

இப்படி புடிப்பா
கட்ட வெரலுக்கும்
ஆள் காட்டி வெரலுக்கும்
மையத்துல...
ம்... ம்... மு...
அப்படித்தாம்பா
எங்கையால எப்படி இழுக்குரேனே
அப்படியே இழுக்கனும்
ம்மு...




படிப்பகம்

www.padippakam.com

■ அமிர்தம் சூர்யா

# முடிவுறா சாத்யம்



பூமிக்கு பெரியம்மை வார்த்தது போல் சற்று விகாரமாயும் அன்னியப்பட்டும் சமாதி மண்மேடுகளால் நிரம்பியிருந்தது அந்த மயர்னம். புதரென மண்டிக்கிடக்காமல் யாரோ மயான அடையாளத்திற்காக நட்டு வைத்ததைப் போல் தனித்து ஒற்றையாய் வளர்ந்திருந்த எருக்கஞ் செடியின் பூக்களை சுற்றி ரீங்காரமிட்டபடியிருந்தது ஒரு கருவண்டு.

தனக்கும் அந்த வண்டுக்கும் நிறைய ஒற்றுமை இருப்பதாய் தோன்றியது போலும். மெல்ல புன்னகைத்துக் கொண்டான் ராம்குமார். தூரத்தில் ஒரு சில மண்மேடுகளில் நேற்றைய ஈரம் தெரிந்தது - வதங்கிய பூக்களோடு. காற்றின். கனம் கூடும் போது மீதமான அஸ்தி மெல்ல எழும்பி நேற்றைய மனிதர்களின் அரூபம் காட்டி வெளியேற முடியாமல் தோற்றுப் போனதுபோல் எரியூட்டும் அறை சுவர்களுக்குள்ளேயே அடங்கி போனது.

எதை பார்த்தாலும் அது தன்னை பிரதிபலிப்பதாய், தன்னைப் பற்றிய குறியீடாய்த்தான் ராம்குமார் பார்த்தான். அவனை தொற்றிக்கொண்ட சூழலின் இறுக்கம் அப்படியாக்கியிருந்தது. இல்லாவிட்டால் இந்த நேரத்தில் இடுகாட்டில் தேடி வந்திருப்பானா? இவனும் ஒரு காலத்தில் சுயமரியாதைக்காரன் தான். அதோ தூரத்தில் தன்னந்தனியாய் கடப்பாறையால் தரையை குத்தி பிளந்த மண்வெட்டியால் மண்ணை அள்ளி பேரட்டும் புதிய விருந்தாளிக்கு பள்ள படுக்கை தோண்டுவதில் கவனமாயிருந்த இருளப்பனை பார்த்தபடியே அந்த ஒத்தையடிப் பாதையில் வியப்பைத் தேக்கியபடி வந்த வேலையை மறக்காமல் தேடலானான்.

அழையா வீட்டில் நுழைந்த விருந்தாளியாய், இடுகாட்டில் தனிமையும் அந்திம காலத்தில் என்னை அழைத்து கொள்ளும் இடம் இந்த பகுதியில் எது என்ற கேள்வியும் சூழ்ந்து கொண்டதை உணர்ந்தாலும் சாஸ்திரி சொன்னதை நம்பமுடியவில்லை. ராம்குமாருக்கு ஜோசியர் சர்மா சாஸ்திரியை நீண்ட காலம் தெரியும். ஆனால் ஜோசியத்தைப் பற்றி சமீபத்தில்தான் விளங்கி கொள்ள முடிந்தது. அனுபவப் பூர்வமாய் ஆய்வுப் பூர்வமாய் தெரிந்து கொள்ளாமல் ஒன்றை மூடநம்பிக்கை என்று சொல்லும் உரிமை நமக்கு எப்படி வரும். அது உரிமை மீறலல்லவா? என்று கேட்கும் சர்மா சாஸ்திரியிடம் கற்று கொண்டதும், தெரிந்து கொண்டதும் ஏராளம். தெரிந்தவர் நண்பரானதும் - வாழ்க்கை புரிதலும், இந்த மயான தேடலும் துவங்கியது எனலாம். மயானத்தில் நடந்து கொண்டு சாஸ்திரி சொன்னதை யோசிக்க, யோசிக்க அப்படியே சிமெண்ட் பெஞ்சின் மீது உட்கார்ந்தான். இடத்தை வாங்கி கல்லறை கட்ட முடியாததால் இடப்பற்றாக்குறை யால் தோண்டி வீசியெறியப்பட்ட ஒரு ஏழையின் மண்டையோடு ராம்குமாரின் காலடியிலிருந்தது - எல்லா மண்டையோட்டைப் போலவே அதன் முகத்திலும் பாகுபாடற்ற சிரிப்பு. எழுந்து தேட ஆயத்தமானான். எது தன் தந்தையின் சமாதி என்பதைக் கண்டுபிடிக்க இவ்வளவு சிரமம் இருக்கும் என்று அவன் எண்ணியது இல்லை. தூரத்தில் இன்றும் தீவிரமாய் பள்ளம் தோண்டிக் கொண்டிருந்தான் இருளப்பன் - நேற்று மாலையோ இன்று காலையோ யாரோ இறந்திருக்கக் கூடும்.

விளையாட்டாக நான்கு வருடமாகிவிட்டது. மனைவி சுசிலாவையும், மகன் ராஜாவையும் பிரிந்து. சுயகௌரவமும், பெண்ணுரிமை கோபமும்தான். சுசிலாவின் பலமாயும் தனக்கு பலவீனமாயும் அமைந்து போனதாக ராம்குமார் வருந்தியதுண்டு. சுசிலா தன்னிடம் விவாகரத்து கோரும் அளவுக்கு போவாள் என கனவிலும் நினைத்தது இல்லை. குடித்துவிட்டு வீடு வரும்போதெல்லாம் சண்டை போடும் சுசிலா இன்னொரு மூன்றாம்தர பெண்ணோடு கள்ள உறவு கொண்டிருந்ததை நம்பிக்கைத் துரோகமாகவும் தனக்கு நேர்ந்த அவமானமென்றும் கருதி தன்னிட



படிப்பகம்

www.padippakam.com

லிருந்து நிரந்தரமாக பிரிவாள் என்பது எதிர்பார்க்காதது. அவளின் பெண்ணுரிமை வாதம் அவனுக்கு கோபத்தைத்தான் தந்தது. விவாகரத்தில் அவனுக்கு உடன்பாடு இல்லையாயினும் அவனின் மூர்க்கமான வாதமும், அவள் விரும்பிய சுயேட்சையான வாழ்க்கையும், பலர் முன்னிலையில் தலை கவிழ்ந்த நிலையும் விவாகரத்தில் முடிந்தது. கோர்ட், வக்கீல், பிறரின் கிண்டல் அனைத்தும் சேர்ந்து மகன் மீது எழுந்த பாசத்தைக்கூட துரத்தி விட்டது. வேலைமாற்றலாகி காஞ்சிபுரம் வந்துவிட்ட பின், சுசிலா மட்டும் சென்னையிலேயே தனியார் பள்ளியில் டீச்சர் வேலையை தொடர்ந்தாள். மகன் ராஜாவுக்கு இப்போது வயது ஐந்து இருக்கும். பிரிவு ஒரு மனிதனை எப்படியெல்லாம் மாற்றும் என்பதற்கு ராம்குமார் நல்ல உதாரணம். அதில் சர்மா சாஸ்திரியின் பங்கு அதிகம்.

பிறவிப் பயன், தொடரும் பிறவி என்பனவற்றில் ராம் குமாருக்கு பழைய காதலியைப் போல ஒரு கிரக்கமும் வெளிபடுத்த முடியா ஈடுபாடும் வந்துவிட்டது. ஒரு வேளை இழந்த தன் வாழ்க்கை இன்பம் தொடர்வதற்கான நம்பிக்கையைத் தரும் வழியாக அதை நம்பியிருக்கலாம். பைஜாமா சகிதமாய் நடை, உடை, பாவனையில் முற்றும் மாறிப்போனான் ராம் குமார்.

காஞ்சிபுரத்திலிருந்து சென்னையில் நகர ஜொலிப்பிலிருந்து விலகியிருக்கும் வியாசர்பாடி மயானத்தில் தன் தந்தையின் சமாதியை தேடிக் கொண்டிருக்கிறான் ராம்குமார். "என்ன சாஸ்திரி, ஊருக்கெல்லாம் கணிச்சி சொல்றீங்க. நமக்கு கொஞ்சம் அருள் காட்டப்படாதா" என்று கேட்டதும், "காட்டுங்க அந்த குறையும் உமக்கெதுக்கு" என்றவாறே ராம் குமார் கொண்டு வந்த பழைய பழுப்பேறிய நான்கு துண்டாகி போன அந்த தாளை தீர்க்கமாக பார்த்தபடி ஆள்காட்டி விரலால் காற்றில் கணக்கு போட்டபடி ஒட்டுமொத்த வாழ்க்கையை எக்ஸ்-ரே எடுத்து கொடுத்த மாதிரி தேர்ச்சி பெற்ற டாக்டர் உற்றுப் பார்ப்பது போல் ராம்குமாரின் ஜாதகத்தை பார்த்துவிட்டுப் பலன் சொல்ல ஆயத்தமானார் சாஸ்திரி.

சர்மா சாஸ்திரியின் குரலில் சற்று சுணக்கம் இருந்தது. முந்திரிப் பழத்தை சாப்பிட்டு மாறிய கரகரப்பை பலமுறை இலேசாக கணைத்து விட்டு பேசுவதை போல சற்று கணைத்துவிட்டு... "ராம், இரண்டு விஷயத்தை நான் சொல்லியாகனும். ஒன்று உன்னுடைய பெற்றோர் அல்லது மூதாதையர்களை சாந்தப்படுத்தி அவர்களை வணங்கி ஆசி பெற செய்யவேண்டிய பரிகாரம். இரண்டாவது நீ எப்படியெல்லாம் வாழ பிரியப் படுகிறாயோ அப்படியெல்லாம் வாழ்ந்துவிடு. இது உனக்கு கடைசி பிறவி. உனக்கும் பூமிக்குமான உறவு இந்த ஜென்மத்துடன் முடிகிறது. நம்பறதும் நம்பாததும் உன் அறிவின் ஆளுமையை பொறுத்த விஷயம்" என்றபடி ராம்குமாரை பார்த்தார் சாஸ்திரி.

எதை எதையோ சொல்வார், வருங்காலத்தை வரையறுப்பார் என்று எதிர்பார்த்தவனுக்கு இந்த பலன்கள் சப்பென்று இருந்தது. ஆயினும் அதிர்ச்சியும் அவநம்பிக்கையும் சேர்ந்து கொண்டதையுணர்ந்தவன், "எனக்கு இதுதான் கடைசி வாய்ப்புன்னு எப்படி சொல்றீங்க. எப்படி எந்த பார்மூலா வெச்சி இப்படி சொல்றீங்க"- கேள்விகளை அடுக்கினான். பதற்றமின்றி தீர்க்கமாக. "தம்பி பெரும்பாலும் ஜோசியர்கள் தவறு செய்யலாம். ஜோசியம் தவறுவதில்லை. ஜாதகனுக்கு லக்னத்திற்கு 12-ம் வீட்டில் ராகு அல்லது கேது இருந்தால் மறு பிறவி கிடையாது. இதுவே கடைசி பிறவி என்பது அடிப்படை கணக்கு. பிருஹத் ஜாதகத்திலும், அர்த்த சாஸ்த்திரத்திலும் பூர்வ புண்ணிய ராசி என்ற அத்யாயத்தில் பிறவி பற்றிய குறிப்பு இருக்கு. ஸ்ரீ கீழாத்தூர் ஸ்ரீனிவாச ஆச்சாரியார் எழுதிய ஜோதிட நூலும் இதைத்தான் சொல்லுது. உன் நேரம் சரியில்லாததால் இறந்தவர்களை வழிபட்டுக் கொஞ்சம் அமைதி தேடச் சொன்னேன்..." என்று முடித்தார் சாஸ்திரி.

நன்றாக ஞாபகம் இருக்கிறது - மயானத்தின் மேற்கே இருந்த அரசமரத்தினருகே புதைத்து விட்டு உடைந்த அம்மி குழவி கல்லை அடையாளமாய் சொருகி, பலகையில் இறப்பு, பிறப்பு எழுதி வைத்து வந்தது. ஆனால் இப்போது ஏமாற்றம். அப்பாவின் சமாதி எது? எந்த அடையாளமுமில்லை. இடப்பற்றாக்குறையால் அரசமரம் வெட்டப்பட்டு அப்படியொன்று இருந்ததற்கான அடையாளம் ஏதும் இல்லை. ஏதேனும் ஒரு மண்மேட்டை அப்பாவாக பாவிக்க மனம் இடம் தரவில்லை. அப்பாவை வழிபடக் கொண்டு வந்த பூக்களை எறிந்துவிடுவதும் சரியில்லை. அவனை அறியாமலேயே கலவரம் பற்றி கண்ணீர் துளிர்த்தது. சின்ன வயதில் அம்புலி மாமா ரசிகன் ராம்குமார். வளர்ந்த பின்னர் ஆவியுலகம் ஜென்மவாசனை போன்ற பத்திரிக்கை வாசிப்பாக தொடர்ந்தது. இந்த ஜென்மத்தில் நிறைவேறாத ஆசைகளைஅடுத்த ஜென்மத்தில் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்கிற மூட நம்பிக்கையே தோல்வியடைந்த துண்டித்துப் போன உறவு நம்மை மீண்டும் தொடரும் என்ற நம்பிக்கையைத் தந்துகொண்டிருந்தது. நம்பிக்கையே மூடமாகும் போது மூடநம்பிக்கை என்று தனியாக உள்ளதா என்ன? ஒரு பேட்டியில் இளையராஜா சொன்னதிலிருந்து என்னைப்போலவே இளைய ராஜா சிந்திக்கிறார் என தன்னை மெச்சிக் கொண்ட ராம்குமார் இன்று மரண பயத்தில் நிலை குலைந்து பயம் கவ்வி மயானத்தில் பரிகாரம் செய்ய அப்பா சமாதியை தேடி அலுத்து மயான சுவரில் சாய்ந்து கொண்டான்.

தூரத்தில் இருளப்பன் புதை குழியை வெட்டி முடித்து குழிக்குள் தொங்கி கொண்டிருந்த வேர்களின் தொடர்பை வெட்டி எறிந்து பக்கவாட்டத்து மேடு பள்ளங்களை செதுக்கி குழியை கவர்ச்சியாக்கி வேலையை முடித்து ஒரு சின்ன தாவலில் குழி விட்டு வெளியே வந்து மண் குடுவையிலிருந்த நீரில் கைகள் அலம்பிவிட்டு ராம்குமாரை நோக்கி வந்தான்.



படிப்பகம்

www.padippakam.com

உடல்கவ்விய புதுகுழியின் மண்வாசம் ராம்குமாரின் நாசியில் நழைந்ததும் சட்டென கண் திறந்து பார்த்ததும் ஆங்காங்கே மண் அப்பியிருந்த பெரியவர் தனக்கு எதிரே நின்று தன்னையே பார்த்துக்கொண்டிருப்பதை அறிந்து திடுக்கிட்டு கேட்க வாய் திறக்கும் முன்பே இருளப்பன் "ஏம்பா நீ சுந்தரேசன் மகன் தானே... மூக்கும் முழியும் அப்படியே உங்க அப்பன உரிச்சி வெச்சியிருக்கே. நிக்கிற தோரண கூட சுந்தரேசன போல. எனக்கு உன்ன தெரியாது. உங்க அப்பாருவ எனக்கு தெரியும். நா இந்த சுடுகாட்டு வெட்டியான். இந்நேரத்தில் இங்க எதுக்கு? அப்பனுக்கு பூசபண்ண வந்தியா? சுந்தரேசன பொதைச்ச குழியில எத்தனையோ பேர பொதைச்சாச்சி. அப்பங்குழிய தேடி ஆவறது ஒன்னுமில்லை தம்பி. வெத எதற்கு விருட்சத்த தேடனும். வெதயில்தான் விருட்சமிருக்கே என்ன தம்பி, வெட்டியான் பாஷ புரியில இல்லே.." என கடைசியில் ஒரு ஏளன சிரிப்போடு எந்த கேள்வியையும் எதிர் நோக்காமல் மூன்று முடிச்சு படத்தில் வந்து ரஜினியை மிரட்டும் பைத்தியத்தைப் போல போய்க் கொண்டிருக்கும் இருளப்பன் எழுப்பிவிட்டுப் போன அதிர்ச்சியிலிருந்து மீற ராம்குமாருக்கு சில நிமிடமானது.

அட இந்த கிழவன் சொன்னது சரிதான். மூக்கும் முழியும் மட்டுமா? முன்பனி காலத்தில் வரும் ஆஸ்துமா அவஸ்தை கூட அப்படியே அப்பாவைப் போல. நான் ஆம்பிள என்கிற அகங்காரமும் அப்பா போல எனக்கு. அப்படின்னா நான் இறக்காத போது அப்பா எப்படி இறந்தவராவார். எனக்குள் அப்பா. எனக்குப் பிறகு என் மகன். என் மகன் மூலமாய் மீண்டும் நான். பிறகேன் அப்பா சமாதிக்கு அலைவது? அப்படியானால் எதற்கும் யாருக்கும் மரணமில்லை. அடுத்த ஜென்மம் என்பது நான் என் மகன் மூலம் வாழ்வதா?

மனதில் மின்னல் பளிச்சிட காலங்காலமாய் கீழே விழும் ஆப்பி ளுக்கு காரணம் கண்ட நியூட் டனைப் போல சட்டென உற் சாகம் பீறிட்டெழுந்தது. கர்வம் கலைந்து மயான சுவரில் சாய்ந்து கொண்டிருந்த ராம்குமாரின் காத ருகே ஏதோ உரச திரும்பிப் பார்த்த போது மயான சுவர் வெடிப்பில் முளைத்திருந்தது காற்றில் ஆடியபடி அரச மர கன்று. தன் மகனைப் போல அதனைத் தடவி கொடுத்துவிட்டு... புன்னகை பரவ மயானம் விட்டு வேகமாக வெளியேறி கம்பீரமாய் நடந்து கொண்டிருந்தான்... இடுகாட்டிலிருந்தும் வாழ்வைத் துவக்கிவைத்த வெட்டியான் இருளப்பன் - வாழ்விலிருந்து சூன்ய வெளிக்குத் தள்ளிய படிப்பாளி சாஸ்திரி இருவரையும் நினைத்தபடி.

## ஒரு விடுதலையின் விண்ணப்பம்

■ ம. நட்சத்திரன்

விடுதலை கேட்டது
விடுதலையை!

ஒரு முறையும் அதன் கேள்வி
தேசத்தின் செவிகளில் விழவில்லை.

வந்துவிட்டது விடுதலை
என்பது அதன் எண்ணம்
விடுதலை என்பது பதில்
அது
எப்படி கேள்வி கேட்கலாம்
என்பதே அதன் எதிர் கேள்வி?

வந்த விடுதலை தந்தது என்ன?
விடுதலை என்பது வரிகளாகவே
இருப்பதை அது எப்போது உணரும்.

தேசம் விடுதலை பெற்றுவிட்டால்
மக்கள்?

செடிகளின் மேலே மட்டும்
நீரை வார்த்து விட்டால்
வேர்கள் எப்படி விரியும்?

அடிமையின் அழுக்கல்கள்
கை விலங்கையும் சேர்த்தே
விலங்கிட்டுள்ளது.

தீண்டாமை பற்றி பாடப்புத்தகங்களில்
அச்சிட்டுவிட்டு
சாதி என்ன கேட்கிறது பள்ளி.

அரசு அறிவிக்கும் சலுகைகள்
சாதியை மட்டுமே
ஞாபகப்படுத்துகிறது.

இன்னும் சேரிமக்கள்
வாழ்க்கையின் கடைசி
ஏசுபிரானாகவே இருப்பது
மாறுவதெப்போ?

அவன்மேல் சவாரி மட்டும்
செய்ய நினைக்கும் சமுதாயம்
அவனை கை கொண்டு
அழைத்துப் போக மட்டும்
மறுப்பது ஏன்?

விடுதலை கேட்டது
விடுதலையை!

விடுதலையின் விண்ணப்பத்தில்
சாதி விடுபட்டதாக
அரசு அதை நிராகரித்தது.

விடுதலையின் வாசல் வழிகளில்
அஞ்சல் காரர்கள் வந்துதான்
போய் கொண்டு இருந்தார்கள்
ஆனால்
அது கேட்ட கேள்விக்கு
பதிலைக் காணோம்...



படிப்பகம்

www.padippakam.com

# தேவதேவன் கவிதைகள்...

## கலைமகளே! சரஸ்வதியே!

மனச் சாட்சியற்றுத் தாழ்ந்த மக்களும்
கலைகளிலே ஜொலிக்க முடியும் என்றால்
என்ன பொருள் தாயே?
கலைச் சித்தாந்தங்களைத் தமக்கேற்ப வளைத்து
வகுத்துக் கொள்வோம் என்பதுவா?

வெண்டாமரை மலரில்
உனக்குமுன்னே வீற்றிருக்கும்
போதி சத்துவரையா கேட்க வேண்டும்?

அன்பு
உயிர்மை
மீமிகை உணர்ச்சிப் பெருக்குக்கான
தூய்மை - இவற்றொடு
தர்மத்துடனும்
தாகத்துடனும்
துக்கத்துடனுமான
முழு வாழ்வுடன்
தொடர்பேயில்லாத கலைகளைக் குறித்துக்
கவலைப்படவும் தகுமோ, சொல்?

ரொம்ப ரொம்பக் குறைவாகவே
கலைஞர்களில் கலைஞர்களை
நான் பார்த்திருக்கிறேன், தாயே,
என் வாணாளில்.

## செவ்வாய்க் கிரகத்தில்

நீர்ச்சுவடு கண்டால்
போய்க் குடியேறிவிடலாமே எனத்
துடிதுடிக்கும் அரைகுறை ஞானத்
திமிர் கனலும் விஞ்ஞானிகளே,

தாகத்துடன் இங்கே
ஒரு குவளைத் தண்ணீரைப் பருகும்போது
இந்த பூமியினது
அருமையினை நீர் உணர்ந்ததுண்டா?

மழையை
வான் தரும் கொடை, பேரருள்
எனப் பொங்கிப் பரவசிக்கிறவர்களும்
மழை பொய்க்கும்போதும்
வெள்ளம், நிலநடுக்கம் என்று
இயற்கை சீறும்போதும்
அன்பில் நாம் தவறியதுதான் காரணமோ
என்று பதறுபவர்களுமான
எளிய மனங்கள் குறித்து
உங்கள் விஞ்ஞானம் உரைப்பதென்ன?
அதாவது,
கவிதை குறித்தும்
இப் பூமியினைப் பேணத் தவிக்கும்
தாய்மை குறித்தும்
தலித்துவம் குறித்தும்?

## உண்டியல் குலுக்குகையில்...

உன் இரத்தத்தில் ஒலிக்கவில்லையா
'தர்மம் போடுங்க, சாமீ!' என்றபடி
பிட்சா பாத்திரத்துடன் ஒரு பரதேசி
வீடு வீடாய் ஏறி இறங்கும் காட்சி?

அதைத்தானோ
"நீயே கடவுள்
தர்மமே உன் கடமை!" என்று
கம்பீரமாய்ப் பாடுகிறான் கவிஞன்?

## பாடரும் பொருள்

அரவாணிகள் ஏன்
பெண்மையையே விரும்பித் தேர்கின்றனர்?
ஆண் கவியோ பெண் கவியோ
இருவருக்குமே பாடரும் பொருள் -

அன்பைப் போல் மற்றொன்று
பெண்மையன்றி வேறென்ன?

## புத்த பூர்ணிமா (4)

தம் சட்டைப் பைகளில்
சில்லரைகளைத் துளைந்து துழாவும் விரல்கள்.

மனிதர்களை, பெருங் கவிகளை
தம் ஜாதிக்குள் காணவே துளைபவர்கள்.

சற்றே இப் பூமிவிட்டு மேலெழும்பி
பூமியைப் பார்க்கும் முழுநிலவு.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

30.5.2004 ஞாயிறு காலை 9.00 மணி **இரண்டாம் நாள் அமர்வு**

## இந்துத்துவ வேரறுப்பு

அறிமுகம் : **நிகழ் அய்க்கண்** ◎ தலைமை : **அரங்க. மல்லிகா** ◎ வாழ்த்துரை : **அருட்தந்தை ஜெயசீலன்**

***சினிமாவில் தலித் பெண்கள்*** : ஜோதிராணி

***பெண்கள் சாதியின் பாதுகாவலர்களா?*** : மனோகரிதாஸ்

***தலித் பெண்கள் இயக்கம்*** : பெர்னாட் பாத்திமா

***கல்லூரிகளில் தமிழ் வழி இந்துத்துவமும், சாதியமும்*** : பேரா. கன்னிகா விஜயசிம்மன்

***தலித் பெண்ணியம் - பெண் விடுதலையின் திறவுகோல்*** : பாமா

***திராவிட அரசியலில் பெண்கள்*** : வழக்கறிஞர் லூசி

***பாலியல் வன்கொடுமையை தலித் பெண்கள் எதிர்கொள்ள வழிமுறைகள்*** : வழக்கறிஞர் ரஜினி

***இதழியலில் தலித் பெண்ணியம்*** : பத்மாவதி விவேகானந்தன்

***மகளிர் சுய உதவிக்குழு தலித் விடுதலைக்கு வழி வகுக்குமா?*** : 1. புஷ்பா (கல்பனா சாவ்லா)
2. கோமதி
(மதுராந்தகம் மகளிர் மன்றத் தலைவி)

பிற்பகல் 2.30 - 4 மணி **தலித் ஆதரவாளர் அரங்கு**

## தலித் ஆதரவாளர் யார்?

அறிமுகம் : **கௌதம சன்னா** தலைமை : **பேரா. கல்யாணி**

வாழ்த்துரை : **அருட்தந்தை ஜோஸ்**, முனைவர் **பஞ்சாங்கம்**

***மனித உரிமைகள்*** : கோ. சுகுமாறன்

***களப்பணிகளில் தலித்தல்லாதார்*** : பொ. ரத்தினம்

***பத்திரிக்கைகளும் ஜாதியும்*** : 'அவுட்லுக்' ஆனந்த்

***தலித் அல்லாதார் நோக்கில் தலித் விடுதலை*** : அ. ராமசாமி

***தலித் - சிறுபான்மையினர் விடுதலை*** : களந்தை பீர் முகமது

***தலித் ஆதரவாளர்கள் செய்ய வேண்டியது என்ன?*** : ஜே. மோஹன்

***திராவிட-மார்க்சிய அரசியல் இயக்கங்களில் தலித்துகளின் நிலை*** : மழை மேனிபாண்டியன்

மாலை 4.00 மணி **நிறைவு விழா**

வாழ்த்துரை : **இமயம், அபிமானி, ஜவஹர்**

நிறைவுரை : **சிவகாமி**

அரங்கு கட்டணம் : தலித்துகளுக்கு ரூ. 100/- அரவாணி / பழங்குடியினருக்கு ரூ. 50/-

## அனைவரும் வருக!

*வழி : விழுப்புரம் திருக்கோவிலூர் சாலையில் 25 - ஆவது கி.மீ. தொலைவில் முகையூர் கிராமம் இருக்கிறது. இறங்கும் இடம் : ஆலம்பாடி கூட் ரோடு.*



படிப்பகம்

www.padippakam.com

# முகத்தில்

**2004** ஜனவரி முதல் 'புதிய கோடாங்கி' வாசித்து உள்வாங்கி வருகிறேன். மாதம் பிறந்தவுடன் 'புதிய கோடாங்கி' எப்போது வரும்? என்று எதிர்பார்க்கிறேன். ஒடுக்கப்பட்ட மக்களின் சிந்தனையை தட்டி எழுப்பி சிந்திக்கத் தூண்டுகிற அறிவுக் களஞ்சியம், தலித்துகளின் பல்கலைப் பெட்டகம், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக் குரல், அருந்ததியர்களின் விடுதலையில்தான் ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை என்று முழங்கிவரும் 'புதிய கோடாங்கியின்' எண்ணங்கள் ஈடேரும் காலம் வெகு தொலைவில் இல்லை.

தென் மாவட்டங்களில் பள்ளர், பறையர், அருந்ததியர் என்ற அடுக்குமுறையில் வன்கொடுமை அரங்கேறி வருகின்றது. இத்தருணத்தில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா செய்தியும் வேலைத் திட்டங்களும் என்பதில் அனைத்தும் முன்வைத்து செயல்பட வேண்டிய முழக்கங்கள் ஆகும். அதில் குறிப்பாக 5-வது இடம் பெற்றுள்ள அருந்ததியர், பள்ளர், பறையர் இவர்கள் அடங்கிய குழுக்களின் உட்சாதி பிரச்சனையை விவாதித்து ஒற்றுமைக்கு வழிகாண்போம் என்ற முழக்கத்தினை வரவேற்கிறேன்.

'கூட்டம்' சிறுகதையில், ஆசிரியர் சிவகாமி எழுதிய நடையில் இன்றைய தலித் இயக்கங்களின் முக்கிய இலக்காக அமைய வேண்டிய சிந்தனைக் கூறு, தீர்மானமான, நீண்டகால போராட்டத்திற்கான வலிமையை தேவையை உணரவைப்பது, உணர்ந்த ஒவ்வொருவரோடும் மற்றவரை பிணைப்பது, இத் தொடர் இற்றுப் போகாமல் உரமூட்டுவதே என்பவை ஆகும்.

டி.வி. சீரியல்களில் மனம் கனிந்து அழுது கொண்டிருந்த இதயங்களில் அம்பேத்கர் எனும் உருவம் குற்ற உணர்வை ஏற்படுத்திக் கொண்டிருக்கலாம், யார் கண்டது? அவர்களின் கதவுகள்தான் தாழிடப்பட்டிருந்தனவே...! என்ற வரிகள் மக்களின் இருட்டு வாழ்க்கையை குமுறலுடன் இயம்புகின்றது.

பலியர் சிறப்பிதழ் அருமையாகவும், வாழ்க்கை நிலைகளை தெரித்து கொள்ளவும், நாளைய நிலைபாட்டினை இன்று உணர்த்தக் கூடியதாகவும் வந்துள்ளது.

மாமேதை, புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளில் ஒடுக்குமுறையை ஒடுக்குவோம் என சூளுரைத்து, பாபாசாகேப் நினைவுகளை நிறைவேற்றுவோம்! புதிய கோடாங்கிக்கு புரட்சிகர நல்வாழ்த்துக்கள்.

**ஆ.ச. விஜயகுமார், கழுகுமலை**

# முகம்

முனைவர் அ.ஜீவானந்தம் அவர்களின் 'மூவண்ண கொடியா? நால்வண்ணக் கொடியா?' என்னும் விவாதம் ஓர் அற்புதத் தொடக்கம் இதற்கு யாராலும் விடையளிக்க முடியாது. ஏற்றுக் கொண்டேயாக வேண்டும். மூவண்ணம் என்பதெல்லாம் மாயை, புத்த தம்மம் நிலைபெறும்.

கவிசங்கரின் 'பாடையில் இரையும் காசுகள்' என்னும் கவிதை தலித்தின் கோபத்தை மேளச்சத்தமாய்ச் காட்டுகிறது.

உதடுகள், நெருப்பில் காய்ச்சிய பறை, ஆடும் பெரியாடும் ஆகிய தொகுப்புகளுக்கான விமரிசனம் வெகு சிறப்பு. இதுபோன்ற விமரிசனங்கள் தவறாது தொடர வேண்டும்.

ஒடுக்கப்பட்ட இனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு சிறப்பிதழ் தந்து 'புதிய கோடாங்கி' தன் இலக்கை எட்டி நடைப்போட்டே வருகிறது. 'பலியர்' சிறப்பிதழ் பாராட்டுக்குரியது.

ப்ரதிபா ஜெயச்சந்திரனின் 'புத்தகங்கள்' புதிய பதிப்புகள். 'உங்களுக்குப் பிடித்த ஒரு புத்தகம் பற்றிப் பேசுங்கள் என்றனர். நான் கூட்டத்தில் பேசாமலேயே திரும்பி விட்டேன்'என ஒரு கவிதையிலும், 'நான் படிக்கும் நல்ல புத்தகங்கள் பற்றி எப்போதும் யாரிடமாவது சொல்லிக்கொண்டேயிருக்கிறேன்'என மறு கவிதையிலும் எழுதி முரண்பட்டுள்ளார்.

பேரா. ஜா. அமிர்தலெனின் 'புதிய கோடாங்கி இதழில் தலித் அரசியல் ஓர் அவசியப் பார்வை. கவிதை எழுதிய கவிஞரின் பெயரைக் குறிப்பிட்டு இருக்கலாம். விழி.பா. இதயவேந்தனின் 'பறச்சித் தலைவி' பரிதாபத்துக்குரியவள். தமிழ் ஓவியாவின் 'பெரியார் நாடகம் யாருக்காக' பரிசீலனைக்கு உரியது. இதை 'முகத்தில் முகம்' பகுதியில் வெளியிடாமல் தனிக் கட்டுரையாக பிரசுரித்திருக்கலாம்.

**பொன். குமார், சேலம்-6.**



படிப்பகம்

www.padippakam.com


Postal Regn. No. TN/PMG(CCR)/842/03-05
Registrar of Newspapers for India
Regn. No.TNTAM/2001/4926

# எச்.ஐ.வி. கூட்டு மருந்து (ARV)

மருத்துவரின் ஆலோசனையின்படி
எச்.ஐ.வி. கூட்டு மருந்தை
உட்கொள்ளுங்கள்.

தினமும் காலை மாலை
இருவேளையும் குறித்த நேரத்தில்
தவறாது மாத்திரையை
உட்கொள்ளுங்கள்.

உங்கள் மருந்துகளை
மற்றவர்களிடம்
பகிர்ந்து கொள்ளாதீர்கள்.



இம்மருந்துகள் சிலருக்குப்
பக்க விளைவுகளை
ஏற்படுத்தலாம். உங்களுக்கு
பக்கவிளைவு ஏதும்
இருப்பதாகக் கருதினால்
உங்கள் மருத்துவரை
அணுகத் தயங்காதீர்கள்.

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாடு சங்கம்**
சென்னை 600 008.

படிப்பகம்